திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு

6 FEB 1955
MADRAS

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர்

அருளிச்செய்த

முதுமொழிமேல் வைப்பு

MUTUMOḺIMĒL VAIPPU

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்

9-ஆம் ஆண்டு நினைவு மலர்

by Velliyampalavāṇa Munivar

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் திருவுளப்பாங்கின்படி

Comm by Kaliyanacuntaraiyar

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் குமாரர்

எஸ். கலியாணசுந்தரையர் அவர்கள்

குறிப்புரையுடன்

ஸ்ரீ காசிமடம் ஜூனியர்

ஸ்ரீமத் வித்துவான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது

17—3—1953

உரிமைப் பதிவு] [நந்தன, பங்குனி

முதற் பதிப்பு .. 1945
இரண்டாம் பதிப்பு .. 1949
மூன்றாம் பதிப்பு .. 1953

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், தி

உ

செந்திலாண்டவன் துணை

பதிப்புரை

—o—

"அகர வுயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து"
—திருவருட்பயன்

உலகில் இன்றுவரை எழுந்த நீதி நூல்கள் பல. அவற்றுள் தலைசிறந்ததும் யாவர்க்கும் ஒப்ப முடிந்ததும் ஆகிய நூல் முதுமொழி எனப்படும் திருக்குறளேயாம். நீதிகளை விளக்கும் வரலாறு முன்னும், அதற்கியைந்த குறளைப் பின்னும் அமைத்து இயற்றிய நூல்கள் பல. அவற்றுள், முதுமொழிமேல் வைப்பு என்ற நூலும் ஒன்று. இது வெண்பாவாலாகியது.

இந்நூலுள் அறம் பொருள் இன்பங்களை விளக்கும் நீதிகட்குத் திருக்குறளும், வீட்டின் பகுதியை விளக்க உமாபதிசிவாசாரியர் அருளிய சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய திருவருட் பயனும் அமைக்கப்பெற்றுள்ளன. இந்நூலில் விளக்கப்பெறும் செய்திகள் பெரும்பாலும் சிவசம்பந்தமாகவே உள்ளன. அப்பகுதிகளும் இனிமையும் எளிமையும் உடையன. இந்நூலாசிரியர் வெள்ளியம்பலவாண முனிவர். இவர் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளின் தலை சிறந்த மாணவர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களின் 9-வது ஆண்டு நினைவு மலராக இப்பதிப்பு வெளியாகிறது. இதன் முதற் பதிப்பு 45-லும், 2வது பதிப்பு 1949-லும் இந்நினைவு நாட்களிலேயே வெளிவந்தமை குறிப்பிடற்பாற்று.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் ஸ்ரீ-ல்-ஸ்ரீ காசிவாசி நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இந்நூலை வெளியிடும் பணியை அடியேற்கு அளித்தார்கள். இப்பெருங்கருணைத் திறத்தினைப் போற்றித் துதித்து அவர்களின் பொன்னார் திருவடி மலர்களை வந்தித்து வழிபடுகின்றேன்.

இந்நூல் அச்சு ஆகுங்கால் அச்சுப் பிரதிகளை ஒப்பு நோக்குதல் முதலிய பணிகளைச் செவ்வனே ஆற்றிய திருச்சி வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களுக்கும் பனசைச் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால் திரு. கே. எம். வேங்கடராமையா M.A., B. O. L. அவர்கட்கும் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
17—3—1953

இங்ஙனம்
மகாலிங்கத் தம்பிரான்
இளவரசு

5FEB1955
MADRAS

உ

இரண்டாம் பதிப்பின்

முகவுரை

திருச்சிற்றம்பலம்

சூழ்தரு வல்வினையும் உடல்தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும் அனல் பொங்கர வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாட் டிருத் தாடகை யீச்சரமே

—தேவார

பழைய காலமுதல் தமிழ் நாட்டில் எழுந்த இலக்கிய நூல்களுள்ளே பலவகையாலும் உலகினர் போற்றும் உயர்தனி சிறப்பு வாய்ந்தது திருக்குறளாகும். இது தமிழ் நூலாசிரியர்கள் யாவராலும் சமய வேறுபாடின்றிப் பாராட்டப் பெறுவது. இந்நூலையும் இதன் கருத்துக்களையும் சொல்லமைதியையும் பெரு பாலும் எல்லாத் தமிழ் நூல்களிலும் காணலாம். இந்நூலை நூற்பகுதிகளையும் பிறமொழிகளில் பலவாறு மொழிபெயர் திருக்கிறார்கள். சிறந்த நீதி நூலாகிய இக்குறளைச் சார்ந் பிற்காலத்தில் பலவகையான நூல்கள் தமிழில் உண்டாயி குறட்பாக்களைச் செய்யுட்களின் இடையிலும் இறுதியி அமைத்துச் சில நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன.

திருக்குறட் பாக்களுக்கு உதாரணமோ விளக்கமோ க அதனோடு குறளையும் கொண்டு அமைந்த செய்யுட்களையுன் நூல்கள் பல. அவற்றுள் முதுமொழிமேல் வைப்பு ஒன்றுெ இங்ஙனம் அமைந்த நூல்கள் இதற்கு முன்னும் உண்டு; பி னும் உண்டு. இப்போது தெரிந்தவை வருமாறு:

சினேந்திர வெண்பா, இரங்கேச வெண்பா, தினக வெண்பா, சிவசிவ வெண்பா, வடமலை வெண்பா, திருமே வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா, முருகேசர் மு நெறி வெண்பா, திருக்குறட் குமரேச வெண்பா, திருப்புல்லாண மாலை, திருத்தொண்டர் மாலை, வள்ளுவர் நேரிசை என்பனவாம்

முதுமொழி என்ற தொடர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரியற்றிய திருக்குறளைக் குறிக்கும். சோமேசர் முதுமொழி வெண்பா என்ற தொடரையும். "முத்தமிழ்ச் சங்கத்தவரை *முதுரையால் வள்ளுவரும், சித்தமகிழ் வித்தார் சிவசிவா" (சிவ சிவ வெண்பா, 73) என்ற அடிகளையும் நோக்குக. முது மொழியாகிய திருக்குறளின் மேல் உதாரணங்களும் விளக்கங் களும் அமைத்துக் கூறப்பெற்றமையின் இந்நூல் முதுமொழி மேல் வைப்பு என்னும் பெயருடையதாயிற்று. காரணங்கருதிய வழி இப்பெயர் அக்காரணத்தையுடைய பல நூல்களுக்கும் செல்வதாகவும், காரணங்கருதாத வழி இடுகுறி அளவாக நின்று இந்நூல் ஒன்றையே குறிப்பதாகவும் இருத்தலினால் காரண இடுகுறிப் பெயராயிற்று.

சோமேசர் முதுமொழி வெண்பா திருவாவடுதுறை ஆதீ னத்து ஸ்ரீ சிவஞான முனிவராலும். முருகேசர் முதுநெறி வெண்பா பொம்மபுரம் ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகராதீனத்து சிதம்பரம் ஈசானிய மடம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளாலும் இயற்றப்பெற்றவை.

முதுமொழிமேல் வைப்பின் ஆசிரியர் தருமபுரம் ஆதீனத் தைச் சார்ந்த கமலை ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவராவர். இந்நூலின் சிறப்புப் பாயிரத்தாலும் என் தந்தையாரவர்கள் எழுதிவைத்துள்ள நூல்களின் வரலாற்றுக் குறிப்பினாலும் இது தெரிகின்றது. சிறப்புப் பாயிரத்தில் உள்ள 'கமலை வெள்ளியம் பலவாண முனிவன்' என்ற தொடர்மொழியால் இவர் திருவா ரூரிற் பிறந்தவர் என்று சொல்லலாம். சிவசம்பந்தமான செய்தி களும் கதைகளுமே குறட்பாக்களுக்கு விளக்கமாக அமைந் திருப்பது இந்நூலின் ஒரு தனிச் சிறப்பாகும். இதுபோன்ற வேறு நூல்களில் காணப்படாத வீட்டின்பால் இந்நூலிலே கூறப்பெற்றுள்ளது மற்றொரு சிறப்பாகும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்றுக்கும் திருவள்ளுவர் இயற்றிய திருவள்ளுவப் பயனாகிய திருக்குறட் பாக்களையும் வீட்டின்பால் என்ற பகுதிக்குக் கொற்றவன்குடி உமாபதி

* முதுரை - முதுமொழி

சிவாசாரியர் அருளிச் செய்த சித்தாந்த சாத்திரமாகிய திருவருட்பயனிலுள்ள குறள் வெண்பாக்களையும் இது மேற்கோளாகவுடையது. திருவள்ளுவப் பயனாகிய திருக்குறளுக்கும் இந்தத் திருவருட் பயனுக்குமுள்ள ஒருமைப்பாட்டை இந்நூல் வீட்டின்பாலின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ள செய்தியால் அறியலாகும். இந்நூலிலுள்ள செய்யுட்களின் தொகை காப்பு நீங்கலாக 196. அவற்றுள் அறத்துப்பால்-63; பொருட்பால்-96; காமத்துப்பால்-27; வீட்டின்பால்-10. முதல் மூன்றுபால்களில் ஒவ்வோர் அதிகாரத்துக்கும் ஒவ்வொரு செய்யுள் என்ற நியதியை இந் நூலாசிரியர் மேற்கொள்ளவில்லை. சில அதிகாரங்களுக்கு இரண்டு மூன்று நான்கு செய்யுட்களும் ஒரே குறளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உதாரணங்களும் இந் நூலில் உள்ளன.

இந்நூற் செய்யுட்களில் பெரும்பாலன நேரிசை வெண்பாக்கள்; மற்றவை இன்னிசை வெண்பாக்கள்.

இந்நூலாசிரியராகிய வெள்ளியம்பலவாண முனிவர் *தருமபுர ஆதீனத்தின் நான்காவது குருமூர்த்தியான ஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடத்தில் சந்நியாசம் பெற்றவர். படிக்காசு வைத்த முனிவருடன் காசியாத்திரையாகச் சென்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளிடம் வடமொழி தென்மொழி இரண்டிலும் பயின்று வல்லவரானார். ஐந்தாவது பட்டத்து ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகளிடத்தில் ஞானதீக்கை பெற்று அவர்கள் திருமுன் ஞான சாஸ்திரங்களையும் பண்டார சாஸ்திரங்களையும் நன்கு கற்றுத் தெளிந்தார்.

இவர் தக்ஷிண யாத்திரைசெய்த காலத்தில் திருச்செந்தூரில் குதர்க்கவாதம் செய்து தூஷித்த ஒரு புலவரைத் தாம் செய்த சபதப்படியே தம் மாணாக்கராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளைக்கொண்டு திருச்செந்தூர் நிரோட்ட யமக வந்தாதி பாடித் தோற்கச் செய்து அடிமையாக ஏற்றனர். திருநெல்வேலிச் சிந்துபூந்துறைத் திருமடத்தில் பல மாணவர்களுக்குப் போதகாசிரியராக வீற்றிருந்தார்.

---

* தருமபுரத்திலிருந்து வெளிவந்த பத்தாண்டு மலரிலிருந்தபடி இவ்வாசிரியர் வரலாறு எழுதப்பெற்றது.

இவர் தலயாத்திரை செய்யுங்கால் ஆங்காங்குள்ள அன்பர்கள் வேண்டுகோட்படி, பல புராணப் பிரசங்கங்கள் செய்தும் சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தனர்.

பின்னர் ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிகர் சமுகமாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி முதலிய பிரபந்தங்களை அருளிச் செய்தனர். ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிகமூர்த்திகள் அருளிச் செய்த முத்தி நிச்சயம் என்னும் பண்டார சாஸ்திரத்துக்கு ஒரு பேருரையும் ஒரு சிற்றுரையும் அருளிச் செய்துள்ளார். சிவஞான சித்தியாருக்கு ஞானுவரண விளக்கம் என்னும் பாஷியமும் இயற்றியுள்ளார். இவர்கள் பரிபூரணம் எய்திய இடம் தில்லையம்பதியாகும். அங்கு இவர்கள் சமாதி ஞானப்பிரகாச குளத்துத் தென்மேற்கு மூலையில் இருக்கிறது.

கந்தபுராணச் சுருக்க ஆசிரியராகிய சம்பந்த சரணாலய சுவாமிகள் இவரிடம் கல்விகற்றவர்களாவர். தாம் சொந்தமாகப் பாடிய கவிகளை வேறு நூல்களிற் சேர்த்து இவர்தம் கவித் திறத்தைப் புலப்படுத்தியுள்ளனர். தேவாரத்திலும், பெரிய புராணம் முதலிய நூல்களிலும் இவருடைய பாடல்கள் கலந்துள்ளனவென்று பெரியோர் கூறுவர். வெள்ளி பாடல் என்று தமிழ் உலகத்தில் வழங்குவது இவருடைய பாடலே.

சிவபரமான புராணங்களிலும், சைவ சாஸ்திரங்களிலும் இவருக்கிருந்த பேராற்றல் முதுமொழிமேல் வைப்பில் இவர் காட்டிய உதாரணங்களால் நன்கு புலனாகும். இவர் போதகாசிரியராக இருந்த காலத்தே சிவ கதைகளை மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டி இந்நூலை எளிய நடையில் இயற்றியிருத்தல் வேண்டுமென்றோ, மிகச் சிறுபிராயத்தில் பாடியிருத்தல்வேண்டுமென்றோ தோற்றுகிறது. இந்நூலிலுள்ள இவருடைய கருத்துக்கள் பல, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் தம் பிரபந்தங்களில் எடுத்தாளப்பெற்றுள்ளன (கவிகள் 15, 18, 120 முதலியன).

திருவள்ளுவ நாயனார் சுத்தசைவர் என்பதற்கு ஆதாரமாகக் காணப்படும் திருக்குறட்பாக்களை இவ்வாசிரியர் இந்நூலுள் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது போற்றத்தக்கது.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனூர் மதுரையில் சமணரைக் கழுவேற்றவில்லை; அவர்கள் தாமாகவே ஏறினர்' (செய்யுள், 35, 100) என்று கூறும் முகத்தால் சைவ சமயத்தின்பாலுள்ள அருட்டன்மையை இவர் புலப்படுத்தியிருக்கிறுர். தக்கயாகப் பரணியாலும் இது விளங்கும். இவரது சமயக் கொள்கை, 'முத்தி நிச்சயத்துக்கு' இவர் எழுதிய சிற்றுரையின் பகுதியால் விளங்கும். அது வருமாறு:—

ஆன்மாக்கள் சோபான முறையிற் சைவ சமயத்தைத் தலைப்பட்டு, சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்தல் ஆகிய சித்தாந்த முத்தியடைதற் பொருட்டுப் புறச் சமயங்களெல்லாம் சிவபிரானுல் தூல சூக்கும முறையின் வைத்து முதனூலுட் கூறியருளப் பட்டமையின் அவற்றையும் பயன் கருதி ஆங்காங்கு உளவாக விடுத்து, அவற்ருல் குன்றிய சைவசமயத்தை யாவரும் முடிந்த பெரும்பேறடைவான் கருதி விளக்கஞ் செய்தா ரென்பார் பிறர் சமயம் நந்தாது தோற்றுவித்த நற்குரவனென்றுர்.'

'நந்தாது தோற்றுவித்தல் - புறச் சமயங்கள் துவரக் கெட்டொழியாமல் அவையும் உளவாகச் சைவ சமயத்தை வெளிப்படுத்தல்.'

'வளவர் கோன் பாவையும்' மந்திரி குலச்சிறையாரும் அருக சமயத்தை நிராகரித்துச் சைவ சமயத்தை ஸ்தாபிக்குமாறு வேண்டிய காலத்துப் பிள்ளையார் அதற்கு உடன்பாடு உடன் கூறி, ஆலவா யமுனிறக் கடவுள் சந்திப்புக்கு 'வேத வேள்வியை நிந்தனை செய்துழ - லாத மில்லி யமணேடு தேரரை - வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே' என வினவிடை பெற்றுச்சென்று வெற்றிகொண்டமையும் மதங்கள் சிவபிரானுற் சோபான முறையாக உண்டாக்கப்பட்டமையை நன்கு உணர்த்தும்.'

உரையாற்றல் தோன்ற எழுதுபவர் இவர் என்பது கீழ்வரும் பகுதிகளால் விளங்கும் :—

இல்லறமல்லது நல்லறமன்று என்பது : இல்லறம் - இல்லறமும், அல்லது - அதுவல்லாததாகிய துறவறமும், நல்லறம் -

(அஃதஃதை யனுட்டிக்கும் அறிவாற்றலுடையார்க்கு) நன்மை பயக்கும் அறங்களாம், அன்று - தீமை பயக்கும் அறங்களல்ல எனப் பொருள்தரலின் மேலதனோடு இது முரணுமை யுணர்க. பான் மயக்க முருமைப் பொருட்டு அன்று என்பதனை இல்லறத் தோடுங் கூட்டித் தனித்தனி முடிவுசெய்துகொள்க.'

'சிற்றின்பம் - உலக இன்பம்; அது சிறிது போழ்தினுள் நிலவுதலன்றி அழிந்து போதரலின் அப்பெயர்த்தாயிற்று. இக் கருத்துப் பற்றியே அரதன வாக்கிய அடிகளும்' தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றேன் ' என்று சிலேடையாகத் திருவாசகத் துள் ஓதியருளியது மென்றுணர்க.'

சைவ நூல்களில் விசேஷமான பற்றுடைய இவர் சிவராச தானியாக விளங்கும் சிதம்பர ஸ்தலத்தில் மிக்க ஈடுபாடுடைய வர் (196). சிதம்பரம் ஆலயத்திலுள்ள பொதுச் சபை இவரால் கட்டப்பெற்றதென்று சொல்லுவார்கள்.

என் தந்தையாரவர்கள் பதிப்பிக்கத் தொகுத்துவைத்திருந்த நூல்களுள் முதுமொழிமேல் வைப்பு ஒன்ருகும். இதன் ஏட்டுப் பிரதி யொன்றும் அதன்படியாகிய கடிதப் பிரதி யொன்றும் அவர்கள்பால் இருந்தன. ஏட்டுப் பிரதியில் சில இடங்கள் விளக்கமாக இல்லை. பல புத்தக சாலைகளுக்கு எழுதிக் கேட்டும் வேறு பிரதி கிடைக்கவில்லை. ஏட்டுச் சுவடியின் இறுதியில். 'சிறப்புப் பாயிரமும் முதுமொழிமேல் வைப்பும் முற்றும்...... ஞான சம்பந்தன் குருபாதமே நீடூழி வாழ்க. சிவஞான சம்பந் தன் ' என்ற வாக்கியங்கள் உள்ளன. இதனால் இந்நூலை ஏட்டில் எழுதியவர் சிவஞான சம்பந்தர் என்ற பெயரை உடையவராக இருக்கலாம் என்று தெரிகிறது.

இந்நூலின் குறிப்புரை எழுதுவதற்கு ஆதாரமாக இருந்த நூல்கள் வருமாறு :—கந்தபுராணம், கம்பராமாயணம், காஞ்சிப் புராணம், சிவஞான சித்தியார், சிவஞான போதம், சிவப்பிர காசம், சிவபோக சாரம், சீகாழித்தலபுராணம், சீவகசிந்தாமணி, தக்கயாகப்பரணி, தண்டியலங்காரம், திருக்கழுக் குன்றக் கோவை, திருவாசகம், திருவாப்பனூர்ப் புராணம், திருவிளையா டற் புராணம், தேவாரம், நால்வர் நான்மணி மாலை, நாற்கவி

ராச நம்பியகப் பொருள், பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை, பெரிய புராணம், மருதவனப் புராணம், முத்தி நிச்சயம், விருத்தாசல புராணம், வில்லிபாரதம்.

இதன் *முதற் பதிப்பு 1945-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இப்பதிப்பில் சில திருத்தங்கள் அமைந்துள்ளன.

கமலை ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்தவராகவும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் ஸ்தாபகருமாகிய ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகளுடைய நன்மாணுக்கராகவும் விளங்கியதற்கேற்ப இந்த இரண்டாம் பதிப்பு ஸ்ரீ ஆதி குமரகுருபரருடைய தினத்தில் வெளிவருவது மிகவும் பொருத்த முடையதே. இப்பதிப்பு அச்சாகி வருகையில் ஒப்புநோக்கல் முதலிய உதவிகளைச் செய்த சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீ வி. மு. சுப்ரமணிய ஐயர் B. O. L. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப்போது காசி மடத்தின் தலைவர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ - ல - ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் பட்டத்துக்கு வந்தது முதல் நாளது வரையில் தமிழ்மொழி, தேவாரத் திருமுறைகள், சைவசித்தாந்தம், வைத்தியம், ஜீவகாருண்யம், கல்வி, பொதுநன்மை முதலியன சம்பந்தமாக அவ்வப்போது பல துறைகளில் எண்ணியெண்ணி ஒன்றன்பின் ஒன்றாக மனமுவந்து ஏற்படுத்தியிருக்கும் பேரறக் கட்டளைகள் 61.** யாவரும் தெரிந்து மகிழும்படி அவர்களுடைய ஒப்புயர்வற்ற அவ்வறச் செயல் விவரங்கள் இப்புத்தகத்தை அனுபந்தமாக அலங்கரிக்கின்றன.

அவர்களுடைய திருமேனி ஆரோக்கியத்தையும், தீர்க்காயுளையும் குறித்து ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

தியாகராஜ விலாசம் சென்னை விரோதி—வைகாசி.	இங்ஙனம் S. கலியாணசுந்தரையர்

இதன் 2-ஆம் பதிப்பு 1949-ல் வெளிவந்துளது.
இப்பொழுது 115-அறக்கட்டளைகள்.

26 FEB 1955
MADRAS

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
	சிறப்புப்பாயிரம்	*1*
	காப்பு	*1*
1.	அறத்துப்பால்	
	பாயிரம்	*2*
	இல்லறவியல்	*8*
	துறவறவியல்	*21*
2.	பொருட்பால்	
	அரசியல்	*32*
	அங்கவியல்	*45*
	ஒழிபியல்	*63*
3.	காமத்துப்பால்	
	களவியல்	*69*
	கற்பியல்	*72*
4.	வீட்டின்பால்	*77*
	அரும்பத முதலியவற்றின் அகராதி	*86*
	செய்யுள் முதற்குறிப்பகராதி	*90*

இந்நூல் குறிப்புரைக்கு எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

கடவுள்—கடவுள் வாழ்த்து
கந்த—கந்தபுராணம்
கம்ப—கம்பராமாயணம்
கு - ரை—குறிப்புரை
சிறப்பு—சிறப்புப்பாயிரம்
சீவக—சீவகசிந்தாமணி
சூ—சூத்திரம்
தனிப்—தனிப்பாடல்
திருவா—திருவாசகம்
திருவால—திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவிளை—திருவிளையாடற் புராணம்
தே—தேவாரம்
நாற் - நம்பி—நாற்கவிராச நம்பியகப்பொருள்
பி-ம்—பிரதிபேதம்
புறநா—புறநானூறு
பெரிய—பெரிய புராணம்
பெரியநா-கட்டளைக்—பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை
மேற்—மேற்கோள்

-6FEB1955
MADRAS

உ

செந்திலாண்டவன் துணை

முதுமொழிமேல் வைப்பு

சிறப்புப் பாயிரம்

பதிகதையால் நாலொழிவெண் பாட்டிருநா றாக
முதுமொழிமேல் வைப்பு மொழிந்தான்—மதுமலர்க்கா
உம்ப ருலகளவு மோங்கு கமலை வெள்ளி
அம்பல வாணமுனி வன்.

(குறிப்புரை) பதிகதையால் - சிவபெருமானுக்குரிய கதைகளால். வெண்பாட்டு - வெண்பா. நாலொழி வெண்பாட்டு இருநூறு-நான்கு குறைந்த இருநூறு, அதாவது நூற்றுத் தொண்ணூற்றாறு வெண்பாக்கள், அறத்துப்பால்: 63; பொருட்பால்: 96; காமத்துப்பால்: 27; வீட்டின்பால்: 10; ஆக மொத்தம் 196. கமலை - திருவாரூர்.

காப்பு

சதுமுகன்மால் காணுத் தலைவர்புகழ் சொல்லும்
முதுமொழிமேல் வைப்பு மொழிய—மதுரத்
தவளமத வாரணமே தாயெனநின் றேத்தும்
கவளமத வாரணமே காப்பு.

(கு - ரை) சதுமுகன் மால் - பிரமதேவனும் திருமாலும்; உம்மைத்தொகை. தலைவர்-சிவபெருமான். தவளமத ஆரணம்-தூய்மையான வலிமை பொருந்திய வேதம். மத ஆரணம்-எல்லா மதங்களுக்கும் ஆதாரமான வேதம் எனலுமாம். வேதத்தின் ஒரு பகுதி சுக்கிலயஜுஸ் என்று வழங்கிவரும்; அத

னுல் இங்கே, 'தவள மத ஆரணம்' என்ருர்; இத்தொடர்வேதம் என்ற அளவாய் நின்றது. கவளம் - யானையின் உணவு. மதவாரணம் - மதம் பொருந்திய யானை; விநாயகர். 'ஆரணம் தாயென நின்றேத்தும்' என்றது பிரணவஸ்வரூபியாகிய விநாயகர் வேதங்களை ஈன்ருரென்று கொண்டு.

---

1. அறத்துப்பால்

பாயிரம்

கடவுள் வாழ்த்து

1 எங்கு முளனிறைவ னென்றிரண்டா யேத்துதமிழ்ச்
சிங்க நடந்தவழிச் சித்தாந்தம்—என்ற
தகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(கு - ரை) இரண்டாய் - இறைவன் தானே தனித்தும், ஆன்மாக்களுக்கெல்லாம் அறிவாகி ஜடத்திலும் சித்திலும் வேறின்றிக் கலந்தும் நிற்கும் நிலைகள் இரண்டாக. தமிழ்ச் சிங்கம்-சிவஞான போதத்தை யருளிச் செய்த மெய்கண்ட தேவர். 57-ஆம் செய்யுள் பார்க்க.

அகரம்தானே தனித்தும் ஏனை மெய் உயிர்களோடு வேறின்றிக் கலந்தும் நிற்றலானும், விகாரமின்றி நாதமாத்திரையாய் இயல்பாகப் பிறத்தலானும், முதற்கண் வைக்கப் படுதலானும் இறைவனுக்கு உவமையாயிற்று. இச்செய்யுள் பதியிலக்கணம் கூறிற்று. 'அகர உயிர்போல அறிவாகி யெங்கும், நிகரிலிறை நிற்கும் நிறைந்து', 'எங்கு மெவையு மெரியுநீர் போலேகம், தங்குமவன் ருனே தனி', அக்கரங்கள்தோறுஞ் சென்றிடும் அகரம்போல'. 'அகரவுயிரெழுத் தனைத்து மாகிவேருய் அமர்ந்ததென' என்பவற்றையும் சிவஞான போதம், சூத்திரம் 2-இன் பொருளையும் இதனுடன் ஒப்பு நோக்குக; "அகரம் முதலி னெழுத்தாகி நின்ருய்" (தே. சுந்தரர்.) 1

2 புத்தர்பிறர் சொல்லும் பொருண் மறுத்து வள்ளுவர்தாம்
அத்தர்மறை யாகமங்க ளாமென்று—வைத்த
திருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(கு - ரை) புத்தர் பிறர் - புத்தர் முதலிய புறச்சமயத்தார்; இவர் கூறும் பொருள் உலகாயதம்,பௌத்தம், சமண மென்பன. பிறர் - சைனருமாம். அத்தர் - கடவுள்.

திருவள்ளுவர் அத்தருடைய மறைகளையும் ஆகமங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை இதிலுள்ள குறள் காட்டும் என்பது கருத்து. வைத்தது : எழுவாய்; 'இருள்சேர்...மாட்டு' என்பது பயனிலை.

'அகர முதல' என்னும் குறளால் பதியிலக்கணமும், 'வேண் டுதல் வேண்டாமை' (4) என்னும் குறளால் பசு இலக்கணமும், 'இருள்சேர் இருவினையும்' (5) என்னும் குறளால் பாச இலக்கண மும் பெறப்பட நாயனர் கடவுள் வாழ்த்தை அமைத்திருப்பதால் அவருக்கு ஆகமங்கள் உடன்பாடாமென்பர் சித்தாந்திகள். 2

3 வைதிகமேற் கொண்டுசொலு மற்றவர்க்குப் பக்குவர்க்காம்
சைவமவர் கொண்ட சமயமெனும்—செய்திசொலும்
கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

(கு - ரை) வைதிகம் - வேத சம்மதமான மதங்கள்; அவை: பாஞ்சராத்ரம், வைணவம், வைகானசம், ஜ்யோதிஷம், மாயா வாதம், வேதாந்தம், துவிதம், அத்துவிதம் என்பன. மற்றவர்க்கு வைதிகத்தை மேற்கொண்டு சொலும் எங்க. மற்றவர்-பக்குவர் அல்லாதார். இதனைச் சொல்லுவது 'கோளில்...தலை' (9) என்ற குறள். இங்கே சைவம் என்றது சிவாகமத்தின் கருத்தாகி வந்த சித்தாந்தத்தை.

எண்குணத்தான் - சிவபெருமான்; எண்குணங்களாவன : தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வின னாதல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை,

முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என்பன. 'இவ்வாறு சைவாகமங்களிற் கூறப்பட்டன' என்று பரிமேலழகரே கூறுவதால் அவர் காலத்துக்கு முன்னரே இக்கவியிற் கண்ட கருத்து வழக்கி லிருந்ததாகக் கொள்ளலாம். வேதாந்தத்தினும் சித்தாந்தம் சிறந்ததென்பது 'வேதாந்தம் உடலும் சித்தாந்தம் உயிருமாக நிற்கும்' என்ற கொள்கையாலும், 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்' (சிவப்பிரகாசம்) என்பதனாலும் புலனாகும். 3

4 பெற்றதவர் சைவத்துப் பேத சமாதியன்றி
மற்றுஞா னந்தமென வந்ததிது—முற்றும்
தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

(கு - ரை) அவர் - முன்கவியிற் கூறிய பக்குவிகள். சமாதி-யோகம். அவர் சைவத்துப்பெற்றது பேதசமாதியின்றி ஞானந்தமென வந்ததிது. பக்குவிகள் யோக மார்க்கத்தை யன்றி ஞான முடிவைப் பெற்றவர்கள் என்றபடி வந்தது இது; இது என்றது பின்னுள்ள 'தனக்குவமை' என்னும் குறளை. இக்குறள் காமத்துப்பாலைத் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ள தென்பர் சித்தாந்திகள். பிறவிக்கேதுவாகிய காம வெகுளி மயக்கங்கள் பற்றிவரும் மனக்கவலையை நீக்கல் ஞானமார்க்கத்தவர்களுக்கே சாத்தியமாம் என்றபடி; 'சரியை கிரியை யோகம் என்னும் மூன்று செய்கைகளும் பதமுத்திகளை யளிக்க, ஞானச் செயல் ஒன்றே பரமுத்தியளித்தலின் அவற்றினும் அது சிறந்த செயலாயிற்று' (முத்தி நிச்சயம், சிறப்புப் பாயிரம், உரை.) 4

5 அப்பர்முதற் சித்தாந் திகள்வீ டடைதலுமே
வைத்தபுவ னத்திருந்தார் மற்றையவர்—ஒக்கும்
பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

(கு - ரை) அப்பர் முதல் சித்தாந்திகள் - சமயகுரவர் முதலியோர். மற்றையவர் என்றது பிரமா விஷ்ணு இந்திரன் முதலியோரை; ஒப்பு: 87-ஆம் செய்யுள். சைவசித்தாந்திகள் அல்லா

தாரை எனலும் ஆம். வைத்த-வெவ்வேறாக வைத்த. புவனத்து: அழியும் இயல்புடைய சுவர்க்காதி புவனங்களில்.

முதல் நான்கு கவிகளும் சோபான முறையாகக் கூறப்பட்டன. அம்முறையாவன: வைதிகம், சைவம், சைவத்துள் சரியை, கிரியை, யோக மார்க்கம், ஞானத்தாற் சிவனடி சேர்தல் (சித்தாந்த முத்தி.) புறச்சமயமும் சைவர்க்குடன்பாடே என்பது, 'புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் ... வேத, சிரப் பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்' (சிவஞான சித்தியார், பக்கம், 8-ஆம் சூத்திரம், செய்யுள் 11), ''விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்து, எரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற தாகும்'' (அப்பர் தேவாரம்) என்பவற்றால் விளங்கும். 5

வான் சிறப்பு

6 அழித்துலகை யாக்குதலா லந்தமே யாதி
அழித்தொன்றை யாக்குவது முண்டோ வெனிற்கொள்
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

(கு - ரை) அழித்துலகை...ஆதி-'ஒடுங்கின சங்காரத்தினலல்லது உற்பத்தி யில்லை, எனவே சங்காரமே முதல்' என்ற கருத்துடைய சிவஞான போதத்து முதற் சூத்திரத்தை யொட்டி இது கூறப்பட்டது.

அழித்தொன்றை...எனில் - ஒரு பொருள் ஒன்றை அழித்து மீண்டும் ஆக்குவது உண்டோ என்று வினவினல். 6

7 அடியவரை நீத்தரனுக் கன்புசெய்ய மாறன்
மழைமறுத்துப் பல்லுயிரும் வாடும்—படியில்
விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(கு - ரை) மாறன் - குலபூஷண பாண்டியன். அடியவர் - பாண்டிநாட்டிருந்த அந்தணர், இக்கவியிற் கண்ட வரலாறு.

"வள்ளல் குலபூ டணன்திங்கள் வாரந் தொடுத்துச் சிவதருமம் உள்ள வெல்லாம் வழாதுநோற் றொழுகும் வழியால் தன்னாட் டில், எள்ள லில்லா வேதியரை யிகழ்ந்தா னதனுள் மழை மறுத்து. வெள்ள மருக வளங்குன்றி விளைவஃ கியது நாடெல் லாம்" (திருவிளையாடல். உலவாக் கிழியளித்த படலம், 2) என் னும் பாட்டால் விளங்கும். 7

நீத்தார் பெருமை

8 ஆர்பெரியர் நீத்து மரனறிய நின்றதிரு
நீலகண்டர் போலரிதி னீத்திலரால்—சாலச்
செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(கு - ரை) பெரியர் ஆர் நீத்தும் - பெரியோர் ஆர் துறந்தும். வாய்ப்பொன்று மில்லாத காலத்தில் துறவற வாழ்க்கையை மேற்கொண்டொழுகும் மற்றவரிலும், திருநீலகண்டர் இல்லறத் தின்கண் மனைவியோடு இருந்துகொண்டே சிற்றின்பத்தை நீத்த தனால் அவருடைய அச் செயல் செயற்கருஞ் செயலாயிற்று. 'மாதுசொன்ன. சூளா லிளமை துறக்கவல் லேனல்லன்' எனத் துறவில் தலைசிறந்த பட்டினத்து அடிகள் இதனைப் பாராட்டிக் கூறியதும் அறிக. 8

9 புறமகமென் றியாவும் புகல்வனவும் காணாத்
திறநுவல் கின்ற சிவநூல்—நெறியிற்
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(கு - ரை) புறம் அகம் - புறச்சமயம் அகச்சமயம். வேறு சமய நூல்களில் காணப்பெறாத திறனை நுவல்கின்ற சிவநூல் என்க; சிவநூல் - சிவஞானபோதம், சிவாகமங்கள் முதலியன. சிவநூல் நெறியாலேயே உலகை யறிதல் முடியுமென்பது இக் கவியின் கருத்தாகும்.

சுவை முதலான தன்மாத்திரைகளின் கூறுபாடுகளை அறிப வனிடத்தே உலகம் நிற்கும். 9

அறன்வலி யுறுத்தல்

10 தண்டிக் கருள்புரிந்து தக்கன் சிரமறுக்கும்
அண்டர்பெரு மானருளு மாகமத்திற்—கண்ட
அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(கு - ரை) தண்டி - சண்டேச நாயனார்; 185-ம் கவியையும் நோக்குக. இவருக்குச் சிவபெருமான் அருளியது சண்டேச பதவி (பெரிய புராணம், சண்டேசுர. 56.) தக்கன் - தக்ஷன். இவன் சிவ பிரானிடத்து வெறுப்புற்று அவரை அழையாமல் மற்றத் தேவர் களைக்கொண்டு பெரியதொரு வேள்வியைத் தொடங்கினான். அப்போது அவன் சிவநிந்தைக்கும் அபசாரத்துக்கும் ஆளாகவே சிவபெருமான் வீரபத்திரரைக்கொண்டு அவன்தலையை அறுப்பித்து வேள்வியையும் அழித்தார்; 'தலையிழந்தான்' (தண்டியலங்காரம், சூ 21, மேற்) தக்கன் ஒறுக்கப்பட்டமை 49, 127-ஆம் கவிகளி லும் கூறப்படும்.

அண்டர் பிரான் கூறும் ஆகமத்திற் கண்ட அறத்திலும் சிறந்ததில்லை என்பது சண்டேசுவரர் வரலாற்றால் தெரியவரும். அதனை - ஆகமத்திற் கூறிய அறத்தினை. மறத்தலால் வரும் தீங்கினை உணர்த்துவது தக்கன் வரலாறாகும்.

தாம் சிவபூஜை செய்து வரும்போது அதற்கு இடையூறாகப் பூஜைக்குரிய உபகரணங்களைக் காலால் உதைத்துத் தள்ளிய தம் தந்தையும் குருவுமாகியவரின் தாளைச் சண்டேசுவரர் துணித்தார். இச்செயல் அறச்செயலேயாகச் சிவபெருமான் அருளுக்கு இவர் பாத்திரரானார். 10

11 காணலா மீசன் கழல்பணிந்து நல்லறங்கள்
பேணுவார் நாளும் பெறும்பயனைப்—பேணும்
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

(கு - ரை) நல்லறங்கள் - பசு தர்மங்கள். 'ஈசன் கழல் பணிந்து நல்லறங்கள்பேணுவார் நாளும் பெறும்பயனைச் சிவிகை

பொறுத்தானோடு ஊர்ந்தானிடைக் காணலாம்' என முடிக்க. சிவிகையில் ஊர்பவனையும், அதைத் தூக்குபவனையும் நோக்கி அறங்களின் பயனைத் தெரிந்துகொள்ளலாமென்பது கருத்து. 11

12 தருமர் பிறர்நெறியாற் சார்ந்ததுவிண் ணீசன்
அருணெறியா லீனருமே லானார்—அருநூல்
அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(கு - ரை) தருமர் - பாண்டு புத்திரர்களில் முதல்வர். தருமர் கண்ணபிரானை வழிபட்டு வந்தவராதலால் 'பிறர் நெறியால்' என்றார். தருமருக்கு அழிதல் மாலையதான சுவர்க்க போகமே கிடைத்ததென்பார். இது பாரதத்துள் பாண்டவர் இவ்வுலகை நீத்த வரலாற்றைக் கூறும் பகுதிக்குச் சொர்க்காரோகண பருவம் என்ற பெயருண்மையால் விளங்கும். ஈனரும் மேலானார் என்பது திருநாளைப் போவார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், பாணபத்திரர் என்பவர்கள் வீடு பேற்றை அடைந்த வரலாறுகளால் விளங்கும். அருநூல் - சிவநூல். 12

பாயிரம் முற்றும்

இல்லறவியல்

இல்வாழ்க்கை

13 இல்வாழ் மருத்தர்போ லீசனடிக் கன்புசெய
வல்லாரே னேற்க வருவானேன்—எல்லாரும்
ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

(கு - ரை) மருத்தர் - கும்பகோணத்தில் வாழ்ந்து வந்த ஒரு சிவனடியார்; இவர் தினந்தோறும் சிவநேசர்களைத் தேடி அவர்களுக்கு உணவளித்து வந்தார். தம் வாழைத் தோட்டத்தில் உள்ள வாழைகளையெல்லாம் இலையும் பூவும் காயும் இல்லாமல் எல்லாவற்றையும் அடியாருடைய உணவுக்கே இவர் பயன்படுத்தினர். அந்த ஊரில் திருத்தங்கி என்பவனும் வாழைத்

தோட்டம் ஒன்று வைத்திருந்தான். உலுத்தனுகிய அவன் ஓர் இலையையும் பறிக்காமல் தோட்டத்தை நன்றாகப் போற்றிவந் தான். ஒருசமயம் ஔவையார் அவன் வீட்டுக்கு விருந்தினராக வரவே அவன் அவரை மருத்தர் வீட்டுக்குப் போகுமாறு வழி காட்டினான். அன்று மருத்தர் வீட்டில் வாழையிலை கிடையாமற் போகவே திருத்தங்கியின்பால் அவர் வந்து வாழையிலையைக் கடன் கேட்க அவன் மறுத்துவிட்டான். ஔவையார் இச்செய் தியை அறிந்து வாழையிலை யில்லாமலே சாப்பாட்டை முடித் துக்கொண்டு ஒரு பாடலைப் பாடினாரென்று கர்ணபரம்பரைச் செய்தியொன்று வழங்குகிறது. 'திருத்தங்கி தன் வாழை தேம்ப பூத்து நிற்கும். மருத்தன் திருக்குடந்தை வாழை-குருத்தும்,இலை யுமிலை பூவுமிலை காயுமிலை என்றும்,உலகில் வருவிருந்தோ ருண்டு' என்பது அது; 150-ஆம் செய்யுளையும் காண்க. 13

வாழ்க்கைத் துணை நலம்

14 முளையா லமுதமைத்த முக்கணர்பா லன்பன்
இளையான் குடிமாற னில்வாழ் துணைபோல்
மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(கு - ரை) முளை - நெல் முளை; முக்கணர் - சிவபெருமான். சிவபெருமான் விருந்தினராக அகாலத்தில் வந்தபோது, இளையான் குடி மாறனர் கொணர்ந்து கொடுத்த, அன்று பகலில் வயலில் வித்திய நெல் முளைகளைக் கொண்டு அவர் மனைவியார் திருவமுது அமைத்தமையின் அவ்வம்மையாரை, 'கொண்டான் வளத்தக் காள்' எனல் தகும். 14

15 உலகுண் டுறங்கு மொருத்தி யொருத்தி
சிலகொண் டரனுவப்பச் செய்யு மறனென்றால்
இல்லதெ னில்லவண் மாண்பானு லுள்ளதென்
இல்லவண் மாணுக் கடை.

(கு - ரை) ஒருத்தி உலகுண்டு உறங்கும்: ஒருத்தி - திருமா லாகிய சக்தி; திருமால் ஈசனுக்குச் சக்தி யாவரென்பது 46-ஆம்

செய்யுளாலும் தெரியவரும். "பிரிவிலா வமரர் கூடிப் பெருந்த கைப்பிரானென் றேத்தும், அரியலாற் றேவி யில்லை யையனை யாறனார்க்கே" (தே. திருநா. திருவையாறு.) உலகத்தையே உண்ணத்தக்க பெருவயிறு படைத்து ஒரு வேலையும் செய்யாமல் உண்பதும் உறங்குவதுமாக இருப்பள் என்பது நயம். உறங்கும்- செயலற்றிருக்கும் எனினும் அமையும். பின் உள்ள ஒருத்தி உமா தேவியார். சில - இரண்டு நாழி. உமா தேவியார் சிவபெருமானிடம் இரண்டு நாழி நெல் பெற்று முப்பத்திரண்டு அறமும் புரிந்த கதை காஞ்சிப்புராணம், பெரியபுராணம் (25 : 7) முதலியவற்றால் தெரியவரும். "நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன் தருமிரு நாழிநெல்லால், வினைமாட்சி கொண்டுயி ரெல்லா மளித்தருண் மேன்மையினால், மனைமாட்சி யெய்து முனக்கே பெருங்கற்பு மாட்சியன்றி, பினைமாட்சி யார்க்குண் டுலகீன்ற குன்றைப் பெரியம்மையே" (பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை) என்ற செய்யுளை இதனுடன் ஒப்பு நோக்குக. 15

16 அறவோ னகத்திருந்தா ளன்புகண்டேங் கண்டேம்
இறையோ டிறந்தா ளியல்பு முறையுட்
சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(கு - ரை) அறவோன்-கௌதமர். அகத்திருந்தாள்-அகலிகை. அன்பு கண்டேம் என்றது அகலிகை கௌதமருக்குத் துரோகஞ் செய்ததைக் குறிக்கும். இறையோடு இறந்தாள் - திருநாவுக்கரசு நாயனாரின் தாயாராகிய மாதினியார். இறை - கணவர். இயல்பும் கண்டேம். இந்த அம்மையார் தம் கணவனும் புகழனார் இறந்ததும் உடன்கட்டை யேறினார் என்று பெரியபுராணம் கூறும். 16

புதல்வரைப் பெறுதல்

17 வேணுப்புர நாதருண் மேவுதலுஞ் சம்பந்தர்
தாதையினு மேன்றேருந் தாமகிழக் காணுதலால்
தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(கு - ரை) வேணுபுரம் - சீகாழி. அருள் மேவுதலும் - சிவ ஞானத்து இன்னமுதம் உண்ணப் பெற்றவுடன். தாதையினும்- (சம்பந்தரின்) தந்தையாகிய சிவபாத ஹ்ருதயரைக் காட்டிலும். ஏனோரும் - சீகாழியிலுள்ள அந்தணரும் பிறரும். இவர்கள் சிவ பாத ஹ்ருதயரைக் காட்டிலும் அதிகமாக மகிழ்ந்தமை பெரிய புராணத்தில், திருஞான சம்பந்தர் புராணத்து 90-94 ஆம் செய்யுட் களால் விளங்கும்.

அறிவுடைய பிறர் தந்தையினும் மகிழ்வர் என்பது இதிற் பயின்றுள்ள குறளின் கருத்தாகும். 17

18 பெண்பெறினு மென்ன பிழையோ தடாதகைபோல்
எண்பொருளு மீசனும்வந் தெய்துமே —கொண்ட
எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(கு - ரை) ஆண் மகவைப் பெறுதலே சிறப்பு என்பார் கொள்கையை மறுத்துக் கூறுகின்றாராதலின், 'பெண் பெறினும்' என்று உம்மை கொடுத்துக் கூறினார். 'பெண் பெற்றோ புண் பெற்றோ' என்ற பழமொழியை இவர் கண்டிப்பவராவர். தடாதகை-மலயத்துவச பாண்டியனுக்கு உமாதேவியாரின் அமிச மாகப் பிறந்த பெண் குழந்தை. எண்பொருள் - (1) மனத்தில் எண்ணும் பொருள்; (2) மதிப்புடைய பொருள்கள்; (3) அஷ்ட ஐசுவரியம். தடாதகைப் பிராட்டியாரால் மலயத்துவசன் சோம சுந்தரக் கடவுளை மருமகனாகப் பெற்றதுமன்றி அவரால் வீடு பேற்றையும் எய்தினமையை நினைந்து இங்ஙனம் கூறினார்.

"கற்றறிகுவர் மக்கடம் பேறெனக் கட்டுரைத்த, சொற்றொருபெண் ணொழித்ததென் பானொடு தொல்லுலகில், நற்றாண் மகப்பெறு கென்றாசி சொல்பவர் நாணவுனைப், பெற்றான் மலயரை யன்குன்றை வாழும் பெரியம்மையே" (பெரியநா. கட்டளைக்.) என்ற செய்யுளோடு இதனை ஒப்பிடுக. 18

அன்புடைமை

19 கண்ணுதலோன் கண்ணேவு கண்டளவிற் கண்ணப்பன்
கண்ணினீர் சோரக் கதறுமால் — உண்ணெகிழும்
அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

(கு - ரை) கண்ணுதலோன் - காளத்தி நாதரான சிவபெருமான். கண்ணப்ப நாயனாரது. மெய்யன்பு இக்குறளுக்கு ஏற்ற உதாரணமாகும் 19

விருந்தோம்பல்

20 ஈசனடி யார்விருந்தென் றிட்டுலவாக் கோட்டைபெற்ற
நேசர் குறைவின்றி நிற்றலா னடி
வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(கு - ரை) உலவாக் கோட்டை - எடுக்க எடுக்கக் குறைவுபடாத அரிசி மூட்டை. மதுரையிலிருந்த வேளாள பக்தசிகாமணியொருவர் அடியாரைத் தேடி யமுதூட்டி வருதலைத் தம்பணியாகக் கொண்டு ஒழுகி வந்தார். வயல்கள் வளங்குன்றி, வருவாய் இல்லாத காலத்திலும் அவர் தம் வைராக்கியத்தை விடாமலிருந்ததைக் கண்டு சோமசுந்தரக் கடவுள் அடியாரை அருத்தும் பொருட்டு அவருக்கு உலவாக் கோட்டையொன்றை அளித்தருளினர் என்பது திருவிளையாடற் புராணத்திற் கண்ட வரலாறாகும். 20

இனியவை கூறல்

21 முதுகிரியா னன்பர் முனிந்தருள வந்த
தகுதி யுடையான் சரிதஞ் சொலுமே
பணிவுடைய னின்சொல னாதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(கு - ரை) முதுகிரியான் அன்பர் - பழமலை நாதரிடம் அன்பு கொண்ட அகத்தியரை யுள்ளிட்ட ஐம்பது முனிவர்கள். தகுதி யுடையான் - வரர் என்ற முனிவர். அவரிடம் அகத்தியர் முதலிய

ஐம்பதின்மர் சென்றபோது அவர் இவர்களைமதியாது பணிவின்றி இருக்க இவர்கள் அவரை எருமைக் கடாவாகுமாறு சபித்தனர். அவரே மகிஷாசுரனாக அவதரித்துப் பின்னர் உமாதேவியாரால் சாபம் நீங்கப்பெற்றா ரென்பர். 21

செய்ந்நன்றி யறிதல்

22 எள்ளளவு காரு தெலிசெய்த நன்றிக்கா
வள்ள லுளகாள வைத்தருளும்—நல்லாய்
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

(கு - ரை) வேதாரணியத்திலுள்ள சிவாலயத்தில் மங்கும் நிலையிலிருந்த திருவிளக்கை ஓர் எலி தூண்டிப் பிரகாசிக்கச் செய்த நன்றிக்காகச் சிவபெருமான் அவ்வெலிக்கு மறுபிறவியில் அரச பதவியை வழங்கினார் என்பது வரலாறு. அவ்வரசரே பலிச் சக்கரவர்த்தியாவர். நல்லாய்-பெண்ணே. "நிறை மறைக் காடு" (தே. திருநா.) 22

23 அன்று குணனுய்ந்தா னந்தணனைக் கொன்றுமரன்
நன்றிகொலுமசுரர் நாடறியப்—பொன்றுதலால்
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(கு - ரை) குணன் - வரகுண பாண்டியன்; நாமைக தேசம். அவன் ஒரு சமயம் வேட்டைமேற் சென்று திரும்பி வருகையில் வழியில் களைத்துப் படுத்திருந்த ஓர் அந்தணன் மீது அறியாமற் குதிரையைச் செலுத்தவே அம்மறையவன் மாண்டனன். அதனால் பிரஹ்மஹத்தி தோஷம் பாண்டியனை விடாமற் பற்றிக்கொள்ள வரகுணன் மிகவும் வருந்தி ஆலவாய் எம்பிரான் கோவிலைப் பன்முறை வலம் வந்து வழிபட்டு அம் மூர்த்தியின் ஆஞ்ஞைப்படியே திருவிடைமருதூர் சென்று அங்கே அந்தத் தோஷத்தைத் தீர்த்துக்கொண்டான் என்பது திருவிளையாடற் புராணத்திற் கண்ட வரலாறு நன்றிகொலும் அசுரர் - முப்புரவாசிகள். சிவபெருமானால் பல்வகைச் செல்வங்களைப்

பெற்று வீறுடன் இருந்த அசுரர்கள் பின்னொருகாலத்தில் திருமாலால் ஏவப்பட்ட நாரதர் வார்த்தையைக் கேட்டுச் சிவ நிந்தனைக்கு உள்ளாகி அழிந்தனர் என்பர். இச்செய்தி 186-ஆம் செய்யுளாலும் விளங்கும். 23

நடுவு நிலைமை

24 ஈச னுமையா ளிடைப்பட்டு வாரமாய்ப்
பேசலு மாயோன் பெரும்பாம்பாம்—ஆசிற்
கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

(கு - ரை) வாரமாய் - ஒருமருங்கு பற்றிய அன்புடன். சிவபெருமானும் உமாதேவியாரும் கழகமென்னும் ஆட்டத்தை ஆடும்பொழுது தம்முள் வெற்றி தோல்விகள் எவருடையன வென்று அறிந்து சொல்லுவதற்குத் திருமாலை மத்தியஸ்தராக வைத்தார்கள். திருமால் நடுநிலைமை தவறி ஒருபட்சமாகப் பேச உமாதேவியார் அவரை மலைப்பாம்பாமாறு சபித்தனர் என்பது வரலாறு; கந்த. கயமுகனுற்பத்திப். 174; "அரிபாம் புருக்கொள் சாபாரி" (திருக்கழுக்குன்றக் கோவை, 168.) ஆசில்-விரைவில். 24

25 பிள்ளையினுங் கைத்தொண்டு பேணுதலா லப்பருக்கு
நல்ல படிக்காசு நல்குமால்—எல்லாம்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(கு - ரை) பிள்ளை - திருஞான சம்பந்தர்; முருகக் கடவுளே சம்பந்தராக அவதரித்தார் என்ற கொள்கை பற்றி அவரைச் சிவபிரானுக்குப் பிள்ளை என்பர். கைத் தொண்டு - கையினாற் செய்யும் உழவாரப் பணி. நல்கும் - கொடுப்பார். சம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலையில் இருந்தபோது பஞ்சகாலம் வர, இருவரும் சிவபிரானிடம் பொற்காசு பெற்று அடியார்களை உண்பிக்கும் தொண்டினை மேற்கொண்டார்கள். அப்போது சிலநாள் சம்பந்தர் மாற்றுக் குறைந்த காசுபெற்று வந்தாரென்றும், அதனால் அதனை மாற்றி உணவுப் பொருள்களை வாங்குவதில் நேரம்

வீழியிற்றென்றும், அதற்குள் அடியவர்கள் அப்பர்தம் மடத்தி லேயே உணவருந்திச் சென்றனரென்றும் பெரிய புராணம் முதலிய நூல்கள் கூறும்; "வாசி தீரவே, காசு நல்குவீர், மாசின் மிழலை யீர், ஏச லில்லையே" (தே. திருஞா.) சிவபெருமான் தம் புதல்வ ரென்றெண்ணி நடுநிலை பிறழாமை இங்கே கருதத்தக்கது. 25

அடக்க முடைமை

26 ஆனை யிழிந்து மரசிறைஞ்சும் போலியைக்கண்
டேனையர னன்பரென்று லென்படுமோ—மாநிலத்துள்
எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(கு - ரை) அரசு - சேரமான் பெருமாளுயனுர். போலியைக் கண்டு - முழுநீறு பூசிய சிவனடியாரைப் போல் தோன்றிய வண்ணானைக்கண்டு. இறைஞ்சும் - வணங்குவார். சேரமான் பெருமாளுயனுர் யானைமீது பவனி வரும்போது, மேனியில் உவர்மண் படியப்பெற்று வந்த ஒரு வண்ணானைக் கண்டு, 'சிவனடியாரின் நினைவை இவர் நமக்களித்தார்' என்றெண்ணி யானையினின்றுமிழிந்து அவனை வணங்கினுர் என்பது பெரியபுரா ணத்திற் கண்டது. தமிழ்விடுதூது, கண்ணி, 176 பார்க்க. என் படுமோ - எத்தகைய பணிவை மேற்கொண்டு என்ன என்ன செய்வாரோ! பணிதல் - பெருமிதமின்றி யடங்குதல். 26

27 சோதி திறமறிந்து சொல்லவறி யாதுசொல்லி
வேதநிலை கண்டானு மெய்ம்மறந்தான்—ஆதலால்
யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(கு - ரை) சோதி - சிவபிரான். வேத நிலைகண்டான் வியாசர். வியாச முனிவர் ஒரு காலத்தில் காசிப் பதியில் திருமாலே முதல்வர் என்றுகூறித் தம் கையைத் தூக்க, அதனைத் தூக்கியபடியே நிற்கும்படி நந்தி தேவர் பணித்தனரென்பது வரலாறு. கையை வெட்டியதாகக் கூறுவதுமுண்டு. 'ஐயிரு புராணநூ லமலர்க் கோதியும், செய்யபன் மறைகளுந் தெரிந்

தும் மாயையால், மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய, கையடு
'நந்திதன் கழல்கள் போற்றுவாம்' (கந்தபுராணம், கடவுள். 19)
என்ற செய்யுளை நோக்குக. 27

ஒழுக்க முடைமை

28 தில்லை மறையோர் சிவமயஞ் சார்ந்தொழுகி
இம்மையே சாரூப மெய்தினர் நல்ல
ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்.

(கு - ரை) தில்லை மறையோர் - தில்லைவாழந்தணர் மூவா
யிரவர். இவர்கள் இம்மையிலேயே சாரூபமெய்தினமை திருஞான
சம்பந்தருக்கு இவர்கள் சிவகணங்களாகத் தோன்றினமையினால்
விளங்கும் (பெரியபுராணம், திருஞான சம்பந்த. 170.) 28

பிறனில் விழையாமை

29 எந்தை பலிக்கென் றியங்குநாட் பின்றொடர்ந்த
மென்றொடியார் தேத்தும் விழைந்திலார்—என்ப
பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.

(கு - ரை) எந்தை - சிவபெருமான். பின்றொடர்ந்த மென்
தொடியார் தேத்தும் - தாமாகப் பின் தொடர்ந்து வந்த தாருகா
வனத்து முனிவருடைய பத்தினிமாரிடத்திலும்; விழைந்திலார் -
விருப்பத்தைச் செய்திலர். ஒரு காலத்தில் தாருகா வனத்தில்
நடந்த வரலாற்றை இது குறிக்கும். அறன் ஒன்றோ, ஆன்ற
ஒழுக்கு - அறமும் ஆம், நிரம்பிய ஒழுக்கமும் ஆம். 29

பொறை யுடைமை

30 பித்த னெனத்தமக்குப் பேர்படைத் தெந்தைபிரான்
வைத்தவனைத் தோழனென வாழ்வித்தார்—நித்தம்
அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

(கு - ரை) எந்தை பிரான் - திருவெண்ணெய் நல்லூரி லுள்ள சிவபெருமான். பேர்படைத்தும் - சுந்தரமூர்த்தி நாயனாரால் பெயரைப் படைத்தாலும். வைத்தவனை : வைதவனை என்பதன் விரித்தல் விகாரம். தோழன் என : சுந்தரமூர்த்திக்குத் தம்பிரான் தோழர் என்பது ஒரு திருநாமம். இதிற் கண்ட வரலாறு பெரிய புராணத்தாலும், 'பித்தா பிறை சூடி' என்ற தேவாரப் பதிகத்தாலும் விளங்கும். 30

31 கல்லெறியை யும்பொறுத்துக் கண்ணுதலார் தாமறந்து
நல்ல பதமவர்க்கு நல்கினார்—வல்லி
பொறுத்த விறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(கு - ரை) கண்ணுதலார் - சிவபிரான். அவர்க்கு - கல்லால் எறிந்த சாக்கிய நாயனாருக்கு. புறச்சமயத்தாராகிய சாக்கிய நாயனார் சிவபெருமான்மீது தமக்கு மிகுந்த அன்பு இருந்தும் தம் மதத்தாரின் கட்டுப்பாட்டுக்கு அஞ்சினவராகிக் கற்களை மலர்களாகப் பாவித்துச் சிவலிங்கத்தின்மீது சாத்தும் பாவனையாக எறிந்தார். இந்தத் தலையன்பு காரணமாக அவருக்குச் சிவபதம் கிடைத்ததென்பது வரலாறு. வல்லி : விளி. 31

அழுக்காறுமை

32 புத்த னிறந்தான் பொறுமைசெய்து செய்யார்க்கு
நித்தரரு ளுண்டாய் நிறைந்தபுகழ்—மெத்த
அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
[1]ஒழுக்கத்திற் றீர்ந்தாரு மில்.

(கு - ரை) புத்தன் - புத்த நந்தி. பொறுமைசெய்து - சம்பந்தர் சின்னமும் ஊர்தியும் பெற்று வருவதைக் கண்டு பொறாமல். செய்யார்க்கு - பொறுமை செய்யாத சிவனடியார்களுக்கு; செம்மையையுடையார்க்கு எனினும் ஆம். புகழ் நிறைந்த; நிறைந்த : முற்று.

(பி - ம்.) 1. 'பெருக்கத்திற்'

திருஞான சம்பந்தர் போதி மங்கை என்ற ஊரிலே சின்னம் ஒலிப்பச் சிவிகை யூர்ந்து செல்லும்போது அங்கே இருந்த பௌத்தர்கள் வந்து 'வல்லமை யற்றூர்க்கு இவை ஏன்?' என்று வழி மறித்தனர். அவர்களில் தலைவனான புத்தநந்தி ஆளுடைய பிள்ளையுடன் வாதுக்கு வரப் பிள்ளையாரின் எழுத்தாளர், 'புத்தர் சமண் கழுக்கையர்......அத்திரமாவன அஞ்செழுத்துமே' என்ற பதிகத்தைப்பாட ஓர் இடிவிழுந்து புத்தநந்தி இறந்துபட்டான் என்பது பெரிய புராணத்திற் கண்ட வரலாறு. 32

வெஃகாமை

33 இரந்துண்டு வாழ்ந்து மிறைவர் புலவர்
இரந்த பொருள்கவர்ந்த தீந்தார் மறந்தும்
இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(கு-ரை) புலவர் என்றது சுந்தரமூர்த்தி நாயனாரை. சேரமான் பெருமாணாயனார் சுந்தரமூர்த்தியாருக்கு அளித்த நிதியைத் திருமுருகன்பூண்டியின் அருகில் பூதகணங்களை வேடுவராக அனுப்பிச் சிவபிரான் கவர்ந்துகொண்டு சுந்தரர் வேண்ட மீட்டும் அதனை வருவித்துக் கொடுத்த செய்தியை இது புலப்படுத்தும். 33

புறங்கூறாமை

34 சங்கறுக்குஞ் சாதிசொலுஞ் சங்கரனை நக்கீரன்
அன்றுபழி சொன்னதுபோலார் சொல்வார்—என்றும்
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளும்
திறன்றெரிந்து கூறப் படும்.

(கு - ரை) சங்கு அறுக்கும் சாதி சொல்லும் சங்கரனை - சங்கை அறுக்கின்ற இழிந்த சாதியிற் பிறந்தவன் கீரன் என்று பழித்துக் கூறும் சங்கரனை. அன்று - தருமிக்காகச் சிவபெருமான் புலவராகி வந்த அந்நாளில். சிவனார் கீரரைப் பழித்துக் கூறிய செய்யுளும் அதற்கு மாறாக நக்கீரர் பகர்ந்த பாட்டும் கீழ் வருவனவாகும் :

'அங்கங் குலுங்க அரிவாளின் நெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ என்கவியைப்
பாரிற் பழுதென் பவன்';
'சங்கறுப்ப தெங்கள்குலம் சங்கரனார்க் கேதுகுலம்
பங்கமுறச் சொன்னால் பழுதாமோ—சங்கை
அரிந்துண்டு வாழ்வோம் அரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வ திலை.'

வங்கிய சூடாமணி என்னும் பாண்டியன் தன் மனத்திற் கொண்டுள்ள கருத்தை ஒரு செய்யுளிற் சொல்லவல்லார் இதனைக் கொள்ளவென ஒரு பொற்கிழி யமைத்தனன். புலவரால் அவன் கருத்தை அறிய இயலாமற் போகவே தருமி என்பான் சிவபிரான் பாடிக்கொடுத்த 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற செய்யுளை அரசன் முன் கொண்டுசென்று காட்டிக் கிழியை அறுக்கவரும் சமயம் கீரன் அது குற்றமுடைய செய்யுள் என்று கூறிவிட்டான். ஆகவே, சிவபிரான் புலவராகி வந்து கீரனொடு வாதிட்டு அவனைப் பொற்றாமரையில் வீழ்த்திக் கிழியைத் தருமிக்கு வழங்கி மறைந்தருளினார் என்பது வரலாறு. 34

பயனில சொல்லாமை

35 இறைவர் மதலை யெதிரிசைவு கூறும்
வெறுமுரையாற் சென்றுகழு வேறும்—பிறர்போல்
பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும்.

(கு - ரை) இறைவர் மதலை - முருகக் கடவுளின் அவதாரமாகிய திருஞான சம்பந்தர். எதிர் - மாறுக. இசைவு - பந்தயம். வெறும் உரை - பயனற்ற சொற்கள். கூன்பாண்டியன் வெப்பு நோயால் வருந்தும்போது சம்பந்தர் அதனை நீக்க வந்தார். அச்சமயம் சமணர் அரசனது உடலின் ஒரு பாதியிலுள்ள நோயைத் தீர்ப்பதாகக் கூறி அதுமுடியாதவராகிப் பின்னும் தங்கள் தங்கள் கொள்கைகளிலொன்றை எழுதிய ஏட்டைப் புனலிலும் கனலிலும் இட்டுச் சோதிக்கச் சம்பந்தரை வாதுக்கிழுத்து அவற்றிலும்

தோற்றனர். தோற்றவர் கழுவேறி மாய்தல் வேண்டும் என்ற பழைய ஒப்பந்தப்படி அவர்கள் அப்பொழுது தாமாகவே கழு வேறி மடிந்தார்கள் என்பது வரலாறு. இது 30-ஆம் பாட்டா லும் புலனாகும். 35

தீவினை யச்சம்

36 தையலார் கற்பழியச் சார்வானை மாமதுரைத்
தெய்வமே சென்றொறுக்குஞ் செய்தியால்—நொய்தின்
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(கு - ரை) சித்தன் என்றவன் சிவபக்திச் செல்வரான ஒரு வயோதிகப் பணிக்கரிடம் சில பகல் மாணவனாக இருந்து பிறகு அவருக்கு விரோதமாகப் பல மாணவர்க்கு யுத்த முறையைக் கற்பிக்கும் தொழிலை மேற்கொண்டு அவர் பிழைப்பைக் கெடுத்த தன்றி அவருடைய மனைவியையும் இச்சித்தான். சோமசுந்தரக் கடவுள் அதனைப் பொறுதவராகி முதிய பணிக்கர் வேடம் பூண்டு சித்தனை வலிந்து சண்டைக் கிழுத்து அவனுடைய அங்கங்களை வேறுவேறாக வெட்டி வீழ்த்தினர் என்பது முதலிரண்டடிகளிற் கண்ட வரலாறாகும்; திருவிளையாடற் புராணம், அங்கம் வெட்டிய படலம். 36

ஒப்புர வறிதல்

37 தருவும் வரிசைபெறுஞ் சங்கரனுக் கன்பர்
ஒருவர் திருவுடைய ராகத்—தெருநடுவே
ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(கு - ரை) தருவும் வரிசைபெறும் - மரமும் பல வரிசைகளை அடையும். அன்பரொருவர் - வரகுண பாண்டியர். திருவிடை மருதூரில் உதிர்ந்த வேப்பங்கனிகள் அவருக்குச் சிவலிங்க வடிவ மாகத் தோற்ற வேப்ப மரங்கள் வெயிலில் உலரா வண்ணம் அவற்றிற்குப் பந்தல்கள்போட்டு மேற்கட்டிகளும் கட்டுவித் தார். மருதவனப் புராணம் பார்க்க. ஆக - ஆவதனால்.

திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, 28 : 51-2. 37

ஈகை

38 தொல்லைமணி மன்றுடையார் தொண்டர்க்குப் பெண்டிரையும்
இல்லையெனு தீந்தா ரியற்பகையார்—வல்லி
இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(கு - ரை) இயற்பகையார் - இயற்பகை நாயனுர். சிவனடியார் வேடத்தில் வந்த சிவபெருமான் இவரிடம் வந்து இவருடைய மனைவியைத் தம்முடன் அனுப்பும்படி வேண்ட இவர் அங்ஙனமே செய்தாரென்ற வரலாறு பெரிய புராணத்திலுள்ளது. வல்லி - கொடி போன்றவளே. 38

புகழ்

39 தோன்றி யரனருளாற் றொண்டர்வென்றார் தோற்றமணர்
என்பிறந்தே மென்றே யிடருழன்றார்—ஆய்ந்தறிஞர்
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(கு - ரை) தொண்டர் - சம்பந்தர். வென்றார் - வாதத்தில் வென்றார். இதிற்கண்ட வரலாறு 35-ஆம் கவியின் குறிப்புரையில் உள்ளது. 39

இல்லறவியல் முற்றும்

துறவற வியல்

அருளுடைமை

40 அருளாற் பிரம்பி னடியுண்டார்க் கில்லை
துயர்தா னுலகனைத்துஞ் சொல்லும்—ஒருநாளும்
அல்லலருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி.

(கு - ரை) அடிஉண்டார் - வந்தியென்னும் ஒரு மூதாட்டியின் ஆளாக வந்து பாண்டியனால் அடிபட்ட சிவபெருமான்.

அனைத்தும் சொல்லும் - அந்த வலியாகிய துன்பத்தை எல்லா உலகங்களிலும் உள்ள யாவரும் 'என்மேற் பட்டது, என்மேற் பட்டது' என்று கூறுவார்கள். துயர்தான் : இடைநிலை விளக்கு. (மத்திம தீபம்.) இது திருவிளையாடற் புராணத்துள்ள பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலிற் கண்ட வரலாறு. 40

புலான் மறுத்தல்

41 புத்தனு னென்றுசிவ போதனெனுஞ் சைவனென
வைத்ததிரு வள்ளுவர் வாய்மொழிதான்—நித்தம்
தினற்பொருட்டாற் [1]கொள்ளா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

(கு - ரை) வாய்மொழி - உண்மை மொழி. வாய் மொழி : எழுவாய்; 'நித்தம் தினற்பொருட்டாற்...தருவாரில்' என்பது பயனிலை. 'உயிர்களைக் கொன்று தின்னல் பாவமே ஒழிய, இறந்த பிராணிகளின் ஊனைத் தின்பது பாவமாகாது' என்ற பௌத்த மதக் கொள்கையை மறுத்து நாயனார் இக்குறட்பாவை எழுதியுள்ளார். ஆதலின் 'அவர் பௌத்தரல்லர், சைவரே' என்பது இந்நூலாசிரியரின் கருத்தாகும். 41

42 நாரைபுலா லுண்ணாது நல்லறமேற் கொண்டொழுகி
ஈசனுல கேறி யிருத்தலால்—........
செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(கு - ரை) குளிக்கவரும் முனிவர்களிடம் பயமின்றி மீனினங்கள் பழகிவரும் அன்பினை ஒரு நாரை கண்டு தானும் புலாலுண்ணாது நீரை மட்டும் உட்கொண்டு வந்தது. மதுரையின் பெருமையை முனிவர் தம்முள் பேசிக்கொண்டதை அறிந்து அங்கேசென்று இறைவனை வணங்கி இறுதியில் சிவகணங்களுள் ஒன்றாக முத்தி பெற்றதென்பது திருவிளையாடற் புராணத்திற் கண்ட வரலாறாகும். 42

(பி - ம்) 1 'கொல்லா

43 வேதியர்கள் விண்ணடைந்தார் வேட்டுயிரைக் கொன்றுதின்று
ஆதிசைவர் மேலென் றதனைமறுத்—தோதும்
அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.

(கு - ரை) வேதியர்கள் வேட்டு விண்ணடைந்தார்; வேட்டு- யாகம் செய்து. விண் அடைந்தார் - அழிதன்மாலையதான சுவர்க்க பதவியையே யடைந்தார். அதனை - யாகத்தில் உயிர்க் கொலை செய்து ஊனுண்பதனை. 'அவிசொரிந்து' என்ற குறள் அதனை மறுத்தோதும் என்க. வேள்விகளால் வரும் பயனினும் ஊனுண்ணா விரதத்தால் வரும்பயனே சிறந்ததென்பது கருத்து. 43

தவம்

44 தமிழ்மணக்கப் பாடியரன் றண்ணளிசேர் மைந்தன்
அமணழிக்குந் தென்னவனை யாக்கும்—இமையளவில்
ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தால் வரும்.

(கு - ரை) அளி - கருணை. மைந்தன் - திருஞான சம்பந்தர். அமண் - சமண மதத்தை. தென்னவனை - மங்கையர்க்கரசியாரின் கணவனாகிய கூன்பாண்டியனை. ஆக்கும் - ஓங்கச் செய்யும். பாண் டியன் சம்பந்தர் அருள்பெற்று முத்திப் பேற்றுக்கு அருகனாதன்றித் தன்னுடற் கூனும் நீங்கப் பெற்றமையால், 'ஆக்கும்' என்பது மிகவும் பொருத்தமுடையதாகும். 44

கூடா வொழுக்கம்

45 என்று மிறைவ னடியார் பொருளென்று
நின்றொழுகு மெய்ப்பொருளி னேரான்போய்—அன்று
தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(கு - ரை) மெய்ப்பொருள் - மெய்ப்பொருள் நாயனார். நேரான் - பகைவன்; முத்திநாதன். அடியார் வேடமே மெய்ப்

பொருள் என்று எண்ணிவந்த மெய்ப்பொருளாரை முத்திநாதனென்னும் பகைமன்னன் பலமுறை போரில் வெல்லமுடியாமல் புறக்கிட்டோடினுன். இறுதியில் அவன் சிவனடியார்போல் மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக் கட்டிக் கையினில் படைகரந்த புத்தகக் கவளி யேந்திப் பொய்த்தவ வேடங் கொண்டு புகுந்து தன்னை மெய்ப்பொருளார் வணங்கும்போது அவரை வாளால் குத்திக் கொன்ருன் என்பது பெரியபுராணத்திற் கண்ட வரலாறு. 45

கள்ளாமை

46 ஈசனுக்கும் பெண்டென் றிருந்தாரு நெய்திருடி
ஆயர்மனைப் பட்டபா டார்படுவார்—சீசியென்
றெள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(கு - ரை) பெண்டென்றிருந்தார் - திருமால்; இந்நூல் 15-ஆம் கவியைக் காண்க. பாடு - துன்பம்; பட்டபாடு கிருஷ்ணவதாரத்தில். 46

வாய்மை

47 ஆதிமுடி தேடி யறியா னறிந்தேனென்
ருேதிமன நொந்தே யுழல்கின்ருன்—வேதனென்ருல்
தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(கு - ரை) ஆதி - சிவபெருமான். வேதன் உழல்கின்ருன் - கற்பந்தோறும் திருமாலுக்குப் புத்திரராகப் பிறந்தும் கோவிலின்றியும் பிரமா துன்ப முறுகின்ருர். 47

48 நந்தியருள் காசிமயா னத்திருந்து சீவித்தும்
அந்த மொழிதவரு தாற்றுமரிச்—சந்திரன்போல்
உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்.

(கு - ரை) நந்தி - சிவபெருமான்; 171-ஆம் செய்யுளைக் காண்க. காசியில் இறப்பார்க்குச் சிவபெருமான் தாரக மந்திர

முபதேசித்து முத்தி யீவர் என்பதனை உட்கொண்டு, 'நந்தியருள் காசி மயானம்' என்றார்.

ஒவ்வொரு கவியிலும் சிவசம்பந்தமான சொல்லோ, பொருளோ, சொற்பொருளோ இருத்தல் வேண்டுமென்ற கொள்கையுடையவராதல் பற்றி இவ்வாசிரியர் இங்கே 'நந்தியருள் மயானம்' என்றார். காசியில் இறப்பவருக்கு அந்திய காலத்தில் சிவபெருமான் பஞ்சாட்சரத்தை உபதேசிப்பார் என்பர். அரிச்சந்திரன் வரலாறு யாவருமறிந்ததே. 48

வெகுளாமை

49 பெற்ற முவந்தார் பெருமைமதி யாதுதக்கன்
செற்றமேற் கொண்டு சிரமிழந்தான்—முற்றும்
சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(கு - ரை) பெற்றம் - காளை. செற்றம் - நெடுங் காலம் நிகழும் சினம். சிரமிழந்தான் - தக்கன். இவன் வரலாறு 10-ஆம் கவியால் விளங்கும். 49

இன்னா செய்யாமை

50 கண்ணுதலார் தம்மைக் கடைகாக்க வைத்தானை
விண்ணவருந் தாழ்ந்திறைஞ்ச மேல்வைத்தார்—எண்ணி
இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(கு-ரை) கடை-கடைவாயில். காக்க வைத்தவன்-வாணாசுரன் மேல்வைத்தார்-கைலாயத்தில் தம் சந்நிதியில் மத்தளம் கொட்டுபவனாக வைத்தார். மகாபலி சக்கரவர்த்தியின் புதல்வனாகிய வாணாசுரன் சிவபெருமானைப் பூசித்து மிகுந்த வலிமைபெற்று அவரைத் தன் கோட்டைக்குக் காவலாக வைத்து, வலிமையில் தனக்கு ஒப்பார் எவருமில்லை என்று செருக்குற்றிருந்தான். ஒரு சமயம் தன் மகள் உஷையின் காரணமாகக் கண்ணபிரானுடைய பேரன் அநிருத்தன் வாணனூர்க்குக் கொண்டுவரப்பெற அவன் வாராணனால் சிறை வைக்கப்பட்டான். இதனை யறிந்த கண்ண

பிரான் வாணனூர் வந்து சிவபிரானை வழிபட்டு உள்ளே நுழைந்து வாணனுடைய ஆயிரங் கைகளுள் சிவனைப் பூசித்து வரும் இரண்டினை வைத்து எஞ்சியவற்றைக் களைந்து மீண்டார். பிறகு வாணன் கயிலையில் சிவபிரானுக்கு மத்தளம் கொட்டும் பணியைப் பூண்டான் என்பது வரலாறு; 92, 134-ஆம் செய்யுட்களையும் காண்க. 50

51 இரணியனைக் கொன்றிருக்க வெண்ணினவர் கேடும்
அரன்வெகுளப் பின்னிகழு மாற்றல்—ஒருவர்
பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

(கு - ரை) திருமால் நரசிங்க மூர்த்தியாகத் தோன்றி இரணிய கசிபுவைக் கொன்றபின் தருக்குற்று அட்டகாசம் செய்வதைப் பிரமன் வாயிலாகக் கேள்வியுற்ற சிவபெருமான் எட்டுக் கால்களையும் இரண்டு தலைகளையுமுடைய சரபப்புள்ளாக வந்து நரசிங்கத்தின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டாரென்பது வரலாறு. 51

கொல்லாமை

52 கூடலிறை யன்று கொடியமறை யோன்சுமத்தும்
வேடன்பழி யஞ்சி விடுவிக்கும்—தேடவரும்
நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி.

(கு - ரை) கூடல் இறை - மதுரையரசனாகிய பாண்டியன். வேடன் பழி - வேடனுக்கு வந்த பழியை. வழிப் பிரயாணத்தின் இடையில் ஓர் அந்தணன் தன் மனைவியை ஓர் ஆலமரத்தடியில் இருக்கச்செய்து தான் நீர் கொண்டுவரச் சென்றான். அச்சமயம் மரத்தில் சிக்குண்டிருந்த ஓர் அம்பு காற்றினால் அலைப்புண்டு மேலேபட அவள் இறந்தனள்; அந்தணன் இதனை அறியாது அருகிலிருந்த ஒரு வேடனே அவளைக் கொன்றானென்று அவனைப் பாண்டியனிடம் கொண்டுசெல்ல, மன்னவன் உண்மையை அறியாமல் சோமசுந்தரக் கடவுளை வேண்டி அவர் கட்டளையின்படி மறையோனுடன் ஊருக்கு வெளியே நடைபெறும் ஒரு கலியா

ணத்துக்கு மாறுவேடத்துடன் சென்ருன். அங்கே மணமகன் உயிரைக் கவர்ந்து செல்ல வந்திருந்த காலதூதர், 'முன்னம் ஆலமரத்தின்கண் சிக்குண்ட அம்பைக் காற்ருல் வீழ்த்திப் பார்ப்பனியின் உயிரைக் கொண்டதுபோல் இங்கே கட்டியுள்ள காளையை அவிழ்த்துவிட்டு முட்டச்செய்து இவனுயிரைக் கவர் வோம்' என்று பேசிக்கொண்டதை அறிந்து வேடனை விடுவித் தான் என்பது திருவிளையாடற் புராணத்துப் பழியஞ்சிய திருவிளையா டலிற் கண்ட வரலாருகும். கொல்லாமையை மேற்கொள்வதே நல்வழியாகும். 52

நிலையாமை

53 அரணையருச் சித்தவிப சித்திற்கும் வேள்வி
புரியு நகுடனுக்கும் போல—வருவதூஉம்
கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(கு - ரை) விபசிந்து - கோசல தேசத்து ஓர் எளிய அந்த ணன்; சிவபக்தன். ஒரு காலத்தில் குபேரனுடைய தங்கை ஒரு பொய்கையில் நீராடும்போது தன் மூக்குத்தியை இழந்துவிட் டாள். விபசிந்து அதனைத் தேடிக்கொடுத்துக் குபேரனல் அளவற்ற திரவியம் பெற்று அவை அனைத்தையும் சிவபணிக்கே செலவிட்டனன் என்பது விருத்தாசல புராணத்திற் கண்ட வரலாறு.

நகுடன் : குருவம்சத்து ஓர் அரசன். இவன் பல பரிவேள்வி களைச் செய்து இந்திர பதவியைப் பெற்ருன். இந்திரனுனபின் அகத்தியர் முதலிய சப்தரிஷிகள் சிவிகை தாங்க அதில் அமர்ந்து செல்லுகையில் அந்த முனிவர்களை நோக்கி 'விரைந்து செல் லுங்கள்; விரைந்து செல்லுங்கள்' என்ற பொருளைத் தரும்படி வடமொழியில் 'சர்ப்ப, சர்ப்ப' என்றனன். அதனைக்கேட்டு அகத்தியர் சினங்கொண்டு இவனைச் சர்ப்பமாமாறு சபித்தனர் என்பது திருவிளையாடற் புராணத்திற் கண்ட வரலாருகும். வில்லி பாரதம் குருகுலச் சருக்கம், 14–5-ஆம் கவிகளையுங் காண்க. கூத் தாடும்இடம் ஒரு கூட்டம்கூடி அப்பால் கலைவதுபோல் செல்வம் நிலையற்றதென்பது இவற்ருல் விளங்கும். 53

54 முன்னாளிருந்தகண்ணன் முக்கணற்காட் பட்ட
வனசரனுன் மாயு மறுநாள்—எனலால்
நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(கு - ரை) வனசரன் - வேடன். கண்ணபிரான் ஒரு சோலையில் யோகநித்திரை செய்திருக்கையில் மறைவில் நின்ற வேடனொருவன் அவரது காற்பெருவிரலை ஒரு பறவையென்று நினைத்து அம்பு செலுத்த அதுபட்டுக் கண்ணபிரான் இறந்துபட்டாரென்பது வரலாறு. இராமாவதாரத்தில் மறைந்துநின்று அம்பெய்து தன்னைக்கொன்ற திருமாலை வாலி வேடனாகப் பிறந்து கிருஷ்ணாவதாரத்திற் கொன்றான் என்பாருமுண்டு. வாலி பரம சிவபக்தன். இதனை நினைந்து 'முக்கணற் காட்பட்ட வனசரனால்' என்றார் போலும். சரீரம் அநித்தியமென்பது இதனாற் பெறப்படும். 54

துறவு

55 குலனொழுக்க நல்ல குணமுண்டோ வென்னும்
அரனருளு முய்யவந்தார்க் கன்றே துறவுமுதிர்ந்
தியானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(கு - ரை) யான் எனது என்னும் மயக்க மற்றவன் முக்தியுலகத்தை யடைவானென்பது கருத்து. உய்யவந்தார் - உய்யவந்த தேவநாயனார்; சைவசித்தாந்த சாஸ்திரங்களுள் ஒன்றன் ஆசிரியர். முதலிரண்டடிகள் இவர் வரலாற்றைக் குறிக்கும் போலும். 55

56 பட்டினத்துப் பிள்ளை பரனையடைந் தார்துறந்து
விட்டுவிடா விந்திர......கிலார்—கிட்டித்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(கு - ரை) காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் மரபில் சுவேதாரணியர் என்ற பெயருடன் குபேர சம்பத்தில் வாழ்ந்து வந்த ஒருவர் சிவபூசை மேற்கொண்டொழுகி ஒருநாள், 'காதற்ற

ஆசியும் கடைவழிக்கு வாராது' என்பதை யுணர்ந்து முற்றும் துறந்து சிவபெருமான் விஷயமாகப் பல அரிய நூல்களை இயற்றி இறுதியில் திருவொற்றியூரில் இடைச் சிறுவர்களுடன் கடற்கரையில் விளையாடிக்கொண்டிருக்கையில் தம்மை மணலிற் புதைக்கும்படி அவர்களிடம் கூறி அங்ஙனம் புதைக்கப்பெற்ற இடத்தில் சிவலிங்கமாயினர். முற்றத் துறந்தவர்கள் முத்தி பெறுவர்; துறவாதவர் பிறப்பில் அழுந்துவர் என்னும் நீதியை இவ் வரலாறு காட்டும். 56

57 எங்குமிறை தோய்ந்தாலுந் தோய்விலனென் றோதுதமிழ்ச்
சிங்க நடந்தவழிச் சித்தாந்தம்—அங்கதுகேள்
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(கு-ரை) எங்கும் இறை...என்று – இறைவன் எப்பொருளினும் வேறின்றிக் கலந்து நிற்பினும் அங்ஙனம் நிற்பவன் அப்பொருள் ஒன்றினும் பற்றற்றவனாய்த் தனித்து நிற்பவனுவான் என்று. முதல் இரண்டு அடிகளும் இந்நூல் முதற் செய்யுளோடு ஒத்திருத்தல் காண்க. பற்று அறும்பொருட்டு முத்தி நெறியைப் பற்றவேண்டும். 57

மெய்யுணர்தல்

58 மதியிருளை நீங்கின் மலவிருளு நீங்கும்
பதியருளா மென்றுசைவர் பார்த்து—மொழிவ
திருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(கு - ரை) மதி - புத்தி. மல இருள் - ஆணவம் முதலாய மலங்களென்னும் இருள். மொழிவது : எழுவாய். 'இருள்நீங்கி ......காட்சியவர்க்கு' : பயனிலை. மெய்ஞ்ஞானங்கொண்டவர் மெய்ஞ்ஞானத்திலேயே மோக்ஷமடைவர். 58

59 இருள்பலவாக் கோட விறைநூ லுக் கன்றி
அருகர் பிறர்க்காகா தென்னும்—உரைகேள்
இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(கு–ரை) இருள்பல ஆவன : ஆணவம், திரோதம், அசுத்த மாயாகாரணம், கன்மம், மாயேயம் என்னும் ஐந்து. மலங்கள் ஐந்தென்பது 'மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற் பொரு மத்துறவே' என்ற திருவாசகத்தாற் பெறப்படும். இந்த ஐந்து மலமும் நீங்கினுலொழியச் சிவனருள் சித்திக்காதென் பதனை, "ஆகமலம் ஐந்தென்பர் ஐந்து மாறு தருளென்ப தரிதென்பர் அறிந்துளோரே' (சிவப்பிரகாசம், 32) என்னும் செய்யுளால் அறிக. 59

60 அரனருளா மின்ப மனுபவிப்பர் வேறென்
றிருமைபரிந் தொன்றை யிகழ்வான்—உரைசெயும்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(கு - ரை) இப்பிறப்பில் உபதேசங்கேட்டு உண்மைப் பொருளை யறிந்தவர் பிறப்பை நீக்குவர் என்பது கருத்து. இருமை - ஆண்டானடிமைத்திறம். ஒன்று-ஏகம். இருமையில் விருப்பும் ஒன்றில் வெறுப்பும் உடையவர் சைவ சிந்தாந்திகள். 60

61 பற்றொழிந்து மென்னபிறர் பண்டரனைத் தூதுவிடக்
கற்றவர்போன் மெய்ப்பொருளைக் கண்டார்கொல்-உற்றதுகேள்
ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

(கு-ரை) தூதுவிடக் கற்றவர்-சுந்தரமூர்த்தி நாயனுர். சுந்தர மூர்த்திகள் சங்கிலியார்பால் உறவு வைத்திருந்தமையை எண்ணிப் பரவையார் ஊடல் கொண்டனர். அதனை மாற்றிச் சுந்தரரை அவரிடம் சேர்ப்பிக்கச் சிவபெருமான் பரவையார் இல்லத்துக்கு இருமுறை தூது சென்ற வரலாறு **பெரிய புராணத்தால்** அறியப்படும். மெய்ப் பொருள் – உண்மையறிவு, சிவஞானம். 61

அவாவறுத்தல்

62 பிறவியறுர் மற்றையவர் பிஞ்ஞகர்காண் பித்த
பலபொருளும் வேண்டாத பண்பி னவரன்றி

அற்றவ ரென்பா ரவாவற்ருர் மற்றையார்
அற்ருக வற்ற திலர்.

(கு—ரை) பிஞ்ஞகர்[1] – சிவ பெருமான். பண்பின் அவர் – திருநாவுக்கரசுநாயனுர். இவர் திருப்புகலூரில் உழவாரப் பணி செய்கையில் சிவபெருமான் உழவாரம் நுழைந்த இடமெங்கும் பொன்ேேடு நவமணிகள் பொலிந்திலங்க அருளினர். அப்பரோ அவற்றிற் சிறிதும் பற்றற்றவராகிப் பருக்கைக் கற்களாக மதித்து உழவாரத்தினில் ஏந்தி அருகேயுள்ள ஒரு வாவியில் போட்டு விட்டனர். பிறகு சிவபிரான் தேவமாதரை ஏவி இவரை மயக்க நினைத்தபோதும் அடிகள் மனம் மாறினுரில்லே. பிறவியற்றவர் என்பார் ஆசையற்றவர். 62

ஊழ்

63 வரருசியுள் ளிட்டார் மயங்கினு ரென்ருல்
அவரவருக் கீச னமைத்த திறனன்றி
ஊழிற் பெருவலி யாவுள மற்ெருன்று
சூழினுந் தான்முந் துறும்.

(கு-ரை) வரருசி - இவர் திருக்கைலாயத்தில் சிவபெருமானுக்குப் பணியாற்றி வந்த புஷ்ப தந்தன் என்பாரின் அவதார புருஷர். இலக்கணத்தில் தாமே தீரர் என்று மமதை கொண்டு இவரோடு ஒரு குருவினிடம் பயின்ற பாணினி முனிவரை அறிவற்றவர் என்று நிந்தனை செய்தார். சிவபக்தரான பாணினி பிறகு தவஞ்செய்து பாணினீயம் என்னும் வடமொழி வியாகரணத்தை எழுதினுர். பின்பு வரருசி அதனையே கற்றுப் பூர்ணமான புலமை பெற்று விளங்கினுர். சிவகணத்துள் ஒருவராயிருந்தும், மிகுந்த புலவராக இருந்தும் பரநிந்தனை செய்தமையின் 'மயங்கினுர்' என்ருர். 63

துறவறவியல் முற்றும்

அறத்துப்பால் முற்றும்

---

1. பிஞ்ஞகர் : (தலைக்கோலமுடையவர்) காரணப்பெயர்.

2. பொருட் பால்

அரசியல்

இறைமாட்சி

64 இறையெளிதின் றியார்க்கு மினியசொல்ல லாலே
மதுரை மதுரையென்பார் மாந்தர்—அதுவன்றே
காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்.

(கு—ரை) இறை—சோம சுந்தரக் கடவுளின் அவதாரமாகிய சுந்தர பாண்டியர். எளி நின்று-முறை வேண்டினார்க்கும் குறை வேண்டினார்க்கும் காண்டற்கு எளியராக நின்று காட்சியளித்து, மாந்தர் மதுரையைப் புகழ்வதற்குக் காரணம் சுந்தரமாறனுருடைய செங்கோன்மையே என்பது கருத்து. 1

கல்வி

65 அருகர்கழு வேறுதலா லன்னெறிவிட் டீசர்
திருவருளால் வாதவூர் சேரும்—குருநெறியிற்
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(கு—ரை) அல் நெறி – சித்தாந்த நெறியல்லாத புறச்சமய நெறி. வாதவூர் சேரும் குரு-மாணிக்கவாசகர். இவர் கற்றவை சிவஞானபோத முதலிய சைவ நூல்கள். 2

66 நாதரருள் சேரனொடு நம்பியா ரூரருமுன்
பேதமறக் கூடிப் பிரிவதுபோல்—தீதின்
றுவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

(கு—ரை). சேரமான் பெருமாணயனார் சிவபூசை செய்து வரும்போது ஒருநாள் இறைவனால் சுந்தரமூர்த்தி நாயனாரைப் பற்றிக் கேள்வியுற்றுச் சோழநாடு சென்று சுந்தரரைக் கண்டு அவருடன் நட்புப் பூண்டனர். இருவரும் பின்னர் இன்ப

வெள்ளத்திடை நீந்தி ஏறமாட்டாதவர்போல என்பும் உருக உயிர் ஒன்றித் தம்முள் கலந்தனர். பல சமயங்களில் இவ்விரு வரும் கூடும்போது அன்போடு கூடியும் பிரியும்போது அரிதிற் பிரிந்தும் தாம் ஒருவரில் ஒருவர் கலந்துள்ளமையைப் புலப்படுத் தினார்கள் என்பது பெரியபுராணத்திற் கண்ட வரலாறாகும். 3

67 கற்றவர்சங் கத்திருந்தார் கண்ணுதலோ டேனையவர்
சற்றுமிரா ரென்று தலையாயார்—முற்றும்
உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

(கு - ரை) கற்றவர் - சங்கப் புலவர்கள். கண்ணுதலோடு - சங்கப் புலவருள் ஒருவராக உடன் வீற்றிருந்த திருவாலவாய் எம் அண்ணலோடு. ஏனையவர் - கல்வி யறிவில்லாதவர்கள். என்று - என்று நினைத்து. முற்றும்...கற்றார் தலையாயார். 4

68 சிவகீதை முற்கேட்டார் சென்றுசென்று சென்மித்
தவர்பார்த் தனுக்கருளு மாற்றால்—புவனத்
தொருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(கு - ரை) சிவபெருமான் திருமாலுக்கு உபதேசித்த கீதை சிவகீதையாம். முன் கேட்டார் - திருமால். சென்மித்து - பல பிறவிகளிலும் பிறந்து. பார்த்தன் - அர்ச்சுனன். திருமால் அர்ச்சுனனுக்கு உபதேசித்தது பகவத்கீதை எனப்படும். 5

69 இறைவருங் கைவிடா ரேடவர்பாற் சென்ற
பிறருமறிந் தின்பம் பெறலால்—அறிதொறூஉம்
தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(கு - ரை) இறைவர் - சிவபெருமான். திருப்பெருந்துறை யில் திருவாதவூரருக்குக் காட்சியளித்தபோது சிவபெருமான் தம் கையில் சிவஞானபோதச் சுவடியை வைத்திருந்தார் என்ற செய்தியை உளத்திற்கொண்டு, இறைவரும் கைவிடார் ஏடு'

என்றூர். பிறரும் என்றது திருவாதவூரரை உள்ளிட்ட மாணவர் குழாத்தினரை. 6

கல்லாமை

70 ஒருவர் சிறிது......னுமையாற்
கருள்வதன்முன் ப...தறிந்து—குருமுகத்தாற்
கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும்
கொள்ளா ரறிவுடை' யார்.

(கு - ரை) கல்லாதவன் தன்னை மதிக்கும் மதிப்பு கற்றவன் முன் பேசக்கெடும். இக்கவியில் முதலிரண்டடிகளின் சரியூான உருவம் விளங்கவில்லை. 7

71 ஈச ரிடத்தன்ப ரென்பவர்பாற் புத்தரெலாம்
பேசுமிடத் தூமையாம் பெற்றிமையால் ஆகமத்தைக்
கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(கு - ரை) ஈசரிடத்தன்பர் - மாணிக்க வாசகர். புத்தர் - இலங்கையிலிருந்து வந்த புத்தர்கள். மணிவாசகனுர் சிதம்பரத்திலிருக்கையில் இலங்கையிலிருந்து சில பௌத்தர்கள் வந்து தில்லை மூவாயிரவருடன் வாதஞ் செய்தனர். ஏழுநாளில் வாதம் முடிவுபெற நினைந்து சிவபெருமான் தில்லைவாழந்தணர் தம் கனவிற்றேன்றி, 'வாதவூரனை அழைத்து வாதம்புரியச் செய்யுங்கள்' என்று கட்டளையிட்டார். அவர்கள் அழைப்புக்கிணங்கி • மணிவாசகனுர் பௌத்தருடன் வாதிட்டபோது அவர்கள் மறுமொழி பகரமுடியாது திகைத்தனர். அவ்வளவில் ஈழநாட்டரசன் தன் மூங்கைப் பெண்ணை அழைத்து, 'இருதிறத்தாரில் இப்பெண்ணின் மூங்கையைத் தீர்ப்பவரின் சமயமே சிறந்ததாகும்' என்றுன். பௌத்தர் மூங்கையைப் போக்க அறியாது வருந்த மாணிக்க வாசகர் அப்பெண்ணைப் பேசவைத்து ஈழமன்னனைச் சைவராக்கினுர்' என்பது திருவாதவூரடிகள் புராணத்திற் கண்ட வரலாருகும். 8

கேள்வி

72 ஆலடியார் பாற்பட்ட வந்தணர்போ லுய்வதற்குச்
சீலமுடை யாற்பாற் செவிதாழ்க்க—சால
இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

(கு - ரை) ஆலடியார் - ஆலமரத்தினடியிலுள்ள தக்ஷிணாமூர்த்தி. அந்தணர் - சனகாதி நால்வர். நல்லவர்கள் வாயிற் பிறக்கும் சொல் ஒருவர்க்கு ஆபத்து வரும்போது ஊன்றுகோல் போலாம் 9

அறிவுடைமை

73 பிறர்க்குண்டோ வில்லையவர் பேராண்மை குன்ற
மதிக்கண் நுழைமதனை மாய்த்தார் தமக்கே
அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா வரண்.

(கு - ரை) குன்ற - அறிவு முதலிய அனைத்தும் குறையும்படி. மதிக்கண் நுழை மதனை - புத்தியில் நுழைகின்ற மன்மதனை; மதனை என்பதற்கு அறியாமை எனினும் அமையும்.

'புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்' (தனிப்பாடல்)
'விழித்த கண்குருடாத்திரி வீரரும் பலரால்' (திருவிளையாடல்)
மாய்த்தார் தமக்கே என்பதனோடு பேராண்மையைக் கூட்டுக. 10

74 ஈசனெறி தொண்ட ரியம்புதலு மெய்ந்நெறியென்
றுசின்று தேவ ரடைந்ததூஉம் நீதியன்றோ
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(கு - ரை) ஈசன்நெறி - சிவஞான போதம். தொண்டர் - பரஞ்சோதி முனிவர். தேவர் - மெய்கண்ட தேவர். சிவஞானபோத மென்னும் வடமொழி நூல் சிவபெருமானிடமிருந்து திருநந்தி தேவருக்கும் அவரிடமிருந்து சனற்குமாரருக்கும் அவரிடமிருந்து சத்தியஞான தரிசினிகளுக்கும் அவரிடமிருந்து பரஞ்சோதி

முனிவர் என்பவருக்கும் 12 சூத்திரங்களாக உபதேசிக்கப் பட்டது. இவர்களுள் பரஞ்சோதி முனிவர் பூலோகம் வந்து திருவெண்ணெய் நல்லூரில் சைவ வேளாளர் குலத்திற் பிறந்து குழந்தைப் பருவத்தில் இருந்த மெய்கண்ட தேவரைக் கண்டு அவருக்குச் சிவதீட்சை செய்து இதனை உபதேசித்தார். அதனைக் கொண்டு மெய்கண்டார் தமிழில் சிவஞான போதத்தை 12 சூத்திரங்களாக எழுதினுர் என்பது வரலாறு. 11

75 பண்டு களிற்றுப் படிமருங்கு வைத்தசெழுந்
தண்டமிழை யம்பலவர் தாமகிழ்ந்து—கொண்டமையால்
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(கு—ரை) தண்டமிழ்- திருக்களிற்றுப் படியார் என்ற புத்தகம். உய்யவந்தார் ஒரு நூலை எழுதி அது சிவசம்மதமானதோவென்று அறியும் பொருட்டுச் சிதம்பரத்திற் கோயிலின் திருக்களிற்றுப் படியில் வைக்க, அப் படி மருங்கிலுள்ள கல்யானை அதனைத் தன் துதிக்கையால் எடுத்துக் கடவுள் திருமுன்வைத்து அதன் மகிமையைப் புலப்படுத்தியது. இதனுல் அந்நூலுக்குத் திருக் களிற்றுப் படியார் என்ற பெயர் போந்தது. 12

குற்றங் கடிதல்

76 தோன்றி யிறையருளுந் தொண்டரெனு மூர்த்திக்கு
மூன்றுமறைச் செல்வ முதிருமஞ்—ஞான்று
செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(கு—ரை) இறை அருளும் மூர்த்திக்கு - சிவபெருமான் அருள் செய்த மூர்த்தி நாயனுருக்கு. மூன்று மறைச் செல்வம் : சிவாகமங்களிற் கூறப்பட்ட மூன்ருகிய திருநீறு, உருத்திராக்கக் கலன், சடைமுடி. அஞ்ஞான்று - அந்நாளில். மூர்த்தி நாய னுரின் சிவத்தொண்டுக்கு இடையூறு விளைத்துவந்த மதுரையை ஆண்டுவந்த கருநாடக மன்னன் அது காரணமாக இறந்துபட் டான். பிறகு ஊர் மக்கள் யானையை அனுப்பி மூர்த்தி நாயனுரைத்

தம் மன்னராகக் கொண்டனர். அவர் சிவபெருமானை வேண்டித் திருநீறே அபிடேகமாகவும், உருத்திராக்கமே திருவாபரணங்களாகவும், சடைமுடியே மணிமுடியாகவுங் கொண்டு அரசுரிமையை ஏற்றுக்கொண்டார் என்பது வரலாறு. 13

பெரியாரைத் துணைக்கோடல்

77 பகைசிறிது மின்றிப் பறவைகளு மஞ்ச
இறைவர் துணைவலியா னெய்தும்—முறைமையால்
உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(கு—ரை) வலியான் - கரிக்குருவி. பல பறவைகள் வருத்த வருந்திய கரிக்குருவி யொன்று மதுரையின் வைபவத்தைக் கேள்வியுற்று அங்கே சென்று பொற்றாமரையிற் படிந்து, சிவபெருமானைச் சில பகல் போற்றி வந்ததனால் வலியான் என்ற பேரைத் தனக்கு மட்டுமன்றித் தன் மரபுக்கே பெற்று இறுதியில் சிவகதி சார்ந்ததென்பது திருவிளையாடற் புராணத்திற் கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலத்தால் தெரியும் வரலாறாகும். 14

78 சிந்தா மணிகிடைத்தென் தென்னற் கிறையருளால்
வந்தாரைப் போலவெது வாழ்விக்கும்—அந்தோ
அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(கு—ரை) என் – என்ன பயன்? தென்னன் - கூன் பாண்டியன்; இறையருளால் வந்தார்—திருஞான சம்பந்தர். வாழ்வித்தல்: கூனை நிமிர்த்தல். 15

சிற்றினஞ் சேராமை

79 குண்டராற் றென்னன் குறைப்பட்டுக் கண்ணுதலார்
தொண்டரான் மிக்குயர்ந்து தோன்றலால்- எண்டிசையும்
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்.

(கு—ரை) குண்டர் - சமணர். தென்னன் - கூன்பாண்டியன். தொண்டர் – திருஞான சம்பந்தர். பாண்டியன் முன்னிலை

யில் சமணருக்கும் சம்பந்தருக்கும் நிகழ்ந்த சமயவாதத்தைப் பற்றியது இது. 16

தெரிந்து செயல்வகை

80 ஆய்தொடியார் கண்ணுதல்பா லன்பி னுமிழ்தலுமே
வாய்மையறி யாதொழுகு மற்றவர்போல்-தூய்மையொடு
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

(கு-ரை) ஆய் தொடியார் - திருநீலநக்க நாயனாரின் மனைவியார். உண்மையறியாது தம் மனைவியைக் கண்டித்தவர் திருநீலநக்கர். திருநீலநக்கர் தம்மனைவியுடன் கோவிலுக்குச் சென்று பரமனை வழிபடுங்கால், ஒரு சிலம்பி சுவாமியின்மேல் விழுதல் கண்ட அவர் மனைவியார் அதனைத் தம் வாயால் ஊதி விலக்கினார். இச் செயலை அனுசிதமென்று கருதிய கணவனார் மனைவியாரை நீத்தார். அன்றிரவு சிவபெருமான் நாயனார் கனவிற்றோன்றி, 'உம் மனைவி ஊதிய பாகம் போக மற்ற இடங்களில் என்னுடலில் இதோபார் கொப்புளங்கள்' என்று காட்டி அவருடைய மனைவியாரின் தலையன்பைப் புலப்படுத்தினார் என்பது பெரிய புராணத்திற் கண்ட வரலாகும். தம் மனைவியை இவர் கண்டித்தமை உலக இயல்புக்கு ஒத்ததேனும் அது தவறென்பது இவ் வரலாற்றால் விளங்கும். 17

வலியறிதல்

81 கண்ணுதல்பாற் சென்றது காமனுக்கு வென்றியோ
எண்ணமிலான் போலு மெதிர்ந்திறந்தான்—நண்ணி
நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

(கு-ரை) நுனிக் கொம்பேறினார் அவ்வளவைக் கடந்தால் உயிரை இழப்பர். தபஸ்வியாயிருந்த சிவபெருமானுடைய நிஷ்டையைத் தேவர்கள் விரும்பியபடி கலக்கும் பொருட்டு மலரம் பெய்த மன்மதன் அவராலெரிக்கப்பட்டானென்பது வரலாறு. 18

கால மறிதல்

82 எல்லா மிமைப்பி லழிப்பாரு நீட்டித்தார்
வல்லார் புரமெரிக்க வந்துழியும்—ஒல்லாரைப்
பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

(கு—ரை) அழிப்பார் - சிவபெருமான். வல்லார் – பிரமா விஷ்ணு முதலியோர். ஒல்லார் – பகைவர். இதில் கண்ட வரலாறு திரிபுர சங்காரத்தைக் குறிக்கும். 19

இடனறிதல்

83 இறையருள் தென்னனிடத் திந்திரன்வந் தன்று
வளையா லெறிபட்ட வாற்றல்—இளையாச்
சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுப்படையான்
ஊக்க மழிந்து விடும்.

(கு—ரை) இறையருள் தென்னன் : 78-ஆம் கவியைப்பார்க்க. பாண்டியன் தளையிட்டு வைத்த மேகங்களை விடுவிக்க வந்த இந்திரன் பாண்டியனோடு செய்த போரில் மீனவன் இந்திரன் முடிமேல் வளை (சக்கரம்) ஒன்று எறிந்து அவனைப் புறங்காட்டி ஓடச் செய்தானென்பது வரலாறு. 20

தெரிந்து தெளிதல்

84 இறைவர்நிலை காணு ரிருவரென்று கண்டால்
பெருமை சிறுமையினிப் பேசும் இறையாம்
பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

(கு—ரை) இருவர் – பிரமனும் திருமாலும். இருவரும் சிவ பெருமானுடைய அடி முடி தேடிய வரலாறு இங்கே குறிக்கப் பட்டது. 21

தெரிந்து வினையாடல்

85 ஈசன்குண் டோதரபோ வென்றருளுங் குன்றுபுரை
சோறுகறி யுண்டு தொலைப்பதற்கு நாடி
இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்

(கு—ரை) 'குன்றுபுரை சோறுகறி யுண்டு தொலைப்பதற்குக் குண்டோதரபோ என்று "ஈசன் அருளும்' என்று கூட்டுக. ஈசன் குண்டோதரனைப் போவென்ற வரலாறு **திருவிளையாடற் புராணம்.** குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலத்தில் உள்ளது. 22

சுற்றம் தழால்

86 அத்தர் திருவருளா லன்றுபடிக் காசுபெற்றார்
பத்தர்கணஞ் சூழப் பரிந்திட்டார்—இத்தலத்துச்
சுற்றத்தார் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(கு—ரை) பெற்றார் : திருஞான சம்பந்தரும் அப்பரும்; எழு வாய். இப்பாட்டிற்கண்ட வரலாற்றை 25ஆம் கவியின் குறிப் புரையிற் காணலாம். 23

பொச்சாவாமை

87 மறந்துமறந் தீசன் மலரடியைப் பேணா
திறந்திறந்து மாலுமிட ரெய்தும்—அறிந்தறிந்து
முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

(கு—ரை) **திருமால்** தசாவதாரங்கள் எடுத்தமையை நினைந்து 'பிறந்து பிறந்து மாலும் இடர் எய்தும்' என்றார். 24

செங்கோன்மை

88 இறைமகிழ வேந்த னிளங்கன்றிற் காக
மகவினையுந் தேரூரு மாற்றால்—அகலிடத்தில்

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்தி யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

(கு—ரை) இறை – சிவபெருமான். வேந்தன் — **மனுநீதிச் சோழன்.** தன் மகனுடைய தேர்க்காலில் அகப்பட்டு இறந்த ஒரு கன்றின் தாய்ப்பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டுத் தானே அம் மகன் மீது தேரைச் செலுத்திய மனுநீதிச் சோழ மன்னனுடைய செங்கோன்மையைத் தெரிவிக்கும் வரலாறு இது. **பெரியபுராணம்** திருவாரூர்ச் சருக்கத்திற்* காண்க. 25

89 அந்திவண்ண னூலா லருகர்பிறர் கோள்சிதைய
வந்ததிரு வள்ளுவர்தம் வாய்மொழிகேள்—இந்நிலத்
தந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

(கு—ரை) அந்தி வண்ணன் - சிவபெருமான். பிறர் என்றது உலகாயதரையும் பௌத்தரையும். சிதைய வந்த—சிதையும்படி அதற்குப் பிரமாணமாக வந்த. அந்தணர் நூலையும் அறத்தையும் திருவள்ளுவர் இக்குறளிற் கூறியிருப்பதனல் புறச்சமயிகளின் கோட்பாட்டை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை யென்பது புலனாகும். 26

கொடுங்கோன்மை

90 மாமனென்றும் பாணனென்றும் வந்தானைப் பொன்மதுரைச்
சேவகன்று னென்றுந் திரியாத சூரனென்றும்
நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும்.

(கு—ரை) சேவகன் – வீரன். சூரன் என்பதும் அது. மாமனாகவும் பாணனாகவும் வந்தவன் வீரசூர பராக்கிரமம் பொருந்திய **சிவபிரான்** என்று அறிந்து நாடி முறைசெய்யா மன்னவன் நாடு கெடும். அரசன் கொடுங்கோலனாயின் கடவுள் தாமே வந்து முறை செய்வர். இக்கவியில் திருவிளையாடற் புராணத்துள்ள 'மாமனாகவந்து வழக்குரைத்த படலம்', விறகு விற்ற படலம்' என்னும் இரண்டின் செய்திகள் சுட்டப்பெற்றுள்ளன.

---

* திருநகரச் சிறப்பு.

தனபதி என்னும் வணிகனொருவன் தன் சொத்துக்களை யெல்லாம் தன் மருகனை அனுபவிக்கும்படி விட்டுச் செல்லவே பின்னாளில் அவன் தாயாதிகள் அவற்றைக் கவர்ந்துகொண் டனர். அப்போது சிவபெருமான் தனபதியாக வந்து நீதி மன்றத்தில் வழக்காடி அவன் சொத்துக்களை அம் மருகனுக்கு உரிமையாக்கிச் சென்றார் என்பது வரலாறு.

பாணனாக வந்தது இசைவாது வென்ற திருவிளையாடலால் அறியப்படும்; திருவால. 57 : 24. 27

வெருவந்த செய்யாமை

91 இசைபயின்றார் வாதத் திறைவருமொன் றேனும்
இசைவன்றி......வியற்றான்—இசைவொன்றத்
தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து.

(கு-ரை) முதலிரண்டடிகளின் உண்மை உருவம் புலப்பட வில்லை. இக்கவியிற் குறிப்பித்த வரலாறு திருவிளையாடற் புரா ணத்துள் இசைவாது வென்ற படலத்துள் கண்டது போலு மென்று தோற்றுகிறது. 28

கண்ணோட்டம்

92 வாண னிருகரமும் வைத்துப் பணிகருதி
நாதனைறுப் பித்தருளு நன்னயத்தைப்-போலக்
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(கு-ரை) கண்ணோட்டமுடைய அரசர்க்கு உரியது இவ் வுலகம். இதிற் கண்ட வரலாற்றை 50-ஆம் கவியின் குறிப்புரை யிற் காண்க. இச்செய்தி 134-ஆம் கவியிலும் உள்ளது. 29

ஒற்றாடல்

93 சீர்படைத்த முக்கட் சிவனன்ப னென்றெழுதும்
பேர்படைத்த சேரர் பெருமான்போல்—பார்மிசையின்
எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

(கு-ரை) சேரர் பெருமான்-சேரமான் பெருமாணயனுர். பாண பத்திரருடைய வறுமையைத் தீர்த்தற் பொருட்டுச் சிவபெருமான் சேரமான் பெருமாணயனருக்கு எழுதிய திருமுகப்பாசுரம் வருமாறு: 'மதிமலி புரிசை மாடக் கூடற், பதிமிசை நிலவு பானிற வரிச்சிற, கன்னம் பயில்பொழி லால வாயின், மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம், பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க், குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ், குருமா மதிபுரை குலவிய 'குடைக்கீழ்ச், செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க, பண்பா லியாழ்பயில் பாணபத்திரன், தன்போ லென்பா லன்பன் றன்பாற், காண்பது கருதிப் போந்தனன், மாண் பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.' இதனைக் கொண்டு சென்ற பாணபத்திரரைச் சேரர் பல உபசாரங்களுடன் வரவேற்று அவர் விரும்பிய பொருளைக் கொடுத்து அனுப்பினுர் என்பது வரலாறு. பத்திரருடைய மற்ருெரு வரலாறு 90-ஆம் கவியால் விளங்கும். 30

ஊக்க முடைமை

94 பார்த்த குரவர் பணிமுயன்றூர் கண்ணுதலார்
தீர்த்தத் தியலுந் திறநின்றூர்—நீர்த்தடத்து
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

(கு-ரை) பார்த்த குரவர் - பிறவிக் குருடராயிருந்து பின் சிவபெருமான் அருளால் கண்பெற்ற பெரியவராகிய தண்டியடிகள் நாயனுர். தண்டியடிகள் திருவாரூரில் திருக்குளத்தை அகலப்படுத்த முயன்றபோது சமணர்கள் இடையூறு செய்யவே பரமசிவனருளால் இடையூறு நீங்கி நாயனுருடைய முயற்சி நிறைவேறியது. இதுவே முதலிரண்டடிகளிற் கண்ட வரலாறு. பெரிய புராணத்திற் கண்டது இது. 31

95 மேனிகழ்வ தேதெனினும் வென்றியெனத் தென்மதுரை
ஈசனொடு வாதத் தெதிர்நின்ற கீரனைப்போல்
உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை' நீர்த்து.,

(கு-ரை) தருமியின் பொருட்டு வாதுக்கு வந்த சிவபிரானிடம் 'நெற்றிக் கண்ணைக் கொண்டு என்னை வெருட்டல் வேண்டாம்; யான் இதற்குத் தோற்றிலன்' என்று நக்கீரர் கூறியதை ஆசிரியர் முன்னிரண்டடிகளிற் குறிக்கின்றார். 34-ஆங் கவியின் குறிப்புரையையும் பார்க்க. உள்ளல்—நினைக்கக்கடவர். 32

மடியின்மை

96 கஞ்சுகநா தன்கோயிற் காலெலிக்கு மாட்டாதே
வஞ்சனைசெய் தானையிவண் வைத்துப்பார் —துஞ்சு
மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

(கு-ரை) கஞ்சுகம் – சட்டை; கஞ்சுகநாதன் – சட்டைநாதர்; சீகாழியில் உள்ள சிவபெருமான். கால் - வளை. இதிற் கூறப்பட்ட எலி சிவபெருமான் அருளால் மாவலியென்னும் அசுரனாகப் பிறந்து இப்பூவுலகை யாண்டது. பிறகு ஒரு சமயம் மாவலியிடம் மகாவிஷ்ணு வஞ்சனையாகக்குறள் வடிவங்கொண்டு மூன்றடி மண் யாசித்து அவனை அழித்தனர். 22-ஆங் கவியைப் பார்க்க. காலெலி என்ற நிந்தையால் மாவலிக்கு உயர்வு தோன்றிற்று. இது சீகாழித்தல புராணத்திற் கண்ட வரலாறு. இதனாற் சோம்ப லில்லாதான் அடையும் பயனை அறிந்து கொள்ளலாம், 33

97 மாற னிறையருளால் வந்துவெல்லத் தோற்றளவில்
போர்விண்ட விந்திரனைப் போலவே–சால
இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

(கு-ரை) மாறன் - உக்கிர குமார பாண்டியன். உக்கிர குமார பாண்டியன் வானுடு சென்றிருந்த போது தனக்குச் சமானமாக உக்கிரன் நடந்து கொண்டமையை இந்திரன் கண்டு சினங் கொண்டு பாண்டி நாட்டில் மழை பெய்யா வண்ணம் மேகங்களுக்கு உத்தரவிடவே, பாண்டி நாட்டின் மலைகளில் தங்கிய மேகங்களை உக்கிரன் தளையிட்டனன்; இந்திரன் அவற்றை விடு

விக்கும்பொருட்டு உக்கிரனுடன் போருக்கு வந்து மகுடபங்க மடைந்து முதுகிட் டோடினுன் என்பது திருவிளையாடற் புராணம், இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்தின் வரலாருகும். இவ் வரலாற்றின் முற்பகுதி 144-ஆம் கவியில் விளக்கமாக உள்ளது. 34

ஆள்வினை யுடைமை

98 பால னொருவன் பணிந்துகட வூரரனைக்
காலற் கடந்திருக்கக் கண்டோமே—ஞாலத்தின்
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(கு—ரை) விடாமுயற்சியால் விதியையும் கடக்கலாம். பாலன் – மார்க்கண்டன். கடவூரரன் – திருக்கடவூரிலுள்ள சிவ பெருமான். காலற் கடந்து–யமனை வென்று. மார்க்கண்டேயர் பொருட்டு அரன் யமனைச் சங்கரித்தது யாவரும் அறிந்ததே. 35

இடுக்க ணழியாமை

99 நக்கர் சிறிது நகைத்தலு முப்புரமும்
அக்கணமே வெந்துவிழு மாதலால்—மிக்க
இடுக்கண் வருங்கா னகுக வதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(கு—ரை) நக்கர் - திர்வாணர்; சிவபிரான் என்றபடி. சிவ பெருமான் புரங்களை அழித்தமை, சிரித்தும் விழித்தும் அம் பெய்தும் எரித்தார் என்று மூன்று விதமாக வழங்கும். துன்பம் வருங்காலத்தும் பொறுமையுடன் இருக்கவேண்டும். 36

அரசியல் முற்றும்

அங்கவியல்

அமைச்சு

100 தென்ன னிறைவரருள் சேர்ந்துசெங் கோல்செலுத்த
மன்னு குலச்சிறையே மந்திரியாம்—என்னை

அறனறிந் தான்றமைந்த சொல்லானென் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.

(கு-ரை) தென்னன் - நெடுமாறன் என்ற பாண்டியன். இவனுடைய வரலாறு 44, 79-ஆம் கவிகளாலும் விளங்கும். 37

சொல்வன்மை

101 சிவனடி யென்னுமயன் சீர்பெறுமுன் பின்னர்ச்
சிவசமதை சொல்லலும் சீர்போம்—எவருந்தம்
ஆக்கமுங் கேடு மதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(கு - ரை) முருகவேளின் சிறையிலிருந்து அயனைச் சிவபெருமான் விடுதலை செய்வித்ததை எண்ணி, 'சீர்பெறும்' என்றார். 'சீர் போம்' என்றது தலைகளிலொன்றை யிழந்ததைக் குறிக்கும். 38

102 பரமனருள் வேண்டிப் பகர்ந்தசுர ரான
கரதூட ணன்முதலோர் காதை—வரவறிவீர்
ஆக்கமுங் கேடு மதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(கு - ரை) செல்வமும் கேடும் சொல்லால் வருதலால் சொற் சோர்வு வராமற் காக்கவேண்டும். கரதூடணர்களைப் பற்றிய வரலாறு இது; விளங்கவில்லை. 39

103 எவற்றினுமே லென்னவிறை வர்சொன்ன தெல்லாம்
சிவப்பிரகா சத்தடங்கச் செப்பும்—தவத்தினர்போல்
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து.

(கு - ரை) இறைவர் சொன்னதெல்லாம் - உமாமகேசுவரர் சொன்ன ஆகமத்தின் பொருளை யெல்லாம்; வேதம் பொதுவும் ஆகமம் சிறப்பும் ஆதல்நோக்கி, 'எவற்றினும் மேலென்ன' என்றார். தவத்தினர் - கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர்.

மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தைத் தமிழில் 12 சூத்திரங்களாக வகுத்தருளினார். அவர் மாணாக்கரான அருணந்தி

தேவர் அந் நூலின் பொருளை விளக்கி, சிவஞான சித்தியார் என்ெறாரு நூலை வழி நூலாகச் செய்தருளினார்; இவ்விரு நூல்களும் அறிஞர்க்கேயன்றி மற்றவர்க்கு எளிதில் பொருள்படாமையை எண்ணிக் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் இவ்விரு நூற் பொருளும் சிவாகமப் பொருளும் விளங்கும்படி நூறு திரு விருத்தங்களால் சிவப்பிரகாசம் என்ெறாரு நூலை இயற்றியமைத் தார். சிவஞானபோதம் பூவுலகில் பரவிய வரலாறு 74-ஆம் கவியின் குறிப்புரையால் தெரியவரும். 40

வினைத் தூய்மை

104 சூரனிழந் தாணிழந்தான் சோதியரு ளுந்தாய
னாரிழந்த வெல்லா மடையுமே—தேரின்
அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(கு - ரை) சூரன் - முருகப்பெருமானால் சங்காரஞ் செய்யப் பட்டவன். தாயனார் - அரிவாட்டாய நாயனார். சோழ நாட்டில் கணமங்கலம் என்ற ஊரில் வேளாளர் மரபில் தாயனார் என்றோர் அடியார் இருந்தார். அவர் சிவபெருமானுக்கு நல்ல அரிசி யையும் கீரை,மாவடு இவற்றையும் படைத்து வழிபட்டு வந்தார். ஒருநாள் வழக்கம்போல் இவர் இப்பொருள்களைக் கூடையில் ஏந்திக் கோவிலுக்குச் செல்லும் வழியில் பசியின் களைப்பால் காலிடறவே கூடையிலிருந்த பொருளெல்லாம் நிலப்பிளவில் விழுந்துபோயின. 'எம்பெருமான் அமுது செய்யும்பேறு இன்று கிடைத்திலதே' என்ற வருத்தத்தால் அவர்தம் ஊட்டியை அறுக்கத் தொடங்கும் சமயம் அந்தப் பிளவிலிருந்து அவரைத் தடுக்கச் சிவபெருமானது கையும் மாவடுவைக் கடிக்கும் விடேல் விடேல் என்ற ஓசையும் எழுந்தன. பிறகு அந் நாயனார் தம் மனைவியாருடன் பெறுதற்கரிய பேற்றைப் பெற்றார் என்பது வரலாறு. நிலப்பிளவிற் போகட்டு இழந்தவற்றைச் சிவபெரு மான் அமுது செய்ததனால் இழந்த வெல்லாம் அடையுமே என்றார். 41

வினைத் திட்பம்

105 தோழனென்று சொன்னவடித் தொண்டர்க் கிறைவர்தூ
தாக நடந்த தரிதரிது காதலிபாற்
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாம்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(கு - ரை) தம்பிரான் தோழர் என்பது சுந்தரமூர்த்தி நாயனுருக்கு ஒரு பெயர்; 30. 'காதலிபால் தூதாக நடந்தது' என்று கூட்டுக; 61-ஆம் செய்யுளின் குறிப்புரை பார்க்க. 42

106 குறுமுனியு மீசனருள் கொண்டுகட லங்கை
வரையடிக் கீழடக்கு மாற்றால் சிறிதும்
உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.

(கு - ரை) குறுமுனி - அகத்திய முனிவர். கடலை அங்கையுள் அடக்கும்; வரையை அடிக்கீழ் அடக்கும். ஆற்றால்-தன்மையால்.

இந்திரனோடு போர் செய்த விருத்திராசுரன் அவனுக்கு உடைந்து கடலில் ஒளிந்துகொண்டான். அவனைத் தேடிப் பிடித்துச் சங்காரம் செய்யவேண்டி இந்திரன் அகத்திய முனிவரிடம் வந்து இரப்ப அவர் கடலைக் குடித்தருளினார். வற்றிய கடலில் மறைந்திருந்த விருத்திரனை இந்திரன் கண்டறிந்து கொன்றபின் கடலினைத் திரும்ப முனிவர் விட்டனர் என்பது வரலாறு.

சிவபெருமான் கட்டளையைப் பெற்று அகத்திய முனிவர் தெற்கே வரும்போது விந்தமலை தன்னை கடக்கவிடாது வளர்ந்துகொண்டே வந்தமையை முனிவர் கண்ணுற்றுத் தம் காலால் அழுத்தி, 'நான் மறுபடியும் வடபால் வரும் வரையில் இங்ஙனமே இரு' என்று சபித்துச் சென்றார் என்பர். 43

வினைசெயல் வகை

107 இறையருளாற் செவ்வே ளிமையோரைக் காக்கும்
திறனுடிச் சூர்தடிந்த செய்கை யதுபோல்

முடிவு மிடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(கு - ரை) செவ்வேள் - முருகக் கடவுள். காக்கின்ற திறனை நாடி. சூர்தடிந்த - சூரர்களைக் கொன்றழித்த. இவ்வரலாற்றை 104-ஆம் கவியின் உரையாற் காணலாம். 44

108 இறைவர்க்குத் தொண்டா யிடர்தீர்ந்த தன்றிப்
பெறுபயனும் வாகீசர் பெற்றார்—அறிஞர்
வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(கு - ரை) இடர் - சூலைநோயாகிய துன்பம். பெறுபயன் - வீட்டின்பம். வாகீசர் - திருநாவுக்கரசு நாயனார். ஒருவன் தொழிலாலே தொழிலை முடித்துக் கொள்ளக்கடவன். 45

109 கண்ணுதல்பா லாழிபெறக் கண்சாத்தித் தாள்காணா
வண்ண மொழிந்தநெடு மாலேபோல்—எண்ணி
வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(கு - ரை) ஆழி - சலந்தரனை அழித்த சக்கராயுதம். நெடுமால் கண் சாத்திய வரலாறு: ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு திருமால் சிவபெருமானை அருச்சித்து வருகையில் எம்பெருமான் அம்மலர்களில் ஒன்றை மறைத்தருளினார். அப்பொழுது திருமால் அம்மலருக்குப் பிரதியாகத் தம் கண்களில் ஒன்றை இடந்து அருச்சித்தார். அதற்குகந்த சிவபெருமான் அவருக்குச் சக்கராயுதத்தையும் பதுமாட்சரென்ற பெயரையும் ஈந்தருளினார் என்று நூல்கள் கூறும். இது திருவீழிமிழலை ஸ்தல வரலாறு. தாள் காணா தொழிந்தது அதனைக் காண வல்லேனென்று அன்பினாலன்றி மமதையால் வராகமாகிப் பூமியைக் கல்லிக்கொண்டு சென்ற சமயம் என்க. 46

தூது

110 பேதையரு நாவலரும் பேதமின்றி யேபொருந்தத்
தூதுசென்ற கொன்றைத் தொடையலார் போலவே

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

(கு - ரை) பேதையர் - பரவையார். நாவலர் - சுந்தர மூர்த்தி நாயனார். கொன்றைத் தொடையலார் - சிவபெருமான்; அவர் தூது சென்ற வரலாறு 61-ஆம் கவியின் குறிப்புரையால் விளங்கும். மூன்று - அன்பு, அறிவு, சொல்வன்மை. 47

மன்னரைச் சேர்ந்தொழுகல்

111 ஐய னருள்புரிந்த வன்றுசம் பந்தர்தமைத்
தெய்வமெனத் தந்தையருந் தேறினார்—நொய்தின்
இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்.

(கு - ரை) ஐயன் - சீகாழியிலெழுந்தருளியுள்ள சிவபெருமான். 17-ஆம் கவியைக் காண்க. 48

குறிப்பறிதல்

112 உண்ணப் பொதிசோறு மூர்சிவிகை யும்பிறவும்
எண்ண மறிந்தடியார்க் கீந்தருளும்—கண்ணுதல்போற்
கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி.

(கு - ரை) வையக்கு அணி - வையத்துக்கு அணி. ஒருகால் அப்பர் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும்போது அவருக்கு வழி நடையாலுண்டான பசி தாகங்களைப் போக்கச் சிவபெருமான் வழியில் ஒரு தோப்பையும் குளத்தையும் உண்டுபண்ணி வேதியராக வந்து அப்பருக்குப் பொதிசோற்றை அளித்து விட்டு, 'நாம் இருப்பது திருப்பைஞ்ஞீலி' என்று சொல்லி மறைந்தருளினார். இது பெரியபுராணத்திற் கண்டது.

ஊர் சிவிகை - வினைத்தொகை. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் சிறு பிள்ளையாக இருத்தல்பற்றிப் பல தலங்களுக்குச் செல்ல வசதியாயிருக்கும்பொருட்டு அவருக்கு அறத்துறைச் சிவபெருமானால் மாறன் பாடி என்ற தலத்தில் முத்துச் சிவிகை வழங்

கப்பட்டது; பெரிய. திருஞா. பிறவும் என்றது தாளம் ஈந்தது, சுந்தரருக்குச் செங்கல்லைப் பொன்னாக்கியது முதலியவற்றை. 49

அவை யறிதல்

113 பொல்லார்மு னெல்லாம் புகன்று சிவஞானம்
அல்லார்மு னல்லா ரடங்குதலால்—வல்லார்
ஒளியார்மு னொள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

(கு - ரை) பொல்லார் - பொல்லாப் பிள்ளையார் என்ற நாமம் பெற்ற விநாயகர். நல்லார் - நம்பியாண்டார் நம்பி; எழுவாய்.

திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பியென்ற ஆதி சைவப் பெரியார் ஒருவர் இருந்தார். சிறு பருவத்தில் அவர் தந்தையார் அவரைப் படிக்க ஒரு பள்ளிக்கு அனுப்பி வைத்தார். சிவஞானச் சார்பில்லாத ஆசிரியரிடம் கற்க மனமில்லாத நம்பியாண்டார் நம்பி பள்ளிக்குச்செல்லும் விருப்பம் இலராயினர். ஒருநாள் பொல்லாப் பிள்ளையாருக்கு இவர் பூசை செய்யச் சென்றிருந்த போது அவர்பால் பக்திமேலிட்டு அவரையே குருவாகக்கொண்டு சிவாகமாதிகளையும் அடியார் சரித்திரங்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்தார் என்பது வரலாறு. 50

114 இறைநூ லுரையாடார் இன்புற்றார் சால
அறிவா ருரைகேட்ட வன்றே—நெறிநின்று
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து,

(கு - ரை) இறைநூல் - இறையனார் அகப் பொருள் என்ற இலக்கண நூல். உரையாடார் - மூங்கையராயிருந்த உருத்திர சன்மர். அறிவு சால் உரையென்றது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் அந்நூலுக்குச் செய்த உரையை. 'இறைநூல் அறிவு ஆருரை கேட்டவன்று உரையாடார் சால இன்புற்றார்' என்று கூட்டுக. 51

அவையஞ்சாமை

115 சங்கத்தார் வாக்குந் தமிழுணர்த லாற்சொக்க
லிங்கந் தமிழ்ப்புலவ ரெல்லார்க்கும்—சிங்கமன்றோ
கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

(கு - ரை) ஒரு காலத்தில் மதுரைச் சங்கத்திருந்த 49–புலவர்களும் தாம் தாம் இயற்றிய பாடல்களை அறியாது ஒருவர் செய்தவற்றை மற்றொருவர் தம்மவாகத் தம்முள் மயங்கிப் பிணக்கங் கொண்டார்கள். அப்பொழுது சொக்கலிங்கப் பெருமான் தமிழ்ப் புலவராக வந்து அவர்களுடன் இருந்து அவர்கள் யாவரும் எழுதியவற்றைத் தம்முன் பாடிக் காட்டச் செய்து அவரவர்கள் இயற்றியதை அவரவர்களுக்கு எடுத்துக் காட்டினார். இவ்வரலாறு திருவிளையாடற் புராணத்திற் சங்கப் பலகை கொடுத்த படலத்திலுள்ளது. 52

நாடு

116 இறைசாருந் தென்னாடே நாடேனை நாடு
பிறவுடைய வேனும் பெறாகாண்—உறையுமவர்க்
காங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(கு - ரை) இறை - பாண்டியராக மதுரையை ஆண்ட சோமசுந்தரக் கடவுள்; 64. இறை சாரும் தென்னாடே நாடு : 'தென்னாடுடைய சிவனே போற்றி' (திருவா.) ஏனை நாடு : எழுவாய்; பிறவுடைய வேனும் - வேறு பெருமைகளை அடைந்திருந்தாலும். பெறா - நாடென்று சொல்லப் பெறமாட்டா. அமைவு - பொருத்தம். 53

அரண்

117 குன்றவில்லி காத்தருளுங் கூடலர ணேயன்றி
நின்ற வுளவெனினு நிற்குமோ—என்றும்
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண்.

(கு - ரை) குன்றவில்லி - மேருமலையை வில்லாகவுடையவர். கூடல் - மதுரை. சௌந்தர மாறராகப் பாண்டிய நாட்டை ஆண்ட சோமசுந்தரக் கடவுள் வாளை உறைக்குள் இட்டபடியே பகையிருள் நீக்கி ஆண்டனரென்பது வரலாறு. "கறைநி றுத்திய கந்தரச் சுந்தரக் கடவுள், உறைநி றுத்திய வாளினுற் பகையிரு ளொதுக்கி" (திருவிளை. நாட்டுப் படலம், 1.) 54

பொருள் செயல் வகை

118 தந்தைபொருட் டெந்தைபிரான் சம்பந்தர்க் கீந்தகிழி
நந்திப் பயனனைத்து நல்கிற்றே—முந்தும்
அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

(கு - ரை) திருஞான சம்பந்தர் திருவிடைமருதூரில் தங்கியிருந்தபோது அவருடைய தகப்பனுர் சிவபாத ஹ்ருதயர் அங்கே வந்து தாம் செய்யவிருக்கும் வேள்விக்குப் பொருள் வேண்டுமென்று கேட்க ஞானமூர்த்திகள் திருவாவடுதுறைச் சிவபெருமான்மீது பதிகமோதிப் பொற்கிழியை அடைந்து அதனைத் தம் தந்தையாரிடம் சேர்ப்பித்தனர். சிவபாத ஹ்ருதயரேயன்றிப் புகலியிலிருந்த மற்ற அந்தணர்களும் வேள்வி செய்யக்கூடிய அளவில் அப்பொற் கிழியில் பொன் இருந்ததென்பர்; பெரிய. திருஞா. 422–30. 55

119 திகம்பரர்க்கு நஞ்சைத் திருமகளைப் பீதாம்
பரதரர்க் கீயும் பயோதி நிரந்தரமும்
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(கு - ரை) திகம்பரர் - திசைகளை ஆடையாகவுடையவர்; நிருவாணர் என்றபடி. பீதாம்பரதரர் - மஞ்சள்நிற ஆடையைத் தரித்திருப்பவர். சிவபெருமானையும் திருமாலையும் முறையே திகம்பரர் பீதாம்பரதரர் என்றது அவர்தம் வறுமை செல்வ நிலைகளைப் புலப்படுத்த. பயோதி - பாற்கடல்; பயோததி என்பதன் விகாரம்.

ஒப்பு : "மேலாடை யின்றிச் சவைபுகுந் தாலிந்த மேதினி யோர், நூலா யிரம்படித் தாலுமெண் ணார்நுவல் பாற்கடலோ, மாலா னவரணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே, ஆலால மீந்தது தோலாடை சுற்று மரன்றனக்கே" (தனிப் பாடல்.) 56

படைமாட்சி

120 எத்திறத்த நூலு மிலங்கு சிவஞான
சித்தியோன் று காணச் சிதையுமே—மெத்த
ஒலித்தக்கா லென்னு முவரி எலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(கு-ரை) சிவஞான சித்தி: 103-ஆம் செய்யுளின் குறிப்புரையைப் பார்க்க. சிவஞான சித்தியாரின் பெருமை : "பேருகப், பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே, ஓர் விருத்தப் பாதிபோதும்" (சிவபோகசாரம், 23.) 57

121 ஆலமுகந் தானைமணந் தாள்படையே வெல்படையாம்
காலனையுந் தோற்றோடக் காணுதலால்—ஞாலத்துக்
கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.

(கு - ரை) மணந்தாள் - மலையத்துவசன் பெற்றெடுத்த தடாதகைப் பிராட்டியார் ; 18. முடிசூடியதும் பிராட்டியார் திக்கு விசயஞ் செய்யப் புறப்பட்டுப்போய் இந்திரன் முதல் காலனை உள்ளிட்ட திக்குப் பாலகர்களை வென்று வந்ததனால், இவர் காலனையும் தோற்றோடச் செய்ததாக ஆசிரியர் கூறினர். 58

படைச் செருக்கு

122 இறையோ டெதிர்ந்திறந்த தென்றுளு மென்ன
குறையோ பிறரையடுங் கூற்று—முறையேகாண்
கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.

(கு - ரை) கூற்று - யமன். மார்க்கண்டேயருடைய ஆவியைக் கவர்ந்துசெல்ல எண்ணிய யமன் இலிங்கத்தை இறுகத் தழுவியிருந்த மார்க்கண்டேயரோடு இலிங்கத்தையும் சேர்த்துப்

பாசத்தால் இழுக்க முயன்றதை நினைத்து 'இறையோடெதிர்ந்து' என்றார். 59

நட்பு

123 பிள்ளை யிறைவ ரருள்பெறலுங் கேட்டிருந்த
கள்ளவிழ்பூங் கோதையார் காதலாற்—சொல்லும்
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.

(கு - ரை) பிள்ளை - திருஞானசம்பந்த மூர்த்திகள். அருள் பெறலும் - ஞானப் பாலையுண்டு சிவஞானத் தொடர்பு பெற்றதும்; 17,111. ஆளுடைய பிள்ளை ஞானப்பாலுண்டமையைக் கேள்வியுற்றதும் மதுரையிலிருந்த மங்கையர்க்கரசியார்க்கு மார்பில் பால் சுரந்ததென்பது வரலாறு. இதனை, "இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு, முலைசுரந்த வன்னையோ முன்னின் - நிலைவிளம்பக், கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா, இங்குயர்ந்தார் யார்சொல் லெனக்கு" என்னும் நால்வர் நான்மணிமாலைச் செய்யுளாலுணர்க. 60

124 நன்னிழலி னீர்வைத்து நம்பர் நடுப்படையில்
தென்னரழி யாதருளுஞ் செய்தியான்—முன்னர்
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

(கு - ரை) நிழலில் நீர்வைத்து - தண்ணீர்ப் பந்தரை அமைத்து. நம்பர்-சோமசுந்தரக் கடவுள். இராஜேந்திர பாண்டியன் என்பான் அரசு புரியும் காலத்தில் சோழனொருவன் அவன்மேல் போர் தொடுத்துவர இருவருக்கும் போர் நடந்தது; அப்போது சிவபெருமானருளால் குளங் குட்டை யாவும் வறண்டு, யுத்தகளத்தில் உண்ணீர் கிடையாமற்போய் இருதிறத்தாரும் களைத்துப் போயினர். அச்சமயம் சிவபெருமான் மானிட வடிவங்கொண்டு யுத்த பூமிக்குச் சென்று தண்ணீர்ப் பந்தல் ஒன்றை அமைத்துப் பாண்டியனது சேனையின் நீர் வேட்கையை மாற்றி யருளினர். அதனால் அம்மன்னவன் களைத்துப்போயிருந்த சோழனை வென்று மீண்டான் என்பது வரலாறு; திருவிளை. தண்ணீர்ப். 61

நட்பாராய்தல்

125 மாறனது கேட்டி னுறுதியென மாணிக்கம்
கூறி விலையாக் கொடுக்குமிறை—ஆதலாற்
கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

(கு - ரை) வேட்டை மேற் சென்ற வீரபாண்டியன் என்பான் திடீரென்று புலிக்கோட்பட்டு இறந்துவிட அவனது காமக் கிழத்தியரின் மக்கள் அரண்மனையிலிருந்த நகைகளையும் நவமணி களையும் திருமுடியையும் அபகரித்துக் கொண்டு ஓட்டம் எடுத் தனர். பட்டமகிஷியின் வயிற்றிற் பிறந்த பாலகனுக்கு மந்திரி கள் முடிசூட்ட எண்ணுகையில் கிரீடம் இல்லாமையால் யாது செய்வதென்று திகைத்துச் சோமசுந்தரரை வேண்ட அவர் மாணிக்கம் விற்கும் வணிகராக வந்து முடிக்கும் பிறகலன்களுக் கும் வேண்டிய மணிகளை வாழ்த்திக் கொடுத்தருளி விலைபெறுமல் மறைந்தருளினர் என்பர்; திருவிளை. மாணிக்கம் விற்ற படலம். 62

பழைமை

126 வழுவுசெய்தும் மாலயர்க்கு வந்தரனே பின்னும்
பழைமை கருதியருள் பண்ணும்—முழுதும்
அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(கு - ரை) வழுவாவது அன்பினலன்றி மமதையாற் சிவ பெருமானுடைய அடிமுடிகளைக் காண்போமென்று கூறிப் புகுந்த செயல். மாலயர் - மாலும் பிரமனும். அருள் பண்ணும் - அந்த அயனும், மாலும் பின் வந்து வேண்ட வேண்டியவற்றை யீந்து அவர்களுக்கு அருளைப் பாலிப்பர். 63

தீ நட்பு

127 தக்க னுறவெனினுஞ் சங்கரன்றன் நட்பிற்குத்
தக்கவனன் றென்றெறுத்தல் சாலுமே—மிக்க

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்ற வினிது.

(கு - ரை) உறவெனினும் - தன் பெண்ணாகிய தாட்சாயணியா ரைச் சிவபெருமான் மணந்ததனால் தன் மாமன் முறை யெனி னும். சங்கரன் - எழுவாய். தக்கனது வரலாறு 10, 49-ஆம் செய்யுட்களாலும் விளங்கும். 64

கூடா நட்பு

128 ஆரூரர்க் காரூரர் போன்றொற்றி யூரர்செயும்
கூடாநட் பாலே குறைவரலால் ஓரும்
இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

(கு - ரை) ஆரூரர் : முன்னது சுந்தரமூர்த்தி நாயனாரையும் பின்னது பரவையாரையும் குறிக்கும். இடம் பற்றி இருவ ரும் ஓரினம் என்பது தோன்ற 'ஆரூரர்க் காரூரர்' என்றார். ஒற்றியூரர் - திருவொற்றியூரிலிருந்த சங்கிலியார். நட்பு - மணந்ததால் வந்த தொடர்பு. குறைவரலால் - கண்ணொளி மழுங்கியதனால். சுந்தரமூர்த்தி நாயனார் ஒருகால் ஒற்றியூர்க்குச் சென்றிருந்தபோது அங்கே கோவிலில் சங்கிலியாரைக் கண்டு அவரை மணஞ் செய்துகொள்ள விரும்பினார். சங்கிலியார் தம் மைச் சுந்தரர் என்றும் பிரிவதில்லை யென்று உறுதி செய்து கொடுப்பின் தாம் அவரை மணப்பதாகக்கூறினார். சுந்தரர் அதற் கியைந்து பரவையாருக்கு உறுதிசெய்து அவரை மணந்தார். பின் திருவாரூர்த் தியாகேசரைத் தரிசிக்கும் ஆர்வ மேலீட்டினால் தம் வாய்மையைப் பொருட்படுத்தாது சுந்தரர் ஒற்றியூரை விட் டுப் புறப்பட்டார். அக்கணமே கண்களை இழந்தார். சிவபெரு மானைப் பலகால் பாடிப்பாடி யுருகி அவர் பின்பு கண்ணொளி பெற்றாரென்பது வரலாறு. 65

பேதைமை

129 அரனன்பர் வாகீச ரன்றமணை நீங்கப்
பெரிதின்ப மன்றியுண்டோ பீழை—தெரியிற்

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(கு - ரை) 'பீழை உண்டே' என்று மாற்றுக. பீழை - வருத்தம். வாகீசர் சமண மதத்தைவிட்டு மீட்டும் சைவரானவுடன் அவரது சூலைநோய் நீங்கியதுமன்றி முடிவில் அவர்க்கு வீடுபேறும் கிடைத்தது; 108-ஆம் கவியையுங் காண்க. பிரிவின் கண் துன்பம் இல்லாமையால் அறிவிலார் நட்பு நல்லது. 66

புல்லறிவாண்மை

130 ஈசனடி யாரிசையா தேயு மிசைந்தமணர்
தாமே கழுவேறந் தன்மையால் ஞாலத்
தறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

(கு - ரை) ஈசனடியார் - திருஞான சம்பந்தமூர்த்திகள். இசையாதேயும் - தமக்கியற்கையாக இருந்த அருள் மிகுதியினால் சமணர்களைக் கழுவேற்ற உடன்படாதிருந்தும்; தாமாகவே சமணர் கழுவேறினரென்பது இந்நூல் 35-ஆம் கவியாலும் இந்நூலாசிரியரே முக்தி நிச்சயம் வெண்பா 2-க்கு எழுதிய விரிவுரையாலும், தக்கயாகப்பரணி, 170-ஆம் தாழிசையாலும், அதன் உரையாலும் விளங்கும். செறுவார் - பகைவர். 67

131 ஆதி மொழியை யறியா னறிந்தேனென்
றோதியது மீளப்போ யோதியது—மேதமாம்
கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயந் தரும்.

(கு - ரை) ஆதிமொழி - ஓம் என்னும் பிரணவ மந்திரம். அறியான் - நான்முகன். அயன் பிரணவப் பொருளை அறியாமல் விழித்தது குமரக்கடவுள் முன்னிலையில். கல்லாதவற்றைக் கற்றேமென்றல் கற்றனவற்றையும் ஐயுறச்செய்யும். 68

132 எறும்புகடை யானைதலை யீசனைப்பூ சித்துப்
பெறுங்கதிகண் டுந்தேரார் பேய்கள்—அறிந்த
உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(கு - ரை) எறும்பு சிவபெருமானைப் பூசித்துப் பேறுபெற்ற தலம் திருஎறும்பியூர். யானை பூசித்த தலம் திருக்காளத்தி. தேறார் - சிவபெருமானை வழிபட்டு நாம் உய்யவேண்டுமென்று தெளிய மாட்டார். அலகை - பேய். தெளியாதாரைப், 'பேய்கள்' என்றார். 69

இகல்

133 ஆங்கா லிறைவ ரடிதொழுவார் செல்வமெல்லாம்
போங்கா லசுரர் பொரவருவார்—நீங்கா
இகல்காணு ளுக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

(கு - ரை) இறைவர் - சிவபெருமானுடைய. அசுரர் - முப்புரவாசிகளாகிய கமலாட்சன், வித்யுன்மாலி, தாரகாட்சன் என்னும் மூவர். இவர்கள் ஆம் காலத்தில் சிவபெருமானை வழிபட்டு எல்லாச் செல்வங்களையும் பெற்றுப் போங்காலம் வரவே சிவபெருமானுக்குப் பகைவராகி அச்செல்வங்கள் அனைத்தையும் இழந்தனர். 136-ஆம் கவியையும் அதன் குறிப்புரையையும் நோக்குக. 70

பகைமாட்சி

134 கண்ணன் கடையிருந்த கண்ணுதலின் றுள்வணங்கி
உண்ணின்ற வாண னொடுபொருதான்—எண்ணி
வலியார்க்கு மாறேற்ற லோம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

(கு - ரை) கடையிருந்த - வாணாசுரனுடைய கடைவாசலிற் காவலாக இருந்த; 50. கண்ணுதல் - சிவபெருமான். கண்ணன் வாணனொடு பொருதமை : 92. மேக = மேவுக - விரும்புக. 71

பகைத்திறந் தெரிதல்

135 விளையாடிக் கீரனொடு வெல்வதற்குச் செல்லும்
இறையோனும் பின்வெகுளு மென்றாற் குறையாம்
பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

(கு - ரை) சிவபெருமான் புலவனாகிச் சங்க மண்டபங் குறுகி நக்கீரருடன் பல பேசி இறுதியில் தம் ஆற்றலை வெளிப் படுத்தினமையின், 'விளையாடி' என்றார். இஃது ஒரு திருவிளை யாடல் என்பது கருத்து. இதிற் கண்ட வரலாறு 85, 94-ஆம் கவிகளாலும் விளங்கும். 72

உட்பகை

136 நாரதர்மா லுட்பகையாய் நம்பரடி பேணாத
வாறுசொல்லி முப்புரமும் மாய்வித்தா ராதலினால்
உட்பகை யஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

(கு- ரை) நாரதர் மால்......மாய்வித்தார் - திரிபுரவாசிகளை ஒழிக்கக் கருதிய திருமால் நாரதரை அவர்கள்பால் ஏவிப் பாஷண்ட மதத்தை (நாஸ்திகத்தை) அவர்களுக்கு உபதேசிக்கச் செய்து சிவபக்தர்களாக இருந்த அவர்களின் மனத்தைக் கெடுத்துச் சிவபெருமானுடன் போராடும்படி செய்தார் என்பது வரலாறு. 23-ஆம் செய்யுளின் குறிப்புரையைப் பார்க்க. 73

பெரியாரைப் பிழையாமை

137 மன்றுடையார் குன்றை மதியா தெடுத்தரக்கன்
அன்று படுந்துயர மார்படுவார்—என்றும்
பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

(கு - ரை) குன்று - கைலாசம். அரக்கன் - இராவணன். ஆர் படுவார் : படமுடியாது என்றபடி. இராவணன் விமானத்திற் செல்லுகையில் கைலை மலையால் அது தடையுண்டது. அப் பொழுது நந்திதேவர் அவனை விலக்கவும் கேளாது இராவணன் கைலையைப் பேர்த்தெறியத் தொடங்கினான். அதுகண்ட சிவ பெருமான் அவனை மலையின்கீழ் நெறித்து அவனைத் தண்டித்தார் என்பர். 74

பெண்வழிச் சேறல்

138 திசைவென் றவள் பதியுஞ் செல்லா தவள்பின்
அசைவின்றித் தானுலக மாளும்—இசையொன்ற
எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.

(கு - ரை) *திசை வென்றவள் பதி - தடாதகைப் பிராட்டியாரின் தலைவரான சௌந்தர பாண்டியர். அவள் பின் செல்லாது - அந்த அம்மையார் அரசு செலுத்த அவர் வழி ஒழுகாது. 'இசை ஒன்ற ஆளும்' எனக் கூட்டுக. மனத்திண்மை யுடையாருக்கு மனைவியால் வரும் அறியாமை இல்லை.* 75

வரைவின் மகளிர்

139 புனிதரழன் மூழ்குதலும் போயழலின் மூழ்கும்
பனிமலர்மென் கோதையெழிற் பாவை ஒழியப்
பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று.

(கு - ரை) இங்கே சுட்டிய வரலாறு தெளிவாக விளங்கவில்லை. 76

கள்ளுண்ணாமை

140 அண்ணல் பழமலையை யண்ணுமுன் கள்ளுண்ண
எண்ணில் பெருந்துயர மெய்துதலான்-மண்ணுலகத்
துண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.

(கு - ரை) பழமலை - விருத்தாசலம். சசிவன்னன் என்னும் அந்தண வாலிபன் இறைச்சியும் கள்ளும் ஈசலும் அருந்தி ஒழுக்கங் கெட்டுத் திரிவதைக் கண்டு வருந்திய அவன் பிதா தேவபக்தர் என்ற யோகியை வேண்டி அவர் ஆலோசனையின்படி தம் புத்திரனை மாநந்தி பராயணர் என்ற முனிவர்பால் அழைத்துச் சென்றார். அம்முனிவரின் அருளால் சசிவன்னனுடைய சகல

பாவங்களும் நீங்கிப் போயின. இது விருத்தாசல புராணத்திற் கண்டவரலாருகும். 77

சூது

141 அரனடியார் நித்த மமுதுசெய வேண்டிக்
கவறுருட்டிக் கைவந்தா ரன்றிப்—பிறரெல்லாம்
வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(கு - ரை) தொண்டை மண்டலத்தில் திருவேற்காடு என்ற ஊரினரான ஒரு வேளாளர் சிவனடியார்களை உண்பித்து அவர்கள் வேண்டுவன கொடுத்து ஒழுகிவந்தார். இடையில் பொருள் வருவாய் குறையவே தமக்குக் கைவந்த சூதாடிப் பலரிடம் பெற்ற பொருளைக் கொண்டு தம் அறத்தைத் தப்பாமல் நடத்தி இறுதியில் முத்திபெற்ருர் என்பர்; பெரிய. மூர்க்க. 78

மருந்து

142 மண்ணுண் டவனறியா மண்ணுண்டை யொன்றுகொடுத்
தெண்ணருநோய் தீர்க்கு மெழில்வேளூர்-கண்ணுதல்போல்
நோய்நாடி நோய்முத னாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(கு - ரை) மண்ணுண்டவன் - திருமால். மண்ணுண்டை-வைத்தீசுவரன் கோவிலில் உள்ள திருவேம்படிப் புற்றுமண். வேளூர் - வைத்திசுவரன் கோயில்; சடாயுவும் வேதமும் முருகக் கடவுளும் சிவபெருமானைப் பூசித்த தலம். இந்த ஸ்தலத்தில் ஒரு வேப்பமரத்தடியிலுள்ள மண் எல்லாநோய்களையும் தீர்ப்பதாக ஓர் ஐதிகம் நிலவி வருகிறது; 'மண்டலத்தி னுளும் வைத்திய ராய்த் தாமிருந்தும், கண்டவினை தீர்க்கின்றீர் கண்டீரோ-தொண்டர், விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரெங் நாதர், மருந்தைப் பார்த் தாற்சுத்த மண்' (தனிப்பாடல்.) 79

அங்கவியல் முற்றும்

ஒழிபியல்

குடிமை

143 மன்னு மரன்புலியூர் வாய்மை மதியானை
அன்னை வயிற்குறையென் றையுற்றார்—என்னை
நலத்தின்கண் நாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

(கு - ரை) சிதம்பரத்தின் மகிமையைச் சில பெரியவர்கள் சொல்ல அதை மதியாமலும் மறுத்தும் பேசிய ஒருவனை நோக்கி அவர்கள், 'இவனை இவன் தாய் சரியான வழியிற் பெற்றிராள்' என்று ஐயுற்றனரென்பது வரலாறுபோல் தோன்றுகிறது. 80

மானம்

144 இறையருள்சேர் தென்னவனன் றிந்திரன்பாற் சென்றும்
குறையிரவான் போயிருந்தான் கூட—முறையன்றோ
இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

(கு - ரை) தென்னவன் - உக்கிரகுமார பாண்டியன். ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் மழையின்றி உயிர்கள் வாடவே உக்கிரன் உள்ளிட்ட தமிழ்வேந்தர் மூவரும் அகத்திய முனிவரின் அருளினால் விண்ணுடேகி அங்கே இந்திரனைக் கண்டு மழைசுரக்க வரம் வேண்டப் புறப்பட்டனர், இந்திரன் அம்மூவருக்கும் தனக்குக் கீழ் நிலையில் ஆசனமிட்டு வரவேற்றான். பாண்டியன் மட்டும் தனக்கு இட்டிருந்த ஆசனத்தில் அமராது இந்திரனுடன் சமமாக அரியணை ஏறி அமர்ந்தான். பாண்டியனை எங்ஙனமேனும் ஒறுக்க எண்ணிய விண்ணவர்வேந்தன் அம்மூவரையும் வந்த காரியம் ஏதென்று வினவினான். 'ஏற்பதிகழ்ச்சி' என்பதை எண்ணி உக்கிரன் வாளா இருப்ப மற்ற இருவரும் தம் நாட்டுக்கு மழை வேண்டுமென்று இரந்து பெற்றுச் சென்றார்கள். பின்பு சதமகன் தாங்க முடியாத ஆரமொன்றைப் பாண்டியன் கழுத்திலிட எம்பெருமான் அருளால் அதனை உக்கிரன் ஏற்று விறுதோன்ற

இருந்தனன். பின்னர் மழை வளத்தை வேண்டாமலே தன் நாடு திரும்பினுன் என்பது திருவிளையாடற் புராணத்திற் கண்ட வரலாருகும். 97-ஆம் கவியின் குறிப்புரையையும் காண்க. 81

பெருமை

145 சங்கரன்போய் நின்றளவிற் சங்கப் பலகையின்மேல்
அங்கிருந்தா னக்கீர னுயினுமென்—எங்கணும்போய்
மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.

(கு - ரை) நக்கீரரைப் பற்றிய வரலாறு 34, 95-ஆம் கவிகளின் குறிப்புரையால் விளங்கும். 82

சான்ருண்மை

146 உலகர்க்குத் தந்தை யொருத்திக்குத் தாயாய்ப்
பலவு முபகரித்த பண்பின்—புலவர்
கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு.

(கு - ரை) உலகுக்குத் தந்தையாகிய சிவபெருமான் தாயாக வந்தது திரிசிரபுரத்தில் என்க. ஒரு வணிக மாது பிரசவ வேதனையுறுகையில் அவளது தாய் உரிய சமயத்தில் உதவிக்கு வர இயலாமற்போகவே சிவபெருமான் தாயாக வந்து பிரசவத்தை இனிது நடத்தி உண்மைத் தாய் வீடு நுழைந்ததும் மறைந்தருளினுர் என்பது வரலாறு. 83

147 பன்றிக் குருளைக்குப் பன்றியாய்க் கண்ணுதலும்
சென்று முலைகொடுக்குஞ் செய்தியால்—என்றும்
கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு.

(கு - ரை) மதுரையை அடுத்த குருவிருந்த துறையில் வசித்து வந்த ஒரு வேளாளர் தாம் பெற்ற 12-பிள்ளைகளை இளம்பிராயத்திலே விட்டு நீங்கி மரணமுற்றுர். அப்பிள்ளைகள் மூர்க்கர்களாகி வேட்டுவத் தொழிலை மேற்கொண்டு அருகே யிருந்த காட்டில்

தவம் செய்துவந்த வியாழபகவானைத் துன்புறுத்த அவர் இவர்களைப் பன்றிக் குட்டிகளாகப் பிறந்து தாயை இழந்து வருந்தும்படி சபித்தார். அதன்படி இவர்கள் பன்றிக்குட்டிகளாகப் பிறந்து தம் தாய் வேட்டையிற் கொல்லப்படவே தனித்து வருந்துகையில் சிவபிரான் தாய்ப் பன்றியாகி வந்து அவற்றைப் பாலூட்டி அன்புகாட்டிப் பன்றியின் தலையும் மனித சரீரமும் பெறுமாறு அருளி மறைந்தனர் என்பது வரலாறு; திருவிளை. பன்றிக்குட்டி. 84

148 இறையருள்சேர் தென்ன னிருங்கடலு மாழி
பிறழ நிலைநிறுத்தும் பேராற் கடல்பிறழ
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(கு - ரை) தென்னன் - உக்கிரகுமார பாண்டியன். ஆழி - கரை; "பெருங்கடற்காழியனையன்" (புறநா. 330 : 3-4) உக்கிரகுமார பாண்டியன் 96-பரிவேள்விகளைச் செய்துமுடித்தமை கண்ட இந்திரன் பொறாமைகொண்டு கடல் வேந்தைக் கூவி மதுரையை அழிக்குமாறு கூறினான். ஒருநாள் இரவு கடல் ஊழிக் காலம்போற் பொங்கிவர உக்கிரன் சித்தராகித் தன் கனவிற் றோன்றிய சோமசுந்தரக் கடவுளின் யோசனையின்படி வேலெறிந்து அதனை வற்றச் செய்தான் என்பது வரலாறு; திருவிளை. கடல் சுவற. 85

பண்புடைமை

149 முப்புரங்கள் கொன்றுமரன் மூவர்க் கருளியதை
இப்பொழுது தானுமுல கேத்துமே—செப்பின்
நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

(கு - ரை) முப்புரவாசிகள் வரலாறு 133, 136-ஆம் கவிகளாலும் அவற்றின் உரையாலும் விளங்கும். 86

நன்றியில் செல்வம்

150 எங்களிறை யன்பருக்கொன் றீயாமை யாற்பிறந்து
பங்கப் படத்துணிந்த பாவிதிருத்—தங்கியெனும்

அற்ருர்க்கொன் ருற்ருதான் செல்வம் மிகுநலம்
பெற்ருள் தமியள்மூத் தற்று.

(கு - ரை) திருத்தங்கி - திருக்குடந்தையில் வாழைத்தோட்டம் போட்டிருந்த ஓர் உலோபி. இதிற் காணப்படும் செய்தி 13-ஆம் கவியின் குறிப்புரையால் விளங்கும். 87

151 கல்வில் லுடையார் கருணைபெற மாட்டாது
வல்வினையிற் பட்டழுந்தும் வாதாவி-வில்வலன்போல்
நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

(கு - ரை) கல்வில் - மேருமலையாகிய வில். வாதாவி வில்வலன் என்பவர்கள் தாரகாசுரனுடைய சகோதரி அசமுகியின் மைந்தர்கள். வில்வலன் வாதாபியை ஆடாக்கிக் கறிசமைத்து விருந்தாக வருபவருக்கிட்டு அவர்கள் உண்டபின் அமிருத சஞ்சிவினி மந்திரத்தை உச்சரித்து அழைப்ப வாதாவி விருந்தினரின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவது வழக்கம். பிறகு இருவருமாக விருந்தினரின் உடலத்தைப் புசித்து மகிழ்வர். ஒருகால் தேவர்களின் வேண்டுகோளின்படி அகத்திய முனிவர் இவர்களுக்கு விருந்தினராக வந்து வாதாவியை வயிற்றில் ஜீரணிக்கையில் வில்வலன் காலில்விழுந்து வேண்ட அவனை மன்னித்தனர். இது கந்தபுராணத்திற் கண்ட வரலாருகும். 88

நாணுடைமை

152 இறையருளும் தென்னவன்பா லிந்திரன்வந் தன்று
குறைபடலும் நாணியது கூறின்—முறையன்றே
ஊனுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(கு - ரை) இறையருளும் தென்னவன்-சௌந்தர பாண்டியராக வந்த சோமசுந்தரக் கடவுள் ஈன்ற உக்கிரகுமார பாண்டியன். குறைபடலும் - முடியிழந்து புறமுதுகிட் டோடுதலாகிய குறையை எய்தலும். நாணியது - நாணமடைந்ததை. இந்த வரலாறு 97, 144-ஆம் கவிகளால் விளங்கும். 89

குடிசெயல் வகை

153 பாணன் குடியுயரப் பண்டரனுங் கூடல்வரு
பாணனெனச் சாதாரி பாடுதலால்—நாளும்
குடிசெய்வ லென்னு மொருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

(கு - ரை) பாணன் - பாணபத்திரர். சாதாரி - மாலை நேரத்திற் பாடும் ஒரு பண். இதிற்கண்ட வரலாற்றை 90-ஆம் கவியின் குறிப்புரையிற் காண்க. 90

உழவு

154 தென்னாட் டுழவ ரிறைகொண்டு கண்ணுதலும்
அந்நாட் டிருந்துலக மாளுதலால்—தன்னேர்
பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

(கு - ரை) தென்னாடு - பாண்டி நாடு. இறை - குடிகள் செலுத்தும் வரி. கண்ணுதல் - சௌந்தரபாண்டியர். அரசருடைய மேம்பாட்டுக்கு உழவர்களின் மேம்பாடே காரணம் என்பது கருத்து; 'வெண்ணெய்மன் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி' (கம்ப. திருமுடி. 38) என்றதனை நோக்குக. 91

நல்குரவு

155 மூவலிங்க பூசை முயன்ற பயன்வருமுன்
சீல முடையவிப சித்தெனவே—ஞாலத்தில்
துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(கு - ரை) விபசித்து: கோசல தேசத்து அந்தணன். வீடு வாசல், நாடு, நகரம் யாவையும் துறந்து திருமணிமுத்தா நதியில் நீராடிய புண்ணியத்தால் பழமலை சென்று பல பணிகளைச்செய்து முத்தி யடைந்தவன். இவன் வரலாற்றை 53-ஆம் கவியாலும் உணர்க. 92

இரவு

156 ஈச ரிரந்தாலு மீந்தாரோ டொத்துயர்ந்தார்
நேச ரிடத்திரந்து நிற்றலால்—பேசின்
இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

(கு - ரை) நேசர் - இயற்பகையார், மானக்கஞ்சாறர். 93

இரவச்சம்

157 என்றியம்பி னார்மொழியாற் போலு மிறையாயும்
சென்றிரந்து நிற்குஞ் சிவன்றானும்—அன்றே
இரந்து முயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(கு - ரை) இறையாகிய சிவன்றானும் சென்று இரந்து நிற்கும்; இதனை நோக்கியே திருவள்ளுவரும், 'இரந்தும்......உலகியற்றியான்' என்றமொழியால் இயம்பினார் போலும். 94

158 ஒருவர் செயவேண்டா வுலகியல்பா மென்னும்
அருகர்பிறர் கோள்சிதைக்கு மாற்றால்—வருவ
திரந்து முயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

(கு - ரை) ஒருவர் செய வேண்டா; உலகு இயல்பாம்: உலகம் படைப்பும் அறிவுமற்றது என்பது ஜைனமதக் கொள்கையாகும்; 'மூவா முதலா வுலகம்' (சீவக. 1.) அருகர் பிறர் - அருகராகிய பிறருடைய கோள் - கொள்கை. வருவது : எழுவாய். இரந்தும்......உலகியற்றியான்: பயனிலை. 'உலகியற்றியான்' என்ற தொடரைத் திருவள்ளுவர் கூறுவதனால் உலகம் படைப்புக்குட்பட்ட தென்பது அவரது கொள்கையாகும். 95

கயமை

159 மணலமுதா மாறு மனையாட்குக் கூறிப்
பரனருடீர் மாமறையோன் பண்பின்—நுவலும்

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

(கு - ரை) திருவாப்பனூர்ப் பெருமானை அருச்சித்து வரும் ஓர் அந்தணன் கொடிய பஞ்ச காலத்தில் சிவபிரான் அருளால் மணலை அமுதாகச் சமைக்கும் ஆற்றல் பெற்றிருந்தான். அவன் அந்த ரகசியத்தைத் தன் மனையாளிடம் கூறியதனால் மணலைச் சமைக்கும் வன்மை அவனைவிட்டு, நீங்கியது (திருவாப்பனூர்ப் புராணம்.) 96

ஒழிபியல் முற்றும்
பொருட்பால் முற்றும்

---

3. காமத்துப்பால்

களவியல்

தகையணங் குறுத்தல்

160 ஆரூரன் கண்டளவி லாரூரன் கோயிலிடை
ஆரூரிற் கென்றமைந்த வாயிழையைத்—தேரும்
அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு

(கு - ரை) ஆரூரன் : முன்னது சுந்தரமூர்த்தியையும் பின்னது திருவாரூர்த் தியாகேசப் பெருமானையும் குறிக்கும். ஆயிழை - பரவையார். 'அணங்குகொ...........னெஞ்சு' என்ற குறட்பாவினோடு ' என்று ' என்பதனைக் கூட்டித் 'தேரும்' என முடிக்க. பின்னுள்ள சில கவிகள் இவ்வித முடிபைப் பெறும். சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூர்க் கோயிலுக்குச் சென்றிருந்த போது அங்கே பரவையாரைக் கண்டு விதிகூட்டுதலால் இச்சை கொண்ட வரலாறு பெரிய புராணத்தினால் தெரியவரும். 1

161 இறைவ ரருள்கதிர்வே லெந்தை குறவர்
மடமகளைக் கண்டு வருந்திப் புகலும்

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

(கு - ரை) முருகக் கடவுள் தினைப்புனத்தைக் காத்து வந்த வள்ளியம்மைபால் சென்று காதல் மொழி பல இயம்பி இறுதியில் அவரை மணந்த கதை வெளிப்படை. 2

குறிப்பறிதல்

162 அரனருள்சேய் மான்மகளொன் றுங்கிருவர் தங்கள்
இயல்பு மறிந்த விகுளை கருதுவது
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.

(கு - ரை) மான் மகள் - வள்ளியம்மையார். இகுளை - தோழி. அம்மையாரும் தோழியும் இருப்புழி முருகப்பெருமான் பாங்கியின் உடம்பாட்டைப் பெறும் நிமித்தம் அங்கே சென்ற போது நிகழ்ந்ததைக் கண்டு தோழி இங்ஙனம் கூறினாள். இணை - இரண்டு. 3

புணர்ச்சியின் மகிழ்தல்

163 அரனடியா ரல்லா ரடைபதந் தானும்
இருநிலவின் பத்திழிவா மென்று—வருவதிது
தாம்வீழ்வார் மென்றோட் டுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு.

(கு - ரை) இவ்வுலக இன்பத்தினும் அரி அயன் இந்திரன் முதலியோர் பதங்களில் நுகரும் இன்பம் இழிந்ததென்பது கருத்து. 4

164 அல்லொளிசேர் கண்டத் தரனருள்சேய் மானீன்ற
வல்லியிரு கொங்கை மணந்ததற்பின்—சொல்லியது
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள.

(கு - ரை) அல் - இருள். சேய் - முருகக்கடவுள். சொல்லியது : எழுவாய். 'கண்டு......உள' என்பது பயணிலை. 5

நலம்புனைந்துரைத்தல்

165 மின்னுசடை வேந்தருள் வேலனொரு மானீன்ற
பொன்னை மகிழ்ந்து புனைந்துரைக்கும்—இந்நிலத்து
நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

(கு - ரை) நன்னீரை - மென்மையால் நீ எல்லா மலர்களிலும் நல்ல இயற்கையையுடையை. அனிச்சம் - மென்மையான ஒரு மலர் விசேடம். வீழ்பவள் - விரும்பப்பட்டவள். வள்ளியம்மையார் அனிச்சமலரினும் மெல்லியர் என்பது கருத்து. 6

காதற் சிறப்புரைத்தல்

166 நாதர் பரமகுரு நாதர் குறமகள்பாற்
காதன் மிகுதிசொலக் கண்டோமே—தீயசெழும்
பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

(கு - ரை) நாதர்-சிவபெருமானுக்கு. பரமகுருநாதர்: முருகக் கடவுள். 'தீய செழும் பாலொடு......நீர் என்று குறமகள்பாற் காதன் மிகுதிசொலக் கண்டோமே' என்று கூட்டுக; என்று என்பது இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. 7

நாணுத்துறவுரைத்தல்

167 ஆதியருள் சேய்நா ணகன்றுமட மான்மகட்குத்
தோழி யெதிர்நின்று சொல்லியது கூறிய
காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி.

(கு - ரை) அருமையராய பெண்களுடன் காமம் அனுபவித்துப் பிறகு அது பெறாது வருந்தும் ஆடவர்க்கு மடலேறுதல் அல்லது வலிமை இல்லை என்று கூறும் முகத்தால் தாம் மடலேறுவதாக முருகர் குறிப்பித்தார் என்று கொள்க. 8

அலரறிவுறுத்தல்

168 பரனருள்சேய் கேட்கப் பசும்பொன்மா னீன்ற
குறமகட்குத் தோழிநின்று கூறும்—திறனுவலின்

தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டும்
கெளவை யெடுக்குமிவ் வூர்.

(கு - ரை) கேட்க - சிறைப்புறத்தாராக இருந்து கேட்க. சேய் கேட்டலின் பயன் வரைந்துகொள்ள முயலுதலாம். 9

களவியல் முற்றும்

கற்பியல்

பிரிவாற்றுமை

169 சூளுறவு செய்திறைவர் தோழர் பிரிவறிந்த
கோல்வளையார் கூறுவது தோழிக்குச்—சால
அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு.

(கு-ரை) சூளுறவு-பிரியேன் என்று முன்பு செய்துகொடுத்த சத்தியம். இறைவர் தோழர் - சுந்தரர். கோல்வளையார்-திரட்சி யான வளையலை அணிந்த சங்கிலியார். ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் சங்கிலியாரை மணந்து பிரிந்தது முன் சில கவிகளால் விளங் கும். 10

படர்மெலிந்திரங்கல்

170 அரன்றனக்குத் தோழனெனு மாரூரன் சேணிற்
பிரிந்த வழிபரவை பேசும்—இரங்கி
மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
என்னல்ல தில்லை துணை.

(கு - ரை) 'உலகத்திலே உள்ள உயிர்களையெல்லாம் தானே துயிலப் பண்ணுதலால் இராப்பொழுதுக்கு நானன்றி வேறு துணை இல்லை. அதனால் அந்த இராப்பொழுது இரங்கத்தக்கது' என்று பரவையார் இரங்கிக் கூறும் என்க. 11

கண் விதுப்பழிதல்

171 நந்தியருள் சேர்பரவை நம்பியைக்கா ணக்கிடையா
வெந்துயரா லாற்றுவித்த மெல்லிழைக்கு—வந்துசொல்ல

கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

(கு - ரை) நந்தி - சிவபெருமான். நம்பி - சுந்தரமூர்த்தி நாயனர். காதலரைக் காட்டச்சொல்லி எம் கண்கள் இன்று அழுவது என் கருதி! இத்தணியாத நோயை யாம் அறிந்தது அக் கண்கள் முன்பு எம் காதலரைக் காட்டலால் அன்றோ! சொலல் : எழுவாய். 'கண்டாங்......கண்டது' என்பது பயனில்லை. 12

பசப்புறுபருவரல்

172 பரனன்பர் நீங்கப் பரவைதனை யாற்றும்
புரிகுழற் பாங்கி புகலும்—பெரிதும்
பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

(கு-ரை) உலகம் இவளைப் பழிக்குமேயன்றி இவள் இங்ஙனம் ஆயினமைக்கு எவர் காரணமாவர் என்பாரில்லை என்பது பின்னிரண்டடிகளின் கருத்து. 13

தனிப்படர் மிகுதி

173 கண்ணுதலார் தோழன் கருத்தையறிந் தாற்றிஞய்
என்னப் பரவை யிகுளைக்குப்—பன்னுவது
நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

(கு - ரை) தோழன் - சுந்தரமூர்த்திகள். என்ன - என்று தோழி கூற. அவரும் என்னிடம் காதல் கொள்ளாராயின் என்னல் காதல் செய்யப்பெற்ற அவர் எனக்கு என்ன இன்பத்தைச் செய்தல் கூடும். 14

நினைந்தவர் புலம்பல்

174 நம்பி தனைநினைந்து நம்பரருள் சேர்பரவை
துன்பமுற்றுத் தோழிக்குச் சொல்லியது—சென்றிருந்து
தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணுர்கொல்
எம்நெஞ்சத் தோவா வரல்.

(கு-ரை) கடிகொண்டார் - காவல்கொண்ட காதலர். ஓவா - ஒழியாமல். தலைவர் என்னை விடாமல் என் நெஞ்சத்தே வருகின்றார். அதற்கு நாணூர்போலும் என்பது கருத்து. 15

கனவு நிலை யுரைத்தல்

175 தம்பிரான் றோழர் தமையிகழ்ந்த தோழிக்கு
மங்கை பரவை மறுத்துரைக்கும்—எங்கிருந்தும்
துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.

(கு - ரை) துஞ்சுங்கால் தோண்மேலராகி என்றது கனவின் கண் அவர் தோன்றி இன்பம் நல்கியதைக் குறிக்கும். 'ஒரு காலும் நான் அவரை மறந்தறியேன்' என்பதை உட்கொண்டு, 'விழிக்குங்கால் நெஞ்சத்தர்' என்று பரவையார் கூறினார். 16

பொழுதுகண்டிரங்கல்

176 ஆற்றுவித்த தோழிக் கரனன்ப ரைப்பிரிந்த
கோற்றொடியா ரூர்மடந்தை கூறுவது—மேற்சென்று
காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

(கு - ரை) முன்கூடிய காலத்தில் தலைவர் 'மறுநாள் பிரிவேன்' என்றாராக, அவர் பிரிந்து செல்கைக்குக் காரணமாயிருந்த காலைநேரம் தலைவிக்குத் துன்பம் இழைத்துவந்தது. தலைவர் பிரிந்திருக்கும் சமயம் இரவில் அவள்படும் துன்பங்கண்டு அத் துன்பை ஒழிக்கவந்ததாதலின் காலையை இங்கே இன்பஞ் செய்வதாகக் கூறினாள். கூடினாருக்கு இன்பஞ் செய்யும் மாலை கணவனைப் பிரிந்த மக்களுக்குத் துன்பஞ் செய்தலின், 'யான் மாலைக்குச் செய்த பகை எவன்கொல்' என்றார். 17

உறுப்பு நலனழிதல்

177 அரனன்பர் நீங்குதலு மாற்றாமை கண்டு
பரவைக்குத் தோழி பகரும் தலைவர்

தணந்தமை சால வறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

(கு - ரை) வீங்கிய தோள் - பூரித்து நின்ற தோள்கள். தணந்தமையால் இன்று தோள் மெலிந்தன என்றுகொள்க. 18

நெஞ்சொடு கிளத்தல்

178 அரனருள்சேர் நம்பிபிரி வாற்றும லாரூர்ப்
பரவைதனி நின்று பதைத்துக்—கருதும்
வினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கு மருந்து.

(கு - ரை) ஆற்றுமை மீதூரத் தன் துக்கத்தைக் கேட்டார் பிறரின்மையின் தலைவி நெஞ்சொடு கூறுகிறுள். கூறுவதால் துக்கம் குறையும் என்பர். எவ்வநோய் - ஒன்றுனும் தீராத நோய். 19

நிறையழிதல்

179 வேடர்க் கருளும் விமலர் துணைபிரிவு
நீடப் பரவை நிறையழிந்து கூறியது
காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

(கு - ரை) வேடர்க்கு - கண்ணப்ப நாயனுர் முதலிய பல வேடர்களுக்கு. விமலர் துணை - தம்பிரான் தோழரென்னும் சுந்தரமூர்த்தி நாயனுர்; 181. 20

அவர்வயின் விதும்பல்

180 இறைவரருள் சேர்பரவை யேந்தல்பிரி வாற்றிப்
பகருமிகு ளைக்குப் பகரும் எதிர்நின்று
காண்கமன் கொண்கனைக் கண்ணுரக் கண்டபின்
நீங்குமென் மென்றோட் பசப்பு.

(கு - ரை) ஏந்தல் - ஆண்களிற் சிறந்தவர். எதிர்நின்று பகரும் எனக் கூட்டுக. 21

குறிப்பறிவுறுத்தல்

181 இறைவர்துணை நீங்கி யெழிற்பரவை யோடும்
உறையுநாட் பாங்கிக் குணர்த்தும்—செறியும்
மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு.

(கு-ரை) அணி - புணர்ச்சியினால் தோன்றிய அழகு. தலைவியினது குறிப்பினைத் தலைவன் தோழிக்கு உணர்த்தியது இது. 22

புணர்ச்சி விதும்பல்

182 ஈசனன்ப ரோடு மியைந்த பரவைதனைப்
பேசியதோ ழிக்கவளும் பேசியது கூறின்
எழுதுங்காற் கோல்காணுக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

(கு - ரை) கோல் - கோலின் கருமை நிறம்; ஆகுபெயர். சித்திரம் எழுதும்போது, முன்பெல்லாம் புலனாகியிருந்த அதன் கருமை நிறம் தோன்றாதவாறு பிரிந்திருந்த வழி தலைவர்மேல் பிழைகண்டிருந்த நான் அவர் கூடிய வழி இன்று அப்பிழையைக் காணேன். 23

நெஞ்சொடு புலத்தல்

183 தம்பிரான் றோழர் தவறுகண்டுங் கூடுவதற்
கன்பு செயும்பரவை யார்மொழிவார்—என்றும்
அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

(கு - ரை) தவறு-திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்த தவறு. நெஞ்சே, நீ எமக்கு ஆகாதது எவன்? எவன் - என்? 24

புலவி

184 அரன்வாயி லாகச்சென் றூரரோடு
பரவையா ரூடலுணர் பண்பின்—உரைசெய்யும்
உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

(கு - ரை) வாயில்-தலைவன் தலைவிகளைக் கூட்டுதற்கு ஏற்ற தோழி முதலியவர்கள் (நாற் - நம்பி. அகத். சூ. 67.) 'ஊடலாவது தலைவன் தலைவியருள் ஒருவரை ஒருவர் நணுகாராகி உரை மறுத்திருத்தல்' (ஷை. சூ. 204, உரை.) 25

புலவி நுணுக்கம்

185 எல்லாரு முய்வதற்கா வீசனுலாப் போதுதலும்
புல்லா துமையாள் புலந்தளவிற்—சொல்லாடும்
பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

(கு - ரை) ஈசன் உலாப் போதலும், அப்பொழுது அவரைப் பரமாதர் விரும்பினர் என்று உமாதேவியார் ஊடித் கதவடைத்துக் கொள்ளுதலும் ஒரு திருவிழாவாக மார்கழித் திங்கள் திருவாதிரைத் திருநாளில் இன்றும் நடைபெறுகிறது. 26

ஊடலுவகை

186 தண்டி யுணர்த்தத் தலைவி புலவிதீர்த்
தண்டிப் பெருமா னணைந்தளவிற்—கண்டருளும்
ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

(கு - ரை) தண்டி - சண்டேசுவர நாயனார். இங்கே வாயிலாக இவர் கூறப் பெற்றுள்ளார்.

திருவள்ளுவப் பயனாகிய திருக்குறள்மேல் வைத்துக் கூறப்பட்டவை இவ்வளவோடு முற்றும். 27

கற்பியல் முற்றும்

காமத்துப்பால் முற்றும்

---

4. வீட்டின்பால்

இந்நூலாசிரியர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால்களுக்குத் திருக்குறளை ஆதாரமாகக் கொண்டாற்போல் வீட்

டின் பாலைக் கூறுவதற்குத் திருவருட் பயன் என்னும் நூலை ஆதார மாகக் கொண்டுள்ளார். இது சித்தாந்த சாத்திரம் பதினுன் கனுள் ஒன்று. கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரென்பார் இதனை அருளிச் செய்தவர். இது பத்ததிகாரங்களை நூறு குறட் பாக்களாற் கூறுவது. திருவள்ளுவப் பயனுக்கும் திருவருட் பயனுக்குமுள்ள ஒருமைப் பாட்டைப் பின்வரும் மேற்கோளால் உணரலாம்.

''அறம் பொருள் இன்பம் வீடென்னும் நால்வகைப் பொருளையும் மூவகைப் படுத்தி ஓதும் வேதப் பொருள் விளக்க மும் தமிழ் வேதமுமாகிய திருவள்ளுவப் பயனென்னும் திருக் குறள் அதன் முதனூல் வேதமே போன்று வீட்டுநெறியினை விளங்கக் கூறுது மயங்கக் கூறுதலான், அம்முதனூலாகிய வேதப் பொருளை விளக்கி வீட்டு நெறியினைக் கூறும் ஆகமமே போன்று, திருக்குறளை விளக்கி வீட்டுநெறி கூறுவது இத்திருவருட் பயன் என்பதுஉம் ஆம் என்க.

'' வேதமே திருக்குறள் என்பதற்கு அசரீரி, சரசுவதி, இறை யனுர், உக்கிரப் பெருவழுதி முதலிய சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின்மர் கூறிய திருவள்ளுவ மாலையானும், 'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்......ஒரு வாசக மென்றுணர்' என்னும் ஔவையாரின் பாசுரத்தானும் துணிக.

'' ஆகமமே திருவருட் பயன் என்பதற்குச் சிவஞான போத முதலிய சித்தாந்த நூல்களோடு சேர்க்கப்பட் டிருப்பதானும், சிவஞானபோதம் போன்று பதிபசுபாசத் திறங்களையே கூறுத லானும், பௌஷ்கராதிகளைப் போன்று விந்துசக்தி லட்சண மாகிய திருவருட் டிறத்தையே தெள்ளிதிற் றெளிய விதந்தெடுத் தோதுதலானும் என்க.

'' இனித் திருக்குறளின் பொருளை விளக்குவ தெங்ஙன மெனின், திருக்குறளின் முதற் செய்யுளாகிய 'அகர முதல என்னும் செய்யுளையே திருவருட் பயனின் தலைச் செய்யுளாகிய 'அகர வுயிர்போல்' என்னும் செய்யுள் விரிந்தெடுத் தோது வதை வல்லோர்பால் கேட்டுணர்க.''—திருவருட் பயன் முகவுரை.

பதிமுது நிலை

187 வள்ளுவருந் தாமு மதித்தபொரு ளொன்றென்றே
தெள்ளு தமிழ்விரகாய்ச் செப்பியது—சொல்லின்
அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

(கு - ரை) பதிமுது நிலையாவது மேலாகிய இறைவனது இயல்; பதி - இறைவன்.

தாம் - கொற்றவன்குடி **உமாபதி சிவாசாரியர்**; வள்ளுவரும் தாமும் மதித்த பொருள் ஒன்றே: தலைப்பிலே காட்டியுள்ள உரைநடைப் பகுதியை நோக்குக. அகரம் இறைவர்க் குவமை: 1, குறிப்புரை. அறிவாகி என்றதனால் சடமாகிய ஒலிவடிவன்று என்பது பெற்றும் அகரம்போல இறையும் ஒருகாற் புணர்ந்து நீங்காமையின் 'நிறைந்து' என்றும், எல்லாப் பொருள்களும் உட்படுதற்கு 'எங்கும்' என்றும், பலர்க்கும் விளங்கும்பொருட்டு அகரத்தை உவமை கூறினும் பிறிதோருவமை தனக்கில்லான் இறைவன் என்பது தோன்ற 'நிகரில்' என்றும் கூறினர். இறைவனது உண்மையும் அவன் வேறற எல்லா உயிர்களிலும் நின்றமையும் இதனாற் கூறப்பட்டன. 1

[1] உயிரவை நிலை

188 பொன்னர்பிறர் காணாரப் புண்ணியனைப் புண்ணியனும்
அன்னவர்முற் றோன்றல ராதலினால்-சொன்னதுகேள்
ஊமன்கண் போல வொளியும் மிகவிருளே
யாமன்கண் காணா தவை.

(கு - ரை) உயிர் - பசு. உயிரவை என்று பன்மையாற் குறித்தமையின் முன்னதிகாரத்திற் கூறப்பெற்ற பதி ஒன்றே என்பது பெறப்பட்டது. பதியின் இயல்பைக் கூறி அதனையடுத் துப் பசுக்களின் இயல்பைக் கூறுதலான் மேலையதிகாரத்தோடு இதற்குள்ள தொடர்பு விளங்கும்.

பொன்னர் - இலக்குமியை யுடைய **திருமால்**. ஊமன் - கோட்டான். ஒளி - பகலவன் ஒளி. இருள் - ஆணவமலம்.

(பி - ம்) 1. 'பசு நிலை'

மன் - நிலைபேறு. இங்கே அந்நிலை பேற்றை யுடைய சிவஞானத்தைக் குறிக்கும். சூரியன் ஒளியைக் காணாத கூகையின் கண்களுக்கு உயிர்களும், சூரிய ஒளிக்குச் சிவஞானமும் உவமை. ஒளியும்; உம், சிறப்பும்மை. இருளேயாம் : ஏகாரம் தேற்றத்தின் கண் வந்தது.

உயிர்கள் பதியைக்காண அருள்பெறுவது எக்காலமென இரங்கிக் கூறியது இது. 2

[1] இருள் மல நிலை

189 அருணை கிரியறியா ரண்ணலெனத் தத்தம்
கருவி யுபகரிக்கக் கண்டும்—இருவர்க்கும்
அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடை[2]யடங்கி
இன்றளவு நின்ற திருள்.

(கு - ரை) இருண்மல நிலையாவது அறியாமையே வடிவாகிய ஆணவமலத்தினது தன்மை; இதனைப் பாசம் என்பர். ஆணவ மலத்தோடு ஒழிந்த மாயை கன்மங்களும் உப லட்சணத்தால் அடங்கும். முன்னதிகாரத்திற் கூறப்பட்ட உயிர்களாகக் கட்டுப் படுத்தும் பாசநிலையைக் கூறுதலான் மேலையதிகாரத்தோடு இதற்குள்ள தொடர்பை உணர்க.

அருணகிரி - திருவண்ணாமலையை. திருமாலும் நான்முகனும் தம்மைத்தேடி ஆராயும்பொருட்டுச் சிவபெருமான் அழற்பிழம்பாய் நின்ற மலை இது. அறியார் - மாலும் அயனும். அண்ணலென - தலைவரென்று. கருவி உபகரிக்க - தத்தம் முயற்சிவழிகளை நாட. இருவர்க்கும் - அந்த அயன் அரிகளாம் இருவருக்கும். அன்று அளவி - அநாதியே பொருந்தி. உள்ஒளி - சிவஞானம். ஆவியிடை உள்ளொளியோடு உள்ளடங்கியென்றது சிவஞானத்தை மறைத்து என்றபடி. இருள் - ஆணவமாம் இருள்; எழுவாய். இன்றளவும் நின்றது என்றது இனி இறையருள் உண்டாகி அது நீங்கப்பெறினும் பெறுவர் என்பது புலப்படுத் தற்கு. ஆணவம் அநாதி என்பது இதனாற் புலப்படுகிறது. 3

(பி - ம்.) 1. 'பாசநிலை' 2. 'ஒடுங்கி'

அருளது நிலை

190 இறைவ ரெதிர்ப்பட்டு மிவரருள்வேண் டாமற்
பிறவசுர ரெல்லாம் பெறுதல்—அறையிற்
பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேல் பூனை
கரப்பருந்த நாடுங் கடன்.

(கு — ரை) அருள் - ஞானம், இருண்மலமாகிய அவிச்சையைத் துறந்து வீட்டுநெறி காட்டுதற்பொருட்டு அதற்கு மாறாகிய அருளது முறைமை கூறுதலான் மேலை யதிகாரத்தோடு இதற்கு இயைபுண்மை யறிக.

பிற - பிறவரங்களை. பிறபெறுதல் எனக் கூட்டுக. பரப்பமைந்த - விசாலமான அருட் பொருளை. கேண்மின் (இந்திரிய மனங்களைப் பிறவிடத்தில் விடாமல்) - கேளுங்கள். அங்ஙனம் அருட்பொருளைச்சேராது மித்தையாகிய உலக இன்பங்களை நாடுவது பாலை வைத்த கலத்தின்மேல் இருக்கும் பூனை அதனைப் பருகாது அருகே வந்த ஒரு கரப்பானைப் பிடித்துத் தின்ன நாடிய தன்மையை ஒக்கும். பாற்கலன் - பாற்பாத்திரம்; உறியின்மேல் வைத்த பாற்பாத்திரம் என்று கூறுவாருமுண்டு நாடும் என்றது கரப்பான் பூச்சி பூனைக்கு அகப்படாமற் போதலையும் குறிக்கும்.

ஞானத்தின்மேல் உயிர்கள் பற்றுச் செய்யாமையை இது உணர்த்திற்று. 4

அருளுருநிலை

191 வாதவூரர்க் காள்போல வந்த பரசிவனை
யாரவனென் றெண்ணி யறிந்தார்கொல் - பேரருளாற்
பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் [1]காணார் புவி.

(கு - ரை) அருளுரு - ஞானத்தின் வடிவாகிய குரவன்; ஞானகுரு. அருளினது நிலைகூறி அதன்படி விளைவிய குரவனது நிலை கூறுதலின் மேலையதிகாரத்தினோடு இதற்குள்ள இயைபு புலனாகும்.

(பி - ம்.) 1. ' காணா

வாதவூரர் - **மாணிக்கவாசகர்.** ஆள் - குதிரைகளை ஓட்டிக் கொண்டுவந்த ஆள். அறிந்தார்கொல் என்பதற்குப் பாண்டியன் முதலானோர் என்ற எழுவாயைத் தந்துரைக்க. பார்வை—**பார்வை மிருகம்.** காட்டில் ஏதேனும் ஒரு விலங்கைப் பிடிக்க வேடர் அவ்வின விலங்கை வீட்டில் வளர்ப்பார். இது பார்வை எனப் படும் : திருவிளை. 58 : 46. மாக்களை - ஆன்மாக்களை. புவி - உலகத்திலுள்ள மக்கள் ; எழுவாய். போர்வையென - தம்மை இரட்சிக்க வந்த திருமேனி என்று.

ஞானகுரு வடிவினை என்ற தொடர் அதிகாரத்தாற் பெறப் பட்டது. 5

அறியும் நெறி

192 நீற்றறையின் மற்றிடத்து நின்றிறைவ னன்பருக்குத்
தோற்றுவதின் றித்துணையாய்த் துன்பமுறு—தாற்றுதலால்
[1]ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனொடுயிர்
தானுணர்வோ டொன்றுந் தரம்.

(கு - ரை) அறியும் நெறியாவது உணரும் முறைமை. உணர்வது உண்மைப் பொருளை என்க. அருளுருவைக் கொண்டே உண்மைப் பொருளை அறியவேண்டி யிருத்தலின் மேலை யதிகாரத் தோடு இதற்குள்ள தொடர்பு விளங்கும்.

நீற்றறையின் - பல்லவன் இட்ட நீற்றறையில். மற்றிடத்து —யானை இடறவிட்ட விடத்தும், தம்மோடு கல்லைச் சேர்த்துப் பிணைத்துப் போகட்ட கடலினிடத்தும். அன்பர் - **வாகீசர்.** தோற்றுவதின்றி - கண்ணுக்குப் புலனாகாதிருந்தும். துணையாய் - உடலோடு கூடி ஒன்றியிருந்து காவலாக.

திருநாவுக்கரசர் சூலைநோய் தம்மை யடுத்ததென்றும் அது சமணரால் தீர்க்கமுடியாமற் போயிற்றென்றும் பொய்க் காரணங்கள் காட்டிச் சமணத்தைவிட்டு நீங்கிச் சைவத்திற் புகுந்தா ரென்று சமணர்கள் தங்கள் இறைவரிடம் கூறப் பல்லவ வேந்தன் வாகீசப் பெருந்தகையாரை அழைப்பித்துப் பலவிதங்களில்

---

[1] ஊனுயிரில்'

தண்டித்தான். எம்பெருமான் அருளால் வாகீசர் அக்கொடிய தண்டனைகளை யெல்லாம் இன்பமாகப் பெற்று மீண்டும் வந்தார் என்பது வரலாறு.

ஊன் - உடல்; ஆகுபெயர். ஊனொடுயிர் - உடலிலுள்ள ஆன்மா; உருபுமயக்கம். உணர்வொடு - திருவருளினால்; ஒடு உருபு மயங்கி வந்தது. ஆன்மா திருவருளினாலே சிவிப்பது, உடல் உயிரால் நிலைபெறுவதுபோலும். 6

* உயிர் விளக்கம்

193 துறைபிழைத்துச் சென்று சுமந்தாலு மீசன்
உணர்வோடொன் றுருந் தரம்பார் தரையில்
கிடைக்கத் [1]தகுமேநற் கேண்மையார்க் [2]கெல்லாம்
எடுத்துச் சுமப்பானை யின்று.

(கு - ரை) உயிர்விளக்கமாவது ஆன்மாவை விளக்கப்படுத்துதல். அறிந்தபடி நின்று யான் எனதென்னும் செறுக்கறுத்தலே உயிர் விளக்கமாம். இதனை ஆன்மசுத்தி என்பர். உண்மைப் பொருளை அறிவதற்கு ஆன்மசுத்தி இன்றியமையாததாதலின் மேலை யதிகாரத்தோடு இதற்குள்ள தொடர்பை உணர்க.

துறைபிழைத்து - தாம் பிறந்த சைவ நெறியைவிட்டு நீங்கி; நீங்கிச் சென்றது சமண நெறிக்கு; சென்றவர் **அப்பர் சுவாமிகள்.** அல்வழியில் நிலவிவந்த வாழ்க்கையாதல்பற்றி, 'சுமந்தாலும்' என்றார்.

ஈசன் உணர்வோடு ஒன்றுனது திருவதிகை வந்து சைவத்திற் புகுந்தபோது, அவ்வுணர்வோடு ஒன்றியிருந்தமை சைவத்தை மீட்டும் தந்ததென்க.

கேண்மையார் - நல்ல கேள்வி ஞானத்தையுடைய பெரியார். அருளோடு கூடிய கேள்வியை, 'நற்கேண்மை' என்றார். எடுத்துச்சுமப்பான் - எல்லாருடைய பாரத்தையும் தமதாகக்கொண்டு சுமக்கும் சிவபெருமான். அருளாகும் கேள்வியுடையாருக்குப் பதி எளிதாகப் புலப்படும் என்பது கருத்து. 7

(பி-ம்.) * உயிரவை விளக்கம். 1. 'தகுமோ' 2. : கல்லால்.

இன்புறு நிலை

194 வாதவூ ரன்பிறர்போல் வந்தவரா னந்தமுறும்
போதினிய தாகப் புணருமறை—ஆதலினால்
இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவம்
[1]இன்பகன மாதலினா லில்.

(கு - ரை) இன்புறு நிலையாவது ஆன்ம லாபம் அடையும் முறை. ஆன்மசுத்தியாகிய உயிர்விளக்கங் கூறி அதன்பின் இதனைக் கூறவே மேலதிகாரத்தோடு இதற்குள்ள தொடர்பு விளங்கும்.

பிறர்போல் வந்தவர் - திருப்பெருந்துறையிற் பரமாசாரியராக வந்த சிவபெருமான். மறை - மறைப்பொருள். எய்துவார்க்கு - பெற விரும்புவாருக்கு. ஈயும் அவர் - சிவபெருமான். உருவம் - வடிவம். இன்ப கனம் - பேரின்பம்; ஆனந்தமயம். இல் - தாம் அதனை நுகர்வதில்லை.

வாதவூரர் அறுதியே ஆணவ மலத்தால் மறைப்புண்டு, குருந்த மரத்தடியில் எழுந்தருளிய பரமாசாரியரால் அது நீங்கப் பெற்றபோது இன்பம் புதிதாக வந்ததுபோலக் கருதினார் என்பது முதலிரண்டடிகளின் கருத்து. 8

ஐந்தெழுத்தருள் நிலை

195 உண்டிலையென் றுகமங்க ளோதிமத பேதத்தால்
கொண்டநெறி யுங்கதியுங் கூறுவதேன்—அண்டர்பிரான்
எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைந்து.

(கு - ரை) ஐந்தெழுத் தருள்நிலையாவது ஐவகைப்பட்ட பஞ்சாட்சரமாகிய அருளினது நிலை. வீட்டுநெறி காட்டுதலால் திருவைந்தெழுத்தையும் திருவருளாகக் காட்டி யருளினார். சமாதியினை யடைவார்க்கே இன்புறுநிலை கூடும். அச்சமாதியினை அடைதல் கூடாதார்க்கு விதிப்படி ஐந்தெழுத்தை ஓதவே அக்

(பி - ம்) 1. ' இன்பதன '

நிலை கூடும். இன்புறு நிலையை யடுத்து இவ்வதிகாரத்தைக் கூறியிருக்கிற முறை இதனால் விளங்கும்.

'ஆகமங்கள் உண்டு இல்லை என்று மதபேதத்தாற் கொண்ட நெறியும் கதியும் ஓதிக் கூறுவது என்' என்று கூட்டுக. அண்டர் பிரான் எல்லாவகையும் இயம்பும். இவன் - ஆன்மா. அகன்று நில்லா வகையை - சிவசக்தியைவிட்டு நீங்காத முறைமையை.

இன்புறு நிலையை அடைதற்குப் பல்வகைப்பட்ட உபாயங் களை அண்டர்பிரான் கூறியிருப்பது இன்னதற்கென்பதை இக் கவி உணர்த்திற்று. அறியும்நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை இம்மூன்றன் கருத்தும் இதனுள் தொனிக்கின்றது. 9

[1] அடைந்தோர் தன்மை

196 சிதம்பரஞ் சிந்தித்தார் சிவலோக மன்றி
விதந்தறியா ரொன்றும் விரும்பிப் பயந்தவிர
எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரோன்
[2]றல்லா லறியா ரற.

(கு - ரை) மேலை யிரண்டதிகாரங்களிற் சமாதி நிலைமை கூறி அதனை யடைந்தோர் தன்மையை இங்கே கூறுதலான் அதிகார முறைமை விளங்கும். அடைந்தோர் - நாதாக்கள்; சீவன் முத்தர்கள்.

சிற்சபையைச் சிந்தித்த பரமஞானிகள் அச்சம் நீங்கச் சிவலோகமன்றி வேறொன்றையும் மேற்பட்டு அறிய மாட் டார்கள். இவர்கள் சீவன் முத்தர்கள். எல்லாம் அறியும் அறிவு- சர்வஞ்ஞத்துவம். ஒன்று - ஆனந்த ஞானம் ஒன்றே; ஏகாரம் விகாரத்தால் தொக்கது. அற அறியார் - மற்றொன்றினையும் பொருந்தி அறிய மாட்டார்கள்.

சீவன்முத்தர் எவ்விடத்தும் சிவமே கண்டிருப்பர் என்பது கருத்து. 10

வீட்டின்பால் முற்றும்

முதுமொழிமேல்வைப்பு முற்றும்

(பி - ம்.) 1. 'அணைந்தோர்' 2. 'றல்லா தறியா'

6 FEB 1955
MADRAS

உ

செந்திலாண்டவன் துணை

அரும்பத முதலியவற்றின் அகராதி

[எண்–செய்யுளெண்]

அகத்தியர், 21, 144, 151
அகலிகை, 16
அசமுகி, 151
அசுரர், 23
அத்தர், 2, 86
அந்திவண்ணன், 89
அப்பர், 5, 25, 62
அயன், 101
அர்ச்சுனன், 68
அரன், 8, 15, 23, 39, 53, 60
அரன்றனக்குத் தோழன், 170
அரனருள்சேர் நம்பி, 178
அரனன்பர், 26, 129, 176-7
அரிச்சந்திரன், 48
அரிவாட்டாய நாயனார், 104
அருகர், 39, 59, 89, 130
அருணகிரி, 189
அருணந்தி தேவர், 103
அருநூல், 12
அருள், 190
அருளுரு, 192
அவி, 43
அன்னைவயிற்குறை, 143
அனிச்சம், 165
ஆகமம், 2, 10, 71, 195
ஆதி பகவன், 1
ஆதி மொழி 131
ஆரூர்ப் பரவை, 176, 178
ஆரூரர், 128, 160, 170, 184
ஆலடியார், 72
ஆழி, 109
ஆன்மசுத்தி, 193
இகுளை-தோழி, 162, 173
இசைவாது, 93
இந்திரன், 83, 97, 152
இயற்பகை நாயனார், 38
இரணியன், 51
இராசேந்திர பாண்டியன், 124
இராவணன், 137
இருவர் - பிரமனும் திருமாலும் [84
இருள், 188
இளையான்குடி மாறனார், 14
இறை, 16, 97
இறை நூல், 114
இறைவர், 1, 2, 33, 103
ஈசன், 12, 20, 24, 71, 85
ஈசனன்பர், 182
உக்கிரகுமார பாண்டியர், 152
உமாதேவியார், 15, 21, 24
உமாபதி சிவாசாரியர், 103
உய்யவந்ததேவ நாயனார், 55
உய்யவந்தார், 75
உருத்திரசன்மர், 52, 114
உலகுக்குத் தந்தை, 146
உலவாக் கோட்டை, 20
உவைஷ, 50
ஊமன்-கோட்டான், 188
ஊன், 41
எண்குணத்தான், 3
எலி, 22, 96
எலிப்பகை, 120
எவ்வநோய், 178
எளி நின்று-எளியராகி நின்று, [64
ஏந்தல், 180
ஏமநாதன், 90
ஒளவையார். 13
ஐந்துமலம், 59
ஐயன்–சிவபெருமான். 111
ஒளவை, 13
கஞ்சுகநாதன், 96
கடவூரரன், 98
கடி-காவல், 174
கண்ணப்பர். 19, 179
கண்ணபிரான், 54, 134

கண்ணுதல், 31, 50, 67, 80, 81, 109, 134
கண்ணுதலார் தோழன், 173
கண்ணுதலோன், 18
கணமங்கலம், 104
கணிச்சி-குந்தாலி, 179
கமலை வெள்ளியம்பலவாண முனிவன், சிறப்பு
கரதூடணர், 102
கருநாடக மன்னன், 76
கவறு-சூதாடு கருவி, 141
காசி மயானம், 48
காளத்திநாதன், 19
கீரன்-நக்கீரர், 135
குண்டர்-சமணர், 79
குண்டோதரன், 85
குருவிருந்த துறை, 147
குறுமுனி-அகத்தியர், 106
குன்றவில்லி, 117
கூடல்-மதுரை, 52, 117
கூன் பாண்டியன், 35, 44, 79
கைத்தொண்டு, 25
கைலைமலை, 138
கொங்கு தேர் வாழ்க்கை, 34
கொண்கன், 182
கொன்றைத் தொடையலார், [110
கௌதமன், 16
சங்கப்பலகை, 145
சங்கப்புலவர், 67, 115
சங்கமண்டபம், 135
சங்கரன், 127, 145
சங்கறுக்குஞ்சாதி, 34
சங்கிலியார், 169, 183
சசிவன்னன், 140
சட்டைநாதர், 96
சமணர், 35, 79, 94, 130, 192
சமாதி யோகம், 4
சரபமூர்த்தி, 51
சலந்தரன், 109
சனகாதி நால்வர், 72
சனற்குமாரர், 74
சாக்கிய நாயனர், 31
சாதாரி, 153
சித்தன், 36
சித்தாந்தம், 1, 57
சித்தாந்திகள், 4, 5
சிதம்பரம், 75, 196
சிந்தாமணி, 78
சிலம்பி 80
சிவகீதை 68
சிவ சமதை, 101
சிவஞானம், 113, 120
சிவநூல், 9
சிவப்பிரகாசம், 103
சிவபாத ஹ்ருதயர், 17, 118
சிவபிரான்தூதுசென்றது, 110
சிவபெருமான், 29, 47, 82
சிவன், 156
சிவனன்பன், 93
சிவிகை, 11, 112
சுந்தர பாண்டியர், 64, 78
சுந்தரமூர்த்தி, 61, 66, 169, [171 179
சுந்தரர், 30, 33
சுவை முதலிய ஐந்து, 9
சூரன், 90, 104
சூலை நோய், 108
சூளுறவு-சத்தியம், 169
செவ்வேள்-முருகக்கடவுள், 107
சேய்-முருகக் கடவுள், 164
சேரமான் பெருமாணயனர், [26, 66, 93
சேவகன்-வீரன், 90
சைவ சித்தாந்திகள், 60
சைவம், 3
சைனமதக் கொள்கை, 158
சொக்கலிங்கப் பெருமான், 115
சோமசுந்தரர், 116, 124, 148
சௌந்தர பாண்டியர், 138
ஞானசம்பந்தர், 17, 25, 28, 32, 35, 39, 44, 111, 123, 130
ஞானந்தம், 4
தக்கன், 10, 49, 127

தடாதகைப் பிராட்டியார், 18, [121, 138
தண்டி, 10, 186
தண்டியடிகள், 94
தண்ணீர்ப் பந்தர், 124
தம்பிரான் றோழர், 105, 175
தமிழ்ச் சிங்கம், 1, 57 [183
தரு, 37
தருமர், 12
தருமி, 95
தனபதி, 90
தாட்சாயணி, 127
தாயனார், 104
தாயுமானவர், 146
தாரகாசுரன், 151
தாருகாவனம், 29
திகம்பரர், 119
திரிசிரபுரம், 146
திரிபுர சங்காரம், 82, 149
திருக்களிற்றுப்படியார், 75
திருக்காளத்தி, 132
திருத்தங்கி, 13, 150
திருநந்தி தேவர், 74
திருநீலகண்டர், 8
திருநீல நக்கர், 80
திருப்பெருந்துறை, 69
திருப்பைஞ்ஞீலி, 112
திருமால், 23, 24, 46, 47, 68, [109, 136
திருமுகப்பாசுரம், 93
திருவதிகை, 193
திருவள்ளுவர், 89, 157
திருவாதவூரர், 69
திருவாதிரைத் திருநாள், 185
திருவீழிமிழலை, 25, 109
திருவெறும்பியூர், 132
திருவேற்காடு, 141
திருவொற்றியூர், 56, 128
தில்லை, 25
தென்மதுரை, 95
தென்னவன், 144
தென்னன், 100, 148
தென்னாட்டுழவர், 154
தோழன், 30, 105
நக்கர், 99
நக்கீரர், 34, 95, 114, 145
நகுடன், 53
நந்தி, 48, 171
நந்தி தேவர், 27
நம்பியாண்டார் நம்பி, 113
நரசிங்கமூர்த்தி, 51
நாதர்–பரமகுருநாதர், 166
நாரதர், 136
நாமைகதேசம், 23
நாரை, 42
நாவலர்-சுந்தரமூர்த்தி, 110
நாழிநெல், 156
நீரை-இயற்கையை யுடையாய், [165
நோவு, 19
பகவத்கீதை, 68
பசு இலக்கணம், 2
பட்டினத்தடிகள், 8, 56
படிக்காசு, 86
பணிக்கர், 36
மதிகதை, சிறப்பு
பதியிலக்கணம், 2 [கடல், 119
பயோதி–பயோததி–பாற்
பரஞ்சோதி முனிவர், 74
பரமன், 102
பரவையார், 128, 160 170–73, [175, 177, 184
பழமலை, 140
பன்றிக்குட்டி, 147
பாச இலக்கணம், 2
பாண்டியன், 83
பாணபத்திரர், 12, 153
பாணன், 90
பாணினி, 63
பார்த்த குரவர், 94
பார்வை, 191
பித்தன், 30
பிரணவப் பொருள், 131
பிரமன், 47
பீதாம்பரதரர், 119
புத்த நந்தி, 32

புத்தர், 2, 32,
புத்தன், 41
புலியூர், 143
புவனம், 5
புஷ்பதந்தன், 63
பூஜை, 190
பெற்றம்-காளை, 49
பேதையர்-பரவையார், 110
பொதிசோறு, 112
பொல்லாப் பிள்ளையார், 113
பொற்கிழி, 118
பொற்றாமரை, 77
பொன்னர்-திருமால், 188
போதிமங்கை, 32
மகாபலி, 22, 50
மகிஷாசுரன், 21
மங்கையர்க்கரசி, 44, 123
மடலேறுதல், 167, [தமை, 159
மணலை அமுதாகச் சமைத்
மணிமுத்தாநதி, 155
மதவாரணம், காப்பு
மருத்தர், 13
மலையத்துவசன், 18, 121
மன்மதன், 73, 81
மநுநீதிச் சோழன், 88
மாணிக்கம், 125
மாணிக்கவாசகர், 65, 71
மாதினியார், 16
மாநந்தி பராயணர், 140
மாமன், 90
மார்க்கண்டேயர், 98, 122
மால், காப்பு, 87
மாலயர்-மாலும், பிரமனும், 126
மாறன், 7, 97, 125
மாறன்பாடி, 112 [164
மானின்றவல்லி-வள்ளியம்மை,
முக்கணர், 14
முத்தநாதன், 45
முதுகிரி, 21
முதுமொழிமேல் வைப்பு,
காப்பு, சிறப்பு
முப்புரங்கள், 149
முப்புரமழித்தமை, 90
முப்புரவாசிகள், 133
முருகக் கடவுள், 161, 162
முளை-நெல் முளை, 14
மூர்த்தி நாயனார், 76
மூலலிங்க பூசை, 155
மூன்றுமறைச் செல்வம், 76
மெய்கண்ட தேவர், 1, 74
மேக = மேவுக—விரும்புக, 134
யமன், 68, 122
வங்கிய சூடாமணி, 34
வந்தி, 40
வரகுண பாண்டியர், 23, 37
வரர், 21
வரருசி, 63
வலியான்-கரிக்குருவி, 77
வள்ளியம்மையார், 162, 165
வள்ளியம்மை, 161
வள்ளுவர், 2, 187
வாகீசர், 108, 129, 192
வாணன், 50, 92
வாதவூரர், 191, 184
வாதாவி, 151
வாயில், 184
வாலி, 54
விந்தமலை, 106
விநாயகர், காப்பு
விபசித்து, 53, 155
வியாசர், 27
வியாழன், 147
விருத்திராசுரன், 106
வில்வலன், 151
விஷ்ணு வஞ்சனையாக வந்தது,
வீரபத்திரர், 10 [96
வீரபாண்டியன், 125
வேணுபுரம், 17
வேதநிலைகண்டான், 27
வேம்படிப் புற்றுமண், 142
வைத்தீசவரன் கோயில், 142
வைதிகம், 3

செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண்–செய்யுளெண்]

அடியவரை, 7
அண்ணல்பழ, 140
அத்தர்திரு, 86
அந்திவண்ணன், 89
அப்பர்முதல், 5
அரன்வாயில், 184
அரன்றனக்கு, 170
அரனடியார் நித்த, 141
அரனடியாரல்லா, 163
அரனருள் சேய், 162
அரனருள்சேர் 178
அரனருளாம், 60
அரனன்பர் நீ, 177
அரனன்பர் வாகீ, 129
அரனையருச்சித்த, 53
அருகர்கழு, 65
அருணகிரி, 189
அருளாற் பிரம்பின், 40
அல்லொளிசேர், 164
அழித்துலகை, 6
அறவோன், 16
அன்றுகுணன், 23
ஆங்காவிறைவர், 133
ஆதிமுடி, 47
ஆதிமொழியை, 131
ஆதியருள், 167
ஆய்தொடியார், 80
ஆர்பெரியர், 8
ஆரூரர்க்காரூரர், 128
ஆருரன்கண்ட, 160
ஆலடியார், 72
ஆலமுகந்தானே, 121
ஆற்றுவித்த, 176
ஆனையிழிந்தும், 26
இசைபயின்முர், 91
இரணியனை, 51
இரந்துண்டு, 33
இருள்பலவா, 59
இல்வாழ், 13
இறைசாரும், 116
இறைநூல், 114
இறைமகிழ, 88 [144
இறையருள்சேர் தென்னவ,
இறையருள்சேர் தென்னன்,
இறையருள் தென், 83 [148
இறையருளால், 107
இறையருளும், 152
இறையெளிநின், 64
இறையோடு, 122
இறைவர்க்கு, 108
இறைவர் துணை, 181
இறைவர் நிலை, 84
இறைவர் மதலை, 35
இறைவரருள் கதிர், 161
இறைவரருள் சேர், 180
இறைவருங்கை, 69
இறைவரெதிர், 190
ஈசரிடத்தன், 71
ஈசரிருந்தால், 156
ஈசன்குண்டோ, 85
ஈசனடியார் விரு, 20
ஈசனடியாரிசை, 130
ஈசனன்பர், 182
ஈசனுக்கு, 46
ஈசனுமையாள், 24
ஈசனெறி, 74
உலகர்க்குத், 146
உலகுண்டு, 15
உண்டிலையென், 195
உண்ணப்பொதி, 112
எங்களிறை, 150
எங்குமிறை, 57
எங்குமுளன், 1
எத்திறத்த, 120
எந்தைபவி, 29
எல்லாமிமைப்பில், 82

எல்லாரும், 185
எவற்றினுமே, 103
எள்ளளவு, 22
எறும்புகடை, 132
என்றியம்பினுர், 157
என்றுமிறைவன், 45
ஐயனருள், 111
ஒருவர் சிறிது, 70
ஒருவர்செய, 158
கஞ்சுகநாதன், 96
கண்ணன்கடை, 134
கண்ணுதல்பாலா, 109
கண்ணுதல்பாற், 81
கண்ணுதலார் தம்மை, 50
கண்ணுதலார் தோழன், 173
கண்ணுதலோன், 19
கல்லெறியும், 31
கல்விலுடை, 161
கற்றவர் சங்க, 67
காணலாமீசன், 11
குண்டராற், 79
குலமொழுக்க, 55
குறுமுனியும், 106
குன்றவில்லி, 117
கூடலிறை, 52
சங்கீத்தார், 115
சங்கரன்போய், 145
சங்கறுக்கும், 34
சதுமுகன்மால், பாயிரம்
சிதம்பரம், 196
சிந்தாமணி, 78
சிவகீதை, 68
சிவனடி, 101
சீர்படைத்த, 93
சூரனிழந்தான், 104
சூளுறவு, 169
சோதிதிறம், 27
தக்கனுற, 127
தண்டிக்கருள், 10
தண்டியுணர்த்த, 186
தந்தைபொருட்டு, 118
தம்பிரான் றேருமூர்தமை, 175
தம்பிரான்றேருமூர் தவறு, 188
தமிழ்மணக்க, 44
தருமர் பிறர், 12
தருவும் வரிசை, 37
தீகம்பரர்க்கு, 119
திசைவென்ற, 138
தில்லைமறையோர், 28
துறைபிழைத்து, 193
தென்னனிறை, 100
தென்னுட்டு, 154
தையலார், 36
தொல்லைமணி, 38
தோழனென்று, 105
தோன்றியரச, 39
தோன்றியிறை, 76
நக்கர்சிறிது, 99
நந்தியருள் காசி, 48
நந்தியருள்சேர், 171
நம்பிதனை, 174
நன்னிழலில், 124
நாதர்பரம, 166
நாதர்மால், 136
நாதரருள், 66
நரைபுலால், 52
நீற்றறையின், 192
பகைசிறிது, 77
பட்டினத்துப்பிள்ளை, 56
பண்டுகளிற்றுப், 75
பதிகதையால், சிறப்பு
பரமனருள்வே, 102
பரனருள்சேய், 168
பரனன்பர், 172
பற்றொழிந்து, 61
பன்றிக்குருளை, 147
பாணன்குடி, 153
பார்த்தகுரவர், 94
பாலனொருவன், 98
பித்தனென, 30
பிள்ளையிறைவர், 123
பிள்ளையினும், 25

பிறர்க்குண்டோ, 73
பிறவியரூர், 62
புத்தர்பிறர், 2
புத்தன்நான், 41
புத்தனிறந்தான், 32
புறமகமென், 9
புனிதரழல், 139
பெண்பெறினும், 18
பெற்றதவர், 4
பெற்றமுவந்தார், 49
பேதையரும், 110
பொல்லார்முன், 113
பொன்னர்பிறர், 188
மண்ணுண்டவன், 142
மணலமுதா, 159
மதியிருளை, 58
மறந்து மறந்தி, 67
மன்றுடையார், 137
மன்னுமரன், 143
மாமனென்றும், 90
மாறனது, 125
மாறனிறை, 97
மின்னுசடை, 165
முதுகிரியான், 21
முளையால், 14
முப்புரங்கள், 149
முனைநாளிருந்த, 54
மூலலிங்க, 155
மேனிகழ்வ, 95
வரருசி, 63
வழுவுசெய்தும், 126
வள்ளுவரும், 187
வாணனிரு, 92
வாதவூரர்க்காள், 191
வாதவூரன், 194
விளையாடிக், 135
வேடர்க்கருளும், 179
வேணுபுர, 17
வேதியர்கள், 43
வைதிகமேற், 3

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	7	ஓனகாள	ஓலகாள
16	5	சிவமயஞ்	சிவசமயஞ்
25	30	வராணுல்	வாணுல் *
30	9	மனுபவிப்பர்	மனுபவிப்பார்
35	8	யாற்பால்	யார்பால்
39	12	னுறுப்படையான்	னுறுபடையான்
45	12	ஊரிலிலுள்ள	ஊரிலுள்ள
50	28	அறத்துறை	அரத்துறை
57	22	பரவை	சங்கிலி
66	1	மிருகலம்	மிகலம்
67	4	மொருவர்க்குத்	மொருவற்குத்
,,	21	மூவலிங்க	மூலலிங்க

செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து தலைவராக
எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத்தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபிவிருத்திக்காகவும் பொதுமக்களின் அனுகூலத்துக்காகவும் மனமுவந்து அமைத்திருக்கும் பேறறக் கட்டளைகள்.

தொடர் எண்	தரும விவரம்	மூலதனம் ரூபாய்
1.	சிவஞானசித்தியார் உபந்நியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	... 15,000
2.	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த	... 11,500
3.	திருவாங்கூர் மகாராஜா தேவாரப்பரிசு,	... 5,000
4.	சேரமான் பெருமாள் தேவாரப்பரிசு, கொச்சி	... 5,000
5.	மூவர் தேவாரப் பரிசு ; சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை	... 10,000
6.	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க	... 60,000
7.	அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க	... 30,000
8.	திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ	... 1,50,000
9.	இசைத் தமிழ்க் கல்விக்கு	... 1,00,000
10.	திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும்	... 20,000
11.	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம்	... 10,000

12. இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் ... 10,000
13. திருநள்ளாற்றில் ஆவணி மூல அன்னதானம் ... 1,000
14. ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ... 17,000
15. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி ... 1,00,000
16. திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம் ... 66,000
17. திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ... 2,900
18. திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ... 3,300
19. கும்பகோணத்தில் மணிக்கூண்டு ... 25,000
20. தஞ்சையில் காச நோய் வைத்தியசாலை ... 28,500
21. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம் ... 9,000
22. மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு ... 5,000
23. தருமை ஸ்ரீகுருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம் ... 5,000
24. சென்னை விவேகாநந்தா கல்லூரியில் ராஜாஜி சைவ சித்தாந்தக் கட்டளை ... 10,000
25. ஸ்ரீ காசிப் பல்கலைக்கழகத்தில் சர். எஸ். ராதாகிருஷ்ணன் சைவ சித்தாந்தக் கட்டளை ... 20,000
26. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீவைகுண்டம் ... 5,000
27. மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு ... 10,000
28. ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு ...1,00,000

29. ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ... 5,000

30. ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு ... 1,50,000

31. டாக்டர் சாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ... 3,500

32. குடந்தையில் காந்தியடிகள் பசுப்பரிசு ... 1,000

33. காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகாரநிதி ... 3,000

34. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ... 10,000

35. திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ... 4,000

36. விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ... 1,000

37. குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ... 3,500

38. திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ... 3,500

39. திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப்பந்தல் தர்மம் ... 3,500

40. ஸ்ரீவைகுண்டத்தில் படிப்பக நிதி ... 3,500

41. சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவுநிதி ... 35,000

42. சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ... 12,000

43. இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ... 3,500

44. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நூல் நிலையக் கட்டிடம் ... 17,825

45. பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ... 5,000

46.	அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி	...	3,500
47.	ஸ்ரீகாசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீகுமார சாமி அன்னதானம்	...	5,000
48.	ஸ்ரீவில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு	...	3,500
49.	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம் போட	...	7,500
50.	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு	...	5,000
51.	திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம்	...	7,000
52.	28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் உதவி நிதி	...	18,500
53.	30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்திற்கு நான்கு ஆண்டு மூலதனம்	...	28,000
54.	28-வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்தூர் உதவி மூலதனம்	...	15,500
55.	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும்	..	15,000
56.	மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை	...	5,000
57.	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர்	...	60,000
58.	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ	...	2,275
59.	ஸ்ரீவைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ	...	4,5000
60.	ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி	...	5,000

61. பனைசைக் கல்லூரியில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ... 5,000

62. (6) ஸ்ரீகாசிப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது ... 16,000

63. 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்-மதுரை முதலாண்டு உதவி மூலதனம் ... 7,000

64. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் விலக்கிரயம் ... 14,000

65. 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையரு - திருநெல்வேலி முதலாண்டு உதவி மூலதனம் ... 5,000

66. 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையரு - கும்பகோணம் முதலாண்டு உதவி மூலதனம் ... 7,000

67. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை ... 10,000

68. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை கட்டிடம் உள்பட ... 27,975

69. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பள மளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ... 10,000

70. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம் வாங்க நன்கொடை ... 3,000

71. ஸ்ரீ காசியில் இந்தியக் குடியரசு தின அன்ன தானம் ... 10,000

72. ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவு நிதி 1,50,000

73. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலப் பெறுமானம் ... 50,000

74. சண்டேசுவர நாயனார் நினைவு தண்ணீர்ப்பந்தல் தருமம் திருவாப்பாடி ... 3,500

75. காஞ்சிபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி ... 7,000

76. திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ... 5,000

77. சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு திருக்குறள் பதிப்பு நிதி ... 35,000

78. ஸ்ரீ வைகுண்டத்தில் மங்கையர்க்கரசியார் நினைவுப் பரிசு நிதி ... 3,500

79. கும்பகோணம் தாலூகா மேலச் சூரியமூலை கண்டியன் பழவாற்றின்மீது பாலம் கட்ட... 7,470

80. ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப்பந்தல் தரும நிதி ... 3,500

81. பழுத்த தமிழ்ப் புலவர் காசியாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள் ... 5,000

82. திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் ... 7,000

83. திருவாஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் நினைவு வாசகசாலை நிறுவ ... 5,000

84. திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி ... 35,000

85. இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன்மார்க்க சங்க நூல் நிலைய நிதி ... 5,000

86. லால்குடி ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி ... 15,000

87. அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி... 5,000

88. குடந்தையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு ... 5,000

89. திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ... 15,000

90. திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு ... 5,000

91. ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்தர் நினைவுப் பரிசு ஸ்ரீவைகுண்டம் ... 3,500

92. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம், இராமேசுவரம் ... 3,500

93. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்ன தானம், சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை ... 5,000

94. காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் ... 5,000

95. திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ... 5,000

96. திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ... 5,000

97. திருநாரையூரில் ஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ... 5,600

98. திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு... 5,000

99. தஞ்சை, கலைக்கூடத்திற்கு நன்கொடை ... 5,000

100. மணிக்குடியில் கடலூர்க்கலயர் புனற்பந்தர் நிதி. 3,500

101. காசியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நினைவு அன்னதானம் 5,000

102.	திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் நினைவுப் பரிசு ...	5,000
103.	ஸ்ரீ காசியில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு ...	5,000
104.	திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப் பக நிதி ...	5,000
105.	காசியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி	7,000
106.	ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி நிதி ...	30,000
107.	செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி ...	50,000
108.	திருச்செந்தூரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி ...	12,000
109.	ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு - திருச்செந்தூர் - ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப்பள்ளிகளில் ...	7,000
110.	ஸ்ரீ காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு - கார்த்திகை ...	7,000
111.	சென்னைக் கல்லூரிகளில் ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் நினைவு சிவபோகசாரம் பரிசு நிதி	5,000
112.	தஞ்சையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேம வைப்பு ...	5,000
113.	மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேம வைப்பு ...	5,000
114.	திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் தருமநிதி தத்துவாச்சேரி ...	3,500
115.	காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு ...	7,000

CONNEMARA PUBLIC LIBRARY
26 FEB 1955

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு — 42.

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB 1955
MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சந்தான குரவர் நான்மணி மாலை

SANTĀNA KURAVAR NĀNMANI MĀLAI

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
21-வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

by SANTĀNA KURAVAR

அவ்வாதீன வித்துவான்

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்

பரிசோதித்துக் குறிப்புரை முதலியவற்றுடன்
பதிப்பிக்கப்பெற்றது.

மெய்கண்டான் யாண்டு — 728

கர — ஆவணி

1951.

CONNEMA... LIBRARY
6 FEB 1958
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

6 FEB 1955
MADRAS

முகவுரை.

சந்தான குரவர் நான்மணி மாலை என்பது சந்தான குரவரது நான்மணி மாலை என விரியும். ஆறாம் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்: பொருட்பிரிதின் கிழமைப் பொருளது. இத்தொடர் மொழியை இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவும் கொள்ளலாம். சந்தான குரவரைப் பற்றிப் பாடியதோர் நூல் என்பது அதற்குப் பொருள் ஆம். நான்மணி மாலை என்பது நான்கு மணிகளால் கோக்கப்பட்ட மாலை எனப் பொருள் படும். நான்கு மணிகளாவன— முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்பன. வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்பன முறையே வர அந்தாதித் தொடையால் நாற்பது செய்யுட்கள் அமைக்கப் பெறுவதும், முதலும் இறுதியும் மண்டலித்து வருவதும் இந்நூலுக்கு இலக்கணம்.

"வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசும் அந்தா தியினாற் பதுபெறின்
நான்மணி மாலை யாமென நவில்வர்."

என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் 61-ஆம் சூத்திரம்.

"வெண்பாக் கலித்துறை அகவல் விருத்தம்,
நண்பாய் வருவது நான்மணி மாலை.

"அகவலும் அகவல் விருத்தமும் நாற்ப
தகவலை முன்வைத் தறைவது கடனே."
"வெள்ளைகலித்துறை அகவல் விருத்தம்
கொள்வது நான்மணி கோத்தவந் தாதி."

என்பது பன்னிரு பாட்டியல் சூத்: 255, 256, 257.

"வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல் எனத் தொகுப்பர் பிற்காலத்தார்" என சேது சமஸ்தான மஹா வித்துவான் உப. வே. ஸ்ரீ ரா. இராகவையங்கார் சுவாமிகள் பன்னிரு பாட்டியலில் அடிக் குறிப்பாக வரைந்துள்ளமை காண்க.

இனி, சித்தாந்த சைவ சமயாசாரியர் நால்வர்: சந்தானசாரியர் நால்வர். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வரும் சமயகுரவர்கள். இவர்கட்குச் சிவபெருமான் நேரே எழுந்தருளிக் காட்சி தந்தருளினார். சைவ சமயக் கொள்கைகள் அருகிப் பிறசமயங்கள் தலையெடுத்துக் கொந்தளித்த காலத்திலே சிவபெருமான் மீட்டும் சைவ சமயத்தை நிலை நாட்டிப் பல அற்புதச் செயல்களால் சைவசமயமே மெய்ச்சமயம் என மக்கள் அறிந்து உய்யும் பொருட்டுத் திருவருள் கூர இவர்கள் அவதரித்தவர்கள். புத்த சமயம் தலையெடுத்த காலத்திலே பல அற்புதச் செயல்களைக் கொண்டு சைவ சமயத்தை மறுபடியும் நிலைபெறச் செய்த ஆசிரிய மூர்த்திகள் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்.

சமண சமயம் வேரூன்றிச் சைவ சமயத்துக்குப் பெரிதும் இடர் விளைத்த காலத்திலே அவதரித்த ஆசாரிய மூர்த்திகள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆவார்கள். இவ்விரண்டு ஆசாரிய மூர்த்திகளும் ஒரு காலத்த வர்கள். சுந்தர மூர்த்தி சுவாமிகள் அவர்கட்குப் பின் அவதரித் தவர்கள். பல அற்புதச்செயல்களால்இவர்களும் சைவசமயத்தை நிலை பெறச் செய்தனர்.

சமய குரவர் நால்வரும் அளவில்லாத அடியார்கள் சூழ்ந்து வந்து அரகர முழக்கம் செய்யச் சிவதல யாத்திரை செய்து சிவபிரான் புகழைத் தோத்திர வாயிலாக மக்களுக்கு இன்னிசையால் அறிவுறுத்தினர். அவை தேவார திருவாச கங்கள் ஆம். அவைகளே அருட்பாக்கள்.

இனி, சந்தான குரவர்கள் ஆவார் ஸ்ரீகண்ட பரம சிவன்பால் அருளுபதேசம் பெற்ற திருநந்தி தேவர், அவர் பால் அருளுபதேசம் பெற்ற சனற்குமார முனிவர், அவர் பால் அருளுபதேசம் பெற்ற சத்திய ஞான தரிசினிகள், அவர் பால் அருளுபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர் ஆகிய நான்கு ஆசிரியர்களும் ஒருவர் பின் ஒருவராக உபதேசம் பெற்றுப் பரம்பரையாக வருதலின் அகச் சந்தான குரவர் எனப்படுவர். இவர்கள் கயிலாய வாசிகள். கயிலாய வாசியாக வுள்ள பரஞ்சோதி முனிவர்பால் சிவஞான அரு ளுபதேசம் பெற்றார் மெய்கண்ட தேவர். அவர்பால் அரு ளுபதேசம் பெற்றார் அருணந்தி சிவாசாரியார். அவ்வாசிரியர் பால் அருளுபதேசம் பெற்றார் மறைஞான சம்பந்தர். அவர்

பால் அருளுபதேசம் பெற்றார் உமாபதி சிவாசாரியர். மெய் கண்ட தேவர் முதல் நான்கு ஆசிரியர்களும் புறச்சந்தான குரவர் எனப்படுவர். பதி பசு பாச உண்மைகளைத் தெளி விக்கும் சிவஞான போதத்தை ஸ்ரீகண்ட பரமசிவன்பால் உணர்ந்த திருநந்திதேவருடையமாணவர்பரம்பரையாகஉபதேச முறையில் வழி வழி வருதலின் சந்தான பரம்பரை எனப் பட்டது. சந்தானம் வழிவழி இடையறாது வருதல். அதனால் ஸ்ரீகண்டபரம்பரை எனவும், திருநந்தி மரபு எனவும் கூறுவர். சிவஞான போதம் ஸ்ரீ மெய்கண்ட தேவர் முதலாக உபதேச பரம்பரையில் நிலவுலகத்து வருதலின் மெய்கண்ட சந் தானம் எனக் கூறப்படும். ஆகலின், திருக்கயிலாய பரம் பரை, திருநந்தி மரபு, ஸ்ரீ மெய்கண்ட சந்தானம் என உபதேச பரம்பரை பற்றித் திருவாவடுதுறை, தருமபுரம் முத லிய ஆதீனங்கள் அடிப்பட்ட சான்றோர்களால் வழங்கப் படும். சித்தாந்த சைவ சமய நிலைக் களங்கள் இவ்வாதீனங் களே. சுத்தாத்துவித சைவ சமயக் கொள்கைகளைத் தீவிர தரபக்குவர்களுக்கு அநுக்கிரகிக்கும் பொருட்டே இவ்வாதீனங்கள் தோன்றின. வட மொழியிலும், செந்தமிழ் மொழியிலும் பல நூற்றுக்கணக்கான நூல்களைத் தமிழுலகுக்கு—சித்தாந்த சைவ நல்லுலகுக்கு உதவின. இந்த மெய்கண்ட சந்தான பரம்பரை தமிழகத்திலே இற்றைக்கு எழுநூற்று இருபத் தெட்டு ஆண்டுகளாக, சிவஞான போத உபதேசத்தைச் செய்து மெய்கண்ட சித்தாந்த சைவப் பேரரசு செலுத்தி வருவதைச் சைவ உலகு நன்கு அறியும். தமிழகம் செய்த தவப்பயனும் அவதரித்தருளிய இம்மெய்கண்ட சந்தானம் நீடூழி வாழ்க.

இனி, ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கு வெண்பாவும், அருணந்தி சிவாசாரியருக்குக் கலித்துறையும், மறை ஞான சம்பந்த சிவாசாரியருக்கு விருத்தமும், உமாபதி சிவாசாரியருக்கு ஆசிரியப்பாவுமாக நால்வகைப்பாக்களும் இந்த நான்மணி மாலையிலே விரவிவர நாற்பது செய்யுட்கள் பாடப்பட்டுள்ளன. இந்நூலைப் பாடியவர் திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களாவார். இதன் முதற் பதிப்பு ஏவிளம்பி (கி. பி —1897) ஆண்டில் பதிக்கப்பட்டுள்ளது. இப்போது கிடைப்பதரிது.

இவ்வாதீனத்திலே இப்பொழுது இருபத்தொன்றாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து சிவ க்ஷேத்திர குரு க்ஷேத்திர பரிபாலனங்களும், சித்தாந்த சைவ சமய பரிபாலனமும், செந்தமிழ்ப் பரிபாலனமும் இவ்வாதீனத்திலே தொன்று தொட்டு வரும் சம்பிரதாயங்களுக்கு விரோதமின்றி நன்கு சிறப்புறச் செய்து வருபவர்களும், செந்நெறியிலே ஒழுகி வரும் சீலர்களும், மகோபகாரியும் ஆகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அடியேனையும் ஒரு பொருளாக எண்ணி இந்நூலைக் குறிப்புரை முதலியவற்றுடன் விரைந்து பரிசோதித்து அச்சிடுக எனக் கட்டளையிட்டருளியபடி என் சிற்றறிவு சென்ற அளவில் எழுதி வெளியிட்டுள்ளேன். பிழையுளதாயின் உலகம் பொறுத்தருள்க.

திருவாவடுதுறை,
16—8—51.

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை.
ஆதீன வித்துவான்.

6 FEB 1955
MADRAS

உ

நூலாசிரியர் வரலாறு.

—o—

'சந்தான குரவர் நான்மணிமாலை' என்னும் இந்த நூலை இயற்றியவர்கள் திருமயிலை வித்துவான் ஸ்ரீ சண்முகம் பிள்ளை என்பவர். இவர் மயிலாப்பூரில் பிறந்து வாழ்ந்தவர், வேளாளர் குலம். சித்தாந்த சைவர். புரசை அட்டாவதானம் ஸ்ரீ சபாபதி முதலியார் இவருடைய ஆசிரியர். கோமளபுரம் மகாவித்துவான் இராசகோபால பிள்ளையிடம் இலக்கண நூல்களும், கம்பராமாயணமும் இவர் பாடங்கேட்டார். இலக்கணபாடம் சொல்வதில் மிகவல்லவர். சிவபெருமானிடத்தும் முருகவேளிடத்தும் மாறாத மெய்ப்பத்தியுடையவர். ஸ்ரீ மெய்கண்ட சந்தானத்தும், அச்சந்தான பரம்பரையில் வந்த திருவாவடுதுறை ஆதினத்தும், இவ்வாதீன குல தெய்வமாகப் போற்றப் பெற்றுவரும் திராவிட மாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளிடத்தும் பேரன்பு பூண்டவர். இவருடைய மாணவர்கள் சே. சிவஞானம் பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார் முதலிய பலர். இவர் கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்துக்கு ஓர் உரை எழுதியுள்ளார். வடதிருமுல்லைவாயிற் புராணமும் இவர் இயற்றியதே. ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் அருளிய ஓர் இலக்கணக் குறிப்பைச் சென்னையிலுள்ளார் மறுத்தெழுதிய மறுப்புக்குப் 'போலிமறுப்பு' என ஒரு கட்டுரை எழுதி அச்சிட்டு வழங்கினார். ஸ்ரீ அருணகிரிநாதர் அருளியுள்ள கந்தரநுபூதி 51 பாடல்களுக்கு உரை வரைந்திருக்

கிறார். இவர் சென்னை வேப்பெரி எஸ் - பி - ஹைஸ்கூலில் தமிழாசிரியராய் வேலை பார்த்து வந்தார். விரைந்து கவி பாடும் வன்மையுடையவர். இவர் பாடல்கள் சிறந்தன; சங்கநூற் பாடல்கள் போன்றன; தேவார திருவாசகக் கருத்துக்களும் திருக்குறள் திருத்தொண்டர் புராணங் களிலுள்ள சொற்றொடர்களும் மலிந்து இவர் வாக்கில் காணப் பெறுவன.

கோமளபுரம் மகா வித்துவான் ஸ்ரீ இராசகோபால பிள்ளை வைணவர்களுக்கன்றி ஏனையோர்க்குப் பாடம் சொல்லா இயல்பினர். ஆதலின், இவரும் இவருடைய அன்பர்களாகிய சில சைவரும் வைணவக் கோலமுடன் சென்று அவரிடம் பாடங் கேட்டுவந்தனர். அவர் பாடம் சொல்லுங் காலத்துக் கூறிய சிவத்துவேஷ மிகுதியை ஒருநாள் கேட்கப் பொறுதவராயினர்: கண்ணீர் விட்டு அழுதார். அன்றுமுதல் இவர் அவர்பால் சென்று பாடம் கேட்பதை நிறுத்திக் கொண்டார். அவர் செய்யும் சிவத் துவேஷ மிகுதியான பிரசங்கங்களைக் கேட்டு, மனமிக வருந்தினர். சூளை — ஸ்ரீ சோமசுந்தர நாயக்கரவர்களை அழைத்து மயிலையில் சிலகாலம் இடைவிடாமல் சித்தாந்த சைவப்பிரசங்கங்கள் நடைபெறுவதற்குரிய நிலையான ஏற்பாடுகள் செய்தவர் இவரே. கி. பி. 1889-ல் இவ்வுலக வாழ்வினின்று நீங்கிச் சிவபதமடைந்தார். தொழுவூர் — வேலாயுத முதலியார் அவர்களும் சிவபதம் அடைந்தது அந்த ஆண்டிலேதான். தம் வித்தியாகுருவினிடத்தும் இணையற்ற அன்புடையவர் இவர்.

-6 FEB 1955
MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குரு வணக்கம்.

மருமலர்ப்பூம் பொழிலுடுத்த மயிலாடு துறைநமச்சி
வாய மேலோன்

பொருவருஞ்சீர்ச் சந்தான குரவர்நான் மணிமாலை
புகல்கேன் றேதும்

வரமிகுமிப் பணியாளுர் வகுத்தபணி யெனத்துறைசை
வாழ்வார் பஞ்சாக்

கரகுருமா மணியவன்றன் வழிவந்தா ரருள்கூடக்
கழறி னேனல். (1)

சட்டோதன் னடிநினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைச்
சாரிற் பாசம்

விட்டோடுந் திருவடிப்பே றுண்டாமென் றெமக்குணர்த்து
மேதக் கோனை

மட்டாரும் பொழிற்புரசை வருவேளாண் குடிநாளும்
வயங்கத் தோன்றும்

அட்டாவ தானசபா பதிக்குரவன் றனைநினைந்தேம்
மரந்தை தீர்வாம். (2)

-6 FEB 1955
MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சந்தான குரவர் நான்மணி மாலை

காப்பு

நேரிசை வெண்பா

கல்லா னிழன்மலை வில்லார் கனிந்துதவும்
பொல்லார் அடியிணையைப் போற்றவே—சொல்லார்
அணிமாலை யாச்சந்தா னக்குரவர்க் கோர்நான்
மணிமாலை சொல்ல வரும்.

நூல்

நேரிசை வெண்பா

திருவந்த ஞானஞ் சிவஞான மென்ன
ஒருவந்த மென்னு ணர்த்தும்—அருமந்த
மெய்கண்டான் சந்தான மேவிப் பணிவாரேற்
கைகண்டார் காணுக் கதி. (1)

கலித்துறை

கதியென் றடைகில னின்னடி யாரையிக் காசினிமேற்
பதியெவன் பாச மெதுபசு வாரெனப் பண்புடையார்த்
துதிசெய்து கேட்டுண ரேனவற் றின்றிறன் சோம்பி [நின்றேன்
மதிதவழ் மாடத் துறையூ ரருணந்தி மாதவனே (2)

விருத்தம்

மாதவர் வாழ்க டந்தை வளருஞ்சம் பந்த ஞான
நாதனின் னடிச்சார் பெய்த நாடிலே னுயி னேனிங்
கேதமே யடைந்தே னின்ப மெய்திலே னருளா யெங்கள்
ஆதிதன் னருள்பெற் றோங்கு மருட்சாந்த குணப்
[பெருக்கே. (3)

நேரிசை யாசிரியப்பா

சாதலும் பிறத்தலுங் கடந்த தனிச்சிவ
போதநன் னெறியைப் புகன் றருள்
ஓதருஞ் சீர்த்தி யுமாபதி சிவனே. (4)

நேரிசை வெண்பா

சிவஞான போதந்தான் செந்தமிழ்நா டுய்யப்
பவஞான மோடப் பகர்ந்த—தவராயன்
பொய்கண் டகன்ற புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதன்றுள் வேண்டு. (5)

கலித்துறை

வேண்டுவ் துண்டு திருவருள் ஞானம் விளங்கருளான்
ஈண்டுவ தன்றி யரிதெனி னவ்வரு ளெய்துதிறங்
காண்ட லரிதெனக் கவ்வரு மீணருங் கணக்கெதுகாண்
நீண்ட புகழ்த்துறை யூரரு ணந்தி நிருமலனே. (6)

விருத்தம்

நித்தநின் றுள டைந்தார் நேயத்தி லழுந்தி நிற்ப
வைத்ததோர் கருணை கண்டேன் வண்கடந் தைச்சம் பந்த
அத்துவி தந்தா னுண வத்தொடா காது நின்றே
டத்துவி தங்கி டைக்க வடைந்தனன் மறையின் வாழ்வே.
(7)

நேரிசை யாசிரியப்பா

மணிமன் றுடைக மரகத வல்லி
இணைவிழி களிப்ப விமையவ ரேத்தப்
பதஞ்சலி புலிமுனி பரசவெஞ் ஞான்றும்
இதஞ்சலி யாமே யியற்றிய வாண்டகை
கொடியிடை மணந்த கோமளக் கொழுந்தன்(று)
"அடியார்க் கெளிய" னென விடுத்தவப் பனுவல்
கண்டுமுந் நீர்சூழ் காசினி யுணர்தரத்
தொண்டிற் புறத்தொண் டெனச்சொலக் கிடந்த
பெருந்தன் சாம்பா னெனத்தகு பெரியார்
பற்றே துமிலாப் பரமுத் தியுறச்
செய்தன் றீண்டத் தெருமந் தவருக்(கு)
ஐதின் முள்ளிச் செடிக்குமுத் தித்திரு
அருளினை யென்னுமிவ் வகிலம தாஅன் றுமற்
றிருவினை யொப்புமல பாகமொடு சத்தி
பதியாப் பதகனே னுயினு மம்ம
மதிதவழ் மாடக் கொற்றவன் குடிவயின்
மன்னிய சீர்மலி மாதவ
நின்னருட் பேறு நல்கனின் கடனே. (8)

நேரிசை வெண்பா

கடன்ஞாலத் துன்னைக் கயிலை வருவார்
மடனு மகல மதித்தே—கடனுகப்
போத முரைத்த பரிசுபுகல் கண்டாய்சு
வேதவனப் பெம்மான் விரைந்து. (9)

கலித்துறை

விரைய வெனக்கருள் செய்வது பாசஞ் சடமெனினெப்
பரிசெனை யுற்றது தானே வருங்கொல் பதியெனுநீ

புரிவது மென்னை புலையாடல் கண்டனை போதமிலேன்
தரணியி னென்செய்கிற் பேனருணந்திமெய்ச் சற்குருவே. (10)

விருத்தம்

குருவே யன்பர் மனத்தோங்கும் கோவே
கொற்றங் குடிமுதலை
அருளா னழைத்தாட் கொண்டருளு மரசே
நின்னை யல்லதொரு
பொருளா மாயோன் முதலானோர் பதமும்
புந்தி யிடைக்கருதேன்
தெருளே விளங்கச் செய்கண்டாய் சிவசம்
பந்த மாமணியே. (11)

நிலைமண்டில வாசிரியப்பா

மாமறை பேசு மேமமன் றத்துக்
காமரு விழவிற் கவின்கொடி யேறாது
சென்னியுந் தில்லைச் செழுமறை யவரும்
என்னிது வாங்கொலென் றேங்கிய போழ்தத்து
மஞ்சுகன் டுஞ்சு மலையரை யன்றருஉங்
கிஞ்சுக வாயுமை கேள்வன் பணிப்பான்
நின்னிடை யெய்த நீயன்று மொழிந்த
தன்னிக ரில்லதோர் தனிக்கொடிப் பாட்டிற்
"பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே" தென்புழித்
துன்னிய பொருளைத் துரிசற வுணர்த்துதி
மன்னுகொற் றங்குடி வாழ்பா வலனே. (12)

நேரிசை வெண்பா

பாச மகலாது பதியிற் கலவாது
மாசில் சமத்துழுத்தி வாய்க்குமோ—நேசமொடு

நீசொலவே வேண்டு நிலவுபுகழ் மெய்கண்ட
தேசிகனே யின்று தெரிந்து. (13)

கலித்துறை

இலைதளிர் பூவரும் பேபிஞ்சு காயென் றிவணியம்பு
நிலைகடந் தோரான் மறையந்த மாங்கனி நேருமந்தப்
புலமலி சாரமென் றோங்குசித் தாந்தப் பொதுவறுசீர்
நலமருள் காண்டுறை யூரரு ணந்திமெய்ந் நாவலனே. (14)

விருத்தம்

நாதாந்த மோன ஞான நலங்கிள ருஞ்சன் மார்க்கச்
சூதாந்தத் துவநா யேற்குத் தோமற வுணர்த்து கண்டாய்
வேதாந்த வீட்டின் மேய விமலசம் பந்த னென்னும்
போதாந்த வின்ப மென்றும் புணர்பெருங் கருணை
[வாழ்வே. (15)

நேரிசை யாசிரியப்பா

கருணை வடிவாய்க் காமரு புலியூர்
மருவிய பொதுவின் மலர்ப்பதங் காட்டி
அன்புரு வாமெம் மன்னைவிழி களிப்ப
இன்ப நடம்புரி யெந்தையது சீர்த்தியவ்
வேத புருடனும் வாதரா யணனும்
ஓதுதற் கரிதே யாகவித் தமிழ்நா
டுய்யக் கருதி யோங்கிய கருணையின்
ஐயிரு குற்றமு மகன்றுசொற் பொருள்வளங்
கெழீஇப் பல்வகைக் கிளரணி நலந்தழீஇ
வழாஅ மாண்பின் வண்டமி ழோர்முன்
உரைத்தனை கோயிற் புராணமென் றுருவ
திருத்தகு கொற்றங் குடிவாழ் தேசிக

கல்வியுங் கேள்வியுங் கண்டே யுணர்விலாப்
புல்லனே னியற்றிய செய்யுட்போ லியையும்
நல்லா தரவொடுங் கேட்டி
கல்லா தவனேன் கவறெறும் பொருட்டே. (16)

நேரிசை வெண்பா

பொருளாக வென்னைப் புகுந்தாண்டு கொண்டென்
இருளே துமித்த விறைவா—அருளாளா
மெய்கண்ட வாணுநின் மெய்யடியார் குற்றேவல்
செய்குவரே லெய்துந் திரு. (17)

கலித்துறை

திருத்துறை யூரரு ணந்திமெய்த் தேசிக செய்தவஞ்செய்
கருத்தொடு நின்றில னுண்கண் மொழிகயல் காமரமாம்
அருத்திகொண் மானுர் கலவியி னுழ்ந்திங் கறிவிழந்தேன்
நிருத்த னருணெறி நாடுவ னேகொலிந் நீணிலத்தே. (18)

விருத்தம்

நிலமுத லரமா ருறுங் கடந்தநன் னிலையைக் காட்டி
நலமுறு நின்ருட் கன்பர் நல்வினைக் கஞ்சேர்ந் துய்யப்
புலயனேற் குதவு கண்டாய் போதமெய்ஞ் ஞான [மென்னுந்
தலமலி சம்பந் தப்பேர் தாங்குமா மறையின் வாழ்வே, (19)

நேரிசை யாசிரியப்பா

மால்வரை யடக்கியம் மாநீ ரழுவம்
ஏல்வினி னங்கையி னெடுத்தருந் தியதவ
ஓங்கல்வான் பொதியி லோங்கி முருகருளாற்
பாங்குபெறு செந்தமிழ்ப் பரவைவரம் பறிந்தோன்

தன்யாற் றண்டமிழ் நாவின் றுணர்ந்த
ஒன்பா னொடுமூன் றுள்ளுறக் கிடந்த
ஒல்காப் பெருஞ்சீர்த் தொல்காப் பியன்முதல்
அல்காத் திருந்தவ ரருளிய வியல்வழிப்
பல்காப் பியங்களும் பரந்தன பார்மிசை
அன்ன தாக வவற்றுட் சீவகன்
என்னு மேந்த விருங்கதை யுலகில்
உச்சிமேற் புலவர்கொ ணச்சினார்க் கினியர்
வைச்ச வுரையொடு வழங்குதல் கண்டாங்(கு)
எச்சமில் சீர்த்தி யிலகிய வருண்மொழிப்
பொச்சமின் மந்திரப் புல்வ ரேறு
பூவிரி பொய்கையும் பொங்கரு முடுத்த
காவிரி சூழ்ந்தநன் னாடுகிழ வோனந்
தாயனை யானன பாயனை நோக்கி
ஆயவிப் பொய்ந்நூ லருங்கலை நூலோ
இம்மை மறுமைவீ டென்பன தருமோ
செம்மைசேர் பத்தித் திறந்தெரி நூலோ
அன்றெனக் காட்டி யரனரு ளடைந்த
நன்றமை தொண்டர் நலந்தெரிந் துணர்த்துந்
திருத்தொண் டத்தொகை தெய்வவந் தாதி
அருத்தியொடு பொருள்விரித் துணர்த்தவஞ் ஞான்றவ்
விருந்தொண்டர் சீர்த்தி யியல்பினின் விரித்துப்
பொருந்த நல்கெனப் புரவலன் வேண்டக்
காண்ட மிரண்டெனக் கவின்பெறு சருக்கம்
ஈண்டிரா றாக விலங்கிய தொண்டர்சீர்
பொற்பொது வாடற் சிற்பர னுதவிய
அற்புத முதன்மொழி யமைதர வகுத்த
தொண்டர்சீர் பரவுவார் தோமறு மாக்கதை
கண்டுந் தேனும் பாகுங் கைப்ப
"நவிறொறு நூனயம் போலு"மென்னும்

நவமலி முதுமொழிக் கிலக்கிய மாகக்
கொண்டுரை செய்த குருசில்
புண்டரி கத்தாள் போக்குமிரு வினையே. (20)

நேரிசை வெண்பா

வினைப்பி றவியெய்தி வேதனையாம் வேனைத்
தனைப்பரிவிற் காட்டுந் தலைவன்—எனைப்பிறவா
வண்ணந் தடுத்தாள வந்தருண்மெய் கண்டான்றன்
எண்ணந் தனையறியே னிங்கு. (21)

கலித்துறை

தனையுண ராச்சிறி யேன்றனை யாண்ட சதுரவிங்ஙன்
வினைசெய் பவனது செய்விப் பவன்வினை யும்பயனவ்
வினையெனு நான்மைசித் தாந்தத்தினன்றி விளம்பரிதாய்த்
தனிமறை சொல்வதென் னேயரு ணந்தித் தவமலையே.
(22)

விருத்தம்

தனையிழந் தார்நின் றேத்துஞ் சம்பந்த மணியே நாயேன்
உனையறி வான்வி ழைந்தா லுதவிடா தருளை யென்னை
மனைமக்க ளீட்ட நீயே வகுத்தாடல் கண்டாய் நின்றன்
நினைவிதென் றறியேன் மாயை நின்பரிக் கிரக மன்றே.
(23)

நேரிசை யாசிரியப்பா

மாயிரு ஞாலத்து வரம்பின்றிக் கிடந்த
மேய வாருயிர் விடையுகைத் தேறுஞ்
சோதி தன்னருட் டுணைபெற நோக்கிப்
போத முதனூல் புகன்றன னாகப்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணைச் சுவேதவனன்

கண்ணிய மற்றவன் காற்கம லந்தமீஇப்
பரமதந் தடைவிடை யாற்பரி கரித்துப்
பரபக் கமெனப் பகர்தரச் சுபக்கம்
அக்குரு மூலமுறையி னமைத்தனன் வழிநூல்
இக்குவ லயத்தோ ரினிதுவாழ் வெய்தப்
"பார்விரித்த நூலெலாம் பார்த்தே யறிய
ஓர்விருத்தப் பாதி போது" மெனவுரைக்குஞ்
சித்தி யென்னச் செப்பி நிறீஇயினன்
சித்தமா சறுத்த தேசிக ராயன்
மருணந் தியவகை மனத்தினோர்ந் தோங்கிய
அருணந்தி நாமத் தழகியோ னம்மமற்(று)
"இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூ" லென்னப்
புலனெறி வழக்கி னின்றோர் தொகுத்த
கிலையது நாடி நெறிமையிற் பிரகாசம்
அருட்பய னோடு மைதினுரை செய்தனை
இருண்மலங் கெடுப்ப வெம்மனோர்க் கிரங்கி
உருக்கொடு போந்த வுத்தம நாயேன்
சரியையிற் சரியாது கிரியை யியற்றாது
யோகு பயிலாதிங் கொண்மை நாடிலா
தொருசுவர்க் கந்தரு மோங்கறன் குயிற்றா
திருசுவர்க் கந்தரு மேந்திழை யார்மயற்
கடலாழ்ந் தேங்கினன் கடந்தைவயி னோங்கிய
அடிகளை யடைந்த வருட்பெருங் கொண்டால்
பத்தி பழுத்த பழவடி யார்கடஞ்
சித்தஞ் சிவமாத் திகழ்தரச் செய்தவின்
சீறடிப் புணையைச் சேரின்
மாறுபடு பிறவி வாரிகடப் பேனே. (24)

நேரிசை வெண்பா

வாக்கு மனங்கடந்த வஞ்ச வெளிகாட்டி
நீக்கமி லின்ப நிலைகாட்டும் — போக்கறுசீர்
வெண்ணைவாழ் மெய்கண்டான் வேண்டி மயக்கொழிப்ப
மண்ணிற் றருநூலின் மாண்பு. (25)

கலித்துறை

மாண்பமைந் தோங்கு மிருபா விருபது வாய்மலர்ந்த
சேண்படு சீர்த்தி யருணந்தி தேசிக சிற்பரயான்
காண்பதுங் கேட்பது மின்னவை யென்னக் கசிந்துருகிப்
பூண்பது நின்னடிக் கஞ்சமென் றேபரி பூரணனே. (26)

விருத்தம்

பூரண புராண நின்றன் பொன்னடி வியாப கத்துள்
நேரவு மெந்தா யெம்மை நிறுத்துவ தென்று கொல்லோ
காரண வியபொன் மாடங் கவின்செயுந் தென்க டந்தைப்
பூருறை வாழ்வே வேதத் துச்சியிற் பொருளா மொன்றே.
(27)

நிலைமண்டில வாசிரியப்பா

ஆண்ட கவுணியற் கந்தணர் கணமா
மாண்புபெறக் காட்டிய மதிதவழ் சடாடவிச்
தேசு லாவுதில் லைச்சிவ ஞனி
மாசத் திருவிழா மலிதரு போழ்தத்
தாரும் விழவிற் பேரு மியதிருத்
தேர்மண் டபத்திற் சேர்தரு மெண்மர்
கருவிற் பிறந்த திருவுடை யவர்தந்
திருமுன் மாயா வாதிமுன் னுயோர்
வாதஞ் செற்பம் விதண்டையென் றின்னன
கோதில் தருக்கநூல் கூறிய வண்ணம்

சங்கற்ப முரைப்பத் தகுமிரா கரணம்
இங்கற் புதமா வெடுத்து நிறீஇய
கொற்ற வன்குடிக் கோமளக் கொழுந்தைப்
பெற்றவர் பெறுவர் பெருப்பே றதுவே. (28)

நேரிசை வெண்பா

பேறெமக்கு நல்கும் பிரான்வெண்ணெ மெய்கண்டான்
கூறியநூ லுண்மை குறித்தோர்ந்தார் — மாறில்
சனன மரணச் சழக்கறுப்பார் வஞ்ச
வினைகளைவார் வேண்டுவதென் மேல். (29)

கலித்துறை

மேலான வாழ்வுபெற் றூரெவ ரேயெனின் மேதினிமேல்
வேலா வலைய நிகர்விழி யார்வெம் மயலகன்று
நூலா லுணர்வரு நின்னடிச் சீரை நுவல்பவரே
சேலார் வயற்றுறை யூரரு ணந்திமெய்த் தேசிகனே. (30)

விருத்தம்

மெய்யநின் னறிவி னென்று மேவிடா கருவி யெல்லாம்
ஐயவென் னறிவு மவ்வா றறிகிலா தறிதி யன்றே
துய்யதென் கடந்தை ஞானத் தோன்றலிங் கறிவ தென்ப
தையமின் றேழை யேனுக் கருணிரா லம்ப வாழ்வே. (31)

நேரிசை யாசிரியப்பா

நிராமயன் நிட்களன் நீலக் களத்துப்
பராபரன் செந்தாட் பதும மலர்க்கீழ்ச்
சகலரே மூன்றுந் தனியுயிர் வருக்கம்
தகவீடு பெறூஉந் தன்மையி னுணர்த்திய
போற்றிப் பஃறொடை புனைந்தனை பெருமநிற்
போற்றி போற்றி சயசய போற்றி

என்றரு மறையெலா மெடுத்தெடுத் தியம்பவும்
இன்றுநீ போற்றிய தியாரையோ வெந்தாய்
மன்ற வணைத்துயிர் மலமோ சனம்பெறீஇ
ஒன்றிய சிவப்பே றுற்றிடக் கருதியோ
ஐயிரு காரிய மடங்கவுந் திரட்டி
மையறு முண்மைநெறி வழங்கினை நாயேற்
கின்றுநீ யெளிவந் திரங்கியே கருணையின்
ஒன்றிரண் டென்று தோங்கிய முத்திப்
பரிசினை யுதவும் பான்மை
கருதுவது முண்டுகொல் கவலையது தெறவே. (32)

நேரிசை வெண்பா

கல்லாதே னிச்சைமுதற் கட்டுரைக்குஞ் சத்திவண்
எல்லா முடையே னிறைநீயு — நல்லவா
றுள்ளா யதனை யுவந்தாண்டு மெய்கண்ட
வள்ளால் பதந்தலைமேல் வை. (33)

கலித்துறை

பரிணித"ரேத்து மருணந்தி நாமத்தெம் பண்ணவவா
னிரவி மதிவிண் ணனிலம் முடலுயி ரின்னிசைபண்
மருவு முணர்வொளி கண்வெம் பரிதி மலர்மணமாப்
பிரிவரு மத்து வி தம்பெற வேண்டுவன் பெட்புறவே.(34)

விருத்தம்.

பெம்மான் பிறையார் சடிலத்தெம்
பெருமான் பெருங்கார் வரைபோலுங்
கைம்மா னுரியான் கருணைபெறுங்
கடந்தை வாழ்வார் களைகண்ணும்
எம்மா னின்னைக் கண்டவழி
யெய்திக கொற்றங் குடியார்தாம்

பொய்ம்மா யந்தா னீத்தமையென்
　　புகல்வா யொருமுத் தமிழ்ப்பேறே. (35)

நேரிசை ஆசிரியப்பா.

தயாமூல தன்மத் தனியுருக் கொண்ட
வியாபக நித்த விமல நிருமல
கடந்தைச் சம்பந்தன் காற்கழ லந்தழீஇ
அடைந்தருள் பெற்றகொற் றங்குடி யந்தண
எனுதையந் திரிபிங் கிரித்திட வேண்டி
வினுவெண் பாவினை விளம்பினை போலும்
　　அதுவே,
மெய்யுணர் வெய்திய மேன்மையை யாதலின்
ஐய வினுவென் றறையவும் படாதே
சித்தஞ் சிவமாச் சிறந்தனை யாதலின்
மெத்தறி யான்வினு வென்னவும் படாதே
அறிவே வடிவா யமர்ந்தனை யாதலின்
அறிந்தான் வினுவென் றறையவும் படாதே
அளவிலா வுயிர்கட் கருளும் பான்மையிற்
கொடைவினு வென்னக் குறிக்கவும் படாதே
யாவரை யுந்தனித் தேவல்கொள் பான்மையின்
ஏவல் வினுவென் றிசைக்கவும் படாதே
மற்றத னுண்மையை வகுத்தெமக் கருளல்
உற்றநின் பேரருட் குறுநியா மன்றே
கஞ்சனு மாலுமுட் கசிந்துநின் றேத்துறூஉம்
விஞ்சிய சீர்த்தி வியன்கம லையினின்
மஞ்சன குழலொரு மடவரல் பொருட்டாற்
செஞ்சொற் புலவன் றிருவுள மகிழ்தரத்
தஞ்சென நீயே தனித்தூ தேகநின்
நெஞ்சினை விடுத்த நெறிமையு மன்றோ
　　அதனுல்,
இன்னுப் பிறவி யெழுவகை யெடுத்துப்

பன்னு ணவியும் பதகனே னின்றன்
சந்நிதி யடையத் தருபரி பாகம்
இன்மையே னெனினு மிருந்தவத் தொண்டர்
கண்ட பசியிற் காதலித் தன்னோர்
உண்ட பரிகல முண்ணுமா தரவிற்
கனமிலா ஞமலியே யாக
இனமலி பிறவி யீதியெற் குவந்தே. (36)

நேரிசை வெண்பா

உனையுணர மாட்டா தொருவந்த நின்றிங்
கெனைமறைத்த வெய்ய இருளென்றோ — தனைநிகராம்
வெண்ணைவாழ் மெய்ய விடியும் விளக்கொளி
கண்ணையக லாய்பின் கழறு. (37)

கலித்துறை

பின்னே துரைப்பனிப் பேதையிற் பேதை
பெரிதுமெங்கள்
மன்னே யருணந்தி நாம வரோதய
மாண்புகொளும்
பொன்னேயப் பொன்னின் சுடரேயென் றேத்தப்
புலன்கடந்த
மன்னேய மெற்கருள் தன்னே ரிலாத
மறைப்பயனே. (38)

விருத்தம்

மறைஞான சம்பந்த மாமணியே
யெற்கின்று மகிழ்வி ஞடின்
அறியாமை தானேதிங் கறிவேது
கினையன்றி யறைதி கண்டாய்

பொறையான்மிக் குயர்ந்தோர்தம் புகலிடமே
மெய்ஞ்ஞானப் பொறையே யெங்கள்
இறையேயெண் குணக்கடலே யிருடிமிப்ப
எழுந்தவறத் துறையின் வாழ்வே. (39)

நேரிசை யாசிரியப்பா

அறத்துறை பொழுகி யரும்பெறல் வீடு
கறைக்கண்ட னெந்தை கீழெலன வழிபடீஇ
மெய்ம்மைநெறி சான்ற விழுத்தகு பெரியோர்
எம்மையா ளுடைய விறையவ ரின்பான்
முறைமையி னெய்தி முத்தமிழ்க் கடலின்
துறையாழ்ந் தமையிற் றுயர்ந்தன மெமக்குச்
சிலவோர் துணைமையிற் றிறம்பாப் பொய்ம்மைதீர்
நிலைகாண் பதுவே நீயருள் கென்ன
அன்னம் பாலிக்கு மணிபொழிற் றில்லை
மன்னைப் பராவிய மாண்புசெறி கொற்றங்
குடிவா ழுமாபதிக் கோதில் குருராய
அடைவினி னவர்கட் கன்பர்மொழி வாசகம்
வள்ளுவர் குறளவர் வாய்மை நூற்குத்
தெள்ளு பரிமே லழகர் செய்தவுரை
ஒல்காப் பெருஞ்சீர்த் தொல்காப் பியமே
கருத்தொண் டகற்றுந் திருத்தொண்டர் காதை
அத்தனைக் காட்டிய வித்தகச் சித்தி
எனவுரை செய்தனை யென்பநின்
மனநனி யடைத்தமை மறக்கிலென் றிருவே. (40)

திருச்சிற்றம்பலம்

சந்தானகுரவர் நான்மணி மாலை முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்டதேவர் மெல்லடி வாழ்க.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.

6 FEB 1955
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

செய்யுள் முதற்குறிப் பகராதி.

(செய்யுள் எண்)

அறத்துறை	40	பரிணிதரேத்து	34
ஆண்டகவுணிய	28	பாசமகலாது	13
இலைதளிர்	14	பின்னேதுரைப்ப	38
உனையுணர	37	பூரணபுராண	27
கடன்ஞால	9	பெம்மான்பிறை	35
கதியென்றடைகில	2	பேறெமக்கு	29
கருணை வடிவாய்	16	பொருளாக	17
கல்லாதே	33	மணிமன்று	8
கல்லானிழன்மலை	காப்பு	மறைஞான	39
குருவேயன்பர்	11	மாண்பமைந்	26
சாதலும் பிறந்த	4	மாதவர்வாழ்	3
சிவஞானபோத	5	மாமறைபேசு	12
தயாமூல	36	மாயிருஞாலத்து	24
தனையிழந்தார்	23	மால்வரை	20
தனையுணரச்	22	மெய்யநின்னறிவி	31
திருத்துறையூ	18	மேலான வாழ்வு	30
திருவந்த ஞானஞ்	1	வாக்குமன ங்கடந்த	25
நாதாந்தமோன	15	விரையவெனக்	10
நித்தநின்று	7	வினைப்பிறவி	21
நிராமயன்	32	வேண்டுவதுண்டு	6
நிலமுதலா	19		

6 FEB 1955
MADRAS

உ
சிவமயம்.

சந்தானகுரவர் நான்மணிமாலை
குறிப்புரை முதலியன.

காப்பு — கல்லால் நிழல் — அருள்வடிவாகிய கல்லால் நிழலின் கண்ணே எழுந்தருளியிருந்து. மலைவு இல்லார் — நந்திபெருமானுக்கு இந்நூலால் மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர். கனிந்து உதவும் பொல்லார் — மேன்மேலும் அருள் கூர்ந்து பெற்றருளிய பொல்லாத பிள்ளையாருடைய. அடி இணையை — ஞானசத்தி கிரியாசத்தி என்னும் திருவடிகள் இரண்டையும் என்றபடி.

"கல்லாநிழல்மலை — வில்லாரருளிய
பொல்லாரிணைமலர் — நல்லார் புனைவரே" என்பது

சிவஞானபோதக் கடவுள் வணக்கம். இக்காப்பு அவ் வணக்கச் செய்யுளை அடியொற்றிச் செய்யப்பட்டுள்ளமை காண்க. இவ்வாதீனத்துத் திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் சிவஞானபோதச் சிற்றுரையிலே கடவுள் வணக்கத்துக்குச் செய்தருளிய உரை இங்குச் சிந்தித்தற்குரியது.

இனி, மேலே எடுத்துக்காட்டிய கடவுள் வணக்கத்துக்குப் பழையவுரை ஒன்று வருமாறு :— அது-

"கல்லால் நிழல்என்பது கயிலாயத்திலே தட்சிணாமூர்த்தமாக எழுந்தருளியிருந்து அகத்தியர், புலத்தியர், சனகர், சனற்குமாரர் இவர்கள் நால்வர்க்கும் தன்மார்த்த காமமோட்சங்களும், பிரமா விட்டுணுவாதிகளுக்கு வேதமும் அனுக்கிரகம்

பண்ணிச் சிட்டபரிபாலனமும், மலை வில்லார் அருளிய என்பது மகாமேருவை வில்லாகவளைத்துத் திரிபுராதிகள் முதலான துட்ட நிக்கிரகமும் இயற்றி உலகத்தை இரட்சித்தருளிய பரம சிவனுடைய புத்திரராகிய, பொல்லார் இணைமலர் என்பது — திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருக்கிற சுயம்புவாகிய பொல்லாத விநாயகருடைய இரண்டு சீபாதகமலங்களையும், நல்லார் புனைவரே என்பது — மலந்தீர்ந்து சிவஞானத்தைப் பொருந்தின ஞாதாக்கள் சிரசின்மேலே சூடாநிற்பர்கள்: யாமும் அது செய்வோம் என்பது கருத்து.

மேலே காட்டிய 'பொல்லார் இணைமலர்' என்பது பாண்டிப்பெருமாள் என்பவரால் 'பொல்லார் இணையடி என்று பாடம் கொள்ளப்பட்டு அதற்கியையப் 'பொல்லாத பிள்ளையாரென்னும் திருநாமத்தையுடைய மூத்த நாயனுருடைய இரண்டு சீபாதங்களையும்' எனப் பொருள் செய்யப் பட்டிருப்பது காண்க. இந்நான்மணிமாலை செய்த ஆசிரியரும் அப்பாடத்தையே இக்காப்புச்செய்யுளிற் கொண்டிருக்கிறார்: சொல் ஆர் அணி மாலை ஆ(க) — பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச்சொற்களும் பொருந்திய அலங்காரமுடைய மாலையாக என்க. அணி மாலை என்பது பொருளணி சொல்லணிகளின் வரிசை. நான்மணி — நான்கு மணிகள்: முத்து பவளம் மரகதம் மாணிக்கம் என்பன. நான்மணிமாலை சொல்ல — நான்மணிமாலை என்னும இப்பிரபந்தத்தை இயற்ற. நான்மணிமாலை சொல்ல சொல், ஆர் அணி, மாலையா(க) வரும் என்க.

1. திருவந்தஞானம் — திருஞானம். திரு — முத்திதிரு. 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்' என்பது அது.

2. கதி — பற்றுக்கோடு. காசினி — பூமி. மதி — சந்திரன். துறையூர் — திருத்துறையூர் என்னும் தலம்.

பெண்ணையாற்றின் வடகரையில் உள்ளது: ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகம் பெற்றது.

3. கடந்தை — திருப்பெண்ணாடகம். ஏதம் — பிறவித் துன்பம் இன்பம்—சிவஞான இன்பம்: சிவானந்தம் எங்கள் ஆதி — சிவபெருமான்.

5. பவஞானம் — பிறப்பிறப்புக்களிற் செலுத்தும் பசு பாசஞானங்கள். புனிதமெனும்அத்துவிதம்—சுத்தாத்துவிதம்.

6. ஈண்டுவது — வந்து பொருந்துவது.

7. நித்த — விளி. நேயம் — காட்சிப்பொருள். மணி மன்றுள் — அழகிய சிற்றம்பலத்தில். மரகதவல்லி — பச்சை நிறம் பொருந்திய சிவகாமியம்மையார். இதனை,

'ஓர் — பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப விருமுனிவர் பணிந்து போற்றக் — கொங்கேந்து மணி மன்றுட் குனித்தரு ளும் பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்''

என்ற பாடற் பகுதியிற் காண்க

8. பரச—துதிக்க. கோமளம்—அழகு. அப்பனுவல்— அந்தப்பாட்டு. அ-பண்டறிசுட்டு.

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைத் தீட்டுப் — படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் திக்கைசெய்து
முத்தி கொடுத்தன் முறை" என்பது அத்திருப்பாட்டு.

முந்நீர் — கடல். காசினி — நிலவுலகம். தொண்டு, அகத் தொண்டு புறத்தொண்டு என இருவகைப்படும். அகத் தொண்டு — உள்ளிடத்தில் செய்யும் தொண்டு. புறத்

தொண்டு — புறம்பேயிருந்து செய்யும் தொண்டு. "அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித்தொழின்மைபூண்டு" என ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் திருநந்திதேவரைத்துதிக்கின்றமை காண்க. தெருமந்தவர் — மனைவி சுற்றத்தார் அயலவர் அரசர் முதலாயினோர். தெருமரல் — மனச்சுழற்சி. "அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ்சுழற்சி" என்பது தொல்காப்பியம் ஐதின் — அழகிதாக. அகிலம் — உலகம். இருவினையொப்பு மலபரிபாகம்சத்திநிபாதம் முதலியவற்றைச் சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரம் முதலதிகரணத்துக்கு ஸ்ரீமாதவச்சிவஞான சுவாமிகள் அருளிய பாடியம் நோக்கியுணர்க.

9 கடல் ஞாலம்—கடலாற் சூழப்பட்ட பூமி. மடன் — அறியாமை கடனாக — கடமையாக சுவேதவனப் பெம்மான் — திருவெண்காடர் என்னும் பிள்ளைத்திருநாமமுடைய சுவாமியே; விளி.

10. பாசம் சடமாயின் அது என்னைவந்து பொருந்துவ தெவ்வாறு? தானே வந்து பொருந்துவதாயின் பதியாகிய தேவரீர் செய்வது யாது? புலையாடல் — இழிமையையுடைய் பிறப்பிறப்புக்கள். போதம் — அறிவு. தரணி — பூமி.

பசுபாசங்கள் சுதந்தரம் உடையன அல்ல. ஆன்மா சேதனன் ஆயினும் அறிவித்தாலன்றி அறியான். பாசம் சடம் ஆகலின் அசைவித்தாலன்றி அசையாது. ஆன்மாவுக்குத் தனுகரணங்களை ஆக்கிக் கொள்ளவும், பாசத்துக்குத் தனு கரணமாகத் திரிந்து ஆன்மாவை வந்து அடையவும் வகை யில்லை. ஆன்மாவுக்குத் தனுகரணங்களை முதல்வன் கூட்டாத போது அதன் ஞானக் கிரியைகள் நிகழமாட்டா. அவன் காரியப்படுத்தாதபோது பாசமும் தனுகரணங்களாகப் பரிண மிக்காது இப்பசுபாசங்களை அறிவித்தலையும் அசைவித்தலை யுமே பதியாகிய சிவபிரானது செயல் எனக் கூறப்படும். அன்றியும், ஒருவர் அறிவியாமல் தனக்கென ஓர் அறிவில்லாத

ஆன்மா அதீதப்பட்டுக்கிடக்கும் அவதாரத்துத் தானாகத் தத்துவங்களைக்கூட்டி அறியமாட்டான், தனக்கென ஒரு காலத்திலும் அறிவற்றுச் சடமாயிருக்கப்பட்ட இந்திரியங்கள் அதீதப்பட்டுக் கிடக்கிற ஆன்மாவை அறிந்து கூடமாட்டா. அங்ஙனமாயினும், தனக்கென ஓரறிவில்லாத ஆன்மா பஞ்ச வன்னங்களையடுத்த படிகம்போலத் தத்துவங்களின்சொரூபமே தனக்கு வடிவாய் நிற்பன். இங்ஙனம் கூடினதின் தன்மையாய் நிற்கிறவனாகையால் - தற்சுதந்திரமுள்ளவனல்ல. ஆனால், இவை தன்னிற்கூடி அறிந்தபடி எவ்வாறென்னில், தனக்கு ஒருவர் அறிவியாமல்தானே சர்வத்தையும் அறியத்தக்க முதல்வனாலே ஆன்மா சர்வத்தையும் அறிந்து சீவியாநிற்பன். ஆன்மா சர்வத்தையும் அறிவன் என்றது அந்தக்கரணங்களோடும் கூடிச் சத்தாதிகளை அறிவன் என்றபடி. இதனால் ஆன்மாவுக்கு ஒரு யோக்கியதையுமில்லை எனின், ஆன்மா அறிவித்தால் அறிந்துகொள்ளும் தன்மையுடையது ஆகலின் அது கூடாது. அன்றியும் விதிவிலக்கு ரூபமான வேதசிவாகமங்களை முதல்வன் அருளிச் செய்தமை என்னை? மிருகாதிகள் நடந்துகொள்ளவேண்டிய முறைமைக்கன்றோ? அன்றே, ஆகலின், ஆன்மா வேதாகமங்களில் விதித்தவழிவிட்டு விலக்கு வழியிற் சென்றால் அக்குற்றம் அவ்வான்மாவைச் சேர்ந்ததே. ஆன்மா செய்யும் செயலும் முதல்வன் செயல் என்றாற் பாதகமாக முடியும் என்றபடி.

11. கொற்றங்குடி முதல் — உமாபதிசிவம். அருளான் அழைத்தது — 'பட்டகட்டையிற் பகற்குருடேகுதல் பாரீர்' என்ற சொல்லின்வழியீர்த்தது. புந்தி — புத்தி. தெருள் — தெளிவு

12 ஏமமன்றம் — பொன்மன்று. காமரு — அழகிய. விழவு — ஆனிமாதத்துவிழா. சென்னி — சோழன். மஞ்சு

கண்துஞ்சும் — மேகங்கள்வந்து படியும். இஞ்சுகம் — முண் முருக்கு. கொடிப்பாட்டு — கொடிக்கவி.

"பொருளாம் பொருளேது போதேது கண்ணே — திருளாம் வெளியே திரவேது" என்பது கொடிக்கவி இரண்டாந் திருப்பாட்டு. பொருளாம் பொருளேது — பொருளிலே அழியாத பொருளேது, போதேது — கிரணமாகிய சத்தியேது, கண்ணேது — கண்போல ஆன்மாவேது, இருள் ஆம் வெளியேது இரவு ஏது — அஞ்ஞானம் ஆகிய சகல கேவலந்தானேது............(எ-று.)"

"இனி, அழியாதபொருள் ஏதுஎன்னில் என்றது அகண்ட பரிபூரணமாய் உயிர்க்குயிராய் ஆனந்தரூபமாய் இருக்கிறது தற்சிவம். இதனை 'பலகலை யாகமவேதம் யாவையினும்" என்ற சிவப்பிரகாசத் திருவிருத்தத்தானுணர்க. கிரணவொப்பாகியசத்திதான் ஏதென்னில்,சத்தியென்றுதனியேயொரு முதலல்ல; சூரியனுங்கிரணமும்போல, மரமுங்காழ்ப்பும்போலத் தடையற்ற ஞானமாயிருக்கும். இதற்கு உதாரணம் சிவப்பிரகாசம் - எட்டாஞ்சூத்திரத்தில் "இரவிகாட்டும் வளரொளி போன்மகிழ்ந்தே" எனவும், சிவஞானசித்தியாரில் "சத்திதன் வடிவே தென்னிற்றடையிலா ஞானமாகும்" எனவும், "வரும் வடிவெல்லாஞ்சத்திசத்திதான் மரமுங்காழ்ப்பும் - இருமையும் போல மன்னிச்சிவத்தினோடிசைந்து நிற்கும்" எனவும் வருவது கண்டுகொள்க. கண்ணொப்பாகிய ஆன்மா ஏதென்னில், அதுவதுவாய் அடுத்ததன் தன்மையாய்வசிப்பைப்பற்றினவியாபகமாய்க் கண் படிகம் ஆகாயம்போல ஒப்புயுடையதாய் அக்கினியைப்போல ஒன்றைப்பற்றி நிற்கிறதல்லாமல் தனித்து நிற்கிற முதலல்லவாய் அருவமும் உருவமும் ரூபாரூபமுமல்லவாய்ப் பூவிற்கந்தம்போன்றதாயிருக்கிறது ஆன்மா. இதற்கு உதாரணம்: சிவஞானபோதம் — "மாயாதனு விளக்காய் மற்றுள்ளம்" எனவும், சிவப்பிரகாசம்—"ஓரிடத்

திருத்தல்" எனவும், சித்தியார் — "அசிந்தருவியாபகம்போல் வியாபகமருவமன்ருய், வசித்திடவரும் வியாபியெனும் வழக்குடையனுகி" எனவும், திருவருட்பயன் — "இருளிலிருளாகி யெல்லிடத்திலெல்லாம் — பொருள்களிலதோ புவி" எனவும் வருவன காண்க சித்தியார் — பரபக்கம் — 'அங்கியானது தானுமொன்றை யணைந்துநின்று திகழ்ந்திடும், பங்கியாதுயிர் தானுமிப்படிப் பற்றியல்லது நின்றிடா" எனவும், சிவஞானபோதம் — "தோன்றல் மலர்மணம்போற்றெருக்கு" எனவும், வரும் ஏதுக்களைக்கொண்டு கண்டுகொள்க. அஞ்ஞானமாகிய கேவலசகலந்தானேது என்னில்—அதிற் கேவலமாவது தத்துவங்களோடே பொருந்தாமல் போகத்திற் கொள்கையில்லாதவனுய் அறிவில்லாதவனுய் அந்தகாரத்திலே அலர விழித்த விழி போன்றதாய் மலமொன்றுமேயாய் அதுவா யந்தமலமாய் விட்டு நீங்குமுறைமையில்லாததாய் இருப்பது ஆம். இதற்கு சிவப்பிரகாசம் — "ஓங்கிவரும் பலவுயிர்கள்' எனவும், "அறிவிலன மூர்த்தனித்தன் அராகாதி குணங்களோடும்" எனவும் வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க. சகலமாவது ஏதென்னில் — சகலத்துக்கு வெளியென்றும் திபமென்றும் பெயர். வெளிதிபமென்றிருக்கிற சகலத்தை அஞ்ஞானமென்று சொல்லுவானேன் என்னில், சகலத்திலே அஞ்ஞானமாகிய மாயாபோகத்தைப் புசிப்பிக்குமல்லாமல் ஞானத்தை உணர்த்தாது. ஞானம் சுத்தத்திலேயல்லாமல் உண்டாகாது. ஆகையால் சகலமும் போகத்தைப் புசிப்பிக்கிற நிமித்தமாகக் கேவலத்துக்கு இது திபமென்றும் வெளியென்றும் சொன்னதல்லாமல் இதுவும் அஞ்ஞானமே, தப்பாது. இதற்கு சிவப்பிரகாசம் — "புகலு மலம் ஒழித்தற்கு" எனவும், இருபா இருபஃதில் — "இருள் வெளியாக்குமருளினையறுத்து" எனவும் வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க" என்பது அப்பகுதியினுரை. இந்தப் பகுதி நன்குசிந்தித்தறியத்தக்கது. துன்னிய — பொருந்திய. துரிசு அற — குற்றம் நீங்க.

14. "..............
பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண் டுய்கெனத்
தடிலை யென்னுந் தடவயல் காப்பண
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஓரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே..............." என்பது

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பண்டார மும்மணிக்கோவை.

இலை, தளிர், அரும்பு, பூ, பிஞ்சு, காய் என்னும் ஆறு உறுப்புக்களும் இங்கே வைதிக சைவசமயத்தின் பிரிவுகளைச் சார்ந்த மக்கள் தத்தம் அறிவு நிலைகளுக்கேற்றவாறு பெறும் பயன்களைக் குறிக்கின்றன. இதனை,

" புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம

அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்

சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றல் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச்சேர்வர்"

என்பது சிவஞானசித்தியார் சுபக்கத் திருவிருத்தம். இதற்கு,

"மேற்கூறிய அரும்பருவமடைதல், இங்ஙனம் சோபான முறையாற் பல பிறவிகளினுமேற்பட்டு நிகழ்ந்து முற்றுப் பெறுவதன்றி ஒருங்கே ஒருகாலத்து முற்றுப்பெறுவதன்று." என அருளிய ஸ்ரீமாதவச்சிவஞான யோகிகள் பொழிப்புரை சிந்திக்கத்தக்கது.

புறச்சமயநெறிநிற்றல் முதலியன எல்லாம் சைவத் திறத்து அடைதற்குச் சோபானமுறையால் வாயிலாமாறும் அவற்றது பயன் பெறுமாறும் உணர்க. மறை அந்தம் — வேதாந்தம்; அவை உபநிடதம். மறை அந்தம் கனி ஆம் — வேதாந்தம் கனி ஆம் என்க. சித்தாந்தப் பொதுவறு சீர்நலம் சாரம்: அந்தச்சாரத்தைத் தமக்கருளவேண்டுகின்றார் இவ் வாசிரியர். சித்தாந்தசைவம் சைவக்கூற்றின் முடிபு. இச் சைவசித்தாந்தத்திலும் சரியை கிரியாயோகங்களை அநுட் டித்து முற்றிய பின்னரே ஞானத்தைப் பெறுதல்கூடும். ஞானத்தைப்பெற்று அதனால் சிவபிரான் திருவடிகளைச் சேர்வர் என்க

சைவசித்தாந்தத்திற் கூறிய சரியை, கிரியை, யோக, ஞானங்கள் நான்கும் சோபான முறையிலே அரும்பு, மலர், காய், கனிகளைப்போல ஒன்றற்கொன்று ஏதுவாகவிளங்குவது. சிவராஜயோகிகளாகிய ஸ்ரீ தாயுமானவசுவாமிகளும் இதனை "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்–அரும்பு மலர் காய்கனிபோ லன்றோ பராபரமே" என்றருளியமை காண்க. இனி,

"ஆன்மாக்கள் அநாதியாய் உள்ளவை. அவை எண்ணில்லாதன. அவைகளுக்கு அறிவு இச்சை செயல்கள் இயல்பாகவே உள்ளன அவைகளை அநாதியே பலதிறப்படத் தடை செய்திருப்பது ஆணவம். அவைகள் மாயையில் வசிக்கின்றன. கடவுள் கைம்மாறற்ற பேரருளால் ஆன்மாக்களின் பந்தத்தை நீக்கச் சிருட்டியாதி ஐந்தொழில் இயற்றுகின்றனர். அவர் மாயையினின்றும் தநு கரணாதிகளைத் தமது சத்தியால் தோற்றுவித்து ஆன்மாக்களுக்கு உதவுகின்றார் அவைகளின் உதவியால் உயிர்களுக்கு அறிவு இச்சை செயல்கள் முறை முறையாக விளங்கப்பெறும். அங்ஙனம் விளங்கப்பெறுகின்ற போது உயிர்கள் பல இன்ப நிலைகளை அடைகின்றன. அவைகளை அடைவதற்கு ஏற்ற வழிகளே சமயங்கள். புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள், அகச்சமயங்கள் எனச் சமயங்கள் நால்வகைப்படும்".

"புறப்புறச்சமயங்கள் வேதசிவாகமங்களாகிய முதனூல்களைப் பிரமாணமாகக் கொள்ளா. புறச்சமயங்கள் வேதத்தை உடம்பட்டுச் சிவாகமங்களைப் பிரமாணமாகக் கொள்ளா. அகப்புறச் சமயங்கள் வேதசிவாகமங்களை உடம்பட்டு அவற்றோடு அவைகளுக்கு விரோதமான பசுநூல்களையும் பிரமாணமாகக் கொள்ளும். அகச்சமயங்கள் வேதசிவாகமங்களையே முக்கிய பிரமாணமாகக்கொண்டு முத்திநிலைகளில் மாறுபடும்".

முக்கூற்றுப் புறச்சமயங்களாவன:

உலோகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம் என்னும் ஆறும் புறப்புறச் சமயங்கள். ஏசு மதம், மகம்மதிய மதம் முதலிய எல்லாம் புறப் புறச்சமயங்களிலே அடங்கும். தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்னும் ஆறும் புறச்சமயங்கள். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத

சைவம் என்னும் ஆறும் அகப்புறச்சமயங்களாம். இனி, பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவிதவாத சைவம் என்னும் ஆறும் அகச்சமயங்களாம். மேலே கூறப்பட்ட புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் நான்கு வகைப்பட்ட சமயங்களுக்கும் வேருயது சுத்த சைவமாம்.

சுத்த சைவமாவது :

சித்தாந்த சைவத்தை யொப்பப் பதி பசு பாசங்களின் இயல்புகளை உடம்பட்டு முத்தியில் உயிரானது சிவபரம் பொருளினிடத்து ஐக்கியமுற்று ஒரு பயனும் ஓர் ஆனந்தமு மின்றி நிற்கும் என்பதாம். இதற்கு அதீதமானது சித்தாந்த சைவம்.

15. நாதாந்த மோன ஞானம் — நாததத்துவங் கடந்து நிற்கும் மௌன ஞானம். "மோன மென்பது ஞான வரம்பு" என்பது ஔவையார் வாக்கு. சன்மார்க்கம் — சத்மார்க்கம் — ஞான நெறி தோம் அற — குற்றமில்லாமல். வேதாந்த வீடு—வேத முடிவாகிய உபநிடதங்களிற்கூறப்படும் வீடுபேறு.

16 அன்னை — சிவகாமியம்மையார். இன்பநடம் — ஆனந்த தாண்டவம். வேத புருடன்—வேதமாகிய புருஷன். வாதராயணன் — வியாச முனிவர் கெழீஇ — பொருந்தி. ஒருவ — ஒப்பற்றவரே. ஆதரவொடு — பற்றுதலுடன். கவல் கெறும் பொருட்டு — கவலை நீங்கும் பொருட்டாக.

18 உண்கண் — மையுண்ட கண்கள். காமரம் — ஒரு வகைப்பண். கண் கயல், மொழி காமரமாம் அருத்தி — விருப்பம். மாஞர் — மானையொத்த பெண்கள். நிருத்தன்— சிவபிரான்.

19. நிலம் முதல் ஆறு து — பிருதிவி தத்துவ முதல் முப்பத்தாறு தத்துவங்கள்.

20. மால் வரை — பெரிய விந்திய மலை. மா நீர் அழுவம் — மிக்க நீரையுடைய கடல். ஏல்வினில் — பொருந்து மாற்றால். தவ — விளி. ஓங்கல் — மலை வான் பொதியில்— சிறந்த பொதியில் மலையினிடத்து. செந்தமிழ்ப் பரவை — செந்தமிழ் மொழியாகிய கடல். வரம்பு—எல்லை தாவின்று— குற்றமின்றி ஒன்பானொடு மூன்று உள்ளுறக் கிடந்த — பன்னிருவர் எனக் கருதும்படி பொருந்திய. அல்கா — சுருங் காத. அகத்திய முனிவர் மாணவர் பன்னிருவர் என்பது —

"தொல்காப் பியனதங் கோட்டு முனிதுரா லிங்கமுனி
மல்குசெம் பூட்சேஎய்வை யாபிகன் வாய்ப்பியன் வாமனனூல்
வல்பனம் பாரன் கழாரம்பன் மாட்சி யவிநயனே
வெல்காக்கை பாடினி யன்னுயர் நத்தத்தன் மேலவரே"

என்னும் கட்டளைக் கலித்துறையான் உணரத்தகும்

22. செய்வினை — நல்வினை தீவினைகள். செய்வான் — ஆன்மா அதன் பயன் — இன்பதுன்பங்கள். சேர்ப்பான்— சிவபிரான்.

"செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையா னான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற்பொருள்சிவனென் றருளாலேயுணர்ந்தறிந்தார்'

என்பது சாக்கியநாயனார் புராணம் — 5 செய்யுள்.

பெறுவான், பேறு, பேற்றுக்கேது, பேறளிப்பான் என நான்கு பொருள்கள் என்க.

24. மாஇருஞாலத்து — மிகப் பெரிய நிலவுலகத்து. வரம்பு இன்றி — எல்லையில்லாமல். மேய — பொருந்திய

ஆர் உயிர் — அரிய உயிர்த் தொகைகள். விடை உகைத்து— இடப வாகனத்தைச் செலுத்தி. அருட்டுணை — திருவடிகள். போதமுதல் நூல் — சிவஞானபோதம் ஆகிய முதனூல். கண்ணிய — கருதி. பரமதம் — பிறசமயங்கள்.

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதிபோ தும்" என்பது காண்க.

"பாதி விருத்தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை—
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ"

தாயுமான.

"சித்திக்குமேல் நூலில்லை சிவத்துக்குமேல் தெய்வமில்லை" என்பது பழமொழி. சித்த மாசு — மனக் குற்றம்: ஆணவ மலம். மருள் நந்திய வகை—அஞ்ஞான மயக்கம் அழியுமாறு. இருவர் நூல் — முதனூலாசிரியர், வழிநூலாசிரியர் ஆகிய இருவரும் செய்தருளிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார் என்பன. பிரகாசம் — சிவப்பிரகாசம்: இதுபுடைநூல். அருட் பயன் — திருவருட் பயன் என்னும் நூல். ஐதின் — அழகிதாக. இருள் மலம் — ஆணவ மலம்.

"சரியையிற் சரியாது............ஒண்மை நாடகிலாது" இதனை,

"சரியையிற் சரியாது கிரியையிற் றளராது
யோகத் துணங்கா தொண்பொரு ளுக்காது"

என்பர் குமரகுருபர சுவாமிகள்.

ஒண்மை — ஒளி, ஞானம். ஒரு சுவர்க்கம் — ஒப்பற்ற தேவருலக இன்பம் ஓங்கு அறன் — சிறந்த தருமங்கள். இருசுவர்க்கம்—இரண்டு நகில்கள். ஏந்திழையார்—பெண்கள். மயற் கடல் — காம மயக்கமாகிய கடல். ஆழ்ந்து — மூழ்கி. கடந்தைவயின் — திருப்பெண்ணாகடத்து. அடிகள்—சுவாமி.

களாகிய மறைஞான சம்பந்த சிவாசாரியர். கொண்டால் விடுஎி, கொண்டல் — மேகம். புணை — தெப்பம். மாறுபடு— ஒன்றற்கொன்று வேறுபட்ட. பிறவி வாரி — பிறவிக் கடல்.

25. சிவஞானபோத நூலின் சிறப்புக் கூறியபடி.

27. பூரண — எங்கும் நிறைந்தவரே. புராண — பழமையானவரே. கார் அணவிய — மேகங்கள் பொருந்திய. வேதத்து உச்சி — வேதங்களின் முடிவாகிய உபநிடதங்கள்.

28. ஆண்ட — ஆட்கொண்டருளிய. கவுணியற்கு — கௌணிய கோத்திரத்தில் அவதரித்த ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு: ஆளுடைய பிள்ளையார் அவராகலின். அந்தணர் — தில்லை வாழந்தணர்கள். கணமா(க) — சிவ கணங்களாக. சடாடவி — சடைக்காடு. தேசு — ஒளி. தில்லைச் சிவன் — தில்லையில் நடம் செய்தருளுகின்ற கூத்தப் பிரான். பேறு — பயன். மாயாவாதி முன் ஆயோர்—மாயாவாதி முதலிய சமய வாதிகள் அற்புதம் — ஆச்சரியம். கோமளக்கொழுந்து — அழகின் முடிவு.

29. பேறு — பயன்: சிவப்பேறு. கூறிய நூல் — சிவஞானபோதம். குறித்து ஓர்ந்தோர் — சிந்தித்துத் தெளிந்த பெரியோர். சழக்கு — குற்றம். வஞ்ச வினை — வஞ்சகத் தன்மைகளையுடைய நல்வினை தீவினைகள்.

30. மேதினி—பூமி. வேலாவலயம்—கடல். பெண்கள் காரணமாக வரும் மயக்கத்தினீங்கி ஞான நூல்களால் உணர்தற்கு அருமையான தேவரீருடைய திருவடிச் சிறப்புக்களைக் கூறுபவரே மேலான வாழ்வு பெற்றோராவர் என்றபடி.

32. நிராமயன் — நோயற்றவன். ஆமயம் — நோய் நிட்களன் — அருபமானவன். நிலக் களம் — நீலகண்டம். சகலர் — மும்மலத்தோடு கூடிய உயிர்கள். எந்தாய் —

எமது பிதாவே: எமக்குத் தாயானவனே எனலுமாம். ஐயிரு காரியம் — தச காரியம். அவை: தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் என்பன. ஒன்றிரண்டென்றோது ஓங்கிய முத்தி — இரண்டறக்கலத்தலாகிய சித்தாந்தமுத்தி.

34 இரவிமதி—சூரியனும் சந்திரனும், விண் அனிலம்—ஆகாயமும் வாயுவும், பரிதி — சூரியன்.

"பண்ணிசைவெம் பரிதிமதி நிலதயிலந்
  தியிரும்பு பாணி யுப்பு
விண்ணனில முடலுயிர்நீர் நிழலுச்சிப்
  பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோற் பிறிவரிய
  வத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச்
  சிவாயகுரு சரணம் போற்றி"

என ஸ்ரீமாதவச்சிவஞான யோகிகள் அருளிய உரைப்பாயிரம் நோக்கி யுணர்க. இப்பாடல் அதனை அடியொற்றியது காண்க.

35. சடிலம்—சடை. கைம்மான் — யானை. கனைகண் — பற்றுக்கோடு. முத்தமிழ்ப் பேறு — முத்தமிழாற் பெறும் பயன்.

36. எனது — என்னுடைய. பான்மை — தன்மை. கஞ்சன் — பிரமதேவர். விஞ்சிய — மேம்பட்ட. சீர்த்தி — மிகு புகழ். கமலை — திருவாரூர். மஞ்சு அன்ன குழல் மடவரல் — பரவை நாச்சியார். செஞ்சொற் புலவன்—ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார். தஞ்சு—பற்றுக் கோடு. இன்னாப் பிறவி—

துன்பத்தைத் தரத்தக்க பிறப்புக்கள். உண்ட பரிகலம் — உண்டமிச்சில். ஆதரவு — விருப்பம். ஞமலி — நாய்.

38. வரோதய — வரத்தினலவதரித்தவரே.

40. அறத்துறை — சிவ தருமம். கறைக் கண்டன் — சிவபெருமான். அடைவினின் — முறையாக.

"வள்ளுவ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை — ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்."

இப்பாடல் உமாபதிசிவம் அருளியதென்பர்.

குறிப்புரை முற்றிற்று.

ஸ்ரீமெய்கண்டதேவர்மிளிர்கழல்வெல்க.

ஸ்ரீமாதவச்சிவஞானயோகிகள்மலரடிவாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தசைவபோதம்.

MADRAS
-6 FEB 1955

ஸ்ரீ சபாபதி நாவலர்

கூா — ஆவணி

1951.

உ

திருச்சிற்றம்பலம்.

"கல்லாளிழல்மலை
வில்லாரருளிய
பொல்லாரிணைமலர்
நல்லார் புனைவரே."

"மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயி
ரம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ."

திருச்சிற்றம்பலம்.

LIBRARY
6 FEB 1955
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்

சித்தாந்த சைவபோதம்.

புண்ணியபூமியாகிய பரதகண்டத்தில் உள்ள பல தேசங்களுள் தென்னாடானது சிதம்பரம், திருவாரூர், காஞ்சீபுரம், மதுரை, உத்தரகோசமங்கை, இராமேச்சுரம் திருநெல்வேலி, திருக்குற்றாலம் முதலிய பல திவ்விய வைதிக சைவஸ்தலங்களைத் தன்னிடத்துப் பொருந்தக் கொண்டிருத்தலாலும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய வைதிக சைவபரமாசாரியசுவாமிகள் நால்வரும், மற்றைத் தில்லைவாழந்தணர் முதலிய உண்மை நாயன்மார்களும் திருவவதாரஞ்செய்து பரமசிவன் திருவருட்பிரசாதம் நிலையிட்டு விளக்கி அநுக்கிரகஞ்செய்தற்குரிய தானமாய்ச் சிறத்தலாலும் பிறவாற்றானும் மற்றை நாடுகளைக்காட்டிலும் மிக மேலாய் விளக்கமுறுவதொரு நன்னாடாகும்.

இச்செந்தமிழ் நன்னாட்டில் வசிக்கும் ஆரியமகாஜனங்கள் பாரம்பரியமாகத் தழுவி யநுஷ்டித்துவரும் சற்சமயங்கள் பலதுறைப்படுவன. ஆயினும், அவை தம்முள் இக்காலத்துத் தலைமைபொருந்தி நிலைமையுற்று

நடைபெறுஞ் சமயங்கள் சுத்தாத்துவைதம், விசிட்டாத் துவைதம், கேவலாத்துவைதம், துவைதம் என நான்காம். இவற்றுள், சைவர் சுத்தாத்துவைதத்தையும், வைஷ்ணவர் விசிஷ்டாத்துவைதத்தையும், ஸ்மார்த்தர் கேவலாத் துவைதத்தையும், மாத்துவர் துவைதத்தையும் தத்தஞ் சமய சித்தாந்தங்களாகக்கொண்டு போற்றி அநுட்டித்து வருகின்றனர். அது நிற்க,

இச்சமயப்பகுப்பினர் நால்வருள் சைவரென நிற்கும் நம்மவரை நோக்கி உறுதிகள் சில கூறுவாம் :—

மகிமைபொருந்திய சித்தாந்த சைவர்களாகிய நமதன்பர்களே ! சிவபிரானை வழிபடுமார்க்கத்தராதலால் நாம் எல்லாஞ் சைவரெனப்படுகின்றோம். இனி இங்ஙனம் சைவரான நாம் மெய்யான பரம்பொருளென்றுகொண்டு வழிபடும் அச்சிவபிரானுக்குரிய இலக்கணங்கள் இவையென்றும், அப்பிரானை வழிபடுமார்க்கமாகிய சைவசமய இலக்கணங்கள் இவையென்றும், அச்சாத்திரங்களின் மெய்ப்பொருளை முறையாக எடுத்து இனிது போதிக்க வல்ல சைவாசாரியர் இலக்கணங்கள் இவையென்றும், அச்சைவாசாரியர் போதவழிநின்று அநுட்டிக்குஞ் சைவாசாரங்களும் அதற்கநுகூலமாகுஞ் சம்பிரதாயங்களும் இவை இவையென்றும், அச்சைவாசார சம்பிரதாய அநுஷ்டானத்தால் எய்தும் இகபர வீட்டின்பங்களான பயன்கள் இவையென்றும் நன்றாக அறிந்துகொண்டே இச்சைவ நன்னெறி கடைப்பிடித்து ஒழுகக்கடவராகின்றோம்.

இனி, யாதாயினும் ஒருசமயத்தை நம்பி அதன்வழி ஒழுக விரும்புகின்றவன் அச்சமயத்தெய்வ இலக்கணம், அச்சமய இலக்கணம், அச்சமய நூன்முறை, அந்நூலின் மெய்ப்பொருளையுணர்த்தவல்ல சற்குரு இலக்கணம்' அக்குரு உபதேசமான சமயாசார சம்பிரதாய முறைகள், அவ்வநுட்டானங்களாலுண்டாகும் இம்மை மறுமை வீடுபேற்றின்பப் பயன்களென்னு மிவைகளை யுள்ளபடி யுணராதபொழுது அச்சமயத் தெய்வபத்தியும், சமய உறுதியும், சமய நூற்றுணிவும், சற்குரு முறையும், சதாசார சம்பிரதாய அநுட்டானங்களும், அவற்றாலெய்தும் மெய்யான பிரயோசனங்களும் அவனுக்கு நன்றாக உளவாமாறில்லை.

இக்காலத்தில் நமது சித்தாந்த சைவருட் பெரும்பாலார் தாம்பற்றி வழிபடும் பரம முழுமுதற்கடவுளான ப்ரமசிவன் இலக்கணம் நன்கு ஆராய்ந்து அறிந்தவரல்லர். அதுமட்டோ, தாம் கைக்கொண்டு அநுட்டிக்கும் சைவ சமய இலக்கணத்தைத்தானும் நன்கு ஆராய்ந்து தெளிந்தவருமல்லர் அதுமட்டோ, தஞ்சமய உண்மை விளக்குஞ் சைவசாத்திரங்கள் இவையென்று வரைசெய்து உணர்ந்தவருமல்லர். அதுமட்டோ, தஞ்சமய சாத்திரங்களின் மெய்ப்பொருள் போதிக்கவல்ல சைவாசாரிய இலக்கணந் தேர்ந்து தெளிந்தவருமல்லர். அது மட்டோ, அச்சைவாசாரிய உபதேசமுறையான சைவாசாரங்கள் சைவசம்பிரதாயங்கள் விசாரித்துக் கடைப்பிடித்து அநுட்டிப்பவர்களுமல்லர். அந்தோ! நஞ்சைவசமயிகள் இந்த மெய்ம்

முறைகளெல்லாம் விசாரித்து, அறிந்து தெளிந்து அநுட்டிக்கும் திறம் இங்ஙனம் எய்திற்றிலராயின், சைவரென நிற்றன்மாத்திரையாற்றானே இம்மை மறுமை வீடுபேற்றுறுதிப் பயன்களை உண்மையாக எய்தவல்லராதல் கூடுமோ!

நமது சைவர்கள் பரமபதியான பரமசிவனிலக்கணம் நன்றாக ஆராய்ந்து உணரப்பெறாத குறைவினால் அயன் அரி உருத்திரனென்னும் முத்தேவருள் அப்பரம்பொருளையும் ஒரு தேவராக எண்ணி, பரத்துவ உறுதி தேறாது அவலப்படுகின்றார்கள். அதுவொன்றோ! வீரன், மாடன், கறுப்பன், பெரியண்ணன், பெரியாண்டவன், முனியன், காத்தவராயன், சங்கிலியன், பாவாடைராயன், மன்னசாமி, இருளன், காட்டேறி, பேச்சி, இருசி, காத்தாயி, நாச்சி, கண்ணகி முதலிய பொய்த்தெய்வங்களைப் பொருளெனக்கொண்டு வழிபட்டுப் பரிபவப்படுகின்றார்கள். அதுவொன்றோ? தங்கள் சைவசமயத்தோடு முழுதும் மாறுபட்டு நிற்கும் அல்லா, மீராசாஹீப், கிறிஸ்து, மாதா என்னும் மிலேச்சசமயத்தெய்வங்களையும் பொருளெனக் கொண்டு வழிபட்டுப் பழிபூணுகின்றார்கள். அது நிற்க,

நமது சைவசமயிகள் தம் சமய இலக்கணமான கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, கள்ளாமை; வாய்மை, அன்பு, பொறை முதலிய பொது அறங்களையும் விபூதி, ருத்திராக்ஷதாரணம், சிவதீட்சை, சந்தியாவந்தனம், மந்திரஜெபம், சிவபூசை, சைவக்

கிரியை, சிவாலய சேவை, மாகேசுரபூசை முதலிய சைவச் சிறப்பறங்களையும் நன்கு தேர்ந்து தெளியாத குறைவி னால், கொலை, புலாலுண்ணல், கள்ளுண்ணல், களவு, பொய், வன்கண்மை, வெகுளி முதலிய அதர்மங்களோடு மேற்கூறிய சைவாசாரங்களை விதியின்றி முறைபிறழக் கொண்டு போலிவகையாற் செய்து கெடுகின்றார்கள். அது நிற்க,

நமது சைவசமயிகள் ஆரிய மொழியிலுள்ள வேதாகம முதலிய சைவ மெய்ந்நூல்களையும், தமிழ் மொழியிலுள்ள தேவார திருவாசக முதலிய சைவ அருணூல்களையும் வரையறுத்து உணராத குறையினால், சித்தாந்தசைவ அயலான சிவாத்துவித முதலிய அகச்சமய நூல்களையும், மாயாவாத முதலிய புறச்சமய நூல்களையும் அம்மெய்ந் நூல்களோடொப்பத் தஞ்சமயநூல்களெனக்கொண்டு கற்று வழிதடுமாறி அலைகின்றார்கள். அது நிற்க,

நமது சைவசமயிகள் தஞ்சமய பரமாசாரியர் முதலியோர் முறையும், தத்தம் பரம்பரைச் சைவசந்தானாசாரியர் முறையும் உள்ளபடி விசாரித்து உணராத குறையினால் சங்கராசாரியர் முதலிய ஏகாத்ம வாத வேதாந்தாசாரியர்களையும், அவர்வழிப்பட்ட மாயாவாத சமய போதகர்களையும் தஞ்சமய குரவர்களென்றுகொண்டு வழிபட்டு அவம் பெருக்கிச்சித்தாந்தச்செந்நெறிபிழைத்து அல்லற்பட்டுழல்கின்றார்கள். அது நிற்க,

நமது சைவசமயிகள் சித்தாந்த சைவபத்ததி தேர்ந் துணராத குறையினுல் அசைவாசாரங்களையும், அசம்பிர தாயங்களையும், சைவாசாரங்களாகவும் சைவசம்பிர தாயங்களாகவுங்கொண்டு வீண் செயலுழப்புற்று வாணுள் வீணுள்படக் கழிக்கின்ருர்கள்.

ஆதலால், பரமசிவன் இலக்கணம், சித்தாந்தசைவ இலக்கணம், சித்தாந்த சைவ சாத்திர முறை, சித்தாந்த சைவாசாரியர் இலக்கணம், சித்தாந்த சற்சம்பிரதாய இலக்கணம், சித்தாந்த சைவானுஷ்டானத்தால் எய்தும் இகபரவீடுபேற்றின்பப் பயனிலக்கணம் என்னுமிவற்றை முறையாக எடுத்துப் போதித்து நம்மவரை நல்வழிப் படுத்தல் நமக்கெல்லாம் பெருங்கடனுமாதலின், நாமெல் லாம் மற்றவைகளை வரன் முறையாகவெடுத்து நம்மவர்க் குப் போதித்தலை விரதமாகக்கொண்டு செய்துபோதரக் கடவமாவேம்.

ஞானமிர்தம்

திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீமாதவச்சிவஞான யோகிகள் ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் அருளுபதேசம் பெற்று அவ்வாதீன வித்துவ் சிகாமணியாக விளங்கிய ஸ்ரீசபாபதிநாவலரவர்கள் இயற்றியது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தசைவம்.

LIBRARY
-6 FEB 1955
MADRAS

கர — ஆவணி

1951.

௨

திருச்சிற்றம்பலம்.

இருவினை தாமிவை மும்மல மீங்கிவை யிதுசிவங்
கருவுறு மாருயி ருண்மை யிதுவென்று காட்டவல்ல
குருபர னீயன்றி வேறறி யேனிக் குவலயத்திற்
றிருவெண்ணை மெய்கண்ட தேவேபஞ் சாக்கர தேசிகனே.

திருச்சிற்றம்பலம்.

CONNEMARA PUBLIC LIBRARY
6 FEB 1955
MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்த சைவம்

"சமயங்கள் எல்லாம் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என நான்காக வகுக்கப்படும். புறப் புறச் சமயத்தார்— உலகாயதர், மாத்துமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர், ஆருகதர் என அறுவகைப்படுவர். மாத்துமிகர் முதலிய நால்வரும் புத்தநூலோர். புறச் சமயத்தார் — தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்மவாதிகள், சாங்கியர், யோகர், பாஞ்சராத்திரிகள் என அறுவகைப் படுவர். அகப்புறச் சமயத்தார் — பாசுபதர், மாவிரதர், காபாலர், சாத்தர், வயிரவர், ஐக்கவாத சைவர் என அறுவகைப்படுவர். அகச்சமயத்தார் — பாடாண வாத சைவர், பேதவாத சைவர், சமவாத சைவர், சங்கிராந்த வாத சைவர், ஈசுர அவிகார வாத சைவர், சிவாத்துவித சைவர் என அறுவகைப்படுவர். இவற்றின் இயல்பெல் லாம் பவுட்கரவிருத்தி, மிருகேந்திர விருத்தி, சிவஞானமா பாடியம், சிவஞானசித்தி, சங்கற்பநிராகரணம் முதலிய வற்றுட் காண்க. சொல்லப்படாத சமயங்கள் பலவும் இவற்றுள் அடங்குமாறு வைத்து அடக்கிக்கொள்க."

" இனி, உலகாயதம், நால்வகைப்பௌத்தம், ஆருகதம் என்னும் ஆறும் வேதம் சிவாகமம் என்னும் இரண் டினையும் நிந்திக்கும் நாஸ்திக மதங்களாம். தருக்கம்,

மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்னும் ஆறும் வேதத்தைப் பொதுவகையான் மூலமாகக்கொண்டு தோன்றி நடைபெறும் சமயங்களாம். பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், அயிக்கவாதம் என்னும் ஆறும் வேதாகமம் இரண்டையும் பொதுவகையான் மூலமாகக்கொண்டு தோன்றி நடைபெறும் சமயங்களாம். பாடாணவாதம் முதல் சிவாத்துவித சைவம் ஈறுகிய ஆறும் வேதாகமங்களுக்குப் பிரமாணமும், பொருள் உண்மைகளும் சித்தாந்த சைவத்திேனாடு ஒப்பக்கொள்ளும் அந்தரங்க உரிமை உடையனவாய் நடைபெறும் சமயங்களாம்.''

"இனி, உலகாயத நூல் செய்தவர் பிருகற்பதி. புத்தர் சமய நூலான பிடகஞ் செய்தவர் புத்தக்கடவுள். ஆருகத நூல் செய்தவர் அருகர். இவ்வறுவரும் வேதம், சிவாகமம் இரண்டையும் நிந்திக்கும் நாஸ்திகர்: ஆயினும், ஒருநூல் என்றும், பிரமாணம் என்றும் கொண்டு ஒரு நெறிக்கண் நிற்றலால் அவர் புறப்புறச் சமயத்தார் என வேறுவைத்து எண்ணப்பட்டார்."

"தார்க்கிகமதம்—வைசேடிகமும், நையாயிகமும் என இரண்டாம், வைசேடிகநூல் செய்தவர் கணுதமுனிவர். நையாயிக நூல் செய்தவர் அக்ஷபாத முனிவர். மீமாஞ்சை மதநூல் செய்தவர் சைமினி முனிவர். இது பாட்டம், பிரபாகரம் என வேறிரண்டாம். ஏகான்மவாதநூல் செய்தவர் வியாச முனிவர். இது மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம் என நான்காம். சாங்கிய மதநூல் செய்தவர் கபில முனிவர். யோகமதநூல் செய்தவர் பதஞ்சலி முனிவர்.

பாஞ்சராத்திர மதநூல் செய்தவர் வாசுதேவர். இவ்வறுவருள்: தார்க்கிகர் — வேதம் பிரமாணம் எனப் பொதுவகையாற் கொள்ளினும், அதுதன்னாற் பிரமாண்ணியங் கொள்ளார்: அன்றியும், வேதப்பொருளோடு மாறுபட்டும் பொருட்டன்மை கொள்வர். மீமாஞ்சகர்— கருமகாண்டமாகிய வேதமந்திரம் பிரமாணமென்று கொண்டு, ஞானகாண்டமாகிய உபநிடதங்களை இகழ்வர். ஏகான்மவாதிகள் — ஞானகாண்டமான உபநிடதங்களை மாத்திரம் பிரமாணம் என்றுகொண்டு கருமகாண்டமாகிய வேதத்தினை இகழ்வர். மற்றைச் சாங்கியமதத்தாரும், யோகமதத்தாரும், பாஞ்சராத்திரமதத்தாரும் வேத வாக்கியங்களில் தங்கள் தங்களுக்குப் பொருந்துவன மாத்திரமே எடுத்துக்கொண்டு மற்றையவற்றிற்குப் பிரமாணங் கொள்ளார். அன்றியும், வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணம் எனவும் கொள்வர். இனி, இவ் வறுவரும் முதனூலான சிவாகம நிந்தகர். ஆதலால், இவர் புறச்சமயத்தார் என வேறு வைத்தெண்ணப் பட்டார்."

"பாசுபதமதநூல் செய்தவர் மாயாதத்துவத்தில் வைகும் ஓர் உருத்திரர். மாவிரத மதநூல் செய்தவர் வித்தியாதத்துவத்தில் வைகும் ஓர் உருத்திரர். காபால மதநூல் செய்தவர் காலதத்துவத்தின் வைகும் ஓர் உருத்திரர். வாமமதநூல் செய்தவர் சித்தபுருடர். வாம மதத்தின் ஓர் பேதமான சுத்தசாக்தம் சத்திதத்துவத்தின் வைகும் ஓர் ஆன்மாவாற் செய்யப்பட்டது. பாசுபதர், மாவிரதர், காபாலர், வாமர், வயிரவர் என்னும் ஐவரும் வேதாகமங்கள் இரண்டிற்கும் பொதுவகையாற் பிரமாணங் கொள்பவராயினும், அவ்விரண்டிற்கும் புறமாகிய பாசுபதம் முதலிய நூல்களுக்குச் சிறப்பு வகையாற்

பிரமாணம் கொள்வர். அன்றியும், வேதாகமம் இரண்டிலும் ஆகா என விலக்கப்பட்டனவற்றை ஆசரித்தலும் செய்வர். **அயிக்கவாதசைவர்** — வேதாகமம் இரண்டிற்கும் சிறப்புவகையாற் பிரமாணம் கொண்டு, அவற்றில் விலக்கிய ஒழித்து விதித்தவழி ஒழுகுபவராயினும் எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூலகாரணம் ஆகிய ஆணவமலத்தின் உண்மை கொள்ளார். அதுவேயுமன்றி அவ்வாணவ மலத்துண்மை சாதிக்கும் சிவாகமவாக்கியங்களை இகழ்தலும் செய்வர். ஆதலால், இவர் அகப்புறச் சமயத்தார் என வேறு வைத்து எண்ணப்பட்டார்."

இனி (1) அயிக்கவாத சைவம் (2) சிவசமவாத சைவம் (3) சிவாத்துவித சைவம் இவைகட்குள்ள வேறுபாடுகள் சைவர்கள் உள்ளத்திலே வேரூன்றி நின்றாலன்றிச் சித்தாந்த சைவத்தின் நிலையை உணர்தல் இயலாது. ஆகலின், இவைபற்றி அவைகளையும் இங்கே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளமை காண்க.

1. அயிக்கவாத சைவமாவது.

"ஆணவமலம் என்பது ஒன்றில்லை: மாயா கன்ம மலங்களே உள்ளன. உயிர்தானே அறியும் இயல்பையுடையது. சுத்தராயுள்ள ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஈடாக முதல்வன் உடம்பு முதலாயினவற்றைக் கூட்டுவிப்பன். அவற்றாலே ஆன்மாக்கள் புண்ணிய பாவப் பலன்களாகிய இன்பதுன்பங்களைப் புசிக்குமிடத்து இதாகிதங்களைப் புரிந்து, மேலும் புண்ணிய பாவங்களை ஆர்ச்சித்து, அவற்றிற்கீடாகப் பிறந்திறந்துழலும். இங்ஙனம் உழன்றுவரும்போது கன்மங்கள் துலையொத்த ஆன்மாவுக்கு முதல்வன் தனது கருணையால்

அந்தக் கன்ம மாயாமலங்களைப்போக்குவன். மாயாகன்ம மலங்கள் நீங்கிய ஆன்மா பழைய சுத்தத்தையடையும். இதுவே முத்திப்பேறு என்பதாம். துறைமங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச் சுவாமிகள் கொண்ட அயிக்கவாத சைவம் இதுவே; வீரசைவம் என்றும் இதனை வழங்குவர். இது அகப்புறச்சமயம் ஆறனுள் ஒன்றும்."

"இன்மைமலம் மாயைகன்ம மென்றிரண்டே, இறைதான்
இலங்குபல உயிர்களுமுன் புரிந்தவிரு வினையின்
தன்மைகளா லெவர்களுக்குந் தனுகரண புவனம்
தந்திடு,மிங் கதனாலே யிருபயனுஞ் சார்ந்து
கன்மமெலாம் நேராக நேராதல் மருவக்
கடவுளரு ளாலெவையுங் கழித்திடுவன், அதனாற்
பின்மலமா னவையணுகா, பெருகொளிமுன் புளதே
பெற்றிடு,மென் றித்திறமென் பேசு மாறே."

சிவப்பிரகாசம்: பொது–22.

2. சிவசமவாத சைவமாவது:

"பதி ஞானம், பசுஞானம், பாச ஞானம் என்னும் மூன்றும் அநாதியே உள்ளன. பாச ஞானமாகிய இந்திரியங்கள் விடயங்களை விளக்கப் பசுஞானம் அவற்றைப் புசிக்கும். இவ்விரு ஞானங்களும் நீங்கிய வழி ஆன்மாச் சுவாலையின்றிக் கிடக்கும் தழல்போல ஒன்றையுஞ்சுட்டியறியாது அறிவு மாத்திரையாயிருக்கும். அப்பொழுது வேட்டுவன் புழுவை எடுத்துக் கொள்வது போலப் பதிஞானம் ஆன்மாவை எடுத்துக் கொள்ளும். புழு வேட்டுவனை நினைந்து அதன் வடிவாதன் மேலும் அதன் தொழிலையும் இயற்றி நிற்றல்போல ஆன்மாவும்

அப்பதியை நினைந்து அதன் வடிவாதன் மேலும் அதன் தொழிலையும் இயற்றி நிற்கும் என்பதாம். மாயாவுடல் தானே இங்ஙனம் நித்தியத்தைப் பெற்றிருப்பது முத்தி என்றதனால் இது விக்கிரக நித்த முத்தி எனப் பெயர் பெறும். திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் கொண்ட மதம் இதுவே." இனி,

"உயிர் அறிவிக்க வேண்டாதது, தானே அறியும் இயல்புடையது என்பதும்; பசுத்துவம் நீங்கிய வழி முற்றுணர்தல் முதலிய எண் குணங்களையும் பெறுதலின் பதிப் பொருள் அவ்வறிவான் அறியப்படும் கோசரப் பொருளே என்பதும்; ஞானம் பிரகாசித்து முதற் பொருளைக் காண்டன் மாத்திரையே வீடுபேற்றிற்கு அமையும், மலம் நீங்கி முதல்வனுடன் அத்துவிதமாய்க் கூடி நிற்க வேண்டுவதில்லை என்பதும் சிவசமவாதசைவர் கொள்கையாகும்."

3. சிவாத்துவித சைவமாவது:

"பதி பசு பாசங்களின் இயல்பும், தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்களும், அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளும் அனைத்தும் சித்தாந்த சைவரோடு ஒப்பவாகும். பசு பாசங்கள் பதிவியாபகத்தில் வியாப்பியமாய் நிற்றலால் அவை தனி முதல்களன்று. அவற்றிற்கும் பதிக்கும் உள்ள பேதம் குணகுணி பேதத்தைப்போல உட்பேதமேயன்றி, புறப்பேதம் இல்லை. கவடு கோடுகள் எல்லாம் மரம் ஆமாறு போல அனைத்தும் சத்தே. பசுவுக்கு அறியுந்தன்மை இல்லை. ஆன்மாவினிடமாக நின்றறிவது சத்தாகிய சிவமே என்பதாம். ஆதலால், சிவாத்துவித சைவர் மாயை முதல்வனின் வேறு பொருள் அன்று

என்றும் இருவினையின் வரும் புனருற்பவம் உயிரின் பொருட்டுச் சிவத்துக்கே ஆம் என்றும், சிவசத்தின் தன்மையே உயிர்க்குத் தன்மையாவதன்றி வேறில்லை யாகலின் சத்தே அசத்தை அறியும் என்றும், முதல்வனைத் தலைப்பட்ட உயிர் அம் முதல்வனோடு ஒன்றாய்ப் போவதே ஆகலின் ஆண்டு அறிவதூஉம் அறியப்படுவதூஉம் ஆதல் இல்லை என்றும், முதல்வனும் தன் ஆனந் தத்தை அனுபவிப்பன் என்றும் கூறுவர். இதுவே கண்ணுடையவள்ளலும், நீலகண்டஆசிரியருங்கொண்ட கொள்கையாம்.

"நிமித்த காரணமாகிய முதல்வன் மாயையோடுங் கூடி முதற் காரணமாய்ப் பரிணமிப்பன் என்பதே சிவாத்துவித சைவர் கொள்கை யாகலான் சிவாத்துவிதத் துக்கு நிமித்த காரண பரிணாமவாதம் என்னும் பெயரும் உண்டு. சங்கற்ப நிராகரணத்து இவ்வாறு ஓதப்பட்டமை காண்க. இவ்வுண்மை உணரமாட்டாதார் சிவாத்துவித மாவது இறுதிக்கண் எடுத்து ஓதப்பட்ட சுத்த சைவம் போலும் என மயங்குப. சுத்தசைவம் நுட்பப் பொருள் உணராமை மாத்திரையே பற்றி வேறு வைக்கப்பட்ட தன்றிக் கருத்து வகையால் சித்தாந்த சைவத்தின் வேறு அன்மையின், அச்சுத்தசைவம் சித்தாந்த சைவத்துள் அடங்கும் என உணர்க. அற்றாகலினன்றே, சிவப்பிர காசத்தில்:

"நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துட் குலவின ரளவ ளாவாக் கொள்கைய தாகி" என ஏனைச்சமயங்களை எடுத்தோதி விலக்கிச் சுத்தசைவத்தை அங்ஙனம் விலக்காதொழிந்ததூஉம் என அறிக."

"பாடாணவாத சைவர் முதல் சிவாத்துவித சைவர் ஈறுன மற்றை அறுவரும் வேதாகமப் பொருளுண்மை யெல்லாம் சித்தாந்த சைவர் போலக் கொள்ளும் அந்தரங்க உரிமையுடையர். ஆயினும், அவ்வப்பொருள்களுக்குக் கூறும் சிறப்பிலக்கணம் பொது இலக்கணங்கள் மாத்திரையில் மாறுபடுவர். ஆதலால், அவர் அகச்சமயத் தார் என வேறு வைத்து எண்ணப்பட்டார்."

"இனி, மேற்கூறிய அகச்சமயத்துட்பட்ட சிவ்சம வாதம் — சங்கிராந்த சிவசமவாதம், உற்பத்தி சிவசம வாதம், ஆவேச சிவசமவாதம், ரூபசிவசமவாதம், அரூப சிவசமவாதம் எனப் பலதிறப்படும். ஆயினும், அவை யெல்லாம் ரூபசிவசமவாதம் அரூபசிவசமவாதம் என்னும் இரண்டாய் அடங்குமாறு ஓர்ந்துணர்க. இனி அவை தம்முள் ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் கொண்ட சிவசம வாதம் அரூபசிவசமவாதம் என உணர்க. இவ்வரூப சிவ சமவாத மததாபகர் ஸ்ரீ அகோரசிவாசாரியர்."

"இனி ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர், மேற்கூறிய சமயாதீத சித்தாந்தசைவ சாத்திரங்களுள் ஒன்ருய்ப் பிரசித்தியுற்று விளங்கும் சிவஞான சித்தித் திருவிருத் தங்களை மனம்போனவாறெல்லாம் அலைத்து இடர்ப் படுத்து, அதற்குச் சிவசமவாதபரமாக ஓர் உரை இயற்றி னர். இனிச் 'சித்தாந்த சைவ சாத்திரங்களை முறை யாகக் கற்றுணரும் மதுகையின்றிச், சித்தாந்த உபதேச மாத்திரங்கேட்டுச் சிந்தித்துக் கொண்டிருக்கும் மந்த புத்தியுடையார், அவ்வுரைபற்றி மயங்காது, சுத்தாத்து வித சித்தாந்தசைவநெறி தலைநின்று அநுட்டித்து வீட் டின்ப உறுதி கூடுமாறு, அதற்கு ஓர் மறுப்பு எழுதி

அருளுக' என்று தமது பஞ்சாக்கர தேசிகர் மரபினரான பெரியோர் பிரேரித்திட, அவர் ஆணை போற்றி, ஆசிரியர் ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் அதற்குச் சிவசமவாத வுரை மறுப்பு என ஒரு நியாய கண்டனம் செய்தருளி னார்கள். சிவசமவாதம் சுருதி யுத்தி அநுபவ விரோதம் ஆமாறும் சித்தாந்த சைவ நூலான சிவஞான சித்திக்கு அவ்வுரை இணங்காதவாறும், பிறவும் அம்மறுப்பினுள் சுவாமிகளால் நன்றுணர்த்தப்பட்டன. இன்னும் சித்தாந்த ரகசியங்கள் பல இயைபுபற்றி வெளிப்படையான் அதன்கண் எடுத்து ஓதப்பட்டனவும் உள. இனி, இவ்வகச்சமய முதலிய அனைத்திற்கும் மேலாய் விளக்க முற்று, அவையெல்லாம் தன்கண் ஏகதேசமாய் அடங்கக்கொண்டு நிற்பது சித்தாந்தசைவம் அது வேதாகமம் இரண்டானும் தலையான சன்மார்க்கம் என்று எடுத்துப் புகழப்படும் சுத்தாத்துவிதசித்தாந்த சமயம். இனித் தமிழின்கண் அப்பொருள் போதிக்கும் உண்மை நூல்கள் தமிழ்வேத முதலிய திருமுறைகளும், திருக்குறளும், சிவஞானபோதம் சிவஞானசித்தி சிவப்பிரகாச முதலிய சித்தாந்த சாத்திரங்களுமாம். சித்தாந்தசாத்திரங்கள் திருவுந்தி முதல் சங்கற்ப நிராகரணம் ஈருகப் பதினான்காம். சிவஞான போதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்தசைவசாத்திரங்கள் முக்கூற்றுப் புறச்சமயங்கள் கூறும் பொருள்கள்பற்றி ஆண்டாண்டு ஆசங்கித்துப் பரிகரித்துச் சித்தாந்தம் வலியுறுத்தல் போலவே பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்த வாதம், ஈசுர அவிகாரவாதம், சிவாத்துவிதவாதம் என்னும் அகச்சமயங்கள் ஆறும் கூறும் பொருள்கள்பற்றியும் ஆண்டாண்டு ஆசங்கித்துப் பரிகரித்துச் சித்தாந்தம் வலியுறுத்தாநிற்கும்,"

சிந்தாந்த சைவமாவது :

சற்காரியவாதங்கொண்டு காட்சி, அனுமானம் ஆகமம் என்னும் மூன்றுவிதப் பிரமாணங்களால் கடவுள் ஒருவர் அநாதியே உண்டு. அவர் சித்தாந்தத் தெய்வமாகிய சிவபரம் பொருளே. அக்கடவுளுக்கு வேறாய் எண்ணில்லாத உயிர்கள் அநாதியே உள்ளன. அவைகளை அநாதியே பந்தித்த ஆணவமலம் ஒன்று உண்டு. அம்மலத்தின் காரணமாக உயிர்களுக்குக் கன்ம மலம் அநாதியே உண்டு. மல சம்பந்திகளான உயிர்களுக்கு உறைவிடமாக அநாதியே மாயாமலம் ஒன்று உண்டு. மலத்தைச் செலுத்துகின்ற ஆதிசத்தியாகிய திரோதானமலமும் அதனாலான மாயாகாரியங்களாகிய மாயேய மலமும் உண்டு. கன்ம மலமானது ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தம் என முத்திறப்படும். கன்ம பல போகங்களை அனுபவிக்கும் தானங்களாகிய சுவர்க்க நரக உலகங்களுண்டு. அங்ஙனம் அனுபவிக்குங்கால் அடையத்தக்க சுரர் அலகை நரகர் முதலிய யோனி பேதங்களுண்டு. இங்ஙனம் இறந்து பிறந்து வருவதால் மறுபிறப்புக்களுண்டு. சங்காரம் இளைப்பொழித்தலாகும். பிறவிப் பெருங்கடலைக் கடக்கத்தக்க உபாயங்களை அறிவிக்கும் விதி நூல்களாகிய வேத சிவாகமங்களுண்டு. அவைகளில் விதிக்கப்பட்ட வருணாச்சிரம பேதங்களுக்கு ஈடாக ஒழுகுங்கால் செய்யப்படும் கன்மங்கள் நல்வினை தீவினையென இருதிறப்படும். இவைகளும் திருஷ்ட சன்ம போக்கியம், திருஷ்டாதிருஷ்ட சன்ம போக்கியம், அதிர்ஷ்ட சென்ம போக்கியம் என மூவகைப் படும். அக்கன்ம பேதங்களால் போக பேதங்களுண்டு. கன்மபலன்கள் அனுபவமாவது நிச்சயம். அப்பலன்களை இறைவனே உயிர்களுக்குக் கொடுப்பன். அங்ஙன

மாயினும் சிவாகமங்களின் வழி ஒருவினையால் மற்றோர் வினைக்கு அழிவுண்டு. தருமங்களைச்செய்யவேண்டும். அதுவும் பாத்திராபாத்திர மறிந்து செய்யவேண்டும். தருமங்களுள்ளே வேள்வி சிறந்தது. அதனினும் சீவகாருணியம் மிகச் சிறந்தது. அதுவும் அருளில்லாதவழி கூடாது. ஆகையால் உயிர்கள் மாட்டு அருள்வேண்டும். அவ்வருள் இல்லாதவர் எத்தகையராலும் அவர்க்கு மோக்ஷ உலகாநுபவமில்லை. அங்ஙனம் செய்கின்ற வினைகளும் ஒருவன் செய்தது அவனைச் சார்ந்தார்க்குமாகும். முத்தியுலகமானது தேவருலகங்களுக்கு மேலுள்ளது. அதனை அடைவதற்கு நித்தியாநித்திய வஸ்து விவேகம் முதற் சாதனம். வேறு சிறந்த சாதனங்களும் உண்டு. அவைகளைக் கடைப்பிடித்து முதல்வனை மனோவாக்குக் காயங்களால் வழிபடின் இருவினை யொப்பு உண்டாகி மலபரிபாகத்தால் சத்திநி பாதந்திகழும். தீவிரமுதலிய சத்திநிபாத முடையோர்க்கு முதல்வன் குருவுமாய் வந்து தீக்கை செய்து மலங்களைப்போக்கிச் சிவானந்தத்தை அளிப்பன். அக்குருவின் உபதேசப்படி நின்று சிவானந்தத்தை அனுபவிக்கின்ற சீவன்முத்தர்கள் வாசனாமல நீக்கத்துக்காக ஸ்ரீ பஞ்சாக்ஷரஜெபமும், குருலிங்க சங்கம வழிபாடும் செய்யவேண்டியது அவசியம். இவ்வாறு சீவன் முத்தராய்த் திகழ்ந்து பிராரத்த கன்மாநுபவ முடிவில் விதேகமுத்தி எய்திச் சிவத்துடன் இரண்டறக்கலந்து சிவாநுபவம் ஒன்றையே அநுபவித்துக் கொண்டிருப்பர். முத்தியிலும் முப்பொருள்களும் உயிர்களுக்கு முதல்வன் உபகாரமும் உண்டு. முதல்வனின் அருள்சேர் முத்தியாகிய அடிசேர் முத்தியே சித்தாந்த முத்தி என்பதாம்.

சித்தாந்தசைவம் சைவம் எனவும், வைதிகசைவம் எனவும் பெயர்பெறும்."

நான்கு சாதனங்களாவன :—நித்தியாநித்திய வஸ்து விவேகம், இகமுத்ரார்த்த பலபோகவிராகம், சமாதி சட்க சம்பத்தி, முமூட்சுத்துவம் என்பன. நித்தியாநித்தியவஸ்து விவேகமாவது — பரமான்மா நித்தியனென்றும், தேகாதிப்பிரபஞ்சம் காரியப்பாட்டால் அநித்தியம் என்றும் பகுத்தறிதல். இகமுத்திரார்த்த பல போகவிராகம் — இகலோக பரலோகங்களிலுள்ள போகங்களில் அநித்த துக்காதி தோடதரிசனத்தால் வாந்தாசன மூத்திரபுரீஷங்களிற்போல அருவருப்புற்று ஆசைவிடுவது. சமாதி சட்கசம்பத்தி—சமம், தமம், உபரதி, திதீக்ஷை, சமாதானம், சிரத்தை முதலியவற்றின் பிராப்தி. முமூட்சுத்துவம்—சிவப்பிராப்தியும் அனர்த்த நிவிர்த்தியும் மோட்சத்திற்கு ஏதுவாகலின் இவற்றின் கண் உளதாகும் இச்சை. இங்குக்குறித்த சாதனங்களுள் நான்காவது சாதனம் முமூட்சுத்துவம். இந்த முமூட்சுத்துவம் எய்தினவன் முமூட்சு. இந்த முமூட்சுவால் அடையத்தக்க முதல் மோட்சம் சிவசாலோக்கியம், இரண்டாவது சிவசாமீப்பியம், மூன்றாவது சிவசாரூப்பியம், நான்காவது சிவசாயுச்சியம். இதுவே முடிந்த மோட்சம். இவைகளைப்பெறுவதற்கு சரியையாதிகளைச் செய்தே தீரவேண்டும். ஆகலின், சாதனசதுஷ்டயம் அடைந்தபின்னரே சரியையாதிகள் அடைதல் வேண்டும் என்க.

[கொரடாச்சேரி, சிந்தாந்த நிலையம் - சித்தாந்த சைவஞானபாநு ஸ்ரீ-ல-ஸ்ரீ வாலையானந்த சுவாமிகள் தொகுத்தருளியுள்ள சிவஞானபோதச் சுருக்கத்திலே மற்றைய விவரங்கள் எல்லாம் எளிதாய் அறியக் கிடப்பன. சிவஞானபோதமாபாடிய முதலிய நூலுரைகளிலே மிக விரிந்துள்ள விஷயங்கள் பல சுருக்கமாக இங்கே விளக்குவதற்குப் பெரிதும் துணை செய்தது. இந்நன்றியைச் சித்தாந்த சைவவுலகம் மறக்கற்பாலதன்று.]

திருச்சிற்றம்பலம்

"வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

திருச்சிற்றம்பலம்.

—திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், தம்பகோணம்.

JC LIBRARY
6 FEB 1955
MADRAS

உ

ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள்

அருளிச்செய்த

அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்.

[விஜய - சித்திரை - ஆபிலியம்.]

6 FEB 1955
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்,

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
திராவிடமாபாடிய கர்த்தராகிய
ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள்
அருளிச்செய்த

அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்

AMUTĀMPIKAI PILLAITTAMIL
by: MADAVASIVAGNANAN

ஷை ஆதீனத்து இருபத்தோன்றாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி

1409
3

அவ்வாதீன வித்துவான்
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்
பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

விஜய - சித்திரை - ஆயிலியம்.] [1953.

உ

ஆதீன வெளியீடாக அச்சிடப்பெறுவன

—○—

அதிவீரராமபாண்டியர் அருளியவை:-

காசிகண்டம். (அச்சில்)

கூர்மபுராணம்.

இலிங்கபுராணம்.

வாயுசங்கிதை.

பிரமோத்தரகாண்டம்.

கருவைப்பிரபந்தங்கள் முதலியன.

சிவஞானசித்தியார் அறுவருரை (அச்சில்)

சிவப்பிரகாசம் மதுரைச்சிவப்பிரகாசருரை.

தணிகைப்புராணம் உரை (அச்சில்)

இப் பிள்ளைத்தமிழ் மூலம் வேண்டுவோர், ஆதீனம் லைபரேரியனுக்கு நாலணா தபால் ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

26 FEB 1955
MADRAS

முகவுரை.

ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானத்தில் கட்டளையிட்டருளியபடி இவ்வாண்டுக் குருபூசை நாளிலே இந்த அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் வெளி வருகிறது. தமிழ் மாணவகர் பாராயணம் செய்து திருவருள் பெறுமாறு மூலபாடம் மட்டும் தரப்பட்டுளது. இச் சிறுநூல் வித்துவான் பிரிலிமினெரி வகுப்பு மாணவர்கட்கு மிக்க பயனையளிக்கும். முன்பு என்னால் பதிப்பிக்கப்பட்டுள்ள திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ், மங்களாம்பிகைபிள்ளைத்தமிழ் களின் முகவுரையால் பிள்ளைத்தமிழைப்பற்றிய செய்திகள் பல அறியலாகும். ஆதலின், இம்முகவுரை விரிவாக எழுதப்படவில்லை.

இனி, ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்களில் சில 33, 39, 51, 53 எண்ணுள்ள வெளியீடுகளாக வெளிவந்தன. அவற்றிற்குக் குறிப்புரையும், வரையப்பெற்றது காணலாம். எஞ்சியுள்ள பிரபந்தங்களும் விரைவில் வெளியாகும்.

இந்நூல் சைவ மெய்யன்பர்கட்கும் பெரிதும் இன்பம் செய்யும் என நம்புகின்றேன். 'காசிகண்டம்' முதலிய நூல்கள் அச்சிட்டுவருவதால் இதற்குக் குறிப்புரை வரைய அவகாச மின்றி இச்சித்திரை - ஆயிலியநாளில் மூலபாடம் மட்டும் வருகிறது. அறிஞர் பொறுத்தருளுக.

இங்ஙனம்,
சித்தாந்த சைவமணி—
த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,
ஆதீனவித்துவான்.

திருவாவடுதுறை,
6—4—53.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

6 FEB 1955
MADRAS

குளத்தூர்.

அமுதாம்பிகை

பிள்ளைத் தமிழ்.

ஆசிரியர் கருத்து.

மனம்வாக்கி லெட்டாத சிற்சத்தி யாயிடினு
மன்பதைக ளுய்யவேண்டி
மலையரையன் முதலோ ரிடத்தவ தரித்தொரு
மடப்பிள்ளை யாய்வருதலால்

இனைநாட்டி வாழ்த்திடுவர் பெரியோர்கள் வாழ்த்தற்
கெடுத்தவித் தாரகவிதாம்
எண்ணிடிற் பலவா மவற்றிற்கு முதலாக
வேன்றபெண் பிள்ளைக்கவி

முனிவோட்டு காப்புநற் சேங்கீரைதால் சப்பாணி
முத்தம்வா ரானைமற்று
மொழியுமம் புலிப்பருவ மம்மானை நீராடல்
முறையினை யிருபருவமும்

கனிவாய்த்த வகவலின் விருத்தத்தி னூற்பாடி
நவிலுமுத் திங்கண்முதலா
நயந்தவெழு திங்க ளளவினிற் கேட்பிக்கு
நன்மைய தெனப்புகல்வரே.

-6 FEB 1955
MADRAS

அவையடக்கம்.

-x-x-x-

இளம்பருவ விளையாட்டை நோக்குழித் திருவுரு
விடத்தாசை மிகுதியுண்டா
மென்பதால் வித்தார கவிக்கெலா முன்னுற
வியன்றபிள் ளைக்கவியிதைக்

குளந்தையிற் சோமேசர் மார்பிணைக் கொங்கையாற்
குழைவித்த வமுதவல்லி
கோமளப் பருவத்திலருகொன்று தாதியர்சொல்
கூற்றெனப் புகழ்கனுற்றேன்

வளம்பெருகு மிமையவரு மேத்தொணாப் பெருமாட்டி
மகிமையென் புன்மொழிகளால்
வாழ்த்தரிய தாமெனினு மாங்கவள் கிரிக்கிறைவன்
மகளாகி யதுவுமல்லால்

உளங்கொடியர் வாழ்வலைச் சேரியினு மவதரித்
தொளிர்பாசி சங்குபூட்டி
உண்மகிழ்ந் தருளுதலினென் மொழிக் கும்பெரி
தவந்தருள் சுரக்குமெனவே.

○

26 FEB 1955
MADRAS

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

குளத்தூர்,

அமுதாம்பிகை

பிள்ளைத் தமிழ்.

விநாயகக்கடவுள் வணக்கம்.

மணிகொண்ட கோடொரு மருங்குண்மை யாற்பெண்மை வடிவென்று மஃதின்மையோர் — மருங்குண்மை யாலாண்மை வடிவென்று மீதுகீழ் மாறிய திருக்காட்சியால், அணிகொண்ட வுயர்திணைய தென்றுமஃ றிணையென்றுமியார்க்குங் கிளக்கவரிதாம் — ஐங்கரச் சிந்துரத் தின்கழற் செஞ்சரண மஞ்சலித் துத்துதிப்பாம், பணிகொண்ட துத்திப் படத்திற் கிளைத்தவிர் பருஉமணி விளக்கினொருபாற் — பாயிருட் படலஞ் செறிந்தொளிர்வ தென்னவப் பாம்பணை கிடக்குமொருவன், திணிகொண்ட மல்லற் புயக்குவடு விம்மத் திளைக்குமகள் வாணிபிரியாத்—தென்குளந் தாபுரியிருந்தவமுதாம்பிகை செழுந்தமிழ்க் கவிதழையவே.

—x—

1. காப்புப் பருவம்.

திருமால்.

சீர்கொண்ட கஞ்சக் கிழத்திதன் காந்தனைச் சிறைசெய்த வாறறிந்தாற் — செயிர்த்துங் திருமனைவி மகன்மருகி தமை

யெலாஞ் சிறைசெய்யு மென்றறிந்தும், ஏர்கொண்ட மைத்து னக் கேண்மையா லர்ச்சுனற் கிறுதிநாள் பயவாமையே — எண்ணிமுன் பரிதியைப் பரிதியாற் றடைசெய்த வேந்தற்பி ரான்புரக்க, பேர்கொண்ட மேனிலச் சோபான மிசையேறு பேதைமார் முகநோக்கிநம் — பேரரசு கொள்ளவரு மதிபோ லு மிதுவெனப் பெரிதுமேக் குற்றவர்கடங், கார்கொண்ட பின்னற் கரும்பாந்தள் கண்டுளங் கவலாது களிகூர்ந்துதண் — கலைமதியம் வைகுபொழில் சூழ்துளத் தூர்வருங் கடவுட் பிராட்டிதனையே. (க)

சிவபெருமான்.

வேறு.

அளிசு ரந்தமரர் பசிகெ டும்படியி னமிழ்து தந்தகதிர் கொள்சடைக் காட்டிடை — அழல்வி டஞ்சொரியு மாவி னம் பசிய வறுகு வெண்டலைகள் பல்குறச் சூட்டியும், அரிய யன்ப ரச வவரி டும்பைதெறு மலர்செ ழுங்கமலம் வெல்கரத் தோ ட்டிடை — அனைவு றும்பொருள்கள் கருக வெம்புசுட ரவிரு மங்கியினை வெய்தெனக் காட்டியும், இளிவ ரும்பொன்மலை வளையு முன்பவுண ரெயிலொ ருங்கவிய வெள்ளுபொற் றோட் கிடை — இடுவ னங்களினி லுயிர்ம டிந்தவர்த மிகழு மென் பினையு மைதெனப் பூட்டியும், எழுத ருஞ்சொன்மறை முடிவு மன்பர்தம திதய மும்பரவ நல்குமெய்த் தாட்டுணை — ஏமது புன்றலையு முறந யந்துமரு ளியப ரம்பரனை யுள்ளுறச் சேர்த் திதும், தளிர்து வன்றியிருள் படநி ழன்று குளிர் தழுவி வ ண்டுதுதை செய்துணர்ப் பூத்திரள்—ததைவு கொண்டு நறு மணம ளைந்துமகி தலம சும்புபட வெள்ளமட் டூற்றெழு — தரவ ளர்ந்துமுகி லகடு டைந்தழகு தபவு தைந்துதிசை யெல் லையைக் காத்திடு — தருக ணெண்தரியை முடுகு றுங்கருவி தகுமி தென்றெவரும் விள்ளமொய்த் தார்த்தவிர், ஒளியு

மிழ்ந்துலவு பரிதி மண்டலமு முடுப மண்டலமு மில்லெனத் தாழ்த்திவிண் - ணுலகு சென்றுசுரர் தருவொடும்பழகி யுறவு கொண்டுமகிழ் பல்வளக் காக்களின் — உறைப சுங்கிளிகள் சுருதி சந்தையுட னுரைசெய் கின்றதனை மல்குபுத் தேட்குலம் — ஒளியி ருந்துகவர் பதிகு ளந்தைவரு முளைவி ளங்கமுத வல்லியைக் காக்கவே. (உ)

விநாயகக் கடவுள்.

வேறு.

ஒற்றைச் சுதைத்தனுக் கோட்டியெங் கணுமின்னி யோவாது மும்மாரிபெய் — தொண்பூ தலத்துலவு செங்கொண்டல் போலுமென் றுன்னியச் சுற்றியாமிதற், கெற்றைக்கு மூர்த்தியா யுற்றிடக் கடவமென் றிருண்மேக மருகுவந்தாங் — கிலகு கருமூடிகத் தாதிப் பிரான்சரண மேத்தெடுப் பாமெம்பிரான், கற்றைப் பிறைக்கொழுந் தொளிர்சடில வட்டமேற் கணமணிப் படம்விரித்துக் — கண்வளரு மகிழ்நீர்மை தலையுவா ஞான்றுசெங் கதிர்க்கிர கணங்கடுக்கும், பெற்றித் திறந்தெரிந் தானந்த வெள்ளப் பெருங்கடல் குடைந்தாடுறாஉம் — பெண்ணணங் காசியைத் தென்குளந் தூரெம் பிராட்டியைக் காக்க வென்றே. (௩)

முருகக்கடவுள்.

மாங்குயி றரந்துசுவை யூற்றெழ மிழற்றுமொழி வானமீன் மாதராறுவர் — மருமத் தெழுந்தபொன் வள்ளத்தினமிழ்துண்டு மருவிவாழ் தற்குரியதன், தேங்கமல வீட்டினைத் தனதெனக் கொண்டுவாழ் திசைமுகனை வெய்துயிர்த்துச் — சிரநான்கு மோதப் புடைத்துப் பிணித்தவன் சிறையிட்டதேவை நினைவாம், ஓங்கலொரு வில்லா வளைத்தெயி னங்கத் தனலை யூட்டியருள் சோமேசனார் — ஒருமூ விழிக்கிடைந்

தஞ்சிச் சரண்புகுந் தோலமிடு புண்டரீகம், பூங்குவளை மாரனுக் கருள்செய்த முகமெனப் போர்கொண்ட வாள்விழியெனப் — பொய்த்தநுண் ணிடையெனத் தாங்குங் குளந்தாபுரிக்குளமு தைக்காக்கவே. (சு)

பிரமதேவர்.

தவளக் குரூஉமணி குயிற்றியொளிர் தபனியத் தனது மனைவாயினிறுவுந் — தண்ணிய விதழ்க்கத வுடைத்துத் திறக்குந் தனித்தொழிலை வண்டு முரலும், பவளச் சரோருகத் தன்னைதன் னேடுற் பவித்தபுலவற்கு மந்தப் — பண்ணவற் கெதிரான புலவற்கு மாகப் பணித்தவிறை வன்புரக்க, கவளக் கடாங்கவிழ் கவுட்டுணை நெடுங்கைக் களிற்றுப் பிடர்த்தலைவருங் — கண்ணு யிரங்கொண்ட விண்ணுடர் கோமகன் கற்பகச் சோலை விடபந், துவளக் குடங்கைத் தலத்தினிற் கோட்டித் துணைத்தமுலை மாதர் மலர்கொய் — தூமணித் தெற்றிக ணெருங்கிய குளந்தைவரு சுந்தரப் பெண்ணமுதையே. (ரு)

தேவேந்திரன்.

வேறு.

அதிருந் தரங்கக் குண்டகழி யளறு படட்புக் குழக்கிமுழக்—கசனிக் கிகலிக் கலித்துமதத் தடுக்க லெடுத்துத் தெறித்துவெகுண், டெதிருங் குழூஉக்கொள் படைகவல விடறுங் கறைத்தாட் பருஉத்தடக்கை — இறைக்குங் கடவெண் களிற்றியானை யெருத்தத் திவரும் புருகூதன், முதிருஞ் சுவைத்தெள் ளமிழ்தொழுகு முழுவெண் ணிறத்து மதிக்குழவி—முருகு விரியுங் கடவுணதி முழுகித் திளைக்குஞ் சடைப்பெருமான், கதிரும் விழிக ளிருள்சீப்பக் கந்தற் பொழுதி னெருங்கிருந்தும் — கலவிக் குயிப்பிற் குளநாணுங் கமலா கரியைப் புரக்கவே. (சா)

இலக்குமி.

கடிப்போ தலர்த்திக் கருஞ்சுரும்பர் களித்துத் துயில்கூர் கற்பகப்பூங் — கானம் பயிலுங் காமர்நகர்க் கவலை தூங்கின் னமிழ்தளித்துப், படிப்பாற் பயிலு மகளிடத்துற் பவித்துப் புவன மூன்றனையும் — பரிக்குந் திகிரிப் படைப்பாணிப் பகவன் மருமத் துறைமடந்தை, விடப்பாம் பிரவி வெம்மைமிசை மேவா வண்ணங் குடைகவிப்ப—விரிக்குங் கதிர்ச்செம் பவளநிற வேணி யணையாப் புனிற்றுமதி, முடிப்பா லரசுவீற்றிருக்கு முதல்வ னிடப்பா லிருந்துலக-முழுது முயிர்த்த குளந்தைநகர் மொய்பூங் குழலைப் புரக்கவே. (எ)

சரசுவதி.

வேறு

அளிக்கா தரவுற்றுச் சுவைத்தகள்—அளித்தார் வனசத்துப் பொகுட்டயன், உளத்தா மரைநச்சத் திளைத்தவன் — உரைப்பா லருள்பெற்றுத் தரித்தவள், களத்தால மடக்கிச்சுரார்க்கிடர்-களைத்தேய வொறுத்துக் கடைக்கணி, குளத்தூர் நயனத்தற் கிடத்தமர்-குளத்தூரமுதத்தைப் புரக்கவே. (அ)

காளி

வேறு.

துளிக்கும் பசுந்தே னுவட்டெடுத்துச் சொரியுஞ்செழுந்தா மரைப்பொகுட்டுத்—தோன்றற் பெருமான் முதற்கடவுட் டொகுதிப் பைங்கூழ் களைக்கருக்கிக், களிக்கு மகிடாசுரக்களையைக் களைந்து சிரமேற் பாசடையிற் — கமல மெனத்தாள் பதித்திவர்ந்த கன்னியெனுந்தெய் வதங்காக்க, பளிக்குமணிமா டங்கடொறும் பதிந்த தமது சாயலினைப் — பாராவினமென் றிளஞ்சேய்கள் பரிந்து பரிந்து வருகவென, விளிக்குங் குளந்தைத் திருநகரின் வெளிய மதியந் தவழுமுடி —

விளங்கும் கதிர்ச்செம் பவளமலை மீது படர்பைங்கொடி யிளையே. (கூ)

சத்தமாதர்.

வேறு.

இலகொளி யுமிழ்தரு சிறையோ திமத்தவழ்—எழிலுறு தவளவல் விடையூர் திறத்தவள்—எறுழ்வலி மயில்கட வின ள்வே றிரிப்பவள்—இருசிறை யொருகலு ழனையேறி நிற்பவள், உலகதிர் தரவரு மரியே றுகைப்பவள்—உமிழ்கட மழை பொழி யயிரா வதத்தவள்-உழிதரு குழிவிழி யுடல்பேய் நடத்துநள்—உவரெழு மகளிர்த மொளிர்தாள் பழிச்சுதும், அலகைகணடமிடு மழலார் களத்தினில் அமரக டபுமுடல் கழிபா னிறக்கலன்—அரவொடு திணிவளை சிகர்தோ ளிடைப் பொலி—அணியென வணிதரு பெருமா ளிடத்தமர், நிலவிரி நகையவ ளிருமூ வகைப்படு — நெறிகளு நிறவிய வொருமா தவக்கொடி — நிலமிசை யுயரிய கமலாக ரத்துறை — நிரும்பி மலைமக ளனையே புரக்கவே. (ய)

முப்பத்துமுக்கோடிதேவர்.

வேறு.

சிறகாளி மொய்த்திதழ் கொழுதுமது வைப்பசி சிதைய மடுத்துக் களித்தாடு தேமலர்—செருகுமள கக்கன மதர்நெடு விழிக்கடல்சிறி துகுடித்துக்கறுத்தா யேவிய-திணிமுலை மலை ச்சொரி திதலைநிதி யத்திரள் செழுமிய பொற்புக் கடற்பாய வாரெழில் — செறிதரு மடித்திரை யிடையற லொழுக்கிய திறமைநிகர்த்தொத் தொழுக்கா மரோமமுங், குறைவற வளித்தருள் குவலய மடக்கொடி குளிர்கெட நச்சிக் கறைப் போர்வை யாலுடல் - கொழுவிய தெனத்திசை முழுவது மடக்கிய குமரி யிருட்டைப் படச்சாடு மர்தவர் — குலவுகிர

ணச்சுவை யுணவினை யுணத்தனி குறுகிய பொற்சக் காச் சேவல் போலொளிர்—குருமணி குயிற்றிய புயமலை குழைக் கெதிர் குயமுடி யைச்சற் றெடுத்தேகறு பார்வையும், வெறிகம ழுமுற்பல நறுமலர் மறைப்பினில் விழைத னலத்தைப் படித் தேதக நீள்செவி—யினில மிறுத்தமை யெணிமற மிருத்தவை வெருவிவிழச்செற் றுகைத்தோடி நீடிய — விரிமலர் தனக் கொரு மறைவிட மெனப்படும் விதியெ னெனப்புக்கு விற் விற்காதி னேடமர் — வினையிலி காத்துழை சடைவன முறற் கெழ விரைவில் விளைத்துக் குதித்தாடு பார்வையும், இறை மையு மளப்பறு மழகொளிர நிற்பவளிமய மலைக்கட் கொடிப் போல மேவிய — இனியமட மைக்குயின் மாகத மயிற்பெடை யிரையுமி ருக்குக் குளத்தூரி னுடியென் — னிருமைவினை முற்றற வெனையுமடி மைக்கொளு மெழிலமிழ் தச்சத்திவைப் பான காவலர்—எரிகதி ருருத்திரர் விறல்வசு மருத்துவ ரெனு மிவர் முப்பத்து முக்கோடி தேவரே. (கக)

காப்புப்பருவ முடிந்தது.

---

2. செங்கீரைப்பருவம்.

பொருவரிய வண்டப் பரப்பைமுழு தாளும் புராதனர் முகத்து விழியாப்—போந்துலவு நங்கொழுநர் தம்மைத் தடுத் திடர் புரிந்தகைக் கமல நமையும், பருவா லுழுத்துமென் றஞ்சிமென் குமுதமும் பங்கயமு மொன்றை யொன்று-பாது காப் பத்துயிலு மென்றர மடந்தையர் பரிந்துகொண் டாடு சீர்த்தி, இருகைமல ரும்புவி பதித்தொரு முழந்தா ளிருத்தி யொரு தாண்மேனிமிர்த்—திந்த்ர கிரு விற்கிடை தொடுத்த வெண் டாளநிரை யெப்பநுதல் வேர்பொடிப்பத், திருமுக நிமிர்த்தொரு குளந்தையமு • தாம்பிகை செங்கீரையாடி

யருளே—சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரையாடியருளே. (க)

பொங்கரி பார்த்தசிறை வண்டினம் விருந்துணப் பூங்கமல நாண்முகையெலாம்—போதாக வெழுபரித் தேர்கடாய்க் கடன்முகடு பூப்பவரு பரிதிப் பிரான், சங்கின முயிர்த்தவெண் டாளவட மணியுமித் தாமரை முகிழ்த்து லையுய்யான்—கண்டாத மெல்லிதழ் முறுக்குடைத் தல்லாது தணவலென் றருகு போந்து, வெங்கதிர்க் கற்றைகள் பரப்பியுல வுதலேய்ப்ப மின்னும கரக்குழைகதிர்—வீங்கிள முலைத்தலை யுமிழ்ந் துதண் புயமீது விளையாடி நிற்பவதனத், திங்கண்மிசையாடக் குளந்தையமு தாம்பிகை செங்கீரை யாடி யருளே—சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரை யாடியருளே. (உ)

கார்பூத்த மறுவுண்ட வெண்கதிர்க் கலைமதி கவின்றநின் கமல வதனங்—காண்டோறு மறுவற்ற மதியீ தெனுவுட் கவன்றுமுன் னிற்கவஞ்சிப், பார்பூத்த தென்குளத் தூர்ப் பொங்கர் காவணம் பரியமதி னுழை யூடு—டையென நுழைந் தொளித் தோடநிற் பணியவரு பங்கபச் செல்வி முதலோர், ஏர்பூத்த வங்கையர விந்தமலர் கூம்பவவ ரிணைவிழிக் குவளை யெல்லாம்—இரும்புனற் றேத்துளி பொடித்துமிழ்ந் தலரவரு ளெனுமமிழ்த தாரை கான்று, சீர்பூத்த முகமதிய மாடவமு தாம்பிகை செங்கீரை யாடி யருளே—சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரை யாடியருளே. (௩)

மணிதுற்ற தவிசெனப் பருமணிப் பருவம் வயங்குமடி மீதிருத்தி—மதிக்கடவு டன்மனை யெனக்குலாய்த் தன்னமிழ் தம் வாக்குவ தெனத்தீம்பயம், பணிலத்தின் வாய்க்குமுத மூட்டிமற் றினுமாசு பரியாது சாலதெனப் — பாரிழைத்

தொருபொட்டு நுதன்மதிக் கிட்டுப் பசுங்கழையின் மஞ்ஞை கின்றுங், கணிபெற்ற புயமே லணைத்திரு மதித்தேவ ரளவ ளாய்க் குழீஇய தேய்ப்ப-அழகிய முகத்துமுத்தாடி யெழின் மேனிசீ ராட்டமகிழ் கூர்ந்து கொடியேம், திணிவத்த நெஞ்சங் கரைக்குமமு தாம்பிகை செங்கீரை யாடியருளே - சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரை யாடியருளே. (௪)

முக்கனி செறித்தநறு நீர்ப்பந்தர் முல்லைவெண் முகை யனைய மூர லறுகான்-மூசிய விளம்பொங்கர் தேசுறு மலர்ப் பொய்கை முதலான வறம்யா வையும், தொக்கமறை யாகம விதிப்படி யியற்றுநாட் டோலாத கருணைகூர்ந்து-துண்ணென வெழுந்தரு டிருச்சோம நாதனார் தூமேனி குழைவித் தவை, இக்கரமு மிக்கரமு மித்தனமு மித்தனமு மென்று யிர்த் தோழியர் களாய் - எத்துமட மாதரார் தம்மைத் தெளித்திடுவ தேய்ப்பமுக மதிய மசையத், திக்கெட்டு மேத் துங் குளந்தையமு தாம்பிகை செங்கீரை யாடி யருளே- சிற்சபையி னெற்றிவிழி யற்புதனை யாட்டுமயில் செங்கீரை யாடி யருளே. (௫)

வேறு.

பொங்கெழி னின்முக மாடுதொ றுங்கமழ் போதரி நீள் விழிகள்-பொற்செவி யிற்பல காலுமெ திர்ந்து புகுந்து மறிந் துலவச், செங்கதிர் நீள்குழை தம்மொடு தாமெதிர் சென்று மணிக்கலொடுஞ் - செயிரறு பொன்னி னரும்பு பிதிர்ந்து தெறித்திட மோதுதிறந், தங்கிளை சார்ந்திடை யாவகை சாற் றமொய் தாம வயிற் படையாற் - றண்குரு தித்துளி வீழ்தர வீரர்க டம்மொடு தாமெதிரா, அங்கை கலந்தம ராடுத லாமென வாடுக செங்கீரை - அளந்தறி யாதகு ளந்தநி லாவமு தாடுக செங்கீரை. (௬)

பல்லுயி ருங்களி கூர்கரு ணைக்கடல் பம்பிவ ளர்ந்தெ னப்—பாலொளி கான்ற நறும்புனல் சூழ்ந்து பரந்தொளிர் கம்பையிடை, வில்லுமிழ் மின்னுரு வச்சுடர் வேணிவிண் ணைவ டந்தழுவி-வீங்கிள வெம்முலை மார்புழ வங்கையின் மேதகு தோள்குழையப், புல்லிய ணைப்பது போல்வயி ரங்கள் பொதிந்தவிர் தொட்டிலினும்—பொன்னணி பாவையொ டாடிய ணைத்துப் பொழுதுக ழித்தருளும், அல்லிம லர்க் குழல் வல்லிப ராபரை யாடுக செங்கீரை — அளந்தறி யாதகு ளந்தைநி லாவமு தாடுக செங்கீரை. (எ)

குலத்தில் வளர்த்திடு மன்னையர் செந்துகில் கூர்மடி மீதி மயக் — குன்றி னரக்கலர் வாழ்க்கை யெனக்களி கொண்டு குலாவியவர், கலைப்பொலி முகமதி யுங்குழல் முகிலுங் கண் டென வாய்க்குமுதங் — கதிர்த்த நகைத்தள வலர வரும்பக் கைக்கம லங்குவியா, முலைக்கம லச்செழு முகையொடு நட்பு முயங்கிட வாடலுறும் — மூரிவ ளத்துத ரத்திரு வாலெழின் மொய்த்து மிகத்தழைய, அலக்க ணறச்சுவை யாரமிழ் துண் பவ ளாடுக செங்கீரை — அளந்தறி யாதகு ளந்தைநி லாவமு தாடுக செங்கீரை. (அ)

வானமெ ழுங்கரு மேகவி னங்கள்வ றந்தி ரம்போய்வன்-மால்வரை யெங்கணு மோடிட வென்றிமிர் வண்டீ னும் போது, நானமு யங்கிய வாசந றுங்குழ னந்தா வந்தீப — நாவிலெ ழுந்தொளிர் தூமவொ ழுங்கென நன்றூர் மென் சாயன், மேனிநி றந்தரு மேனைய ணங்குவி ளைந்தார் வங் கூர — மீறிவ ளர்ந்தழ கானகு ளந்தைவி ளங்கா நின்றாறு, தேனிறை கொன்றையி னுனிட னின்றவள் செங்கோ செங் கீரை—தேவர்தொ ழுங்கவி யாண சௌந்தரி செங்கோ செங்கீரை. (கூ)

கோலநெடும்பனி மாலிமயம்பயில் கொம்பே செம்பாத-கோகன தந்தொழு வாருள நின்றகொ ழுந்தே பைந்தேனே, ஞாலம ளந்தவ னுடும ரும்பெற னங்காய் வெங்கோப-நாமவி டஞ்செறி காமரு கண்டர்த நண்பே தண்போதோ, டேலம ளைந்திருள் கூருந றுங்குழ லெந்தா யெம்பாசம் — ஈறப டும்படி ஞானம ணங்கம ழின்பே யன்பாளர், சிலமி குங்கம லாகரம் வந்தவள் செங்கோ செங்கீரை—தேவர்தொ ழுங்கலி பாண சவுந்தரி செங்கோ செங்கீரை. (ய)

செங்கீரைப்பருவ முடிந்தது.

3. தாலப்பருவம்.

மதுரங் கொழிக்குங் கொழுந்தேறன் மடுத்துச் சுரும்ப ரடைகிடக்கு-மலர்ப்பூந் தடத்தைக் காண்டலுஞ் செம் மணி கால் குடுமிப் பணியுலகம், இதுவு மரவந் தனக்கிடமா யிருக்குங் கொல்லா மென்றழுக்கா — றெய்தித் தன்கீழ்ப் படத் தாழ்த்து மியல்பை யறிந்தா லெனக்கரைக்கட், பொதுளி யுறவு கொண்டநறும் பொதும்பர் நாக ருலகெனுமொப் — புமையாற் புலவோர் பதிதாழ்த்திப் பொற்று துதிர்க்குந் திருக்குளந்தைப், பதியின் மகிழு நறியசுவைப் பாகே தாலோ தாலேலோ — பணில முயிர்த்த தாளநகைப் பாவாய் தாலோ தாலேலோ. (க)

இருள்கால் சீத்துச் சோதிவெயி லெறிக்குஞ் செக்கர் மணித்தொகையின்—இழைக்கும் பசும்பொற் றலத்துயர்த்த விருங்கே தனத்தின் மிசையுயிர்கட், கருள்கால் கலைவெண் முழுமதிய மமரும் பரிசு தழைப்பண் — அமைத்த தூணத் தருந்தவஞ்செய் யறவோர்கடக்கு மேனிலத்துச், சுருள்கான்

மலர்ப்பூங் கூந்தலிளந் தோகை யனையார்க் கெதிர்நடிக்குஞ் — சுரமா மகளிர் விழித்தொழிற்குத் தோற்றுச் சமழ்க்குந் திருக்குளந்தைப், பருகா வமிழ்தே பெருங்கருணைப் பரையே தாலோ தாலேலோ — பணில முயிர்த்த தரளநகைப் பாவாய் தாலோ தாலேலோ. (உ)

மணங்கேழ் வனச மூற்றெடுத்து மதுவார் பொகுட்டுச் சுறுச்சுமந்து — வயிறு வருந்திக் கருவுயிர்க்க வயின்பார்த் துழலும் பெடை ஞெண்டைக், கணங்கே ழயின்முட் டாட் படுத்துக் கவைத்தாளிடையற் றலையூடு — கருவண் டினங்கள் புடைசூழக் கலந்து முரலத் துவக்குண்டு, சுணங்கேர் முலைப் பெண் ணணங்குநினைச் சுமந்து மகளிர் தாமெடுப்பத் துயலு மணித்தொட் டிலைக்காட்டுந் தொடுநீர் வாவித் திருக்குளந் தைப், பணங்கே ழரவப் பேரல்குற் பரையே தாலோ தாலே லோ—பணில முயிர்த்த தரளநகைப் பாவாய் தாலோ தாலேலோ. (ந)

கந்தங் கமழு நறுங்களபக் கலவை யளைந்த முலைக்கு வடாங்—கரடக் களிற்றின் மருப்பினிடைக் கவின்ற வுரோமப் புழைக்கரத்தால், நொந்தங் கலமந் திறுங்கொடிபோ னுணு கித் துவளுஞ் சிற்றிடையார்—நுவலுங் கிளவிக் கிடைந்தருயி னுவலா தடங்கி யவ்விசையின், சந்தம் பலநா ளகம்பயிலத் தழுவிச் சிலநாள் வாய்விண்டு-சாற்றியொப்பு நோக்கியொவ் வாத் தவறுற் பின்பும் வாயடைக்கும், பைந்தண் பொழில் சூழ் குளந்தைநகர்ப் பரையே தாலோ தாலேலோ — பணில முயிர்த்த தரளநகைப் பாவாய் தாலோ தாலேலோ. (ச)

சுரும்பர் துளைக்க வுவட்டெடுத்துச் சொரியு மிரதச் செழுங்கரும்பைச் -சுவைத்துக் கதலிக் குலைசாடித் தூங்குந்

தெங்கம் பழஞ்சிதறி, விரிந்த பசுநெட் டிலைக்கமுகின் மேவிக்
ககனத் தருவையதன்—மீதுபடர்பூங் கொடிவழிபோய் மிதித்
துக் குனித்து விளையாடி, வரிந்த கழையி னெடுங் கயிற்று
வழிபோய் நடிக்கும் பொருநர்திற — மானக்குரக்குக் குலங்
குதிக்கும் வளஞ்சேர் பொதும்பர் சூழ்குளத்தூர், பரிந்து
தொழுவோர் மனத்துநறும் பாகே தாலோ தாலேலோ —
பணிலமுயிர்த்த தாளநகைப் பாவாய் தாலோ தாலேலோ.
(௫)

வேறு.

சுலவித் தரளப் பவளக் குவைகள் சுருட்டிக் கரைபுர
ளுந்—துவலைத் திரைமைக் கடனின் றெழுமிரு சுடர்கண்மு
னச்சுடர்தஞ், சிலையிற் கவினக் குயிலு முருப்புன நீயைப்
புடைபெருகச்—சிந்திப் பனிகூர் பொழுதிற் புனலிற் சேர்ந்
தற மாற்றுநரை, உலறத்தெறு வெப்புடை வேனிற்பொழு
தொள்ளெரிவாய்த் தவநோன்—புழப்பவரைப்பொரு நொச்சி
மதிற்குல மோங்கு குளந்தையெனுந், தலனிற் பொலிவு
பெறப்பயி லுங்கொடி தாலோ தாலேலோ—தகரக் குழலா
யமுதப் பிடியே தாலோ தாலேலோ. (௬)

கொங்கு விரிந்த நறுங்க மலங்கள் கொழிக்கு மதுப்பு
னலாக்—குவிதர வூழ்த்துதிர் தண்ணிய தாது குவிந்து
மெருக்குவையாப், பங்கிரந்த வயற்கண் விளைந்து பழுத்
தெழு நெற்குலைபோய்ப்—பசும்புர வித்திரள் பூட்டிய தேரிற்
பரிதிக் கடவுள்புடைப், பொங்கொளி வெண்க வரித்தொகை
வீசுவ போல வொசிந்தசையும்—பொற்பு மிகுங்கமல லாகர
மேவிய பூரணி மெய்யடியார், தங்கள் பணிக்கென வெம்மை
யளித்தவ டாலோ தாலேலோ — தகரக் குழலா யமுதப்
பிடியே தாலோ தாலேலோ. (௭)

பவளக் கொடிபடர் வேலைமுகட்டிற் பாயொளி கான்றெழுசெம் - பரிதி நிகர்ப்பச் செம்மணிமாலை பரப்பிய மைக்குழல்மேற், றிவளக் கதிர்விடு கொண்டை திருத்திச் செஞ்சுடர் வாண்மகரத் - திருவணி யக்கடன் மகர மெனத்தனி செருகிப் பகைஞருளந், துவளச் சிலைபடு கணையென நுதலிற் சுட்டி தரித்தருகிற்-சுடர்பிர தாப மெனப்பொட் டெழுதித் துன்னிய கீர்த்தியெனத்; தவளப் பணிமுக் கிட்டொளிர் பாவாய் தாலோ தாலேலோ-தகரக் குழலா யமுதப் பிடியே தாலோ தாலேலோ. (அ)

வேறு

பரந்த வெண்புணரி மீதோன் வேதா மாதேவர் - பணிந்து தொண்டுசெய வேலே சேலே போலாடுங், கருங்க ணூந்துமளி யீவாய் பாவாய் தாவாது-கறங்கு வண்டளக மானேதேனே யேனோர்தம், புரங்க டந்தகை வாயார் தூயார் சேயார்பாற்-புணர்ந்தி டும்பசிய தோகாய் நீகா வாய்காவென், றிரங்கு மன்பாக வாழ்வே தாலோ தாலேலோ-இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ. (கூ)

மலங்க டங்குமரு ளூராய் தாலோ தாலேலோ - மலங்கடங்குமரு ளூராய் தாலோ தாலேலோ கலங்க லந்தவரையே யாய் தாலோ தாலேலோ கலங்க லந்தவரை யேயாய் தாலோ தாலேலோ, புலங்க டந்தபர நாடாய் தாலோ தாலேலோ - புலங்க டந்தபர நாடாய் தாலோ தாலேலோ இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ - இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ. (௰)

தாலப்பருவ முடிந்தது.

—x—

4. சப்பாணிப்பருவம்.

உருப்பொலி மணிப்புன லுடுக்கைப் புலிக்கொடி யுரத்திற் குலாவுமாக்கள் - உருத்தொன்றை யாற்றினெதிர் பத்தாற்று வோமெனு முரைக்கிலக் கியமாகவொண், குருப்பொலி விரற்செறி செறித்துப் பொலந்தொடிகள் கொழுவித் தனைப் பரிவினுற்-கொண்டாடு நின்றிருந் தாதைகிளை யொன்றைக் குழைத்துப் பணித்தவிறைவன், திருப்பொலி கடுக்கைதழை தோட்குவடு பத்தையுஞ் செழுந்தழும் பாக்குழைத்துத் - திறல்கொண்ட நறுமலர்க் காந்தளங் கைத்தலஞ் சேந்தழ கெறிப்ப விமையோர், தருப்பொலி மலர்த்தொடைக் கூந்தலமு தாம்பிகை சப்பாணி கொட்டியருளே – தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை சப்பாணி கொட்டியருளே. (க)

உள்ளொளி ததும்பிமேற் பொங்கிப் புறத்தினு முவட்டெடுத்துப் பரந்தாங்-கொழுகொளிய வெண்ணீறு மெய்ம்முழுது மட்டித்துயர்ந்தவடி யார்கள்குழுமி, வெள்ளொளியி னுஞ்சிவத் துதி முழக்கானும் வேங்கைமக வுக்களித்த - விதிவச நினைந்தினு நும் வேண்டுவார்க் கருளாமை வேண்டுது மெனுங்கருத்தாற், றெள்ளுதீம் பாற்கடல் வளைந்தெனச் சூழ்போந்து சேர்ந்தனர் நெருங்குபொதியிற்-றெய்வத் திருக் கேள்வ ராட்டினுக் கேற்குந் திருத்தாள மென்னமலரைத், தள்ளியெழில் பூத்தநின் செங்கைத் தலங்கொண்டோர் சப்பாணி கொட்டியருளே - தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை சப்பாணி கொட்டியருளே. (உ)

ஐவகைச் சுத்தியு மமைத்துவான் கம்பைநதி யருக்ன்பு பூப்பமலரால்-அஞ்சலி நிறைத்துமே னோக்கிமுக மதியினெதி

ரல்கிய தெனக்குவிந்து, மெய்வகைத் துவாதசாந் தத்தலத் தானந்த வெள்ளப் பெருஞ்சோதியை - விரிமலர்த் தவிசாக வேற்றமுன் போலென்ன மீண்டுங் குவிந்திழிந்தாங், குய் வகைச் சிவலிங்க நாப்பணு வாகித்தவ் வும்பனைய னச்சுட ரெதிர்-உறக்குவிந் தலர்விரைவு மானமுத்திரைகொடுத் துல வாது பூசைமுற்றுஞ், சைவமுறை யாற்றுகைப் பங்கயஞ் சேப்பவொரு சப்பாணி கொட்டியருளே-தண்டமிழ்ச் சுவை கண்ட தென்குளத் தூரம்மை சப்பாணி கொட்டியருளே. (௩)

கட்வுட் பொலம்பூமி காண்டற் கெழுந்தெனக் கடையு கப் பெருவெள்ளநீர்க் – கடன்மிசை மிதந்திட்ட பூந்தராய் தழையவரு கௌணியர்கள் குலமணிக்கு, முடவுப் பிறைக் கண்ணி மோலிப் பிரான்சைவ முறைநெறிச் சோதாப்பவன்– மூடப் புறச்சமய முழுவதுஞ் சோதாப்ப மூண்டகிலே யோடு புல்லும், அடவிக் களிக்குந் தமிழ்க்குரிசி லீறிட அமண்கையு ருண்ணீறிட – அருண்மடை திறந்தூற்று திருமுலைப் பால் கறந் தமிழ்தனு னக்குழைத்துத், தடவுப்பொன் வள்ளத்தி வைத்தூட்டு செங்கைகொடு சப்பாணி கொட்டியருளே - தண் டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை சப்பாணி கொட்டியருளே. (௪)

தீங்கனிக் கிளவியால் யுான்றவக் கோட்டிய செழுங்க ழையு முகமூரனீள் – சேயரிக் கண்ணுன் மெலித்தவா விந்த முந் தேங்கமழு நறுமுல்லையும், பூந்குவளை மலருங் கதிர்த்த பொன் மேனியிற் போரிட் டொழித்ததளிர்கள் – பொங்கி யொளிர் மாழையும் பிண்டியுஞ் சோகாந்து போதுவன வற் றையணியா, எங்குகட லுலகமுத லெல்லாம் பணித்திடு மிருஞ்சமர்த் திண்மையுதவி – யிடையாத வில்லென்று மம் பென்றும் வைத்ததென் னென்றுநீ யொன்றொடொன்றைத்,

தாங்கொளி ததும்பிடத் தாக்கியாங் கங்கைகொடு சப்பாணி கொட்டியருளே — தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை சப்பாணி கொட்டியருளே. (ரு)

வேறு.

தவப்பய னைத்தொழு வார்க்கருள் செய்ய தடக்கையி னேற்றுபொலந் — தடவுத் தொடியிற் செறியு மணிக்கட் டத்திப் பாய்ந்திடுமின், சிவக்கு மரிக்க ணிழற்று நிழற்றுணை செவ்விய நவ்விமறிச் — சீர்செய ஞெக்கி மகிழ்ந்துற வாடச் சேர்க்குது மென்றுமனம், உவப்ப வுவப்ப மறிந்து மறிந்து முறக்க வலிக்கவலி — உயிர்த்து வளர்த்தருள் கூர்திரு மேனி யுளங்குளி ரச்சுழலும், குவைக்கலின் மொய்த்ததளிர்க்கையி னம்பிகை கொட்டுக சப்பாணி — குளந்தை வயங்க வயங்கு மிளங்குயில் கொட்டுக சப்பாணி. (சா)

அரக்கெழில் கொண்டு கனிந்த செழுங்கனி யாகச் சேயொளியை — அள்ளியி றைக்கு முருக்கலர் போலழ காரத ரத்தினையும்,சுரக்கு நறுஞ்சுவை வானமிழ் தேந்து சுடர்த்திரு வள்ளமெனத்-தூயம ணித்தா ளத்தொடை பூண்டு துணைத்த தனத்தினையும், பரக்கு நிறத்தளி ரொன்று பசுங்கதிர் பம்பிய மேணியையும் — பார்த்துத் துய்த்திட வாயூ றுஞ்சிறு பச்சை யிளங்கிளிதன், குருச்சிறை தைவரு மங்கையி னம்பிகை கொட்டுக சப்பாணி — குளந்தை வயங்க வயங்கு மிளங்குயில் கொட்டுக சப்பாணி. (எ)

முழங்கு மிசைச்சிறை வண்டு விருந்துணு முண்டக நாண்மலர்கள் — மூரிம ணித்தவி சாக வளர்த்தருண் மூவிரு செவ்வுருவும், தழங்கு குளங்கரை யெய்தி யெடுத்தெழி றங்கிடு மோருருவாத் — தழுவி முலைத்துவ டார வணைத்தெகிர் தாங்குத லாற்றகிலா, தழுங்கி. விடுத்தொழி கங்கையுள்

வெள்கி யழுங்கி விளர்ப்புமூல - அமிழ்த மருந்தி வளர்த்த ருள் கூர்ந்தரு மைச்செய லாற்றியவின், கொழுங்கவின் மொய்த்த செழுங்கையி னம்பிகை கொட்டுக சப்பாணி - குளந்தை வயங்க வயங்கு மிளங்குயில் கொட்டுக சப்பாணி (அ)

வேறு.

மதுகர முலவிய துளப வுரத்தினன் மட்டாரும்—மரை மலர் நிலவிய மறைமுனி பொற்றவி சிற்றேறவர், முதுமணி முடிகுனி தரவர சிற்பொலி புத்தேளும்—முதலிய வனைவரு முளரிநி கர்த்தக ரத்தால்விண், ணதிதரு புனலொடு தருமலர் நச்சியி ணைத்தாளின்–நவையறு விதிமுறை சொரிதர மிக்கரு ளத்துர்வாழ், இதமுறு பாசுக வடிவினள் கொட்டுக சப்பாணி—இமகிரி தரவரு முமையவள் கொட்டுக சப்பாணி. (கூ)

அருள்பெறு மடியவர் விழியளி சுற்றும ணத்தேனே - அவனியி னிடையற மெவையும்வ ளர்த்தசு வைப்பாகே, திருமல லமரர்கள் சொரிதரு பத்மப தத்தாயே - தெளிமன்ற நெறியின ருளமொளிர் வித்தசு கப்பேறே முருகவிழ் மது வழி நறுமலர் மொய்த்தசு ழற்கோதாய்-முனிவரர் மறையவ ரடியர்ப ழிச்சுசு ளத்தூரின், இருமையு முதவிடு மடமயில் கொட்டுக சப்பாணி - இமகிரி தரவரு முமையவள் கொட்டுக சப்பாணி. (ய)

சப்பாணிப்பருவ முடிந்தது.

—x—

5. முத்தப்பருவம்.

பகைத்த புரிசை மூன்றுமொரு பதத்தி னிறுத்துத் திருக்குளந்தைப் - பதியிற் கருணை பூத்தலர்ந்த பரமானந்தப்

பெருவாழ்வை, நிகர்ப்பச் சிறுவெண் மதிகிடந்த நெடுவா னுதன்மேற் போந்தலவி - நெறிக்கும் புருவச் சிலைகோட்டி நெய்த்துப் பழுத்த கொலைவேல்போல், வகுத்த மதர்க்கட் சரந்தொடுத்து மணிமே கலைசூ ழல்குலந்தேர் - வாய்ப்ப வெளிக்கொண் டெமது மும்மை மலச்சோ வழலப் புன்மூரல், முகிழ்க்குந் தாளச் செங்கனிவாய் முத்தந்தருக முத்தமே - முருகு விரியு நறுங்களப முலையாய் முத்தந் தருகவே. (௧)

வளைத்த கருப்புச் சிலையெடுத்து வனசக் கணையு மாங்க ணையும் - வாசங் கமழு நறுநீல மலர்ப்பூங் கணையு மசோகி னிடைத், தளைத்த நனைதாழ் கொடுங்கணையுந் தழுவிக் கொணர்ந்தென் னெஞ்சுதொடுத்துச் - சகல புவனங் களும்ப ணிக்குந் தண்ணங் குடையெங் குரிசிலைக்கண், டிளைத்த வெரியாற் படப்பொருத திருவார் குளந்தைச் சிவவாழ்வைச்- சிந்தைமருட்டிப் பணிப்பலெனத் திறல்கொண் டெழுந்த தள வம்போன், முளைத்த முறுவற் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே - முருகு விரியு நறுங்களப முலையாய் முத்தந் தருகவே. (உ)

பிதிரும் பொறிப்பொற் சிறைவிரித்துப் பெருந்தேன் மடுத்துத் தாதளைந்து — பெடையோ டாடிக் களிபூத்துப் பிறழா வகையின் னிசைபாடி, அதிரும் பலவண் டினமுழக்க வலரும் பொகுட்டுத் தேங்கமல—வலர்க்குந் தனக்கும் பகை மையுற வமைத்துக் குளத்தூரமர்ந்தருளிக்—கதிரும் பெருமா னுளக்மலர் தணையு மலர்த்தி வயமாக்கிக் — கலப்பா னெழு ந்தா லெனவதனக் கலைவாண் மதியி னரும்புநிலா, முதிரும் பவளச் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே-முருகுவிரியு நறுங்களப முலையாய் முத்தந் தருகவே. (௩)

கொழுது வரிவண் டினமுரலாக் குளிர்பூந் தொடையன் முடிசாய்த்துக் — கும்பிட் டிறைஞ்சுங் கடவுளர்தங் குழாத் தைச் சிறிது மதியாத, பழுது நிலவாத் திருக்குளந்தைப் பதிவாழிறையோன் விழிச்சுடரின் - பரிசு நோக்கி மணியி தழ்க்க பாடஞ் சிறிதே திறந்துருவம், எழுதும் வினைஞர் தொழிற் கடங்கா வெழிலார் தனதொள் ளொளிகாட்டி - எழுந்தச் சுடரை வயமாக்கி யேக்கற் றமையம் பார்த்திருப்ப முழுது மடிமைக் கொளுநகைவாய் முத்தந் தருக முத்தமே- முருகு விரியு நறுங்களப முலையாய் முத்தந் தருகவே (௪)

இகந்த மனத்தாற் கடல்கடைந்த விமையோர் வெருவ வெழுங்காளம் - எடுத்துப் பருகுந் திருக்குளந்தை யிறைவன் பவளத் திருவாய்க்கும், சகந்த னிலைமை தவாதோங்கத் தாவிக் குதிக்குஞ் சிறுமறியான் - தழங்கு மரும்பே ரொலி முழுதுந் தாங்குஞ் செவிக்கு மருந்தாக, உகந்த வொளிதுன் றியவெயிற்றி னூறு மமிழ்தப் பெருக்காறும் — உரைப்பா ணமிழ்தப் பெருக்காறு மூட்டிக் களிகூர்ந் தெழிற்கடலே, முகந்த பவளச் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே — முருகு விரியு நறுங்களப முலையாய் முத்தந் தருகவே. (௫)

வேறு.

அசும்புபட வாய்நீர் வழிந்தோட வோடிவந் தனையு மைங் கரக்களிற்றை — ஆகத் திடைக்கொண்ட ணுப்பட் டடித் தென வனைத்தலும் பனைத்து வளர்பொற், றசும்புதனை யெதிருமிரு களிறெனத் தன்மத் தகங்கொண்டு தாக்கி மயி ரின் — றண்ணிய வொழுக்கினை யணைக்குமொரு கன்றெனத் தடவுக்கை யாற்சுழியவவ், விசும்புண்மறை பட்டெழுந் தெண்ணிலா வெணநகை விரித்தொல்லை மேலெடுத்து—வெகு ளிதீர்த் துளங்குழைய முத்தாடி வைத்தாடும் விபனகர்க் குளந்தை வாழ்வே, பசும்பொனவிர் திருமேனி யழகொளிர

னின்றுநின் பனிவாயின் முத்த மருளே - பங்கயச் செல்வி தொழு மங்கையர்க் கரசிநின் பனிவாயின் முத்த மருளே. (௬)

சேட்டின மணிச்சோதி நீட்டுமிலை ஞாங்கர்நுதி தீட்டு நின் ஞாட்டத்திறற்—றெள்ளிய வருட்பார்வை வெள்ளவமிழ் தம்மை நீ தேக்கிடவு நீக்கி யளகக், காட்டினைக் காட்டிமயல் பூட்டிளம் பேட்டனக் கவினடைக் கன்னியரிடைக் கட்டுண்டு மட்டுண்டு தட்டுண்டு பட்டிறுங் காளையரின் மாழுகரென, மூட்டியபொன் மாடகத் தியாழுக்கு மிசையூட்டு மொழிய மிழ்த மூட்ட விட்டு-மோட்டிருங் கோட்டுக் குவட்டைநிகர் வட்டமுலை முத்தையமிழ் தென்றேக்கறாஉம். பாட்டிசைக் கிள்ளைக்கு மீட்டுமிசை யூட்டுநின் பனிவாயின் முத்தமருளே-பங்கயச் செல்விதொழு மங்கையர்க் கரசிநின் பனிவாயின் முத்த மருளே. (எ)

மடல்கொண்ட பூந்துழாய்ப் படலைமணி மார்பினன் மூறைக்கிழவ ளுதியண்ட - வாணரும் பதைபதைத் தோட் டெடுப் பக்கொடிய வளைகடற் புனன்மீதெழும், விடமுண்ட சோமேச னார்க்கினிய வாயமிழ்த மெல்லெனப் பருகவித்து-விளியாத வண்ணமென் கொங்கையஞ் சஞ்சீவி வெற்புங் கொடுத்து மற்றும், உடனின்று மணிமிடற் றலவா திருத் தலா னொருகணப் பொதுமகலா - துருப்பாதி யிற்கலந் தனு தினம் பாதுகாத் தொண்குளத் தூரின்மருவும், படமொன்று மாவல்குலெழிலமுத வல்லிநின் பனிவாயின் முத்தமருளே-பங்கயச் செல்விதொழு மங்கையர்க் கரசிநின் பனிவாயின் முத்தமருளே. (அ)

வேறு

சுறவே றியகொடி முதலா கியபடை சுற்றிவ ரத்தனி போய்ச்—சுவைநீள் சிலைகொடு மலரார் பகழிது ரக்கும தக்

கொடுவேள், இறவே நுதல்விழி வழியூ டழலெழு வித்தி
றற்பெருமான்-எரிபோ லொளிவிடு சடைமா முடியினி ருக்
கும திக்கடவுள், வெறியார் திலகம தணிவா ணுதலெழி லிற்
குளம் வட்கிநறு-விரிபூ விதழினை நடுமே னியினிறு விப்
பொரு வக்கருதும், முறிபோ லுருவினள் கமலா கரமயின்
முத்தம ளித்தருளே-முதுநான் மறையறி வறியா வடிவினண்
முத்தம ளித்தருளே. (௯)

பெருகா ரமிழ்தரு ளொளிசேர் மதியெழில் பெற்றநு
தற்கொடியே-பிறவா வருணெறி தருவா யெனுமவர் பெட்
பினுளச்சுவையே, மருவார் தகரமு மளிவீழ் மலருமணத்
தருழற்றிருவே-மதியா தவருள மருவா திருளென வைத்தம
டப்பிடியே, உருகா நெறியெம துளமா சறவுமொ றுக்குமு
றக்கடலே – உருவா யளவரு மருவாய் நிறைபொரு ளுக்
கொரு வைப்பிடமே, முருகார் பொழிலணி கமலா கரமயின்
முத்தம ளித்தருளே-முதுநான் மறையறி வறியா வடிவினண்
முத்தம ளித்தருளே. (ய)

முத்தப்பருவ முடிந்தது.

—x—

6. வாரானைப்பருவம்.

வெள்ளித் தகட்டையரில் கொள்ளத் துறுத்தனைய
வெள்ளிய நிறைப்பவளவாய் – வெள்ளோதி மத்திரள்கள்
செஞ்சிலம் பொலியினையு மென்மடப் பிடியினத்தை, எள்ளிக்
கவின்கொண்ட திருநடைப் பொலிவினையு மெய்யாது கற்க
வெண்ணி – இகபரப் பெருவாழ்வு வேட்டவர்க் கருளுநின்
னிணையடிக் கமலமலரை, உள்ளித் தொடர்ந்துசூழ் மொய்த்
திடுஞ் சூழலிடை யுற்றநீ யுச்சூழலி – ஞெடும்பெயர்ந் தவிர்

மதிய மூர்ந்துவர லேய்ப்பவொளி மாமணிக ளிருகரையினும், அள்ளிச் சொரிந்துலவு பாலிநா டாளவரு மமுதாம்பி கைவருகவே-அருண்மடை திறந்தூற்று புன்மூர லமுகொளிர வம்பொனுயகி வருகவே, (க)

துளிபட்ட தேந்தொடைக் கூந்தலைக் காரென்று தோகைமுன் னாடிவரமென் - றூணிமலர்ப் பாதநடை கற்க வன்னத்திர டொடர்ந்துபின் னோடிவரவுட், களிபட்ட தீங் கிளவி கற்குநின் செந்தளிர்க் கைக்கிள்ளை பாடிவரநின் - கருணைபொழி கட்கடைப் பார்வையை வியந்துமான் கன்றினங் கூடிவர்மெய், யொளிபட்ட வேதக் குழாங்கதறி யோலிட்டுனைப்பெரிது நேடிவரவில்-லுமிழ்மணிக் கோவைக் குரூஉப் பருமமீமிசை யுடுத்தவிடை வாடிவரமை, அளிபட்ட பூஞ் சோலை சூழ்குளத் தூரில்வரு மமுதாம்பி கைவருகவே - அருண்மடை திறந்தூற்று புன்மூர லமுகொளிர வரம்பொனு யகிவருகவே. (உ)

வில்லுமிழ் குரூஉமணிச் சுடிகைப் பணிக்குழாம் விரித்தபை நெரித்துருத்து-வீசுங் கலாபப் பசுந்தோகை யீட்டங் கண் மெல்லியலு நடையுட்வேட்டு, வல்லுறழ் மணிக்கோவை தாழ்ந்தமென் கொங்கைநின் மருங்குறச் சூழ்ந்து வரவவ் - வளரிளஞ் சாயலா னடையினுன் வேறறிய மாட்டாது மருளுமெம்மை, எல்லொளித் தண்ணிலா நகைகொண்டு தேற்றிமற் றிருக்காதி யானநான்கும் — இன்னங்கிடந்துமுறை யிட்டுமறி வரியநின் னியல்பினைக் காட்டியருளி, அல்லுமிழ் தடம் பொங்கர் சூழ்குளத் தூரில்வரு மமுதாம்பி கைவருகவே — அருண்மடை திறந்தூற்று புன்மூர லமுகொளிர வம்பொனு யகிவருகவே. (ங)

வயிரா வணங்தொறு மெழுங்குளத் தூர்வந்து வான் கோடி ரண்டாயிரம் - வாய்த்ததனை யாரும் பிரானைமரு மத் திரு மருப்பினு லாளாண்மையும், செயிரா வணங்கினைப் பல்லு யிரு மெய்தத் தெறாஉமலக் களிறைந்தையும் — திக்கெட்டு மண்டப் பரப்புங் கடந்திறச் செற்றிடும் விழிவீரமும், பயிரா வணஞ்சொரியு மேகத்தி னருள்கூர்ந்த பதநடையு நோக்கி யுஞ்சிப் — பனிமா லடுக்கலெனு நந்தைகின் னுரிமையாற் பரிந்துபின் வருதலேய்ப்ப, அயிரா வணம்பின்பு தொடரத் தொடைக்கூந்த லமுதாம்பி கைவருகவே - அருண்மடை திறந்தூற்று புன்மூர லழகொளிர வம்பொனு யகிவருகவே. (௪)

விந்தையங் கிரிதனக் கிகலியுள் ளதுமுற்றும் வீந்தவீ றின்மையுந்தண் — வெள்ளிவே தண்டமொ ராக்கன் பெயர்த் திட்ட மென்மையுங் ககனமீறும், மந்தர முதற்கிரி யிடைக் கட் பொலிந்தண்ட மார்க்கத் திரண்டுசுடரும்-வலமாய் வரப் புவிக் காதார மானதன் வன்மையயு நோக்கி நோக்கிச், சிந்தைகளி கூருமா மேருவைச் சிவபிரான் செங்கமல வங்கை பத்தும்-சேர்ந்துகித் தலுழக் கதவளர்ந் தொசியாது செம் மாந்து விம்மியெள்ளும், அந்தனச் சிகரிமிசை யருவிகித் திலமிட்ட வமுதாம்பி கைவருகவே - அருண்மடை திறந் தூற்று புன்மூர லழகொளிர வம்பொனு யகிவருகவே. (௫)

வேறு.

தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித் தீட்டா நிலைமைத் தென வுலகிற் றெரிக்குங் காழித் திருஞானச் செம்மற் குழவிக் கருண்ஞானம், பெய்து குழைக்க வோமுலையாம் பெரிய மலைவா யுறுத்துமென்றே—பெருமான் றனையுங் குழைத்த வலிப் பெற்றி யறிந்து தடுத்தோபூங், கையி லிலகு நகக் குறிபற் கதுவ நோமென் றேதீம்பால் - கறந்து கொடுத்தா

யெனச்சகிமார் கனிந்து பாட நகைமுகிழ்க்கும், வைவைத் தமைத்த மதர்வேற்கண் வாழ்வே வருக வருகவே—வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (சு)

குஞ்சி யசைய வசைந்துவருங் குமரப் பெருமான் றனை யேந்துங் - குளிர்பூங் கரத்துத் தொடிகறங்கக் கொடிபோ லொசியுஞ் சிறுமருங்குல், அஞ்சி நுடங்க வம்மருங்கு லணிந்த பருமங் கதிர்த்தேங்க - அணங்கு மிடைகண் டிரங்குவபோ லவிரு மணிநூ புரமொலிப்பப், பஞ்சி திருத்துஞ் சீறடிகள் பதிந்த சுவடு தொறுமிமையோர் - பனிகான் மோலி நிரை புரளப் பதுமை முதலோர் களிதுங்க, மஞ்சி வரும்பூங் குழற் கற்றை மாதே வருக வருகவே - வளங்கூர் குளந்தைப் பதிய முத வல்லி வருக வருகவே. (எ)

கடிகொண் டலரு நறுங்கடுக்கைக் கடவுண் மகிழப் பேரண்ட — கடாகப் பரப்பே சிற்றிலெனக் கருமப் பகுப்பே சிறுசோறும், படிகொண் டுயிராம் பாவைகட்குப் பைதீன் மலநோய்ப் பசியிரியப் - பல்கா லயிற்றி விளையாடிப் பரமா னந்தப் பெருவீட்டிற், குடிகொண் டிருக்குந் தீங்கரும்பே கொள்ளத் தெவிட்டாச் சுவையமுதே - குன்றம் பயந்த நறுங்கனியே கொழிக்குங் கருணைப் பெருக்காறே, மடிகொண் டயரா தமைப்புரக்கும் வாழ்வே வருக வருகவே-வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (அ)

தீது விளக்குங் களப்பணியுந் தேவர்குரவன் மனைச் செல்வி திருக்கற் பழித்த களப்பணியுந் திளைத்துக் கலவி செயப்புகுங்காற், கோது விளக்கும் போச்சக் குணமு நாணுங் கொடுக்குமெனக் - கூறியே நினது சாயலுமின் கொழிக்குங் காஞ்சி யல்குலுமே, போது விளக்குஞ் சடைக் காட்டிற் புகுந்து வெளிக்கொளா தொளிக்கப் பொலிவு தருமா

லெனச்சகிமார் புகலச் சற்றேறங்கைத்தளிகள், வாது விளைக்கு முடிசாய்க்கு மாதே வருக வருகவே - வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (கூ)

அயில்கண் டனையஞ் சலித்தேதத்து மன்னை வருக பெருங் கருணை - யாழி வருக தீவினையே மாவித் துணையே வருக விடந், துயில்கண் டலையம் பலத்தாட்டுஞ் சுடர்பொற் கொடியே வருகவிளஞ்-சுகமே வருக நறுங்குதலை தோற்றுங் கிளவி யெனுமதுரம், பயில்கண் டனையர் செவிக்கூட்டும் பசுங்கோ கிலமே வருகவென்றும் - பருகத் தெவிட்டாச் சுவையமுதப் பாவாய் வருக பசுந்தோகை, மயில்கண் டனைய விளஞ்சாயன் மாதே வருக வருகவே-வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே. (ய)

வாரானைப்பருவ முடிந்தது.

-X-X-X-

7. அம்புலிப்பருவம்.

பொன்பூத் தலர்ந்தவன மரவங்கண் மாலரி பொருங் களிற்றினமளாவிப்-பொங்குமலை வாய்வருங் காரணத் தாற் செய்ய பொன்னஞ் சிலம்படியினின், மின்பூத்து நாளும் புலம்புறச் சூழ்தலான் மிடையுமங் கமலமயா - மிக்குறுங் குவலய மடங்கலுங் களிதூங்க விரியொளிக் கதிர்வீசலாற், கொன்பூத்த பெருமானை யணைதலால் வேளெனுங் குழகற்கு மகிழ்செய்தலாற் - கோமளப் பெண்செய்கை நின்செய்கை போலுமாற் கூர்ந்துணரி னிவளையன்றி, அன்பூற் றெடுப்ப விளை யாடுதுணை வேறில்லை யம்புலீ யாடவாவே - அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட னம்புலீ யாடவாவே. (க)

மண்டலம் புகழாத வன்படுஞ் செவ்வியின் மாண்டவ வையுச்சிமீது — வயங்கிய காஞ்சேர்த்தி யாணவ விருட்குழா மாற்றிநற் பசுமென்பயிர், கண்டக மகிழ்ந்துநெடு வானுற விளங்கொளி கலந்தமணி கான்றகதிர்நீள் — கடிநாறு தன் னடி வணங்கவெளி வந்துதெண் கடலுலக முற்றுமேத்த, விண்டல நெருங்குமீன் கணமாதர் புடைசூழ மேவியுல கந் தனதியல் — வீறுபெற நோக்கிஞ் ஸீரெண் கலைப்பொலிவு மெய்மையிற் காட்டு முறையால், அண்டர்தொழு மெம்மையா ளம்மையை நிகர்ப்பைநீ யம்புலீ யாடவாவே - அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட னம்புலீ யாடவாவே. (உ)

கங்கையும் பாந்தளுந் தும்பையுஞ் செம்பொற் கடுக்கைச் செழுந்தொடையலுங் — கபாலமுங் கொக்கிறகு மூற்றிருந் தொழுகுதேங் கமழ்ந்தபூ மத்தமுநறுங், கொங்குதவ மூத் தியும் வன்னியு மெருக்கும் குளிர்ந்தவறு கம்புல்லுமேற் - கோமளப் புலவோ ரிறைக்குமந் தாரமுங் கொய்துதவர் தூற்றுமலருந், தங்கிய பிரான்சடைக் காட்டினி லுனக்குரிமை சற்றலால் வேறுமுண்டோ - தாவிலெண் ணுன்கலைய வத்தி னுஞ் செம்பாதி தனதெனக் கொண்டுவாழும், அங்கவ ளினக்கதிக மென்பதற் கையமிலை யம்புலீ யாடவாவே — அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட னம்புலீ யாட வாவே. (ங)

உருநிறை யுவாத்தோறும் வாக்குநின் னமிழ்துண்ட வும்பர்த்தலத்தி னிமையோர்—உவர்க்கட லுயிர்த்தவிட முன் னிற்ற லாற்றற்கு மொல்கினர்கள் சாவாதிரார், குருநிறை மணிக்கச் சணிந்தவிவள் பவளவாய்க் கொழியமுதம் வாய் மடுத்த—கோமளச் சோமேசர் விடமயின் றுற்றலுங் கெர்ண் டன ரிறத்தலிலர்மற், றிருணிறை யிராவினை விளைத்திபிவ

ருண்ணிறையு மிருளிரா வினைமுழுவதும் - இரித்திடுவ ளாதலா லிவளொடும் பொன்னே டிரும்பனையை மன்றவரி பாய், அருணிறை கடைக்கண்வைத் தெம்மையா ளம்மையுட னம்புலீ யாடவாவே - அழகுவள ருங்குளத் தூரமுத வல்லி யுட னம்புலீ யாடவாவே. (சு)

தெளிக்குமெய் யன்பினால் வழிபட்ட நாளுனது செல் லனைத் தவிர்த்தளித்த - திருச்சோம நாதனு ருண்டருளு நஞ்சுஞ் சினந்தவிர்ந் துள்ளொடுங்கத், துளிக்குமெழி லங் கைத் தலத்திற் றடுத்திட்ட சுவையமிழ் திருப்பவமிழ்தந் - துணைக்கரத் தேந்திப் பசிப்பிணி தெறத்தினந் துயருழந் துழல்வோரெனக், களிக்குமுறை தேற்றுது வாளரா வுண் டுண்டு கக்கத் திகைத்துவெருவிக் - ககனவெளி யோடியும் வடகுவடு சுற்றியுங் கவலுமின் செய்கைநன்றே, அளிக்குல மிரைக்குங் கடிக்குழற் கன்னியுட னம்புலீ யாடவாவே - அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட னம்புலீ யாட வாவே. (ரு)

வணங்குமுறை யாற்றனது திருவுளப் படிநிற்கு மாந்தர் க்கு மலதிரோத-மாயேய காமிய மருட்பிணி யவிழ்த்துநான் மறைமுடிவு மெட்டாததோர், குணங்குறி கடந்தபே ரானந்த வெள்ளக் கொழுங்கட றிளைத்தாடக் - கொடுத்தருளும் வள்ளன்மை நிற்கமற் றுலகினுங் குளிர்தூங்க வெண்ணுன் கரம், இணங்குவே தாகம வழித்துறை வழாவகை யியற்றி யது காணுயலை - எங்குநீ வரினினது கறைபோக்கி வேண்டி யது மீந்தருள் கொழித்தருளுவாள், அணங்குகொண் டந்த ரத் தலையாதெ மம்மையுட னம்புலீ யாடவாவே - அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட னம்புலீ யாடவாவே, (கா)

குடங்கைமல ராற்செம்பொன் மேருவைத் தனுவெனக் கோட்டிய மலைக்குமருகன் - கோமளச் சிலைமார்பு மைந்தனை

யிராட்டித்த குவவுப் புயக்குவடுமேல், வடங்கதுவு மோட்டி ளங்கோங்கினும் வண்டினு மலங்கக் குழைத்தவணினை — வருகென் றழைத்திடவு மதியா திருத்தியிவள் வன்கதக் கன லிதோய்த்த, தடங்கட் கொடும்படைச் செய்யசுடர் வேல் கொண்டு தாக்கினுயிர் பொன்றிவிடுதல் - சாதமற் றெங்கெங் கொளிப்புறினு மிவளிலாத் தானமொன் றில்லைகண்டாய், அடங்கிய தடங்கமல நெஞ்சா • தனத்திருவொ டம்புலீ யாடவாவே - அழகுவள ருங்குளத் தூரமுத வல்லியுட னம் புலீ யாடவாவே. (எ)

துடிபட்ட கைத்தலத் தெம்பிரான் மகிழ்கருஞ் சுந்தரப் பெண்ணமிழ்தெனத் — தோன்றும் பிராட்டியைமு னெண் ணுத தக்கனூர் துயர்கூர்ந்து பட்டபாட்டை, முடிபட்ட வான வர் குழாத்தோடு முடனின்று முழுவதும் பட்டறிதியிம் — மொய்குழற் செல்விதனை யவமதித் தின்றுநீ மூன்னூறு தகன் றொழிவையேற், கடிபட்ட விதழ்தின்று கறவினு னின்னி லைமை கடிபட்டு மாழ்குவையலாற் - கலைமுழு மதித்தே வெனும்பழைய பெயரொடுங் கலைமதி யிலாதகேவென், றடி பட்ட பாவிற் புதுப்பெயரு மாளுவா யம்புலீ யாடவாவே — அழகுவளருங்குளத் தூரமுத வல்லியுட னம்புலீ யாட வாவே. (அ)

சங்கையா னங்கையிவ ளெம்பிரான் புலவியிற் றடங் கருங் கட்கடைநுதி - சற்றே கறுப்புழித் தாமரைச் சிறடிக டாக்குங் கடுந்தொழிலினுற், கங்கையா டித்துடித் திவள் கருணை யாற்றினைக் கைகூப்பு மிறையேந்துமான் — கதறிவிழி மானைத் தொழுந்தொடையல் வண்டெலாங் கருங்குழற் றுவுமாவம், மங்கையா டகைப் பாதனைக் காவென்று வாவுமற் றுங்குசீயும் - வாணுதன் மதிக்கிறைஞ் சிடுவையன்

றேயதனை மதியாத தென்னைகொலெமக், கங்கையா மலக மென வன்புகூ ரம்மையுட னம்புலீ யாடவாவே - அழகுவள ருங்குளத் தாரமுத வல்லியுட னம்புலீ யாடவாவே. (௯)

கைப்போது நீட்டிமுன் விரித்துனை யழைப்பவுந் தாணுதி போல்வந்திலாக்-காரணத் தாலம்மை சீறுதலு மங்கையைக் கரும்பாந்த ளென்றஞ்சினான், இப்போது தாழ்க்கலான் வருவனென் றிதுகாறு மிவ்வாறு தப்புவித்தோம் — இன்னுநீ வாராது மத்தரிற் றிரிதியே லினியுனக் கேதுபுகலோ, செப்போது கொங்கைப் பிராட்டியிவள் சோமேசர் செங்கண் புதைத்தனென்று - தினகரச் செல்வனொ டுழுந்கித் திகைத் தநின் றிறமறந் தனைபோலுமால், அப்போது பட்டதை நினைந்துமற் றிவளுட னம்புலீ யாடவாவே - அழகுவள ருங் குளத் தாரமுத வல்லியுட னம்புலீ யாடவாவே. (௰)

அம்புலிப்பருவ முடிந்தது.

-X-X-X-

8. அம்மானைப்பருவம்.

வம்பிய றொடைக்கூந்தன் மீமிசைக் கதிர்வீச வீாள் பட்ட கோற்றொடிக்கை - மலரினைக் கண்டுசில வண்டத்து மதியங்கள் வனசமி தெனுங்கருத்தாற், பம்பியட ரிருள் கண்டு முகிழாமை யாற்றமைப் பரிசித்தல் வேட்டதாகப் — பாவித் தறுந்தொறுந் தன்றுணைமை யன்மையாற் பங்கயம் விதிர்த்துவெகுளா, வெம்பியகல் வானத் தெழுந்தோ டிடத் தள்ளி விடலெனச் செங்கைகளால்—வேலினை யிகந்தொருவி வார்தரு கொடும்புருவ வில்லொடு கிடந்து மிளிரும், அம்பிய நடங்கணொளி கொண்டுலவு நித்திலத் தம்மானை யாடியருளே - ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி யம்மானை யாடியருளே. (௧)

இருள்பூத்த நெறிசுரி கருங்குழ லரம்பையர்க ளெண்ணிலார் கவரிவீச—எறிசுடர் மணித்தவிசு வீற்றிருந் தரசுபுரியேந்தல்குல வரைகளோடுந், தெருள்பூத்த நுந்தைசிற கீர்த்தமை குறித்துச் செயிர்த்தவனை யண்டமுகடுங் — தெறிபடக் கைக்கொண் டெறிந்தோச்சிமீளத் திகைத்துவீழ் தோறுமுன்றன், மருள்பூத்த வெருளிதணி யாமையாற் பின்னரும் வன்கண்மை கொண்டோச் சல்போன்—மருங்குசூழ் தோழியர்த மிணைவிழியி னிழலை மரீஇச்சுலவி யோடியாட, அருள்பூத்த கைகளா லொளிபூத்த மாகதத் தம்மானை யாடியருளே-ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி யம்மானை யாடியருளே. (௨)

ஒழுங்குபடு மண்டகோ டிகளொடா று நிலாவுறாஉ மொண்கமல மாநிதிகளும்—ஒலிகொண்ட வெண்சங்க நிதிகளுஞ் சார்ந்தவர்க் குதவுநின் கரநோக்கிவான், செழுங்கதியு முய்த்தளித் திடுநிதிய மீதெனத் தேர்ந்துவந் தளவளாவித்—திருவாய்ந்து விடைகொண்டு தம்பதி குறித்துமேற் சேண்வழி நடத்தலேய்ப்பக், கொழுங்கதிர் பரப்பிக் கவின்றசெம் மணியாற் குயிற்றுமம் மனைகள் பலவுங்—குளிர்நிலாக் கான்றுவெள் ளொளிவீசு முத்தங் கொழிக்குமம் மனைகள் பலவும், அழுங்குமணி மேகலைச் சிற்றிடை யெடுத்தெடுத் தம்மானை யாடியருளே-ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி யம்மானை யாடியருளே, (௩)

தேங்கலுழி யூற்றெடுத் தோடுமம் போருகச் செல்வமடவாரிருவருந்—திங்களைக் கண்டினி யிருக்கினெமை நந்தவிசுசிறைசெயு மெனக்கவன்று, பூங்கமலம் விட்டொரீஇத் தங்கொழுநர் பதியுறப் போமிடைத் திரும்பிநோக்கிப் — புக்குழுந்திவை மதிக்குமுன முகிழாமை தேர்ந்துளம் பூரித்து வருவ

தேய்ப்பத், தோங்கனியு மும்மலத் துகளீர்க்கு நின்முகஞ் சுடர்பூப்ப வங்கையேந்தித்—துரிசற்ற பவளத் திழைத்தனவு நித்திலத் தொகையிற் குயிற்றியனவும், ஆங்கமணி வால்வளை தழங்கிட வெடுத்தெடுத் தம்மானை யாடியருளே—ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி யம்மானை யாடியருளே. (௪)

புத்தமிழ் துகுத்துமணி மோலியங் கடவுளர் புரைப்பசிப் பிணிதவிர்த்துப்—பூதல மருங்கினும் பைங்கூழ்த் தொகுப்பெலாம் பூரிப்ப மாந்தர்முகனுஞ், சித்தமு மலர்ந்துகளி கூரச்செழுங்கலைத் திங்கதிர் பரப்பியுலவுந் — திங்கட் பிரான் செந் துவர்க்கொடி படர்ந்தவெண் டிரைமுகட் டெழுங்காலையுந், தத்தலை விரிக்குங்குடாதுகட லுட்புகுஞ் சமயத்தினுஞ்சேத்தல்போற — றடங்கையி லெடுத்தெறியு மேல்வையினு மற்றது தடங்கையிற் புகுபோழ்தினும், அத்தமுமிழ் சேயொளி கவர்ந்தொளிரு நித்திலத் தம்மானை யாடியருளே- ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி யம்மானை யாடியருளே. (௫)

மருள்கான்ற நெஞ்சச் சழக்கைத் தடிந்தின்ப வான்கதி கொடுக்குநின்கை—வயங்குபொற் கடகத் திருங்கவின் முகந்து மலர் வள்ளலை நிகர்த்துவிழியின், இருள்கான்ற நீலங் கவர்ந் தராப் பாயலிடை யேந்தலை நிகர்த்துநுதலின்—இட்டசிந் தூர வெழில் கவர்ந்துநின் கொண்கனை யிணைந்துமேற் போந்துலாவித், தெருள்கான் றெவற்றினுந் தோய்வற்று நின்றவச் சிற்பரம் பொருளையொத்துச்—சேணுடர் கொண்டாட வாடச் செழுங்கருணை தேக்கிநிறை சோமேசனுர், அருள்கான்ற கண்களி பயப்பமணி நித்திலத் தம்மானை யாடியருளே-ஆரண முழக்குகம லாகர புரத்தலைவி யம்மானை யாடியருளே. (௬)

வேறு.

முத்த மிழைத்தன வும்பவ ளத்திரண் மொய்த்தன வுங்கலைகண் — முற்று நிறைந்த பசுங்கிர ணச்செழு முழுமதி யாமெனவும், எத்திசை யுங்கதிர் கான்றிருள் சீத்தெழு மென்று றாமெனவும்—எண்ணி யுணர்க்கெழு மூன்று ளாவு மிருஞ் சிறை நேமியுநின், னுத்தி முலைக்கு மியற்கு மிடைந்தய லோடவும் வெம்பசியால்—உயங்கு சகோர மயங்கி யுடன்றிரி வுற்று வருந்தவுமென், னத்த னுளத்தி னடிக்கு மடப்பிடி யாடுக வம்மனையே — அரந்தை துரந்து குளந்தை புரந்தவ ளாடுக வம்மனையே. (எ)

வடங்கெழு கொங்கை நிகர்ப்ப வளர்ந்த வடாது பொரு ப்பினைநின்—மணிணர் கரத்தினி லின்னும் வளைத்திடு மாறுரு சூழ்ச்சிநினைந், துடங்கழி மூன்று புரங்களை மீண்டு முலாவ வெழுப்பிவரம்—உதவி வெளிக்கண் விடுத்தல் கடுத்திட வொள் ளொளி முத்தினுமோர், முடங்க லுருதொளிர் நீல மயத்தினு மொய்த்த பசும்பொனினும் — முற்ற வமைத்து விடுத்தரு ளம்மனை மூன்றுமவ்வின் மீதுலவ, அடங்கிய வன்ப ருளங் குடி கொண்டவ ளாடுக வம்மனையே — அரந்தை துரந்து குளந்தை புரந்தவ ளாடுக வம்மனையே. (அ)

உய்ய வாந்தரு நித்தன் முகத்தி லுயங்க முனந்தகை யும்—ஒண்கர மின்னு மொறுத்த லுருது றவாடி நயப்பமெனு, வெய்ய நெருப்பெழு செங்கதி ருங்குளிர் வீசு பனிக்கதிரும்—மேவியகங்கையி னோடுறு கேண்மை விளைத்துவிண் ணோகு தல்போற், செய்ய மணிப்பவ ளத்தி னிழைத்த செழுந்திர ளம்மனையுந் தெள்ளிய முத்தி னிழைத்த கதிர்க்குவை சிந்திய வம்மனையும், ஐய நுசுப்பொசி யத்தளி ரங்கையி னாடுக வம்ம னையே — அரந்தை துரந்து குளந்தை புரந்தவ ளாடுக வம் மனையே. (௯)

கதிருமிழ் நீல மணித்திரண் மொய்த்த கருஞ்சுடரம் மனைநின்—கட்படை யாலடி யார்மல மோடல் கடுப்ப வெழுந் துலவ, முதிரொளி துற்ற செழும்பவ ளத்திரண் முற்றிய வம்மனையம் — மும்மலம் வென்ற திறற்பிர காப முளைத்தெழ லொத்தெழுவெண், மதிநிகர் முத்த நிரைத்து வனைந்தவம் மானைய தன்பிறகே—மயங்கிய கீர்த்தி திரண்டெழு கின்றது மான வெழுந்துலவ, அதிர்வளை யங்கையி னொலமுதாம்பிகை யாடுக வம்மனையே — அரங்கை துரந்து குளங்கை புரந்தவ ளாடுக வம்மனையே. (௰)

அம்மானைப்பருவ முடிந்தது.

-X-X-X-

9. நீராடற்பருவம்.

தேங்கிய செழுங்கலைத் திங்களுக் கருள்செய்த செல்வர் முடி மீதுதானுந் — திளைத்தாடு முரிமையாற் றிளைத்தாடு வோர்க்கெலாந் தீப்பிணிப் பவந்தெறுதலால், ஓங்கிய கலித் திரைக் கங்கையொன் றேநம்மை யொத்ததா மென்றுதனை னொடும் — உறவாடல் வேட்டெழுந் தாலென்ன விண்ணத் துயர்ந்துடுக் கூட்டமலைமேற், றுங்கிய கிளைக்குலங் கான்ற மணி யைத்தனது சாதியென வோகைகூரத்—தண்கதிக் கடவு ளொடு செங்கதிரை யண்டத் தடஞ்சுடர்ப் பிடரினேற்றி, வீங்கிய வொலிக்கூட்ட மீன்றுவரு பாலிநதி வெள்ளநீ ராடி யருளே — வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை வெள்ளநீ ராடியருளே. (௧)

இருகவு ளுடைந்தூற்று பூங்கடாங் கமழ்முகத் தெற்றும் வலிக் குழூஉக்களிறெலாம்—எழிலிக் குழாத்திற் பெயர்ந்தழி தருஞ்சிகரி யிடமாதி நான்குமாற்றத், தருவள னடங்கத்

தமிழிக்கொண்டு பின்னவை தளர்ந்துகலி கூராவகை - சால வெதிரொன்றுக் கனந்தமாப் பெருவளன் றண்டா தளித்து வரிசூழ், அருகில னிடத்தொருவர் தினையளவை யாற்றிடினு மருளினிலை பெறுவாழ்க்கையோ-டழியாத திருவுமெதிராங் கவர்க் குதவுமின் னடியவரை யொத்து மாக்கள், வெருவியய லோடத் தழங்கிவரு பாலிநதி வெள்ளநீ ராடியருளே—வெறி நறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை வெள்ளநீ ராடி யருளே. (௨)

*வளைத்தமுப் புரிசைத் தலத்தினின் றயில்கொண்ட வாளிக்கு மாமெழுதல்போல்—வயங்கிய பசும்பொற் றிரட்கு வட் டினையும்வல வாளரித் திரளையுநெடுந், துளைத்தகை முகக் கடாக் குஞ்சரத் தினையுஞ் சுழிக்குமச் சுழிமூன்றினுந் - துண்ணென வெழுந்தநெட் டடல்வாளை தெய்வத் துறைப் புனற் கங்கைநதியிற், றிளைத்ததிற நோக்குவார்க் கிப்புனல் படிந்தாடு செய்தவப் பயனையிந்தத்—திண்பூத பரிணாம தேக த்தி னுதவுமா தீர்த்தமிது வெனவியப்பு, விளைத்துவிண் ணோடும் பழிச்சவரு பாலிநதி வெள்ளநீ ராடியருளே-வெறிநறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை வெள்ளநீ ராடியருளே. (௩)

திரைத்தொலி பரப்பியலை வீசும் பெருங்கடற் றீம்பயம் பருகியூர்த்துச்—செல்லின மெழுந்துநெடு வான்படர்த லூர்ந் தனது தீர்த்தம் படிந்தாடுநர், புரைத்தொகை விளைக்குமல மாயைகன் மக்குழாம் பொள்ளென விரிந்தோடலும் புரையக் கருங்குழற் காட்டுமலர் கூரும் பொலஞ்சிறைத் தும்பிமுழு தும், இரைத்துமணி வானத் தெழுந்தோட நீராடு மேந்தி ளங் கொங்கைமடவார்- ஏறிட்ட மணியணிகள் சிந்திய கரைக் கணின் னிணையடி வருந்தாவகை, விரைத்துணர் நிரப்பப் பரப் பிவரு பாலிநதி வெள்ளநீ ராடியருளே — வெறிநறுச் சோலை சூழ் தென்குளத் தூரம்மை வெள்ளநீ ராடியருளே. (௪)

கொழுந்தாம மாடவது சுற்றுங் குழற்கற்றை கூட்டு விட் டாடவதனிற்-குடிகொண்ட மாதர்ச் சுருப்பின முகே ரெனக் குரல்விளைத் தாடவதுசூழ், செழுந்தா துகுங்கஞ்ச வெள்ளனந் திரையூடு சேர்ந்தாட வதனருகுநின்-திருமேனி கண்டின மெனப்பிணி முகக்குலஞ் சிறைவிரித் தாடவது போல், எழுந்தாடு தெய்வப் பிணக்குழாங் கண்டுகண் டின் பநீ ராடவவர்தோள்-இணங்கும் பெரும்புலவர் கைகொட்டி யாடவெள் ளீர்ம்புனற் கங்கைபுவிமேல், விழுந்தாங் கொழுங் குகொண் டாடிவரு பாலிநதி வெள்ளநீ ராடியருளே — வெறி நறுச் சோலைசூழ் தென்குளத் தூரம்மை வெள்ளநீ ராடி யருளே. (௫)

வேறு.

ஏந்து பிறைவெண் மருப்புரற்கா லெழில்கூர் மலைவார ணத்திரள்-கள்எய்திப் பரவை கலக்குமலை யேய்ப்பத் துளைந்து விளையாடி, நீந்தி யணைந்து கரையேறி நிறையுங் களிப்பு மீக் கொண்டு—நிலாவெண் டாளக் குவைபெயர்த்து நீள்வா ரிதி யின் கரைக்கணலை மாந்து முகிலா லியைச்சொரிந்தான் மானச் சிகரம் பரப்பினிடை - வான்மீ னடுவட் பலமதியம் வதிந்தா னிகர்ப்பச் சங்கினங்கள், பேர்ந்து துயிலும் பாலி நதிப் புதுநீ ராடி யருளுகவே - பொற்பார் குளந்தை யமுத வல்லி புதுநீ ராடி யருளுகவே. (௬)

வழியுஞ் செழுந்தேங் கமலமலர் மடவா ரமிழ்தே புன லகத்து—மறைந்தால் யாங்க ணினைப்பிடிக்க வல்லே மெனவஞ் சினங்கூறச், சுழியும் புனனீ யவ்வாறு துண்ணென் றொளி ப்ப மற்றவர்தாந்—துருவிக் காணு தெங்கொழுநர் சோதிப் பிரான்று டலையென்ன, மொழியு முறப்போ ரிரண்டையுமே முன்னிக் காணூர் யாமிவளை —முழுதுங்காணே மெனநாணி

முடிசாய்த் தொதுங்கி நிற்பவருள், பொழியும் பசியமுகில் பாலிப் புதுநீ ராடி யருளுகவே—பொற்பார் குளந்தை யமுத வல்லி புதுநீ ராடி யருளுகவே. (௭)

திரையுந் தனது நறும்புனலிற் றிளைத்து முழுகு மடவார் தஞ்—செழுந்தேன் தொடையற் சுருப்பினங்கள் சேட் சென் றகலும் படிவிலக்கி, உரையுந் தொழிலு முள்ளமுந் தன் னுழைச்சேர்த் தழுந்து வோர்மலநோய் — ஒருவுந் தொழிலைத் தெரித்திதழி யுறழப் பொன்னும் வெண்டலை போல், நரையுஞ் சடைபோற் றுவர்க்கொடியு நணுகுமதி போற் கரிக்கோடும்-நுடங்க நடித்து வெளுத்துமறை நுவலற் கரிய பரம்பொருளைப், புரையுஞ் செல்வப் பெரும்பாலிப் புதுநீ ராடி யருளுகவே. (௮)

வேறு

முகமல ரினையொளி யுருமதி யாமென முண்டக மொன்றயர—முன்கையி லேற்றிய சங்கொடு சங்க முழங்கிக் கரைபுரள, மகர விருங்குழை யெதிரிய கெண்டை மலங்கு கயற்குலம்வார்—வாளை கலங்கி யெழுந்து குதிப்ப வயங்கு சுணங்கிலமென், றகநெகு புற்புத முலையி னுடைந்திற வறல் குழல் போற்றகரம்—அணிந்தில மெனநினை தடியிற் றன்கவி னழியத் திருமருவிப், புகழ்நிறை யுங்கம லாகரி பாலிப் புதுநீ ராடுகவே — பூரண ஞான புராதனி பாலிப் புதுநீ ராடுகவே. (௯)

விற்புரு வங்குழை யக்கரு நீலவி ழித்துணை செங்குவளை-வெல்லலின் மேனி தழைப்ப முகேமென வீங்கிய நீர்க்குடையா, நிற்புகழ்தெய்வ மடந்தையர் மீதினி னிள்சிவி றித்துளையான்—நிரைத்த குறுந்துளி தம்முட லெங்கு நிரத்தலும் வானவர்

தங், கற்புரை தோள்கள் புதைத்தன ராடக் கடவுள் சடா மகுடக்-கங்கை யவன்றலை யைக்கொடு மாடக் காசினி கொண் டாடப், பொற்பு மிகுங்கம லாகரி பாலிப் புதுநீ ராடுகவே — பூரண ஞான புராதனி பாலிப் புதுநீ ராடுகவே. (ய)

நீராடற்பருவ முடிந்தது.

-x-x-x-

10. ஊசற்பருவம்.

ஒழுகொளி பரப்பிக் கதிர்த்தெழும் பரிதியை யொழுக் கித் திரட்டியதுபோல் — உரகமுமிழ் செம்மணித் தூணிறுவி யதனும்ப ரொளிநிலாக் கான்றகலைகள், முழுதுநிறை திங்களை யுருட்டி நீட் டியதேய்ப்ப முதிர்வயிர விட்டமிட்டம் — முழு மதியி னின்றிழியு மமிழ்ததா ரைகளென்ன முத்தணி வடங் கடுக்கிப், பழுதகலு நவமணிப் பலகையிடை மூட்டியப் பல கைமேன் மதியமிழ்துணைப்—பச்சிளங் கிள்ளையொன் றேறிஞ லென்னப் பரிந்திருந் தருளிமுலைமேற், புழுகொழுக வுயிர் களுக் கருளொழுகு மமுதம்மை பொன்னூச லாடியருளே— பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூசலாடியருளே. (க)

செயலையந் தாருவை யுதைந்தாடு தொறுமச் செழுந் தருப் பூக்கள் சொரியுஞ் — செயனுதைக் காற்றுதை தனைநீங்க வெண்ணிநந் தேவைத் தணந்துவிளையாட், டியலைமேற் தொண்டரின் மீதலர்ப் பூம்பகழி யிளையாது சொரிவ தென வும்—இதுகண் டதற்குநேர் விழிச்சுரும் பிந்தருளி யிளநிலா நகைமுகிழ்ப்ப, அயனுறாஉங் கொடிமுல்லை யூழ்த்தலர் சொரிந்திட லருந்துணைமை பூண்டுதானும்—அலர்வாளி பெய் திடுந் திறனெனவு மேர்காட்ட வைம்படை பொறுத்த

பச்சைப், புயலொடு பிறந்தருட் கடலொடு வளர்ந்தயின் பொன்னூச லாடியருளே—பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூச லாடியருளே. (உ)

நிலம்பொலி யுயிர்ப்பயிர் மலக்கொடுந் தழல்வெம்மை நீத்துமெய்ஞ் ஞானமலரா — நின்மலா னந்தச் செழுங்கனி கனிந்தோங்க நிறையருட் சூல் கொண்டுபொற், கலம்பொலியு முருவெலாம் பச்சென்று தோற்றிக் கருங்குழற் கற்றை நாப் பட் — கதிர்த்தசிறு கிற்றினுன் மின்னியொளி கூர்நுதற் கார் முகங் கவினவாங்கிச், சிலம்பொலிசெய் கிங்கிணிப் பருமத்தி னூற்பெருந் தீங்குர லெடுத்திடையறாத் — திருவருட் டாரை பொழி செய்கைக்கு வாய்ப்பவான் சேர்ந்துலாய் நிற்ற லுறழப், புலம்பொலியு மடியார்கள் சிந்தைகுடி கொண்டவள் பொன்னூச லாடியருளே - பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூச லாடியருளே. (ங)

மனக்குல மிடைந்துபின் காட்டவிசை கொண்டாடும் தன்மையானினதுருவெலாம்-மணித்திர ணிரைத்தெனச் சிறு வெயர்பொடித்தலும் வழிநின்று பணிகேட்டுநின், அனக்கவி னடைத்திறங் கற்கவரும் வெள்ளானை யஞ்சிச் செவிக் காலெ றிந்—தந்தரக்கங்கையை மடுத்துத் துளித்துவெய ராற்றுமத் திவலைபரவா, நினக்கடிமை பூண்டுமுன் போற்றுமிமை யோர்முத னெடுந்தருப் புல்லிறுதியின்—நிரத்தலா லனைத்து நின் மயமெனுஞ் செஞ்சொல்லை நிலையுறுத் திடுவதேய்ப்பப், புனக்கிளி நிகர்த்தமென் றீங்கிளவி யமுதம்மை பொன்னூச லாடியருளே—பூரண மதிக்கருள் புரிந்தகமலாகரீ பொன்னூச லாடியருளே. (ச)

திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச் செழுங்கய லுதைந்தூக்கலாற் — செம்பொனி னிழைத்தமக ரக்குழைக

ளுஞ்செவிச் செங்கனக வூசலாடப், பங்கய விருக்கைமட மாதரது நோக்கியிரு பாலுமிரு வேமாட்டவும் - பாயுங் கயற் குல மசைக்குமவ் வூசலிற் பாய்ந்திலதிவ் வூசலெனரீள், அங் கையின் வலித்துங்ஙனி யாட்டுதொறு நின்வா யரும்புநகை நில வெழிலினுக் — காங்கவர் முகத்திங்கள் சாயப்பு ராணமறை யாகம மளந்தறிவரும், புங்கவன் மருங்குகுடி கொண்டவமு தாம்பிகை பொன்னூச லாடியருளே — பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூச லாடியருளே. (ரு)

திண்ணிய பொலஞ்சிகரி வாங்கிய பிரான்சென்னி தெரி கலா மறையோதிமஞ்—செப்புபழி மொழிமாறு மாறுனக் கூர்தியாய்ச் சேர்ந்துநின் றுள்சுமந்து, தண்ணிய நிறைதுகண் ணருள்கிடைத் துன்னுழிச் சார்ந்திறைவ னாடநீரத் — தாள் பணியு மேல்வைமுடி கண்டுகொண் டுயர்கீர்த்தி தாங்குவா னெண்ணிவரலும். கண்ணியவவ் வஞ்சனை யறிந்ததனை யல மரக் காண்டுமென வுன்னியேறிக் — ககனத்து முன்பின்ன தாகக் கடாவுதல் கடுப்பவெண் டாளமொய்த்துப், புண்ணிய மலர்ந்தனைய வொண்பலகை யேறிநீ பொன்னூச லாடி யருளே—பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூச லாடியருளே. (சா)

அரவமுமிழ் செம்மணித் திரள்சுற் றிழைத்திடை யலங் கொளிய நித்திலத்தால்—அமைத்தத னடுச்செழுஞ் செம்பட் டலங்கரித் தவிர்பலகை மீதிருத்தல், இரவகல வெங்கதி ருகும்பரிதி மண்டல மிளம்பனிக் கதிர்மண்டலம் — எரிக்கட வுண் மண்டலங் கீழ்தொட்டு முறைமூன்று மேய்ந்தபூந் தவிசிலடியார், பரவநீ நின்றநிலை யொப்பவா னந்தமெய்ப் பண்ணவன் விழிச்சுடர்கணின் — பாலனுகு காட்சியப் பரி சறிந்தெம்மையும் பரூஉமணித் தவிசெனக்கொள், புரவுபூண் டருளென்று வேண்டுதல் கடுப்பவுயர் பொன்னூச லாடி

யருளே—பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூச லாடியருளே. (எ)

சுத்தமு மசுத்தமு மெனப்படுங் கொடுமாயை தூணாக விருளாணவங் – தொடுத்தநெடு விட்டமாக் கருமப் பெரும் பகுதி தூக்கிய வடங்களாக, வைத்தமா யேயமே பலகையா முடிவிலா வான்புவன கோடிமுற்றும்—மகிழ்ந்தாடு வெளியாக வாருயிர்க் குழவிகளை மரணம் பிறப்பென்னுநோய், மொய்த்த மணி யூசல்வைத் தாட்டிக் கடைத்தலை முடங்கா தெடுத்த ணைத்து-முதுக்குறை வளித்துமேற் பரமுத்தி வீடுய்த்து மூவாத வானந்தமாம், புத்தமிழ் தருத்திமெய்த் தாயாய் வளர்ப்பவள் பொன்னூச லாடியருளே—பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூச லாடியருளே. (அ)

நாந்தகப் பொருபடை விதிர்த்தனைய விமையாத நாட்டத் தரம்பைமாரும் – நளினக் கரங்கூப்பி யெதிர்நிற்கு முகில் வண்ண நாயகன் முதற்றேவரும், வேய்ந்தசெம் பொற்பெரும் தூண்களி னிழைத்தபல வேறுகுல மணிகடொறுமவ் – விரி கதிர்ப் பேதத்தி னுக்கேற்ப நின்னூசன் மின்னிழல் பரப்பு தோற்றம், வாய்ந்தமெய்த் தொண்டுசெயு மன்பர்க ளுளந் தொறும் வயங்குபரி பாகபேத -மார்க்கத்தி னுக்கிசைய மன் னிநீ விளையாடும் வாய்மையைக் காட்டவளிவீழ் பூந்தகா வார்க்குங் கூந்தலமு தாம்பிகை பொன்னூச லாடியருளே – பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூசலாடி யருளே, (௯)

அண்டப் பரப்பெங்கு மண்டிப் படர்ந்தபே ரானந்த வெள்ளம்வாழ-அருட்சரியை கிரியைசிவ யோகமொடு ஞான மெனு மதிகசிவ தருமம்வாழக், கண்டவர்க் கினியநஞ் சோமேசர் வாழநின் கட்கடைக்கருணைவாழக்-காசினி யொருங்கு

சிவ பத்திகுரு பத்திசங் கமபத்தி செய்துவாழ, வெண்டிருப் பூதியுய ரக்கமணி வாழமெய் விளக்குமஞ் செழுத்துவாழ — வேதநெறி சைவநெறி வாழக் குளந்தைநகர் மேன்மேற் செழித்துவாழப், புண்ட்ர நுதற்றொண்டர் தங்குழாம் வாழநீ பொன்னூச லாடியருளே — பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ பொன்னூச லாடியருளே. (ய)

ஊசற்பருவ முடிந்தது.

ஆகப்பருவம் பத்துக்குச் செய்யுள் கoரு.

குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முடிந்தது.

-X-X-X-

ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் திருவடிவாழ்க.

6 FEB 1955
MADRAS